ஆறு மாத இஸ்லாமிய கல்வி

ஸீரா வகுப்பு

ஆசிரியர்: அஷ்ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

Table of Contents

Compiled by Dr M.K. Mohamed Ismail

அறிமுகம் - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

بسم الله الرحمن الرحيم

கண்ணியமிக்க இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

வீட்டில் இருந்தே சிறந்த உலமாக்கள் மூலமாக இஸ்லாமிய கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளான். இதனை பயன்படுத்தி கொள்வது உங்கள் மீதான கடமை.

6 மாத இஸ்லாமிய கல்வி வகுப்பு - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

மொழி: தமிழ்

காலம்: ஜூன் 2020 முதல் நவம்பர் 2020 வரை

கட்டணம்: ரூ 500 (ஆகஸ்ட் மாதம் செலுத்த வேண்டும்; அனைவர் மீது கட்டாயமில்லை; விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்)

பாடங்களின் விவரங்கள்:

1. அகீதா (இஸ்லாமிய கொள்கை)

ஈமானின் அடிப்படைகள் : (அல்லாஹ் மீது ஈமான், மலக்குமார்கள் மீது ஈமான், இறை வேதங்கள் மீது ஈமான், இறைத்தூதர்கள் மீது ஈமான், இறுதி நாள் மீது ஈமான் மற்றும் விதியின் மீது ஈமான்) & (சூனியம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடு, அன்றும் இன்றும் வழி தவறிய கூட்டங்களில் சில)

2. ஃபிக்ஹு சட்டங்கள்

(தூய்மை சட்டங்கள், தொழுகை, ஜகாத், நோன்பு மற்றும் ஹஜ் சட்டங்கள்)

3. ஹதீஸ்

(ஹதீஸ் கலையின் அடிப்படைகள், இமாம் நவவியின் நாற்பது ஹதீஸ்களின் விளக்கம்)

4. ஸீரா (நபி [ஸல்] வாழ்க்கை வரலாறு)

5. ஆதாப் (இஸ்லாமிய ஒழுக்கங்கள் & நற்பண்புகள்)

பாடங்களின் கால அட்டவணை:

(மாணவர்கள் ஒரு பாடத்தை நன்றாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாதம் முழுவதும் ஒரு பாடம் மட்டுமே நடத்தப்படும்)

ஜூன்: அகீதா

ஜூலை: பிக்ஹு

ஆகஸ்ட்: 40 ஹதீஸ்கள்

செப்டம்பர் & அக்டோபர்: ஸீரா

நவம்பர்: ஆதாப்

நவம்பர்: இறுதி தேர்வு

ஒரு வாரத்தில் எத்தனை வகுப்புகள்?

ஒரு வாரத்தில் ஆறு அரை மணி நேர பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். மாணவர்கள் தினமும் அதனை கேட்டு நோட்டுப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

பாடங்களை எவ்வாறு படிப்பது?

தினம் அரை மணி நேரம் பாடங்களுக்கு ஒதுக்க வேண்டும். பாடங்களை கேட்டு பாட இறுதியில் தரப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் இதர வேலையை ஹோம்வர்க் நோட்டுப்புத்தகத்தில் எழத வேண்டும். ஒரு செயலை அது சிரியதாயினும் தொடர்ந்து செய்வதையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்).

கேள்வி பதில் எழுத தனி நோட்டுப்புத்தகம் வைப்பது சிறந்தது.

கேள்வி பதில் நிகழ்ச்சி

ஒவ்வொரு நாளும் (அகீதா/ஃபிக்ஹ் மட்டும்) அல்லது ஒவ்வொரு வாரம் நடத்தப்படும் வகுப்பிலிருந்து கேள்விகள் கூகுள் லிங்க் மூலமாக கேள்விகள் அனுப்பப்படும்.அதில் பங்கேற்று

தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் பரிசுகள் வழங்கப்படும்.

பரிசு விவரம்

- முதல் பரிசு ₹500
- இரண்டாம் பரிசு ₹250
- மூன்றாம் பரிசு ₹200
- நான்கு ~ பத்து வரை பரிசு ₹100

தேர்ந்தெடுக்கும் முறை

ஒவ்வொரு பாடம் அல்லது மாத இறுதியில் அந்தந்த பாட கேள்வி பதில்களில் தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு வழங்கப்படும் இன் ஷா அல்லாஹ்.

படிப்பு முடிந்த பின் சான்றிதழ் கிடைக்குமா?

இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற பின் வழங்கப்படும்.

நாம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ கொள்கையை பின்பற்றும் மன்ஹஜை சார்ந்தவர்கள். தௌஹீதையும் சுன்னாவையும் பற்றிப்பிடிப்பவர்கள், ஃபிக்ஹை ஆதரிப்பவர்கள். நம்மிடம் தாங்கள் பயிலும்போது இதனை உணர்வீர்கள். பாடங்கள் அனைத்தும் மதீனா பல்கலைக் கழக வழிமுறைக்கேற்ப நடத்தப்படும்.

(குறிப்பு: இந்த பாடத்திட்டம் இஸ்லாமிய கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாதவர்களை கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் எளிதாக புரியும் வகையில் பாடங்கள் நடத்தப்படும். ஆகவே, இஸ்லாமை ஆழமாக பயில விரும்பும் சகோதரர்கள் மதரஸாக்கள் மற்றும் உலமாக்கள் மூலமாக நேரடியாக பயில்வதே சிறந்த வழி. அவர்கள் அரபி மொழியையும் கற்று கொள்ள வேண்டும்.)

பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். இதனை கேட்டு குறிப்புகள எழதிக்கொள்வது மாணவர்கள் மீது கடமை. பாடம் சம்பந்தமான வீடியோக்கள் மற்றும் புத்தகங்கள் இருக்குமானால் குரூப்பில் அனுப்பி வைக்கப்படும்.

பாடக்குறிப்புகள் (notes) பாடம் முடியும் போது (pdf) ஆக கொடுக்கப்படும்.

தேவைப்படும்போது கேள்வி பதில் எழதிய பக்கங்களை படம்பிடித்து குரூப் அட்மின்களுக்கு அனுப்ப வேண்டும்.

இப்பாடதிட்டத்தில் சேர்ந்துள்ள அனைவரும் இடையில் விட்டு போகாமல், இறுதி வரை பொறுமையோடு பயிலும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கல்விப்பாதையில் செல்பவர்களுக்காக அல்லாஹ் சுவனப்பாதையை எளிதாக்குகின்றான் என்பதையும் அல்லாஹ் பொறுமையாளர்களோடு இருக்கின்றான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலா நம் அனைவரையும் மார்க்க கல்வியை கற்று அமல் செய்யும் நன்மக்களில் ஆக்கி அருள் புரிவானாக. ஆமீன்.

கல்வி கற்பவர்கள் பேணவேண்டிய பண்புகள்

இமாம் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமின் ரஹிமஹுல்லாஹ் அறிவுரை

பாகம் – 1

مراقبه النفس

1) தன்னுடைய ஆத்மாவை தானே கண்காணிப்பது

பிறரை கண்காணிப்பதை நிறுத்திவிட்டு நம்மை நாமே கண்காணித்துக்கொள்ளுதல் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் அவசியமான ஒன்றாக இருக்கிறது

2) நம்மை பரிசோதிக்க வேண்டிய விஷயங்கள்:

நம்மிடம் خشية الله இறையச்சம் இருக்கிறதா என்று நாம் சோதித்து பார்க்க வேண்டும்.

நம்முடைய عمل அமல்களை சரியான முறையில் செய்து வருகிறோமா என்று பரிசோதிக்க வேண்டும்.

3) போதும் என்ற தன்மை (القناعة)

நபி (ஸல்) – செல்வம் என்பது போதும் என்ற தன்மையே கல்விக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும் விஷயம் போதும் என்ற தன்மையில்லாமல் பிறருடன் நம்மை நாம் உலகவிஷயங்களில் ஒப்பிடுவதே.

4) நாம் அதிகமாக கல்விகற்றவரைப்போல காண்பித்துக்கொள்ளக்கூடாது. தெரியாத விஷயங்களை தெரியாது என்று கூறும் தைரியம் வேண்டும்.

உமர் (ரலி) – தன்னிடம் இல்லாததை உள்ளது போல காண்பிப்பவனுக்கு அல்லாஹ் போதுமானவன்(புரியவைப்பான்)

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்படும் பெரும்பாலான கேள்விகளுக்கு "எனக்கு விடை தெரியாது" என்று பதிலளித்தவராவார். அவர் தம்முடைய மரணத்தருவாயில் "நான் அளித்த தீர்ப்புக்களில் எனது சொந்தக்கருத்தை மிகைப்படுத்தி எங்கேனும் கூறிவிட்டேனோ" என்று அஞ்சி கூறினார்கள்...

ازهد في الدنيا يحبك الله، وازهد فيما عند الناس يحبك الناس

சஹல் இப்னு சஹத் அஸ் ஸாஹிதீ (ரலி) – நபி (ஸல்) – உலக விஷயத்தில் பற்றின்றி இருங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மக்கள் மத்தியிலுள்ள பொருட்கள் மீது ஆசை கொள்ளாமலிருந்தால் மக்கள் உங்களை நேசிப்பார்கள்.(இப்னு மாஜா – ஹஸன்)

இப்னு ஒதைமீன் (ரஹ்) – உபகாரத்தை அடிப்படையில் தண்ணீர் தந்தாலும் அதை பெறக்கூடாது அதற்கு பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம். பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி உளூ செய்வதே மேலானதாகும்

ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்) 39:9

هَلْ يَسْتَوِى الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ‌ؕ

··· அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? …

ஸூரத்துல் முஜாதலா (தர்க்கித்தல்) 58:11

يَرْفَعِ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ ۙ وَالَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ دَرَجٰتٍ‌ؕ

···உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும்; கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் …

مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

முஆவியா (ரலி) – நபி (ஸல்) – யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தில் தெளிவைக்கொடுக்கிறான் (புஹாரி, முஸ்லீம்)

நாம் அதிகமதிகமாக கல்வியை தேடும்போதும், புத்தகங்களை வாசிக்கும்போதும், புத்தகம் வாசிப்பவர்களுடன் பழங்கும்போதும் தான்; நமக்கு முன் சென்ற அறிஞர் பெருமக்களின் மிகப்பெரும் பணிகளை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இமாம் ஷுஹ்பீ (ரஹ்) நீங்கள் எந்த ஒரு மார்க்கக்கல்வியை கேட்டாலும் எழுதுங்கள் எழுத வசதி இல்லையேல் பக்கத்தில் உள்ள சுவற்றிலாவது எழுதுங்கள் என வலியுறுத்தினார்கள்.

முன் சென்ற அறிஞர்கள் எழுதும் அடிக்குறிப்புகள் கூட பிறருக்கு புரியும் விதத்தில் இருந்தது. அவர்களது அடிக்குறிப்புக்களால் முக்கிய குறிப்புக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு இரண்டையும் பிரித்து சீராக எழுதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்...

5) வீணான காரியங்களை விட்டும் தவிர்த்திருக்க வேண்டும்

ஸூரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்) 23:3

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَۙ

இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள்.

அதனால் நேரம் அதிகமாக கிடைக்கும்.

6) மிருதுவான குணம்

إن الله رفيق يحب الرفق ويعطى على الرفق ما لا يعطي على العنف وما لا يعطي على ما سواه

ஆயிஷா (ரலி) – நபி (ஸல்) :

அல்லாஹ் மிருதுவானவன் அவன் மிருதுவானதை விரும்புகிறான்.

அல்லாஹ் மூஸா அலை அவர்களிடம் ஃபிரௌனிடம் சொல்லச்சொன்னது

ஸூரத்து தாஹா 20:44

فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهٗ يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى

"நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள்; அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சம் கொள்ளலாம்."

7) சமயோசித புத்தியோடு அமைதியாக சிந்தித்தல் (التامل)

العجلةمن الشيطان و التاني من الله

நபி (ஸல்): வேகமாக செயல்படுவது ஷைத்தானின் தன்மையும் நிதானமாக செயல்படுவது அல்லாஹ் விரும்பும் தன்மையும் ஆகும்.

وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ

நபி (ஸல்): யார் அல்லாவையும் மறுமையையும் நம்புகிறாரோ அவர் நல்லதை பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருக்கட்டும் .

8) الثبات والتثبت எந்த ஒரு செய்தியும் ஆதரத்தன்மையை ஆராய வேண்டும்

احب الاعمال الى الله ادومها وان قل

நபி (ஸல்): அல்லாஹ்விற்கு மிகப்பிடித்தமான அமல் தொடர்ந்து செய்யும் அமல்களே.

Seerah 1 - Why should we know the biography of Prophet (PBUH)?

ஸீராஹ் வகுப்பு 1 - நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்கை வரலாற்றை நாம் என் தெரிந்து கொள்ள வேண்டும்?

மனிதர்களில் சிறந்தவரும், நபிமார்களில் சிறந்தவருமாகிய ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தூய வாழ்கை வரலாறை நாம் சுருக்கமாக அறிய இருக்கிறோம். பொதுவாக ஸீறா என்பது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்கை வரலாற்றையே குறிக்கும். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்கை வரலாற்றை நாம் என் தெரிந்து கொள்ள வேண்டும்? இதற்கு பல காரணங்கள் உண்டு. நான்கு காரணங்களை இங்கு விவரிக்கிறோம்.

1. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை நாம் உண்மையாக நேசிக்கிறோம் என்றால் அவர்களின் வரலாற்றை நாம் தெரிந்திருக்க வேண்டும். இந்த உலகத்தை விட்டு மறையும்வரை அவர்களின் வரலாற்றைப் படிக்க வேண்டும். தங்களின் பெற்றோரைவிட, தங்களின் மனைவி மக்கள், மற்றும் அனைத்து மக்களை விடவும் அதிகமாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை நேசிப்பது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்.

புஹாரி

عن عبد الله بن هشام قَالَ كُنَّا مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ آخِذٌ بِيَدِ عُمَرَ بْنِ الْخَطَّابِ فَقَالَ لَهُ عُمَرُ يَا رَسُولَ اللَّهِ لأَنْتَ أَحَبُّ إِلَيَّ مِنْ كُلِّ شَيْءٍ إِلا نَفْسِي فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ **لا وَالَّذِي نَفْسِي بِيَدِهِ حَتَّى أَكُونَ أَحَبَّ إِلَيْكَ مِنْ نَفْسِكَ** فَقَالَ لَهُ عُمَرُ فَإِنَّهُ الآنَ وَاللَّهِ لأَنْتَ أَحَبُّ إِلَيَّ مِنْ نَفْسِي فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ **الآنَ يَا عُمَرُ**

அப்துல்லாஹ் இப்னு ஹிஸாம் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது: “நாங்கள் . ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் இருந்தோம். அவர்கள் உமர் அவர்களின் கரங்களைப் பிடித்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது உமர் அவர்களிடம் கூறினார்கள், “. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே! நான் நீங்கலாக, எல்லாப் பொருட்களையும் விட எனக்கு நீங்கள் மிகவும் சிறந்தவர்கள்.” அதற்கு . ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறினார்கள் “இல்லை! யார் வாசன் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! உம்மை விட என்னை நீர் விரும்பாதவரை (உமது ஈமான் முழுமை அடையாது). உடனே உமர் கூறினார்கள், “.அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது ஆணையாக! நீங்கள் தாம் என்னைவிட எனக்கு விருப்பமானவர்கள்.” . ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறினார்கள் “உமரே! இப்போதுதான் நீங்கள் சரி(யாகச் சொன்னீர்கள்)”

எனவே ஒவ்வொரு முஸ்லிம்களும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை எல்லோரையும் விட அதிகமாக நேசிக்க வேண்டும். அவ்வாறு நேசிப்பது உண்மை என்றால், அவர்களின் செயல்பாடு, அவர்களின் பழக்க வழக்கங்கள், அவர்களின் பண்புகள், அவர்கள் விரும்புவது போன்று அவர்களைப்பற்றி அனைத்தையும் நாம் அறிவதுதான் சரியானதாகும். நாம் உண்மையில் மனைவியியோ அல்லது கணவரையோ விரும்பினால் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள எல்லா வழிகளிலும் நாம் முயற்சி செய்வோம் அல்லவா? அதுபோல் தான் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மீது நமக்கு உண்மையான அன்பு இருந்தால் அவர்களை பற்றி எல்லாவற்றையும் அறிய ஆவல் கொள்வோம்.

இன்றைய இளைஞர்களின் துற்பாக்கிய நிலை என்னவென்றால் பலர் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை எந்த அளவுக்கு நேசிக்க வேண்டுமோ, அவ்வாறு நேசிக்காமல், விளையாட்டு, திரையுலக, அல்லது அரசியல் பிரபலங்களை நேசித்துக் கொண்டிருகிறார்கள். ஒருவரை நாம் நேசிக்கும் காரணம் எதுவாக இருக்க வேண்டும். அவரால் நமக்கு ஏதும் நன்மை ஏற்பட வேண்டும். அல்லது ஏதேனும் தீங்கிலிருந்து நம்மைக் காப்பவராக இருக்க வேண்டும். அல்லது அவரிடம் நாம் பின்பற்ற வேண்டிய நற்குணங்கள், வழி காட்டுதல்கள் ஏதேனும் இருக்க வேண்டும். அவ்வாறு உங்களுக்கு நன்மை செய்யாத, தீங்கிலிருந்து உங்களைப் பாதுகாக்காத, நீங்கள் யார் என்றும் தெரிந்திராத ஒருவரை, எனினும் அவர் யாருக்கும் எந்த பயனும் செய்திராத ஒருவரை நேசிப்பது எந்த விதத்தில் சரியாக இருக்கும். இது ஒரு முட்டாள்தனம் அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும். எனினும், அவர்களைக் குறித்து எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்ள அந்த இளைஞர்கள் மிக்க முயற்சி எடுத்துக் கொள்கிறோம். தங்களுக்குப் பிடிக்கும் என்ற காரணத்தினால் அவ்வாறு எண்ணுகிறார்கள்.

அல்லாஹ் நம்மை அதிலிருந்து பாதுகாப்பானாக! எனினும் இவ்வுலகத்தில் நமக்கு அதிகமான நன்மைகளை கொடுத்துச் சென்றவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மட்டும்தான். நமக்கு சரியான மார்க்கத்தைப் போதித்து, நல்ல வழிகளைக் காட்டிச் சென்று, மறுமை நாளின் இறுதி வெற்றியாகிய சுவனத்தை அடைய வழிகோலியவர்கள்தான் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஆவார்கள். இவ்வுலக வாழ்கையின் மிகப் பெரிய துன்பம், இயற்கை மார்கத்தை விட்டு வழி கெட்டுச் செல்வதுதான். நம்மை நரகிற்கு இட்டுச் செல்லும் நிலை அது. இவ்வாறு நமக்கு நல்லதை எடுத்துக் காட்டி, தீயன விட்டும் நம்மை காப்பாற்ற வழி காட்டியவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைப் போல் யார் இருக்க முடியும்? அது போல நற்குணங்களில் உலகில் அவர்களை விடச் சிறந்தவர்கள் யார் இருக்க முடியும்? இவ்வாறு நேசிக்கப் படவேண்டிய அனைத்து அம்சங்களையும் ஒருங்கே கொண்டவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மட்டும்தான்.
எனவே நாம் உலகில் அதிகமாக நேசிக்கப்பட வேண்டியவர்களாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைத்தான் கடமையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நேசிப்பது உண்மை என்றால், அவர்களின் செயல்பாடு, அவர்களின் பழக்க வழக்கங்கள், அவர்களின் பண்புகள், அவர்கள் விரும்புவது போன்று அவர்களைப்பற்றி அனைத்தையும் நாம் அறிவதுதான் சரியானதாகும்.

இவ்வாறு அவர்களைப் பற்றி தெரிய வேண்டிய அவசியம் பற்றியும், நாம் யாரைப்பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறோம் என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக் கொள்வது சாலச் சிறந்தது ஆகும்.

எனது ஆசிரியர் அப்துல் அழீம் மதனி குறிப்பிடுவார்கள்: இன்று இளைஞர்களின் கைப்பேசியைப் பார்த்தாலே அவர்களைப்பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். ஆம், முன்னர் நம் நண்பர் யார் என்று அறிந்தால், நம்மைப்பற்றி அறிந்து கொள்ளலாம் என்ற நிலை மாறி, கைப்பேசி அதற்குப் பதிலாக மாறிவிட்டது.

ஒரு அறிஞர் மார்க்கத்தைப் போதிக்க ஒரு பள்ளிகூடம் ஆரம்பித்தார். அப்பாடசாலையில் மார்க்கத்தைப் போதிக்க ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு நேர்காணல் நடத்தப்பட்டது. அதில் தேர்வுக்கு வந்தவர்களிடம் அடிப்படையான கேள்விகள் கேட்கப்பட்டது. வந்தவர்களில் அதிகமானவர்களுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் பெயரைக்கூட சொல்லத் தெரியவில்லை. மிக வருத்தமான நிகழ்வு என்னவென்றால், அப்படிப்பட்டவர்களிடம் நான்கு பெயர்களைக் கூறி ஒரு பெயரைத் தெரிந்தெடுக்கக் கூறிய போதும் அவர்களால் சரியான பதிலைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. அல்லாஹ்தான் காப்பாற்ற வேண்டும். சிலர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்றார்களே தவிர அவர்களின் பெயரைக் கூறவில்லை.

நான் ஒரு நிக்காஹ் மஜ்லிஸுக்குச் சென்றேன். அப்போது நான் உபதேசம் செய்யும்போது ஸஹாபாக்களைக் குறிப்பிட்டு, அவர்கள் யார் என வினவினேன். அதனை அறியாத நிலையில், அவர்களுக்கு ஸஹாபா என்ற அரபிச் சொல் தெரிவவில்லை என நினைத்து, அதற்கான ஆங்கில மொழியில் பற்றி 'who are companion of Prophet?' என வினவினேன். அதற்கும் பதிலில்லை. பின்னர் தமிழில் 'நபித்தோழர்கள் யார்?' என வினவினேன். அதற்கும் பதிலில்லை. இறுதியில் நபி யார் தெரியுமா என வினவலாம் என்று கேட்க நினைத்தேன். அதற்கும் பதில் வரவில்லை என்றால் என்ன செய்வது என சபை நாகரீகம் கருதி அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. எந்த அளவிற்கு வருத்தம் கொள்ள வேண்டிய ஒன்று! ஒவ்வொரு நொடியும் நம்மையே நினைத்து கவலைப்படும் அவர்கள் பற்றி நாம் இவ்வாறு பொடுபோக்காக இருப்பது எவ்வளவு வேதனைக்குரிய விஷயம்!

புஹாரி 6167

عَنْ أَنَسٍ، أَنَّ رَجُلاً، مِنْ أَهْلِ الْبَادِيَةِ أَتَى النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ يَا رَسُولَ اللَّهِ مَتَى السَّاعَةُ قَائِمَةٌ قَالَ " وَيْلَكَ وَمَا أَعْدَدْتَ لَهَا ". قَالَ مَا أَعْدَدْتُ لَهَا إِلاَّ أَنِّي أُحِبُّ اللَّهَ وَرَسُولَهُ. قَالَ " إِنَّكَ مَعَ مَنْ أَحْبَبْتَ ". فَقُلْنَا وَنَحْنُ كَذَلِكَ. قَالَ " نَعَمْ "

அனஸ் . سُبْحَانَهُ وَتَعَالَى அறிவிக்கார். கிராமவாசிகளில் ஒருவர் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! மறுமை நாள் எப்போதும் சம்பவிக்கும்?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள், 'உனக்கென்ன கேடு! அதற்காக நீ என்ன முயற்சி செய்துள்ளாய்?' என்று கேட்டார்கள். அவர் 'நான் அதற்காக (ஏதும்) முன்முயற்சி செய்யவில்லை. ஆயினும், நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கிறேன்' என்று பதிலளித்தார். நபி(ஸல்) அவர்கள், '(அப்படியானால்,) நீ யாரை நேசிக்கிறாயோ அவர்களுடன் (மறுமையில்) இருப்பாய்!' என்றார்கள். உடனே நாங்கள், 'நாங்களும் அவ்வாறுதானா?' என்று கேட்டோம். நபி(ஸல்) அவர்கள், 'ஆம்' என்றார்கள். (இதைக் கேட்டு) அன்று நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம்.

இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை நேசித்த ஸஹாபாக்கள் அவர்களின் சொல், செயல், நடவடிக்கைகள் அனைத்தையும் சேகரித்துப் பாதுகாத்து நமக்கு வழங்கிச் சென்றுள்ளார்கள். எந்த அளவிற்கு என்றால் அவர்களின் வெளித்தோற்றம், நடை உடை, விருப்பு வெறுப்பு என அனைத்தையும் பதிவு செய்துள்ளார்கள். நாமும் அவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை நேசித்தல், அவர்களைப்பற்றி அனைத்தையும் அறிய விருப்பம் கொள்ள வேண்டும்.

2. அத்தியாயம் அஹ்ஸாப் 21

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّـهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُو اللَّـهَ وَالْيَوْمَ الْآخِرَ وَذَكَرَ اللَّـهَ كَثِيرًا

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது.

எனவே அந்த அழகிய முன்மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும் என்றால் அது குறித்த அறிவை நாம் பெற வேண்டும். அவர் ஒரு சிறந்த தகப்பனாராக, கணவராக, ஆட்சியாளராக, நண்பராக, அண்டை வீட்டுக்காரராக, சீர்திருத்தவாதியாக, பணக்காரராக, ஏழ்மை நிலை உள்ளவராக என பல்வேறு நிலையில் நமக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள். அவர்களின் வாழ்க்கையைப்பற்றி அறிதல் அவசியம் என்பது புரிகிறது அல்லவா! மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களும், கல்வியாளர்களும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை முறையை ஆழமாக ஆராய்ந்து அதனைப் பின்பற்ற விளைகிறார்கள் அவர்களின்

வாழ்கையின் முதற்பகுதி நூல் ஒன்றைப் படித்த காந்தியும் தமக்கு அடுத்த பகுதி கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு மற்ற மதத்தவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கற்க முற்படும்போது, அழகிய முன்மாதிரியாக ஏற்றுக் கொண்டுள்ள நாம் கட்டாயம் அதனை அறிந்திருக்க வேண்டும்.

3. பொதுவாகவே வாழ்க்கை வரலாறு நமக்குப் படிப்பினைகளைக் கொடுக்கும். அவ்வாறிருக்க. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கற்கும்போது அளப்பரிய படிப்பினைகள் நமக்குக் கிடைக்கும்.

அத்தியாயம் யூஸுஃப் 111
لَقَدْ كَانَ فِي قَصَصِهِمْ عِبْرَةٌ لِّأُولِي الْأَلْبَابِ ۗ مَا كَانَ حَدِيثًا يُفْتَرَىٰ وَلَـٰكِن تَصْدِيقَ الَّذِي بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيلَ كُلِّ شَيْءٍ وَهُدًى وَرَحْمَةً لِّقَوْمٍ يُؤْمِنُونَ ﴿١١١﴾

(நிச்சயமாக) அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்கு (நல்ல) படிப்பினை இருக்கிறது; இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கவில்லை, மாறாக இதற்கு முன் உள்ள (வேதத்)தையும் இது உண்மையாக்கி வைக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் இது விவரித்துக் காட்டுவதாகவும், நம்பிக்கை கொண்ட சமூகத்தவருக்கு நேர்வழியாகவும், ரஹ்மத்தாகவும் இருக்கிறது.

இவ்வாறு நபிமார்களின் சரித்திரத்தில் அதிகப் படிப்பினை இருப்பதை குர்ஆனில் கூறியிருப்பதைப் போல, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலும் நிறைய படிப்பினை உள்ளது.

4. அவர்களின் வரலாற்றைப் படித்தால், இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு பற்றி நாம் அறியலாம். நமக்கு இஸ்லாத்தைக் கொண்டு சேர்ப்பதற்கு அவர்களும், ஸஹாபாக்களும் செய்த தியாகங்களை நாம் அறியலாம். சுவனப் பாதையில் நடந்து வெற்றிகொள்ள அவர்கள் எவ்வாறு முயன்றார்கள் என்பதை அறியலாம்.

ஒரு ஹதீதின் கருத்துப்படி மக்கள் நெருப்பில் விழ ஆயத்தமாக இருக்கும் நிலையில், அவர்கள் விழுந்து விடக்கூடாது என தாங்கள் மிகவும் முயற்சி செய்வதாகக் கூறியுள்ளார்கள். இவ்வாறு நமக்காக மிகவும் தங்களை வருத்திக்கொண்ட அவர்கள் குறித்து நாம் அறிவது சிறந்ததல்லவா? இந்த

அத்தியாயம் அல் கஹ்ப் 6.

فَلَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ عَلَىٰ آثَارِهِمْ إِن لَّمْ يُؤْمِنُوا بِهَـٰذَا الْحَدِيثِ أَسَفًا

(நபியே!) இந்த (வேத) அறிவிப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அவர்களுக்காக வியாகூலப்பட்டு, நீர் உம்மையே அழித்துக் கொள்வீர்கள் போலும்!

இந்த அளவிற்கு அவர்கள் நம் மீது ஆழ்ந்த அன்பு கொண்டுள்ளார்கள். தாயிப் சம்பவமும் நாம் அறிவோம்.

இது போன்ற பல காரணங்கள் நாம் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை அறிய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இன் ஷா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதனை நாம் காண்போம்.

Seerah 2 - The status of the Arabs before Islam

ஸீராஹ் வகுப்பு 2 - இஸ்லாத்திற்கு முன் அரபுகளின் நிலை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறியும் முன்பு அவர்கள் காலத்திய அரபியர்களின் நிலைமையைப் பற்றி நாம் அறிந்தால்தான், அவர்கள் எவ்வாறு நம் மார்கத்தை அம்மக்களுக்கு எடுத்துரைக்க சிரமப்பட்டார்கள் என்பதை நான் உணர முடியும். மார்க்க விஷயத்தில் அம்மக்கள் இணைவைப்பவர்களாகவே (முஷ்ரிக்) இருந்தார்கள். கஃபாவின் வாசலில் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ மற்றும் இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ ஆகியோருடைய படங்களை வைத்து, இவர்களும் சிலை வணக்கத்தைக் கூறிச் சென்றார்கள் என அவர்களின் மீது அவதூறு கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் 360 சிலைகளை வணங்கி வந்தார்கள். குறிப்பாக தாயிஃபில் வசிக்கும் ஸகீப் என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் லாத் என்னும் சிலையை பெரிய கடவுளாக நினைத்து வணங்கி வந்தார்கள். அதனை தலைமை சிலை என எண்ணினார்கள். யத்ரிப் (தற்போதைய மதினா) நகரைச் சேரந்த ஔஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பல சிலைகளை வணங்கி வந்தார்கள். அவற்றுள் மனாத் என்ற சிலையை பெரிய கடவுளாக எண்ணி வணங்கி வந்தார்கள். அது போல் நகலா என்னும் இடத்தில் வசித்தவர்கள் உஸ்ஸா என்ற சிலையை வணங்கி வந்தார்கள். அதுபோல் ஹுபல் என்ற ஒரு சிலையும் இருந்தது. இதைக் குறித்துதான் அத்தியாயம் நஜ்ம் 19 -23 ல் கூறியுள்ளான்:

أَفَرَأَيْتُمُ اللَّاتَ وَالْعُزَّىٰ ﴿١٩﴾ وَمَنَاةَ الثَّالِثَةَ الْأُخْرَىٰ ﴿٢٠﴾ أَلَكُمُ الذَّكَرُ وَلَهُ الْأُنثَىٰ ﴿٢١﴾ تِلْكَ إِذًا قِسْمَةٌ ضِيزَىٰ ﴿٢٢﴾ إِنْ هِيَ إِلَّا أَسْمَاءٌ سَمَّيْتُمُوهَا أَنتُمْ وَآبَاؤُكُم مَّا أَنزَلَ اللَّـهُ بِهَا مِن سُلْطَانٍ ۚ إِن يَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ وَمَا تَهْوَى الْأَنفُسُ ۖ وَلَقَدْ جَاءَهُم مِّن رَّبِّهِمُ الْهُدَىٰ ﴿٢٣﴾

நீங்கள் (ஆராதிக்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா? மற்றும் மூன்றாவதான "மனாத்"தையும் (கண்டீர்களா?) உங்களுக்கு ஆண் சந்ததியும், அவனுக்குப் பெண் சந்ததியுமா? அப்படியானால், அது மிக்க அநீதமான பங்கீடாகும். இவையெல்லாம் வெறும் பெயர்களன்றி வேறில்லை; நீங்களும் உங்கள் மூதாதையர்களும் வைத்துக் கொண்ட வெறும் பெயர்கள்! இதற்கு அல்லாஹ் எந்த அத்தாட்சியும் இறக்கவில்லை; நிச்சயமாக அவர்கள் வீணான எண்ணத்தையும், தம் மனங்கள் விரும்புபவற்றையுமே பின் பற்றுகிறார்கள்; எனினும் நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடமிருந்து, அவர்களுக்கு நேரான வழி வந்தே இருக்கிறது.

இவ்வாறு இவர்கள் வணங்கி வந்த கடவுள்களை எல்லாம் படைத்தது அல்லாஹ் தான் எனவும், வானங்கள் பூமிகளை படைத்தவன் அல்லாஹ்தான் என நம்பினார்கள். மழை பொழிபவன் அனைத்தும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىٰ தான் என்றே நம்பி வந்தார்கள்.

அத்தியாயம் அன்கபூத் 63

وَلَئِن سَأَلْتَهُم مَّن نَّزَّلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَحْيَا بِهِ الْأَرْضَ مِن بَعْدِ مَوْتِهَا لَيَقُولُنَّ اللَّـهُ ۚ قُلِ الْحَمْدُ لِلَّـهِ ۚ

இன்னும், அவர்களிடம்: "வானத்திலிருந்து நீரை இறக்கி, பிறகு அதனைக் கொண்டு இப்பூமியை - அது (காய்ந்து) மரித்தபின் உயிர்ப்பிப்பவன் யார்?" என்று நீர் கேட்பீராயின்: "அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாகக் கூறுவார்கள்;

எனினும் நபிமார்களான இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ மற்றும் இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ ஆகியோருடைய படங்கள், நல்லடியார்களின் சிலைகள் ஆகியவற்றை உருவாக்கி அதனை வணங்கி வந்தார்கள். அதற்குக் காரணம், இவர்கள் அல்லாஹ்விடம் தாங்கள் நெருங்க உதவி புரிவார்கள் என்றும், மறுமை நாளில் தங்களுக்காக சிபாரிசு செய்வார்கள் என்பதால்தான்.

அத்தியாயம் யூனுஸ் 18

وَيَعْبُدُونَ مِن دُونِ اللَّـهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْ وَيَقُولُونَ هَـٰؤُلَاءِ شُفَعَاؤُنَا عِندَ اللَّـهِ ۚ

தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள்; இன்னும் அவர்கள், "இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை" என்றும் கூறுகிறார்கள்;

இவர்கள் மகிழ்ச்சி அடைந்தால் தங்களுக்கு அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வார்கள் என நினைத்தார்கள்.

இவர்கள் கஃபாவைச் சுற்றி வலம் வருவது அன்றைய காலத்திலும் இருந்தது. அக்காலத்திலும் மக்காவிற்கு புனித யாத்திரை மேற்கொள்வது வழக்கமான ஒன்றுதான். அவர்களும் தல்பியா சொல்வார்கள். அதில் சிறு மாற்றம் இருக்கும். அல்லாஹ்வுக்கு தாங்கள் இணை வைக்க மாட்டோம், எனினும் ஒரே ஒன்றைத் தவிர என தங்களின் விருப்ப சிலை ஒன்றை மனதில் வைத்துக் கூறுவார்கள். அதனையும் படைத்தது அல்லாஹ் தான் என்றும் நம்பி கூறுவார்கள். அந்த சிலைகளுக்காக அல்லாஹ் பெயரைக் கூறாமல் அதன் பெயரைக் கூறி அறுப்பார்கள்.

இதனால்தான் அல்லாஹ்வும் அல் பகரா 173 அந்த இறைச்சியை ஹராமாக ஆக்கியிருக்கிறான்.

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ الْخِنزِيرِ وَمَا أُهِلَّ بِهِ لِغَيْرِ اللَّـهِ

தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டதும் ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கியிருக்கிறான்;

சில சமயங்களில் அந்த சிலைகளுக்கு அல்லாஹ்வை விட அந்தஸ்தைக் கொடுத்து விடுவார்கள்.

அத்தியாயம் அன்ஆம் 136

وَجَعَلُوا لِلَّـهِ مِمَّا ذَرَأَ مِنَ الْحَرْثِ وَالْأَنْعَامِ نَصِيبًا فَقَالُوا هَـٰذَا لِلَّـهِ بِزَعْمِهِمْ وَهَـٰذَا لِشُرَكَائِنَا ۖ فَمَا كَانَ لِشُرَكَائِهِمْ فَلَا يَصِلُ إِلَى اللَّـهِ ۖ وَمَا كَانَ لِلَّـهِ فَهُوَ يَصِلُ إِلَىٰ شُرَكَائِهِمْ ۗ سَاءَ مَا يَحْكُمُونَ ﴿١٣٦﴾

அல்லாஹ் உண்டாக்கிய விளைச்சலிலிருந்தும், கால்நடைகளிலிருந்தும் அல்லாஹ்வுக்கென ஒரு பாகத்தை ஏற்படுத்தினார்கள்; இன்னும் அவர்களின் எண்ணப்படி இது அல்லாஹ்வுக்கு என்றும், இது எங்களுடைய இணை தெய்வங்களுக்கு என்றும் சொல்கிறார்கள் - அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கென்று குறிப்பிட்ட பாகத்தில் எதுவும் அல்லாஹ்வுக்குச் சேர்வதில்லை; அல்லாஹ்வுக்கு ஆகியிருப்பது அவர்கள் தெய்வங்களுக்குச் சேரும் என்றும் சொல்கிறார்கள்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பங்கு சிலைகளுக்கு சேரும் எனவும், சிலைகள் பங்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு சேருவதில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் ஜின்களையும் வணங்கி வந்தார்கள். குறிப்பிட்ட ஒரு பள்ளத்தாக்கை கடந்து செல்லும்போது, அங்கு தாங்கள் இருப்பதாக நினைத்திருக்கும் ஜின்னிடம் பாதுகாப்பு கோருவார்கள். அல்லாஹ்விடல் பாதுகாப்பு தேடாமல் அவ்வாறு அந்தந்த இடத்தில் அவர்கள் இருப்பதாக நினைக்கும் ஜின்களிடம் தேடுவார்கள்.

அத்தியாயம் ஜின் 6

وَأَنَّهُ كَانَ رِجَالٌ مِّنَ الْإِنسِ يَعُوذُونَ بِرِجَالٍ مِّنَ الْجِنِّ فَزَادُوهُمْ رَهَقًا ﴿٦﴾

"ஆனால், நிச்சயமாக மனிதர்களிலுள்ள ஆடவர்களில் சிலர் ஜின்களிலுள்ள ஆடவர்கள் சிலரிடம் காவல் தேடிக் கொண்டிருந்தனர்; இதனால் அவர்கள், (ஜின்களிலுள்ள அவ்வாடவர்களின்) மமதையை பெருக்கிவிட்டனர்.

இவ்வாறு அவர்கள் சிலைகளை வணக்குவது, அதற்கு பலியிடுவது, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைவிட அவற்றின் மதிப்பை உயர்த்துவது, ஜின்களிடம் பாதுகாப்பு தேடுவது போன்ற பல ஷிர்குகலைச் செய்து வந்தனர்.

இவ்வாறு இந்த ஷிர்கை அரபு மக்களிடம் அறிமுகப்படுத்தியவர் ஹுசாஆ என்ற கோத்திரத்தைச் சேர்ந்த அமர பின் லுகைப் ஆவார். அவர் ஷாம் (சிரியா) சென்றிருந்தபோது, அங்குள்ள மக்கள் சிலைகளை வணங்குவதைக் கண்டு அவர் காரணம் வினவினார். இவைகளை வணங்கி உதவி கேட்டால் உதவி கிடைக்கும் எனவும், மழை இல்லாதபோது வேண்டினால் மழை பொழியும் எனவும் அம்மக்கள் கூறினார்கள். தமக்கும் ஒரு சிலை வேண்டும் என அவர்களிடம் அவர் கேட்க, அவர்கள் ஹுபல் என்ற ஒரு சிலையை அவருக்குக் கொடுத்தார்கள். அதனைப் பெற்ற அவர் அதனை மக்காவில் கொண்டு வந்த போது அம்மக்கள் அது பற்றி வினவினார்கள். இவைகளை வணங்கி உதவி கேட்டால் உதவி கிடைக்கும் எனவும், மழை இல்லாதபோது வேண்டினால் மழை பொழியும் என ஷாம் மக்கள் கூறியதைப்போல அவரும் கூறினார். இவ்வாறு ஆரம்பித்த சிலை வணக்கம், ஒவ்வொருவரும் தங்களுக்கு என்று ஒரு சிலை என 360 சிலைகள் கஃபாவை ஆக்கிரமித்தது. இந்த மனிதரைக் குறித்து அவர் தம்முடைய இழுத்துக்கொண்டு நரக நெருப்பில் செய்வதாகக் கண்டேன் என ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறினார்கள். இவர்தான் இப்ராஹீம் அவர்களின் ஓரிறைக் கொள்கையை மாற்றியவர். பெண் ஒட்டகங்களை சிலைகளின் பெயரில் சுற்ற வேண்டும் என விட்டுவிடும்படி செய்தவர் ஆவார்.

சில ஒழுக்க ரீதியான பிரச்சனைகளும் அம்மக்களிடம் இருந்தது. சிறு சிறு பிரச்சினைகள், உதாரணமாக ஒருவருடைய விளங்கு மற்றொருவரின் இடத்தில் மேய்ந்தது என்ற காரணத்தால் சண்டை மூண்டு, அது பல நாட்கள் தொடர்ந்து, பல உயிர்கள் பலியாகக் காரணமாகிவிடும். அறியாமையால் சிறிய பிரச்சனை பல உயிர் பலிகளுக்கு வித்திட்டுவிடும்.

விபச்சாரம் திருமணம் என்ற பெயரில் ஈடு பட்டார்கள். கணவரே தம் மனைவியை அந்நிய ஆணிடம் அனுப்பி தமக்காகக் கருத்தரித்து வரச் சொல்வார்கள். பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களிடம் உறவு கொண்டு குழந்தை தரித்தால், அதனை யாருக்கு அவர் இணைத்துக் கூறுவாரோ அவருடன் அவர் வாழ்வார். சில பெண்கள் தங்களின் வீட்டின் மீது ஒரு கோடி கட்டிவிடுவார்கள். அவர் ஆண்களை விரும்புகிறான் என்று அதன் பொருளாகும். அவர் பல ஆண்களுடன் கூடி, பின்னர் கருவுற்றால் முன்னர் சொன்னபடி ஒருவர் கணவராவார்.

மனைவியின் சகோதரியுடன் திருமணம் முடிப்பது, தந்தையின் மறைவிற்குப் பிறகு அவரது மனைவியைத் திருமணம் முடிப்பது போன்ற செயல்களிலும் அவர்கள் ஈடுபட்டார்கள்.

தங்களின் குழந்தைகளை வறுமைக்குப் பயந்து கொன்றுவிடுவார்கள். முக்கியமாக பெண் குழந்தைகள் இதில் அடங்கும். குலப்பெருமை அவர்களிடத்தில் தாண்டவமாடியது. தம் இனத்தைச் சார்ந்தவன் அநியாயம் செய்தாலும், அவருக்கு ஆதவாகவே செயல்படுவார்கள். 'உன் இனத்தான் அநீதி செய்தாலும், அநீதி செய்யப்பட்டாலும் அவனுக்கே உதவி செய்ய வேண்டும்' என்ற பழமொழி அப்போது இருந்தது.

கத்தி முனையில் மக்களைக் கொள்ளையடிப்பது பரவலாக இருந்தது. எனிவே மக்கள் கூட்டம் கூட்டமாகத்தான் பயணம் மேற்கொள்வார்கள். மதுபானம் அதிக அளவில் புழங்கப்பட்டது. மது அருந்தாமல் ஒரு நாளும் அவர்களுக்கு கழிந்து போகாது.

இத்தகைய நிலையில்தான் அவர்களை நேர்வழி படுத்துவதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அனுப்பப் பட்டார்கள். இக்காலத்தைத் தான் அறியாமைக் காலம் (ஜாஹிலிய்யாஹ் என்று கூறப்படுகிறது. இத்தகைய காலத்திலும், ஒரு சிலர் ஒழுக்க நிலையிலும், ஏகத்துவத்திலும் இருந்தார்கள். அவர்களில் ஜைத் இப்னு அம்ரு இப்னு நவ்ஃபல் என்பவரும் ஒருவர் ஆவார். சுவனம் நற்செய்தி கூறப்பட்ட பதின்மரில் ஒருவரான ஸயீத் யின் தந்தை ஆவார். அல்லாஹ்

அல்லாத பெயர் கூறி அறுக்கப்பட்ட பிராணியின் இறைச்சியை உண்ண மாட்டார். இவர் சுவனத்தில் நுழைந்து விட்டார் எனவும், இவருக்கு அல்லாஹ் இரண்டு அந்தஸ்துக்களை வழங்கி இருக்கிறான் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். மற்றொரு நபர் அம்ரு இப்னு அபஸா என்பவர். அவர் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَஅவர்களிடம் அவர்கள் யார் என வினவ, அவர்கள் தாங்கள் இறைத்தூதர் எனக் கூறினார்கள். என்ன செய்தியைக் கொண்டு வந்துள்ளார்கள் என அவர் கேட்க, தங்கள், உறவுகளைப் பேண வேண்டும் எனவும், சிலைகளை உடைத்து ஏறிய வேண்டும் எனவும், அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்க வேண்டும் எனவும், இணை வைக்கக் கூடாது எனவும் அனுப்பப்பட்டதாகக் கூறினார்கள். அவர் உடனே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அறியாமைக் காலத்தில் ஏகத்துவத்தில் இருந்த மேலும் ஒருவர் ஹுஸ் இப்னு ஸாயிதா ஆவார். இவர் மிகப் பெரிய பேச்சாளராகவும் இருந்தவர்கள். நான்காவதாக வரகாஹ் இப்னு நவ்ஃபல் ஆவார். இவர் ஈஸா அவர்களின் உண்மையான மார்க்கத்தில் இருந்தவர். இவர் குறித்த விவரம் நபித்துவ வரலாற்றில் வரும். இவருக்கு இரண்டு சுவனம் கொடுக்கப்படும் என என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். அடுத்ததாக சுவைப் இப்னு ஸாபித் ஆவார். ஹஜ்ஜுடைய காலங்களில் மக்களை ஏகத்துவத்தின்பால் மக்களை அழைப்பார்.

இப்படிப்பட்ட அறியாமைக் காலத்தில்தான் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் அறிந்து மகிழ்வோம்.

Seerah 3 - Jamjam well and elephant army incident

ஸீராஹ் வகுப்பு 3 - ஜம்ஜம் கிணறு மற்றும் யானைப்படை சம்பவம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

அலி رَضِيَ الله عَنْهُ அவர்கள் குறிப்பிடுவதாவது: தமது மற்றும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் ஒரே கனவை நான்கு தடவைகள் கண்டார். மூன்று நாட்கள் ஒரு கிணறை வெட்டும்படி கூறிய ஒருவர், நான்காம் நாள் கஃபாவின் அருகில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோண்டுமாறும், அதில் சுவையான நீர் கிடைக்கும் எனவும் கனவில் கூறினார். எனவே அதன்படி, குறிப்பிட்ட இடத்தில் அவர் கிணறு தோண்ட, தண்ணீரும் பீரிட்டு வந்தது. அந்த கிணறை ஜம்ஜம் என கனவில் வந்த மனிதர் கூறியதைப்போல பெயரிட்டு அழைத்தார்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனது தூதர் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களை, தம் மனைவி ஹாஜரா மற்றும் சிறு குழந்தை இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ ஆகியோரை, அப்போது வசிக்காத இந்த மக்காவில் விட்டுவிட்டு வரும்படி கட்டளை இட்டான். அதன்படி அவ்விருவரையும், அந்த வனாந்தரத்தில் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ விட்டுவிட்டு வந்தனர். பசியாலும், தாகத்தாலும் கதறிய அக்குழந்தைக்காக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் அருட்கொடையாக வந்தது தான் இந்த ஜம்ஜம் நீர் சுனையாகும். காலப்போக்கில் அந்த கிணறு மறைந்துவிட்டது. பின்னர் கண்ட இந்த கனவின்படி அந்தக்கிணறு மறுபடியும் ஊறத்தொடங்கியது.

அப்துல் முத்தலிப் ஏற்கனவே மக்கத்துத் தலைவராக அறியப்பட்டவர். அந்த பாலைவனத்தில் இப்படி ஒரு கிணறு கிடைத்தது மக்க நகர மக்களுக்கு அப்துல் முத்தலிப்பின் மீது கண்ணியத்தை அதிகப்படுத்தியது. இப்னு அப்பாஸ் அவர்களின் அறிவிப்பின்படி, அப்துல் முத்தலிப் ஒரு நேர்ச்சை செய்திருந்தார். தமக்கு அல்லாஹ் பத்து ஆண்களை அளித்தால், அதில் ஒருவரை பலியிடுவதாக அவர் நினைத்துக் கொண்டார். அவர்க்கு அல்லாஹ் பத்து ஆண் மக்களை அளித்தான். அவர்களில், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தந்தை அப்துல்லாஹ், அவர்களைப் பராமரித்து வந்த அபு தாலிப், அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஹம்ஸா رَضِيَ الله عَنْهُ, இஸ்லாத்தின் எதிரி அபு லஹப் ஆகியோரும் அடங்குவர்.

எனவே தாம் விரும்பியவாறு ஒருவரி பலியிட, தம் மகனாரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க சீட்டுக் குலுக்கிப் போடும்போது, அப்துல்லாஹ்வின் பெயர் வந்தது. தமது கடைசி, ஆசை மகன் என்பதால் அவரைப் பலியிட அப்துல் முத்தலிப்புக்கு விருப்பம் இல்லை. மற்றவர்களுக்கும் இது விருப்பமாக அமையவில்லை. வேறு வழி ஏதும் உண்டா எனத் தேடி, அப்துல்லாஹ்விற்குப் பதிலாக பத்து ஒட்டகங்களைப் பலியிட அங்குள்ளவர்களுடன் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டது. எனினும் அது சரிதான் என்பத அறியும் பொருட்டு அப்துல்லாஹ்வின் பெயரை ஒரு சீட்டிலும், பத்து ஒட்டகங்கள் என மற்றொரு சீட்டிலும் எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க விரும்பினார். இந்த முறையும் அப்துல்லாஹ்வின் பெயர்தான் வந்தது. மனம் தளராத அப்துல் முத்தலிப், ஒட்டகங்களின் எண்ணிக்கையை இருபதாக அதிகரித்து குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க விரும்பினார். மறுபடியும் அப்துல்லாஹ்வின் பெயர்தான் வந்தது. எனினும் அவர் ஒட்டகங்களின் எண்ணிக்கையை பத்துப் பத்தாக அதிகரித்து, நூறு ஒட்டகங்கள் என்று போட்டபோதுதான், அந்தச் சீட்டு தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்வாறு அப்துல்லாஹ்விற்குப் பதிலாக அன்று நூறு ஒட்டகங்கள் பலியிடப்பட்டது. (இஸ்லாமும் ஒருவருக்குப் பதிலாக நூறு ஒட்டகங்கள் என்பதை அங்கீகரிக்கிறது. தெரியாளால் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குப் பதிலாக இவ்வாறு கொடுக்கவேண்டும்.)

இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தந்தையார் காப்பற்றப் பட்டார்கள். இதைதான், தங்களைப் பலியிட அழைத்துச் செல்லப்பட்ட இருவரின் பிள்ளை என்று ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறுவார்கள். இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தந்தையார் காப்பற்றப் பட்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் வருகைக்கான முன்னேற்பாடு இது ஆகும்.

யானைப்படை சம்பவம்

இந்த சம்பவத்தை அல்ஃபீல் அத்தியாயத்தில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى சுருக்கமாகக் குறிப்பிடுகிறான்.

105:1 اَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِاَصْحٰبِ الْفِيْلِؕ 105:2 اَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِىْ تَضْلِيْلٍۙ 105:3 وَّاَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا اَبَابِيْلَۙ
105:4 تَرْمِيْهِمْ بِحِجَارَةٍ مِّنْ سِجِّيْلٍۙ 105:5 فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّاْكُوْلٍ

105:1. (நபியே!) யானை(ப் படை)க் காரர்களை உம் இறைவன் என்ன செய்தான் என்பதை நீர் பார்க்கவில்லையா?

105:2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் பாழாக்கி விடவில்லையா?

105:3. மேலும், அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங் கூட்டமாக அவன் அனுப்பினான்.

105:4. சுடப்பட்ட சிறு கற்களை அவர்கள் மீது அவை எறிந்தன.

105:5. அதனால், அவர்களை மென்று தின்னப்பட்ட வைக்கோலைப் போல் அவன் ஆக்கி விட்டான்.

அபிஸீனியாவைச் சேர்ந்த ஏமன் நாட்டிற்கு அரசராக அப்ரஹா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். கிருத்துவரான அவர் தம் நாட்டில் அதிக செலவில் ஒரு கிருத்துவக் கோயிலை கட்டினார். மக்கள் கஃபாவை நோக்கிச் செல்லாமல் தாம் கட்டிய இந்த கோயிலுக்கு வரவேண்டும் என்ற நோக்கில் கட்டப்பட்டது. அரபுலகத்தைச் ஒருவர் அந்த கோயிலை அசிங்கபடுத்திவிட்டார் என்று சொல்லப்படுகிறது. மேலும் மக்கள் அதனை நோக்கி வராமல் கஃபாவை நோக்கியே சென்றதும் அரசருக்கு கோபத்தை உண்டாகியது. எனவே கஃபாவை இடித்துத் தள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு யானைப் படையைத் திரட்டி, கஃபாவை நோக்கி படையெடுத்து வந்தார். வழியில் சில கோத்திரத்தினர் அவரைத் தடுத்தும், அவர்களை வென்று, அவர்களின் ஒட்டகங்களைக் கைப்பற்றியவாறு முன்னேறி மக்காவை அடைந்தார். அப்போது மக்காவின் தலைவர் அப்துல் முத்தலிப் அரசரை சந்திக்க வந்தார். தம்முடன் சமாதானம் பேசவே வந்திருப்பார் என்ற எண்ணத்தில், அவரிடம் அரசர் வந்த காரணத்தை வினவினார். தாம் படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமது ஒட்டகங்களை மீட்க வந்ததாக அப்துல் முத்தலிப் கூறினார். அதிர்ச்சியுற்ற அவர், கஃபாவை மீட்க வராமால் சுயநலமாக வந்தது குறித்து வினவினார். தாம் ஒட்டகங்களின் சொந்தக்காரர் எனவும் எனவே அவற்றை மீட்க வந்ததாகவும், கஃபாவின் சொந்தக்காரன் அதனைக் காப்பான் என்று பதில் அளித்தார். அல்லாஹ்வின் வீட்டை பாதுகாக்க அவன் போதுமானவன் என்ற அவரது பதில் அரசரைக் கோபத்திற்கு ஆளாக்கியது. ஒட்டககன்களைப் பெற்றுக்கொண்ட அப்துல் முத்தலிப், மக்கத்து மக்களுடன் அருகில் உள்ள மலையில் தஞ்சம் புகுந்தனர். போரில் தங்களின் மக்களுக்குத் தீங்கு ஏற்படக்கூடும் என்பதால் அவ்வாறு செய்தார்.

மறுநாள் காலை கஃபாவை இடிக்கும் நோக்கில் தம் யானைப்படையை அதன்பால் செலுத்த முயன்றார். ஆனால் அந்த யானைகள் கஃபாவை நோக்கி அசைய மறுத்தது. ஏமன் அல்லது ஷாம் பக்கமாக செலுத்தினால், அவை புறப்படத் தயாராயின. இந்த நிகழ்வு குறித்து,

ஹுதைபிய்யாஹ்வில் நிகழ்ந்த நிகழ்வை ஒப்பிட்டு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள். அவர்களின் ஒட்டகம் கஸ்வா மக்கா நோக்கி செல்ல மறுத்தபோது, ஸஹாபாக்கள் அது குறித்து ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் கூறியபோது, அப்ரஹாவின் யானையைத் தடுத்த அதே இறைவன் அல்லாஹ் தான் இந்த ஒட்டகத்தையும் தடுக்கிறான் என ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள்.

அவ்வாறு அப்ரஹாவின் யானை கஃபாவை நோக்கிச் செல்வது அல்லாஹ் வினால் தடுக்கப்பட்டது. அதே நேரத்தில் அல்லாஹ் சிறிய அளவிலான கூட்டங்கூட்டமாக அபாபீல் என்ற பறவையை அவர்களின் மீது அனுப்பினான். அவை தங்களின் அலகிலும், கால்களிலும் சுடப்பட்ட சிறுசிறு கற்களைச் சுமந்து வந்து அப்படையினரின் மீது எரிந்தன. அதன் காரணமாக படை தின்னப்பட்ட வைக்கோல் போல ஆயின. சிலர் உடனே மரணமடைந்தனர். சிலர் பின்னர் மரணமடைந்தனர். அப்ரஹா தப்பித்து ஓட ஆரம்பித்தான். எனினும் போகும் வழியில் அவரது உறுப்புக்கள் ஒவ்வொன்றாக கீழே விழுந்து, வழியில் மரணமடைந்தார். இவ்வாறு , கஃபாவின் சொந்தக்காரன் அதனைக் காப்பாற்றிவிட்டான்.

பிரபலமான இந்த சம்பவத்தைக் கொண்டு அக்கால மக்கள் தங்களின் ஆண்டினைக் கணக்கிட்டார்கள். அதனை யானை ஆண்டு எனக்கொண்டு அதனுடன் தங்கள் நிகழ்வுகளை ஒப்பிட்டுக் கொள்வார்கள். அந்த யானை ஆண்டில்தான் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் பிறந்தார்கள்.

இவ்வாறு ஜம்ஜம் கிணறு வெட்டப்பட்டது, அப்றஹா சம்பவம் ஆகியன ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களளின் வருகைக்காகத் தயாரானவை என அறிஞர்கள் கூறுகிறார்கள். கஃபாவைச் சுத்தப்படுத்தி, சிலை வணக்கத்தை ஒழித்து, ஏகத்துவத்தை நிலைநாட ஒருவர் வர இருக்கிறார் என்பதற்கான ஏற்பாடாக இது இருக்கிறது எனலாம்.

நபித்துவம் பெற்ற நாற்பது வருடங்களுக்கு முன்பாக யானை ஆண்டில் ரபியுல் அவ்வல் மாதத்தில் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ பிறந்தார்கள். இதில் முஹர்ரம், துல் கஃதா என கருத்து வேறுபாடு உள்ளன. அதுபோல் எந்த நாள் என்பதிலும் கருத்து வேறுபாடு உள்ளது. எட்டு, ஒன்பது, பத்து, பன்னிரண்டு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஆய்வாளர்களின் கருத்துப்படி ஒன்பது ஆகும். எனினும் பிறந்த நாள் திங்கட்கிழமை என்பதில் சந்தேகம் இல்லை. யானை ஆண்டில் பன்னிரண்டாம் தேதி திங்கள்கிழமை அமையாமல் ஒன்பதாம் தேதியே அந்நாளில் அமைகிறது. (ஆங்கில கணக்கின்படி 20, ஏப்ரல், 571)

Seerah 4 - Descendants of the Prophet (PBUH)

ஸீராஹ் வகுப்பு 4 - நபி (ஸல்) அவர்களின் வம்சாவளியினர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பிறந்த குடும்பம் பனூ ஹாஷிம் ஆகும். இது குறைஷி குலத்தைச் சார்ந்ததாகும். பனூ முத்தலிப், பனூ அஸத், பனூ அத்திசம்ஸ், பனு நவஃபல் போன்ற குடும்பங்களும் இந்த கோத்திரத்தில் அடங்கும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பனூ ஹாஷிம் குடும்பத்தை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்காகத் தேர்ந்தெடுத்தான். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் தாங்கள் சிறந்த குலத்தின், சிறந்த குடும்பத்தில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பிறக்க வைத்தான் என்று கூறியுள்ளார்கள்.

ஸூரத்துல் ஹுஜுராத் (அறைகள்)

49:13 يٰۤاَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّاُنْثٰى وَجَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّقَبَآٮِٕلَ لِتَعَارَفُوْا ؕ اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَ تْقٰٮكُمْ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ

49:13. மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

எனவே குலத்தின் அடிப்படையில் சிறப்பு இல்லை. எனினும் இந்த குடும்பத்தின் சிறப்பும் பயபக்தியின் அடிப்படையில்தான் என்று கூறப்பட்டுள்ளது. அபு பக்ரு, உமர் மற்றும் உதுமான் ஆகியோரும் இந்தக் குடும்பத்தில்தான் பிறந்தார்கள். இந்த குறைஷிக் கோத்திரம், இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் வம்சாவளியைச் சேர்ந்ததாகும். இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்குப் பிறகு வந்த அனைத்து இறைத்தூதர்களும் அவர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தாம். இது இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கு அல்லாஹ் அளித்த சிறப்பாகும்.

ஸூரத்துல் அன்கபூத் (சிலந்திப் பூச்சி)

29:27 وَوَهَبْنَا لَهٗۤ اِسْحٰقَ وَيَعْقُوْبَ وَجَعَلْنَا فِىْ ذُرِّيَّتِهِ النُّبُوَّةَ وَالْكِتٰبَ وَاٰتَيْنٰهُ اَجْرَهٗ فِى الدُّنْيَا ۚ وَاِنَّهٗ فِى الْاٰخِرَةِ لَمِنَ الصّٰلِحِيْنَ

29:27. மேலும், அவருக்கு இஸ்ஹாக்கையும், யஃகூபையும் அளித்தோம்; இன்னும் அவருடைய சந்ததியிலே, நபித்துவத்தையும், வேதத்தையும் ஏற்படுத்தினோம்; அவருக்கு அவருடைய கூலியை இவ்வுலகத்திலும் கொடுத்தோம்; நிச்சயமாக மறுமையில் அவர் நல்லவர்களில் ஒருவராவார்.

இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கு இரண்டு குழந்தைகளாகும். முதல் குழந்தை இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ ஹாஜராவுக்குப் பிறந்தவர்கள். முதல் மனைவி ஸாராவுக்குப் பிறந்தவர்கள் இஸ்ஹாக் عَلَيْهِ السَّلَامُ ஆவார்கள். இஸ்ஹாக் வம்சத்தில் வந்தவர்கள்தாம் அவர்களின் மகன் யாகூப் عَلَيْهِ السَّلَامُ, அவர்களின் மகன் யூஸுஃப் عَلَيْهِ السَّلَامُ, அவர்கள் வம்சத்தில் மூஸா عَلَيْهِ السَّلَامُ, அவர்களின் சகோதரர் ஹாரூன் عَلَيْهِ السَّلَامُ, அவர்கள் வம்சத்தில் தாவூத் عَلَيْهِ السَّلَامُ, அவர்களின் மகன் ஸுலைமான் عَلَيْهِ السَّلَامُ, அவர்களின் வம்சத்தில் யூனுஸ் عَلَيْهِ السَّلَامُ, ஜகரிய்யா عَلَيْهِ السَّلَامُ, அவர்களின் மகன் யஹ்யா عَلَيْهِ السَّلَامُ, மற்றும் அவர்களின் வம்சத்தில்

ஈஸா عَلَيْهِ السَّلَامُ ஆகியோர் வந்தனர். இவ்வாறு அதிகமான இறைத்தூதர்கள் வந்துள்ளனர். இந்த அனைவரும் இஸ்ஹாக் அவர்களின் வழிவந்தவர்கள் ஆவார்கள். நமது நாயகம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இப்ராஹீம் அவர்களின் மூத்த மகனார் இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் வம்சத்தில் பிறந்தார்கள்.

எனவேதான் யூதர்கள் இதன் காரணமாகத்தான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது பொறாமைப் பட்டார்கள். எல்லா இறைதூதர்களும் இஸ்ராயீல் என்று அழைக்கப்பட்ட யாகூப் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் வம்சத்தில், அதாவது பனி இஸ்ராயீல் வம்சத்தில் தான் வந்தார்கள். அது போலவே யூதர்கள் தாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இறுதித் தூதரும், தங்களின் பனி இஸ்ராயீல் வம்சத்தில் வருவார்கள் என எண்ணிக் கொண்டிருந்த நிலையில், அவர்கள் இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் வம்சத்தில் வந்தது அவர்களுக்கப் பொறாமையை ஏற்படுத்தியது. அல்லாஹ்வுக்காக பலியிட எடுத்துச் செல்லப்பட்ட இஸ்மாயீல் அவர்களின் வம்சத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிறந்தார்கள். இஸ்மாயீல் அவர்கள் மக்காவில் உள்ள ஜுர்ஹும் என்ற கோத்திரத்தைச் சேர்த்த ஒரு பெண்மணிக்கும் திருமணம் நிகழ்ந்து அவர்களின் வம்சம் மக்காவில் தழைத்தது.

இவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட இறுதித் தூதர் தங்களின் வம்சத்தில் பிறக்காமல் வேறொரு வம்சத்தில் பிறந்ததை ஏற்க விரும்பாமல், பொறாமை கொண்டனர். அதன் காரணமாக, தங்கள் வேதத்தில் இஸ்மாயீல் அறுத்து பலியிட அழைத்துச் சென்றதை மாற்றி எழுதிவிட்டார்கள். அவர்களின் வேதத்தில் மூத்த மகனைப் பலியிட வேண்டும் என்று பெயர் குறிப்பிடாமல் சொல்லப்பட்டதை, இஸ்ஹாக் என மாற்றிவிட்டார்கள்.

ஆரம்பத்தில் இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களும் அவர்களின் தாயார் ஹாஜரா அவர்களும் மக்காவில் தனியே விட்டுச் சென்ற பிறகு, அல்லாஹ்வின் அருட்கொடையால் ஜம்ஜம் தண்ணீர் அங்கு கிடைகிகவே, மக்கள் அங்கு குடியேற ஆரம்பித்தார்கள். அவர்களில் ஜுர்ஹும் என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். அதைச் சேர்ந்த ஒருவரை இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ மணமுடித்தார்கள். அவர்கள் மூலமாக இந்த வம்சம் பெருகியது. அதில்தான் ஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிறந்தார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கத்னா செய்தவர்களாக பிறந்தார்கள். அவர்கள் பிறந்த அன்று ஈரானில் நெருப்பை வணங்கிய மஜூஸியர்களின் நீண்ட நாட்கள் ஏற்றி வைத்திருந்த நெருப்பு அணைந்துவிட்டது. பல இடங்களில் சிலைகள் உடைந்து குப்புற விழுந்தன. எனினும் இவை பலவீனமான அறிவிப்புகள் ஆகும். எனினும் அவர்கள் பிறந்தபோது, அவர்களின் அன்னை ஆமினா வயிற்றிலிருந்து சென்ற ஒரு ஒளி, சிரியா (ஷாம்) தேசத்தின் புஸ்ரா மாளிகையை ஒளிரச் செய்தது என்று ஒரு ஆதாரப்பூர்வமான அறிவிப்பு உள்ளது. அதற்கான விளக்கம், இஸ்லாமிய ஒளி உலகெங்கும் பரவியது என்பதாகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பாலூட்டிய மற்ற பெண்மணிகளில் முதலில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் சிறிய தந்தை அபுலஹபின் அடிமைப்பெண் ஸுவைபாஹ் ஆவார். ஹம்ஸா அவர்களும் அப்பெண்மணியிடம் பால் குடித்ததனால் இருவரும் பால்குடி சகோதரர்கள் ஆவார்கள். அடுத்தது பானு ஸஅத் கோத்திரத்தைச் சேர்ந்த ஹலிமா ஆவார்கள். அவர் மக்காவுக்கு வந்து ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை பாலூட்ட எடுத்துச் செல்ல வந்தபோதும் அற்புதங்கள் நிகழ்ந்தன. வரும்போது அவரது வாகனம் மெதுவாக வந்தது. ஆனால் செல்லும்போது வேகமாக சென்றது. செல்லும்போது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை மேகம் மறைத்தவாறு சென்றது. ஹலிமா

அவர்களிடம் அவ்வாறு பால்குடிக்க அனுப்பியதன் காரணம், அக்காலத்தில் அவ்வாறு அனுப்புவது வழக்கமான ஒன்று. மேலும் அவ்வாறு அனுப்பப்படும் குழந்தைகள் திடமாகவும், தூய்மையான மொழி பேசுபவர்களாகவும் விளங்குவார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வீட்டில் நான்கு வருடங்கள் வளர்ந்து வந்தார்கள். அந்த நாளில் அல்லாஹ் வானவர்களை அனுப்பி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இதயத்தை ஜம்ஜம் நீரால் சுத்தப்படுத்த வைத்தான். இவ்விதமாக மறுபடியும் அவர்களின் வாழ்கையில் மிஃராஜ் பயணத்திற்கு முன்பாக நடைபெற்றது. இதன் காரணமாகத்தான் அவர்கள் எந்த பாவமும் செய்யாமல் தூய்மையான வாழ்கையை ஆரம்பத்திலேயே கடைப்பிடித்து வந்தார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இதயத்தை சுத்தம் செய்த நிகழ்வை நேரில் பார்த்த ஹலிமாவின் குழந்தைகள் தங்களின் தாயாரிடம் சொல்ல, பயந்தவர்களாக அவர் உடனே சிறுவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை அவர்களின் தாயாரிடம் ஒப்படைத்து விட்டார்கள். அதன் பிறகு இரண்டு வருடங்கள் தாயாரிடம் குழந்தை வளர்ந்தது. அவர்கள் ஆறு வயதாக இருந்தபோது தாயார் ஆமினா மரணமமடைந்தார்கள். பின்னர் அவர்கள் தங்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபால் வளர்க்கப்பட்டார்கள். மேலும் இரண்டு வருடம் சென்ற பிறகு அவரும் மரணமமடைந்து விட்டார். எண்பத்து இரண்டு வயதில் மரணமடைந்த அபு தாலிப் இறக்கும் முன்பு, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அவரது சிறிய தந்தை அபு தாலிப் அவர்களிடம் ஒப்படைத்தார்.

Seerah 5 - The childhood of Prophet (PBUH) and marriage with Khadeeja (RA)

ஸீராஹ் வகுப்பு 5 - நபி (ஸல்) அவர்களின் சிறு பிராயம் மற்றும் கதீஜா (ரலி) அவர்களுடன் திருமணம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

சிறுவதில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவரது சிறிய தந்தை அபு தாலிப் அதனைத் திறம்படச் செய்தார். தாம் ஏழ்மையில் இருந்தும், அதிகமான குழந்தைகளைக் கொண்டிருந்தும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை மிக அன்போடு கவனித்து வந்தார். தமது குழந்தைகளை விட அதிக அன்பினை அவர்களின் மீது செலுத்தினார். இந்த நிகழ்வு அதனை நமக்கு எடுத்துரைக்கும்:
அவர்கள் ஒரு நாள் ஷாமுக்கு (சிரியா) வணிகம் நிமித்தமாக பயணம் சென்றார். அப்போது சிறுவராக இருந்த ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தாங்களும் அவருடன் வர விரும்புவதாகச் சொன்னார்கள். சிறுவராக தூர இடத்திற்குப் பயணம் செய்வதில் இருந்த கடினத்தை உணர்ந்தும், அவர்களின் மீது அவர் கொண்ட பாசம் அவர்களின் விருப்பத்திற்கு இசைவு தெரிவித்தது. அப்போது அவர்களின் வயது 9, 10 அல்லது 12 வயது (பல்வேறு அறிவிப்புகளின் படி) இருக்கலாம். எனினும் அந்தப் பயணம் நிகழ்ந்தது குறித்து பல அறிவுப்புகள் உள்ளன. ஆனால் அதில் நடந்த நிகழ்வுகள் குறித்து ஆதாரப்பூர்வமாக எந்த செய்தியும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் பல வரலாற்று ஆசிரியர்கள் அறிவிக்கக் கூடிய முக்கியமான நிகழ்வு ஒன்று, அவர்கள் ஷாம் சென்ற பிறகு, அந்த நாட்டில் புஸ்ரா என்ற கிருத்துவ அறிஞர் ஒருவர் - ராஹித் - வணக்க வழிபாட்டில் கழிப்பவர் - புஹைரா (பஹிரா) என்ற அவர், மக்காவிலிருந்து வியாபார நோக்கில் வந்தவர்களை தம் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தார். அவ்வாறு விருந்துக்குச் சென்றவர்களில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களும் அடங்குவார்கள். அவர்கள் வரும்போது செடி கொடிகள் அவர்களுக்கு ஸலாம் சொல்வதையும், அவர்களின் முதுகில் இரு தோள்பட்டைக்கும் இடையில் நபித்துவ முத்திரையையும் கண்ணுற்ற அந்த அறிஞர், தம் வேதத்தில் வாக்களிக்கப்பட்ட இறுதித் தூதர் அவர்கள்தாம் என உடனே விளங்கி கொண்டார். முத்திரை அவர்களிடம் இருந்தது ஆதாரப்பூர்வமான செய்தியாகும்.

முஸ்லிம் 2344 திர்மிதி 3644

عَنْ سِمَاكٍ، قَالَ سَمِعْتُ جَابِرَ بْنَ سَمُرَةَ، قَالَ رَأَيْتُ خَاتِمًا فِي ظَهْرِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم كَأَنَّهُ بَيْضَةُ حَمَامٍ .

ஜாபிர் பின் ஸமுரா رَضِيَ الله عَنْهُ அவர்கள் கூறியதாவது: அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَ . வின் தூதர் (ஸல்) அவர்களது முதுகில் (நபித்துவ) முத்திரை இருந்ததை நான் பார்த்தேன். அது புறா முட்டை போன்று இருந்தது.

சில அறிவிப்பின்படி மச்சம் போலவும் அதனைச் சுற்றி முடியும் இருந்தது என வந்துள்ளது.
இந்த அடையாளத்தைக் கண்ட அந்த அறிஞர் இவர்கள் தாம் இறுதித் தூதராக வருவார்கள் என்று விருந்துக்கு வந்த அந்த மக்களிடம் கூறினார். காரணம் கேட்டபோது, செடி கொடிகள் அவர்களுக்கு ஸலாம் சொல்வதையும், அவர்களின் முதுகில் இரு தோள்பட்டைக்கும் இடையில் நபித்துவ முத்திரையையும் வைத்து தாம் கூறுவதாகச் சொன்னார்.

மேலும் அவ்வணிகர்கள் ரோம் நாட்டிற்கு செல்லப் போவதை அறிந்த அந்த அறிஞர், அங்கு கிருத்துவர்கள் அதிகம் இருப்பதால், அவர்களால் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு

ஏதும் துன்பம் ஏற்பட்டு விடக்கூடாது என எச்சரித்தார். நாம் முன்னர் சொன்னபடி இறுதித் தூதர் தங்கள் வம்சத்தில் வாராமல் வேறு வம்சத்தில் வந்திருக்கிறார் என்று தெரிந்தால் அவர்கள் பொறாமை கொண்டு துன்பம் விளைத்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் அவ்வாறு எச்சரித்தார். இதனைக் கெட்ட அபு தாலிப், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை மக்காவுக்கு திருப்பி அனுப்பிவிட்டார்.

இந்த செய்தி குறித்த ஆதாரம் கேள்விக்குறியாக இருந்தாலும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஷாம் சென்றது ஆதாரப்பூர்வமானதாகும்.

அவர்களின் இளமைப்பருவத்தில் நடந்த மற்றொரு முக்கியமான சம்பவம், ஹில்ஃபுல் புஃதூல் (ஹில்ஃபுல் முத்தைய்யபீன்) என்ற ஒப்பந்தத்தில் கலந்து கொண்டதாகும். சிறப்பு மிகு ஒப்பந்தம் (சிறப்பிற்குரியவர்களின் ஒப்பந்தம், நல்லவர்களின் ஒப்பந்தம்) என்று பெயராகும். குறைஷியர்களில் உள்ள நல்லவர்கள் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி மக்காவில் மற்றும் அதைச் சுற்றயுள்ள பகுதிகளில் அநியாயம் செய்ய விடக்கூடாது. அப்படி செய்பவர்களைத் தடுக்க வேண்டும். திருட்டு மற்றும் கொள்ளை நடப்பதைத் தடுக்க வேண்டும். விதவைகள், மற்றும் அனாதைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இது போன்ற சமூக நோக்கங்களுக்காக அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. அப்துல்லாஹ் இப்னு ஜத்ஆன் குறித்து ஒரு ஹதீதில் அப்துல்லாஹ் இப்னு ஜத்ஆன் என்பவரின் நற்குணங்கள் குறித்து, அவர் மக்களுக்கு உதவி செய்பவர், ஏழைகளை ஆதரிப்பவர் என கூறப்பட்ட போது, அவர் சுவனம் செல்வாரா? என்று கேட்கப்பட்டது. அவர் சுவனம் செல்லமாட்டார் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள். அவரிடம் பல நற்குணங்கள் இருந்தாலும் விசுவாசம் கொள்ளவில்லை என்பதால்தான் அவர் சுவனம் செல்ல மாட்டார்கள். இவரது வீட்டில்தான் அந்த ஒப்பந்தம் நடைபெற்றது. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அப்போது அவர்களுக்கு 12 அல்லது 15 வயது இருக்கும். இவ்வாறு சிறுவயதிலிருந்தே இவ்வாறு நல்ல பண்புகள் இருந்தன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த ஒப்பந்தம் குறித்து ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் பின்பு சொல்லும்போது, இப்படிப்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டால், நானும் அதில் கலந்து கொள்வேன். தங்களுக்கு இது சிவப்பு நிற ஒட்டகத்தை விட சிறப்பானது என அவர்கள் கூறினார்கள். மாற்று மதத்துவருடன் நல்ல காரியங்களில் இணைவது தவறல்ல என்பதை இது வழி காட்டுகிறது.

அவர்கள் வாலிப வயதில் செய்த தொழில்: அவர்கள் சிறுவராக இருக்கும்போது ஆடு மேய்ப்பதை செய்வார்கள். ஹலிமாவின் குழந்தைகளுடன் ஆடு மேய்க்க செல்வார்கள். அபு தாலிபிடம் அவர்கள் இருக்கும்போதும், அவர்களின் ஏழ்மையைக் கருதி தாங்களும் உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் ஆடு மேய்க்க செல்வார்கள். சில வெள்ளிக்காசுகளுக்காக மக்காவாசிகளின் ஆடுகளை மேய்க்கச் சென்றுள்ளேன் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே கூறியுள்ளார்கள். சிறுவயதிலிருந்தே மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டது இதில் அறிய முடிகிறது. எல்லா இறைதூதர்களும் ஆடு மேய்த்திருக்கிறார்கள் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே கூறியுள்ளார்கள். அந்த வேலையில் பொறுமை அதிகமாக ஏற்படும். மக்களை வழிநடத்த அந்த பொறுமை தேவை என்பதற்காக அல்லாஹ்வின் ஏற்பாடாக இது இருந்திருக்கலாம்.
பின்னர் அவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். அமானிதம் பேணி, உண்மை பேசி, நியாமான வியாபாரியாக அவர்கள் திகழ்ந்தார்கள். அக்காலத்தில் தான் அன்னை கதீஜா رَضِيَ الله عَنْهَا அவர்கள் செல்வந்தர்களாக இருந்தார்கள். தங்களின் செல்வத்தை வியாபாரிகளுக்குக் கொடுத்தனுப்பி, தங்கள் சார்பாக அவர்களை நியமித்து ஒப்பந்தம் அடிப்படையில் வணிகம் செய்வார்கள். அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைப் பற்றி அறிந்த அன்னை கதீஜா رَضِيَ الله عَنْهَا அவர்கள், அவர்களை அழைத்து, தங்கள் சார்பாக வியாபாரம் செய்ய அவர்களை நியமித்து ஷாம் தேசத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் தங்களின்

அடிமையான மைய்சராஹ்வையும் அனுப்பினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் குறித்து, வியாபாரத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள், மற்றவர்களுன் அவர்களின் நடவடிக்கைகள், அவர்களின் குணநலன்கள் ஆகியன குறித்து அறியுமாறு அந்த அடிமையிடம் சொல்லி அனுப்பினார்கள். எல்லாவற்றியும் நோட்டமிட்ட அவர், திரும்பி வந்தபோது, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் நடவடிக்கைகளைக் குறித்து மிகவும் புகழ்ந்து கூறினார்.

அன்னை கதீஜா رَضِي الله عَنْهَا அவர்கள் முன்னர் இருவரை திருமணம் முடித்து இருந்தார்கள். சிலர் கூற்றின்படி அதிக் இப்னு ஆ'யித் அப்துலாஹ் அல் மக்ஸூமி மற்றும் மாலிக் இப்னு நபாஷ் இப்னு ஜர்ராஹ் ஆகியோர். அந்த நேரத்தில் அவர்கள் கணவனை இழந்த விதவையாக இருந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் நற்குணங்களை அறிந்த அவர்கள், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைத் திருமணம் முடிக்க எண்ணினார்கள். எனவே தங்களின் உறவினர்கள் மூலமாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். பின்னேர் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. வாகினி என்ற வரலாற்று ஆசிரியரின் கூற்றின்படி அன்னை கதீஜா رَضِي الله عَنْهَا அவர்களுக்கு அப்போது நாற்பது வயதும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு இருபத்தைந்து வயதும் ஆகியிருந்தது. இது பிரபலமான ஒன்றாக்கும். எனினும் இப்னு இஸ்ஹாக் என்ற வரலாற்று ஆசிரியரின் கூற்றின்படி அன்னை கதீஜா அவர்களுக்கு அப்போது இருபத்தெட்டு வயதும், அவர்களுக்கு இருபத்தைந்து வயதும் ஆகியிருந்தது. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு அன்னை கதீஜா அவர்களின் மூலமாக நான்கு பெண்குழந்தைகள் பிறந்தன. அவர்கள் ருகைய்யாஹ் رَضِي الله عَنْهَا, ஜைனப் رَضِي الله عَنْهَا, உம்மு குல்தூம் رَضِي الله عَنْهَا மற்றும் கடைசியாக ஃபாத்திமாஹ் رَضِي الله عَنْهَا ஆகியோர். இரண்டு ஆண்கள் பிறந்தன. அவர்கள் காஸிம் மற்றும் அப்துல்லாஹ் ஆகியோர். அவர்கள் இருவரும் சிறுவயதிலேயே இறந்து விட்டார்கள். காஸிம் பெயரைக் கொண்டுதான் அவர்கள் அபுல் காஸிம் என்ற புனைபெயரில் அழைக்கப்பட்டார்கள். இவ்வாறு ஆறு குழந்தைகள் பிறந்ததனால் அன்னை கதீஜா رَضِي الله عَنْهَا அவர்களுக்கு நாற்பது வயது இருக்க சாத்தியமில்லை என்பதாலும், வாகினி என்ற வரலாற்று ஆசிரியரின் அறிவிப்பு பலமான ஒன்று அல்ல என்பதாலும், அன்னை கதீஜா رَضِي الله عَنْهَا அவர்களுக்கு நாற்பது என்பதை விட, இப்னு இஸ்ஹாக் கூறியவாறு இருபத்தெட்டு வயது இருக்கலாம் என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மற்ற மனைவிமார்கள் மூலமாக எந்தக் குழந்தையும் பிறக்கவில்லை. அன்னை கதீஜா رَضِي الله عَنْهَا அவர்கள் இருக்கும்வரை வேறு யாரையும் அவர்கள் மணமுடிக்கவில்லை.
மற்ற மனைவிமார்கள்: நபித்துவம் கொண்ட பத்தாவது வருடம் அன்னை ஸவ்தா رَضِي الله عَنْهَا அவர்களை மனமுடித்தார்கள். மூன்றாவதாக அன்னை ஆயிஷா رَضِي الله عَنْهَا அவர்களை மணம் முடித்தார்கள். எனினும் அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் இல்லத்திற்கு மூன்று வருடங்களுக்குப் பிறகுதான் இல்லறத்திற்காக வந்தார்கள். பின்னர் அன்னை ஹஃஸா رَضِي الله عَنْهَا அவர்கள். பின்னர் ஜைனப் பின்த் رَضِي الله عَنْهَا ஹுஜைமாஹ், 6. அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِي الله عَنْهَا . 7. அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِي الله عَنْهَا 8. அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِي الله عَنْهَا, 9. அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِي الله عَنْهَا, 10. அன்னை மைமூனாஹ் رَضِي الله عَنْهَا, 11. அன்னை ஸஃபிய்யாஹ் رَضِي الله عَنْهَا ஆகியோர் ஆவார்கள்.

புஹாரி 3894

عَنْ عَائِشَةَ ـ رضى الله عنها ـ قَالَتْ تَزَوَّجَنِي النَّبِيُّ صلى الله عليه وسلم وَأَنَا بِنْتُ سِتِّ سِنِينَ،
அன்னை ஆயிஷா رَضِي الله عَنْهَا அறிவிக்கிறார்கள்: நான் ஆறு வயதுடையவளாக இருந்தபோது நபி(ஸல்) அவர்கள் என்னை மணந்து கெண்டார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை மணம் முடித்தது, ஆறு வயதான அன்னை ஆயிஷா رَضِيِ اللهُ عَنْهاَ அவர்களை மணம் முடித்தது குறித்து தவறாகப் பேச முடியாது. அக்காலத்தில் பலதாரமணம் மற்றும் சிறு வயதில் மணம் முடித்ததும் வழக்கமாகத்தான் இருந்தது. எனவே இதை வைத்து அவதூறு கூறுவது (அல்லாஹ் அவர்களை நாசமாகட்டும்) சரியாக இருக்கமுடியாது. ஏனெனில் அக்காலத்தில் சூனியக்காரர், பொய்யர், ஜோசியர் என்று அவதூறு சொன்ன காஃபிர்கள் இஸ்லாத்தை வேரறுக்க இந்த விஷயத்தை அவர்கள் விட்டு வைத்திருப்பார்களா? அது அக்காலத்திய வழக்கமும், அவற்றின் பின்னணியில் பல சரித்திர நிகழ்வுகளும், எல்லாவற்றிகும் மேலாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் எனப்பாடும் ஆகும். எனவே அதில் நாம் சந்தேகம் கொள்ள எள்ளளவும் வழி இல்லை.

Seerah 6 - Why Prophet (PBUH) had more than one marriage?

ஸீராஹ் வகுப்பு 6 - நபி (ஸல்) அவர்கள் ஏன் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்தார்கள்?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை மணம் முடித்ததைக் கொண்டு இஸ்லாமிய எதிரிகள் அவதூறு செய்ய முனைகிறார்கள். முக்கியமாக கிருத்துவ போதகர்கள் இஸ்லாத்தின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆரிய சமாஜ் ஹிந்தியில் இது குறித்து அவதூறான புத்தகத்தை வெளியிட்டுள்ளனர். ஷைக் தனாவுல்லாஹ் அமிர்தரஸ்ரி என்ற மார்க்க அறிஞர் அந்த நூலுக்குப் பதில் அளிக்கும் விதமாக முகத்தஸ் ரஸூல் (பரிசுத்த இறைத்தூதர்) என்ற நூலை எழுதியுள்ளார். சிலர் திரைப்படங்கள் எடுப்பது, சித்திரம் வருவது போன்ற பல வகையில் அவதூறைப் பரப்புகிறார்கள். வரலாற்றை உணராத முஸ்லிம் பெயர்தாங்கிகள் சிலரும் அவர்கள் வழியில் அவதூது கூறுவது வருந்தத்தக்கது ஆகும்.

இதற்குக் காரணம் அவர்கள் வரலாற்றை அறியாததுதான். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் முதலில் மணம் முடித்த அன்னை கதீஜா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்கள் ஏற்கனவே இருதடவை மணம் முடித்த ஒரு விதவை ஆவார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இச்சையின் காரணமாக மணம் முடித்தார்கள் என்றல் இப்படிப்பட்ட திருமணத்தை செய்திருக்க மாட்டார்கள். மேலும் வயதில் அன்னை கதீஜா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்கள் மூத்தவர்களாக இருந்தார்கள். அன்னை கதீஜா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்கள் இருக்கும்வரை வேறு யாரையும் அவர்கள் மணமுடிக்கவில்லை. மற்ற திருமணங்கள் அவர்களின் மறைவுக்குப் பிறகே நடந்தன. அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஐம்பதைத் தாண்டிவிட்டார்கள். வாலிப வயதில் ஒரே மனைவியைக் கொண்டிருந்த அவர்கள் இச்சையின் காரணமாக மற்ற திருமணங்களை செய்திருக்க வழியில்லை. அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களைத் தவிர, அனைத்து மனைவிமார்களும் விதவையாகத்தான் இருந்தார்கள்.

மற்றவர்களுக்கு அதிகபட்சம் ஒரே நேரத்தில் நான்கு மனைவிகள் என்ற நிலையில், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மட்டும் தான் நான்குக்கும் அதிகமான மனைவிகளை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அனுமதி அளித்துள்ளான். மேலும் அவர்கள் மற்றவர்களை மணம் முடித்த காரண சூழ்நிலைகளை ஆய்ந்து பார்த்தால், அவதூறு பரப்ப எந்த வழியும் இருக்காது என்பதை அறியலாம். ஷைக் அப்துல் அழீம் மதனி தாம் முஸ்லிம்களுக்கும், கிருத்துவர்களுக்கும் இடையில் நடந்த விவாதம் பற்றிய ஒரு நூலை மதினா நூல் நிலையத்தில் படித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதன் இறுதியில், அவ்விவாதத்தில் கலந்து கொண்ட கிருத்துவர்க அறிஞர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர் எனக் குறிப்பிட்டுள்ளது. அந்த விவாதத்தின்போது, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மாண்பினை அறிந்துகொண்டு, தாங்கள் முன்பு கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியை மாற்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அதிக திருமணங்கள் செய்த காரண சூழ்நிலைகள்

1. அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில்:

அவர்களின் மனைவிமார்களில் சிலர் இஸ்லாத்திற்காக இன்னல்கள் அடைந்து பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். தங்கள் கணவன்மார்களை இழந்து விதவையாக இருந்தார்கள். தியாகத்திற்கும், விதவையானவர்களை ஆதரிக்க வேண்டும் என்ற

முன்னுதாரணமாகவும் அவர்கள் மணம் முடித்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மனைவியர்களாக ஆனதால் அவர்களுக்குக் கிடைத்த அந்தஸ்து, விசுவாசிகள் அனைவரின் தாயார்களாக அவர்கள் ஆகிவிட்டார்கள்.

அத்தியாயம் அல் அஹ்ஸாப் 6

بِبَعْضٍ فِي كِتَابِ اللَّهِ النَّبِيُّ أَوْلَىٰ بِالْمُؤْمِنِينَ مِنْ أَنفُسِهِمْ ۖ وَأَزْوَاجُهُ أُمَّهَاتُهُمْ ۗ

இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார்; இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர்.

உதாரணமாக அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ மற்றும் அவரது முந்தைய கணவர் அபு ஸலாமாஹ் رَضِي الله عَنْهُ ஆகியோர் மக்காவை விட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய முனைந்தபோது, அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ உறவினர்கள் இடைமறித்து அவர்களை ஹிஜ்ரத் செய்ய அனுமதிக்கவில்லை. அவர்களுடைய குழந்தைகளையும் உறவினர்கள் பிரித்துக் கூட்டிச் சென்று விட்டனர். எனவே அபு ஸலாமாஹ் رَضِي الله عَنْهُ மட்டும் தன்னந்தனியாக ஹிஜ்ரத் செய்தார். கணவனைப் பிரிந்து வாடிய அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَஅவர்களின் நிலைமையைக் கண்டு இறுதியில் அவர்களையும் ஹிஜ்ரத் செய்ய உறவினர்கள் அனுமதித்தனர். மதினா சென்ற அவர்கள் சில காலங்களுக்குள் அவரது கணவர் இறந்துவிட்டார். மரணத்தில் நேரத்தில், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கற்றுத்தந்த இன்னல் ஏற்படுபோது ஓதவேண்டிய துஆ அப்போது ஓதினார்கள்.

ரியாத் அஸ் ஸாலிஹீன் 921

அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ அறிவிப்பதாவது,

سمعت رسول الله صلى الله عليه وسلم يقول: "ما من عبد تصيبه مصيبه، فيقول إن لله وإنا إليه راجعون: اللهم آجرني في مصيبتي، واخلف لي خيرا منها،

“ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் சொல்ல நான் கேட்டுளேன்: எந்த மனிதரும் கடும்துயர் கொண்டால் இவ்வாறு கூறவும்: நாம் அல்லாஹ்வுக்கே! நாம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடமே மீளுவோம். யா அல்லாஹ்! இந்த துயருக்கு பதிலாக எனக்கு ஈடு செய்வாயாக! இதைவிட நல்லதை எனக்கு பகரமாக அளிப்பாயாக!”

இவ்வாறு துஆ கேட்டபிறகு அவர்கள் தங்களுக்குள் கூறிக் கொள்கிறார்கள்:

إلا آجره الله تعالي في مصيبته واخلف له خيراً منها. قالت: فلما توفي أبو سلمة، قلت كما أمرني رسول الله صلى الله عليه وسلم، فاخلف الله خيراص منه رسول الله صلى الله عليه وسلم

அபு ஸலாமாஹ் رَضِي الله عَنْهُ இறந்தவுடன் நான் இந்த துஆ திரும்பத் திரும்பக் கேட்டேன். அவரை விடச் சிறந்த யார் எனக்குக் கிடைக்கமுடியும் என ஆச்சரியப் பட்டேன். ஆம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவரை விட மிகச்சிறந்த (ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ)அவர்களைக் கணவராகப் பகரமாக ஆக்கிவிட்டான்.

இவ்வாறு அன்னை உம்மு ஸலாமாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மணமுடித்தார்கள்.

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ அவர்களின் முந்தைய கணவர் உபைதுல்லாஹ் இப்னு ஜஹஷ் மக்காவை விட்டு அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார். தம்முடன் அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ அவர்களையும் அழைத்துச் சென்றார். ஆனால் அங்கு சென்ற சில காலங்களில், அவர் முர்த்தத்தாக கிறுத்துவராக மாறிவிட்டார். அந்த சூழ்நிலையில்தான் அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْهاَ அவர்களை, அந்நாட்டு அரசர் நஜ்ஜாஸி மூலமாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மணமுடித்தார்கள்.

2. இஸ்லாத்தின் எதிரிகளின் பகைமையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கில்:

அன்னை ஸஃபிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا இஸ்லாத்தின் எதிரி ஸுஃ'ஐப் இப்னு அக்தப் என்ற யூதருடைய மகளாவார். அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மணமுடித்ததன் காரணமாக பகைமை நீங்கியது.

பனி முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த தலைவர் ஹாரிஸ் என்பவரின் மகள்தான் அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا ஆவார்கள். இந்த கோத்திரத்திற்கு எதிராக நடந்த போரில் வெற்றி கண்டதால், . அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا கைப்பற்றப்பட்டு அடிமையாக சிறைபிடிக்கப் படுகிறார்கள். பின்னர் கைதிகளைப் பிரித்து பங்கிடப்பட்டபோது, அவர்கள் ஒரு ஸஹாபியின் பங்காகச் செல்கிறார். ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த தலைவரின் மகள் அடிமையாக சென்றது வேதனையாக இருந்தது. எனவே உரிய இழப்பீடு (முகாஸஃபா) தருவதாகக கூறி அந்த ஸஹாபயிடமிருந்து விடுதலை வேண்டினார்கள். பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَاகூறினார்கள், "நான் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த தலைவரின் மகள். இப்படி அடிமையாக இருப்பது எனக்கு வருத்தம் அளிக்கிறது. உரிய இழப்பீடு விடுதலை ஆக விரும்புகிறேன்." ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறினார்கள், "நீங்கள் விரும்பினால் நான் அதற்கான தொகையை தருகிறேன். நீங்கள் விடுதலை ஆகலாம். மாறாக நீங்கள் விரும்பினால் என்னை மணம் முடித்துக் கொள்ளலாம்." இஸ்லாத்தின் சுவையை அப்போது அறிந்திருந்த அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் திருமணம் செய்ய உடனே இசைந்தார்கள். இதைக்கேள்வியுற்ற ஸஹாபாக்கள் அனைவரும் தங்கள் பங்கிற்கு வந்த அத்தனை பேர்களையும் விடுதலை செய்து விட்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மனைவியாகிவிட்ட அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَاஅவர்களின் உறவினர்கள் தங்களின் அடிமையாக இருக்க யாரும் விரும்பாததுதான் அதற்குக் காரணம். இந்த நிகழ்வின் காரணமாக அக்கோத்திரத்தின் அனைத்து மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஒரு பெண்ணால் மிகப்பெரிய நன்மை கிடைத்து என்றால் அவர்கள் அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களாகத் தான் இருக்க முடியும் என அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا கூறினார்கள்.

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا இஸ்லாத்தின் எதிரியான அபு ஸுஃயானின் மகளாவார். பின்னர் மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாத்தில் இணைந்து விட்டார். அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களை மணம் முடித்தது பகைமையை குறித்திருக்கும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் காண வந்த அபு ஸுஃயான்رَضِيَ اللهُ عَنْهُ , பாயில் உட்கார முனைந்தபோது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அமரும் பாயில் அவர் அமரக் கூடாது என தடுக்க அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا ஓடோடி வந்தார்கள். அப்போது அபு ஸுஃயான் رَضِيَ اللهُ عَنْهُ தம் மகளிடம் வினவினார், "இது எனது அந்தஸ்துக்கு உகந்ததல்ல என்று எடுக்க வந்தாயோ?" அவர்கள் கூறினார்கள், "அவ்வாறல்ல! இது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அமரும் பாய்" என்றார்கள். அவர்கள் ரொம்பவும் மாறிவிட்டதாகக் கூறி அபு ஸுஃயான் வெளியேறிவிட்டார்.

3. அழைப்பு பணி நோக்கத்தில்:

அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களின் திருமணத்தின் காரணமாக அக்கோத்திரத்தின் அனைத்து மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

4. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கட்டளை காரணமாக:

அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களின் திருமணம் இதற்கு உதாரணமாக சொல்லலாம். அன்னை கதீஜா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு திருமணம் நடந்தபோது, மணப்பரிசாக ஜைத் இப்னு ஹாரிதாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى

வை அன்னை கதீஜா رَضِيَ الله عَنْهَا பரிசாகக் கொடுத்தார்கள். சிறுவராக இருந்த அவரை தங்களின் மகன் போல கண்காணித்து வந்தார்கள். அதனால்தான் அவர் ஜைத் இப்னு முஹம்மத் سُبْحَانَهُ وَتَعَالَى எனவே அழைக்கப்பட்டார்.

அத்தியாயம் அஹஸாப் 3, 4

وَمَا جَعَلَ أَدْعِيَاءَكُمْ أَبْنَاءَكُمْ ۚ ذَٰلِكُمْ قَوْلُكُم بِأَفْوَاهِكُمْ ۖ وَاللَّـهُ يَقُولُ الْحَقَّ وَهُوَ يَهْدِي السَّبِيلَ ﴿٤﴾ادْعُوهُمْ لِآبَائِهِمْ هُوَ أَقْسَطُ عِندَ اللَّـهِ ۚ

உங்களுடைய சுவீகாரப்பிள்ளைகளை உங்களுடைய புதல்வர்களாக ஆக்கிவிட மாட்டான். இவை யாவும் உங்களுடைய வாய்களால் சொல்லும் (வெறும்) வார்த்தைகளேயாகும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உண்மையையே கூறுகிறான்; இன்னும் அவன் நேர்வழியையே காட்டுகிறான். எனவே) நீங்கள் (எடுத்து வளர்த்த) அவர்களை அவர்களின் தந்தைய(ரின் பெய)ர் களைச் சொல்லி (இன்னாரின் பிள்ளையென) அழையுங்கள் - அதுவே அல்லாஹ்விடம் நீதமுள்ளதாகும்;

இந்த வசனத்திற்குப் பிறகு அவர் ஜைத் இப்னு ஹாரிதாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى என்று அழைக்கப்பட்டார். வளர்ப்புப் பிள்ளை என்ற நிலை மாறியது. முதலில் அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ الله عَنْهَا அவர்களை ஜைத் இப்னு ஹாரிதாஹ்வுக்கு மணம் முடித்துக் கொடுக்கப்பட்டது. எனினும் அதனை அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ الله عَنْهَا விரும்பாத நிலையில் மணமுறிவு ஏற்பட்டது. அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ الله عَنْهَا அவர்களும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களையே மணம் முடிக்க விரும்பினார்கள். வளர்ப்பு மகன் முன்னாளைய மனைவியை மணம் புரிவது அக்கால வழக்கம் இல்லை என்பதால் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தயக்கம் காட்டினார்கள். ஆனால் அல்லாஹ்வின் ஆணைப்படி இவர்களின் திருமணம் நடந்தது.

அத்தியாயம் அஹஸாப் 37

وَإِذْ تَقُولُ لِلَّذِي أَنْعَمَ اللَّـهُ عَلَيْهِ وَأَنْعَمْتَ عَلَيْهِ أَمْسِكْ عَلَيْكَ زَوْجَكَ وَاتَّقِ اللَّـهَ وَتُخْفِي فِي نَفْسِكَ مَا اللَّـهُ مُبْدِيهِ وَتَخْشَى النَّاسَ وَاللَّـهُ أَحَقُّ أَن تَخْشَاهُ ۖ فَلَمَّا قَضَىٰ زَيْدٌ مِّنْهَا وَطَرًا زَوَّجْنَاكَهَا لِكَيْ لَا يَكُونَ عَلَى الْمُؤْمِنِينَ حَرَجٌ فِي أَزْوَاجِ أَدْعِيَائِهِمْ إِذَا قَضَوْا مِنْهُنَّ وَطَرًا ۚ وَكَانَ أَمْرُ اللَّـهِ مَفْعُولًا ﴿٣٧﴾

(நபியே!) எவருக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் அருள் புரிந்து, நீரும் அவர் மீது அருள் புரிந்தீரோ, அவரிடத்தில் நீர்: “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்குப் பயந்து நீர் உம் மனைவியை (விவாக விலக்குச் செய்து விடாமல்) உம்மிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளும்” என்று சொன்ன போது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்குப் பயந்து நீர் உம்முடைய மனத்தில் மறைத்து வைத்திருந்தீர்; ஆனால் அல்லாஹ் அவன் தான், நீர் பயப்படுவதற்குத் தகுதியுடையவன்; ஆகவே ஜைது அவளை விவாக விலக்கு செய்துவிட்ட பின்னர் நாம் அவளை உமக்கு மணம் செய்வித்தோம்; ஏனென்றால் முஃமின்களால் (சுவீகரித்து) வளர்க்கப்பட்டவர்கள், தம் மனைவிமார்களை விவாகரத்துச் செய்து விட்டால், அ(வர்களை வளர்த்த)வர்கள் அப்பெண்களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக் கூடாது என்பதற்காக (இது) நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கட்டளையாகும்.

இந்த அத்தியாயத்தில் அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ الله عَنْهَا அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே மணம் முடித்துக் கொடுத்ததாகக் கூறுகிறான். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் காட்டிய தயக்கம் இந்த வசனத்தால் நீங்கியது. மக்களின் எண்ணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், அல்லாஹ் வின் வசனத்தை மக்களிடமிருந்து மறைக்காமல் கூறி மணம் புரிந்து கொண்டார்கள். அன்னை ஜைனப் பின்த் ஜஹஷ் رَضِيَ الله عَنْهَا அவர்களும் தங்கள் திருமணம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் ஆணைப்படி நடந்தது என பெருமை கொள்வார்கள்.

இறுதியாக அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மணம் புரிந்தது குறித்து இஸ்லாத்தின் எதிரிகள் பல அவதூது கூறுவார்கள். ஒன்பது வயது சிறுமியை மணந்துவிட்டார்கள் என அவர்கள் கூறுவார்கள். அரபு மக்களின் திடகாத்திரமான நிலையில் அவர்கள் பதினைந்து வயது மதிக்கப்பட்டவர்கள். அரபுலகில் அப்படிப்பட்ட திருமணம் புதிதான ஒன்றில்லை. வழக்கமானதுதான். உமர் அவர்களும், அலி அவர்களின் மகளை மணம் புரிந்திருக்கிறார்கள். இன்றும் அந்த நிலை உள்ளது. தமிழ்நாட்டிலும் வயதுக்கு வரும் முன் திருமணம் செய்து கொடுக்கும் இப்பழக்கம் இருந்திருக்கிறது. அக்கால இஸ்லாமியா எதிரிகள் இதனை தவறாக நினைத்திருந்தால், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மீது அவதூறு செய்ய இது ஒன்றே அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் முதன்மையான தோழர் அபு பக்ரு அவர்களின் மகளான அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மணம் முடித்துக் கொடுக்க எந்த அளவிற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் அல்லாஹ்வின் நாட்டமும், விருப்பமும் இதில் இருந்திருக்கிறது. அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் மூலமாக அநேக ஹதீதுகள், குறிப்பாக பெண்கள் குறித்த ஹதீதுகள் இந்த சமுதாயத்திற்குக் கிடைக்கவே அல்லாஹ் இந்தத் திருமணத்தை ஏற்படுத்தினான். உண்மையை உண்மையாக விளங்க அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு அருள்பாலிப்பானாக!

Seerah 7 - Renovation of the Kaaba and Before the Prophethood - A View

ஸீராஹ் வகுப்பு 7 - கஃபாவை செப்பனிடுதல் மற்றும் நபித்துவத்திற்கு முன் - ஒரு பார்வை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் முப்பத்து ஐந்து வயதாக இருந்தபோது மக்காவில் ஒரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கஃபாவின் ஒரு பகுதி பழுதடைந்து விட்டது. அதன் ஒருபகுதி விழுந்து விட்டது. அதனால் பழுதடைந்த அந்த பழைய கட்டடத்தை முழுமையாக இடித்துப் புதிதாகக் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் அந்தப் புனித கட்டடத்தை இடிக்க அவர்களுக்கு துணிவில்லாமல் இருந்தது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய வேதனை வந்துவிடுமோ என்று பயந்தார்கள். அப்போது வலீத் இப்னு முகைராஹ் என்ற முதியவர் தாமாக முன்வந்து அந்த கட்டிடத்தைக் கடப்பாரை கொண்டு இடித்தார். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே நான் புதிதாகக் கட்ட வேண்டும் என்ற நல்ல நோக்கில்தான் இதைச் செய்கிறேன் என்று நீ அறிவாய் என மனதில் கூறிக்கொண்டு அதனைச் செய்தார். பின்னர் அவர்கள் அனைவரும் புதிதாகக் கட்டும் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கட்டடச் செலவிற்காக நேர்மையான முறையில் சம்பாத்தித்த செல்வத்தை மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என முடிவு செய்தார்கள். தவறான முறையில் சேர்த்த செல்வம் அதில் கலந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் மிகக் கவனமாக இருந்தார்கள். எனினும் போதுமான செல்வம் கிடைக்காததனால் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்கள் நிறுவிய கட்டடத்தைப் போன்று முழுமையானவாறு சுவர் எழுப்ப முடியாமல், கட்ட வழியில்லாமல், சதுர வடிவில் முடிந்த அளவு கட்டி மீதி பகுதிகளை கற்களைக் கொண்டு நிரப்பினார்கள்.

அவர்கள் எந்த நிலையில் அன்று உருவாக்கினார்களோ, அதே நிலையில் இன்றும் சதுர வடிவில் உள்ளது. மீதிப் பகுதி அரை வட்டவடிவில் இப்போதைய ஹதீம் என்று அழைக்கப்படும் பகுதியாக உள்ளது. எனவே அப்பகுதில் தொழுவது கஃபாவில் தொழுததைப் போன்றுதான்.

கட்டடம் முடியும் தருவாயில், முக்கியமான பிரச்சினை ஏற்பட்டது. பழைய கட்டடத்திலிருந்து எடுக்கப்பட்ட ஹஜ்ருல் அஸ்வத் கருங்கல்லை அந்த இடத்தில் மறுபடியும் பதித்து வைப்பதில் அவர்களுக்கு இடையில் போட்டி ஏற்பட்ட்டது. அதனை எடுத்து வைக்கும் வாய்ப்பு தங்களுக்குத்தான் கிடைக்க வேண்டும் என அங்குள்ள கோத்திரத் தலைவர்கள் அனைவரும் கோரிக்கை வைத்தார்கள். நிலைமை மோசமாகி, அவகளுக்கு இடையில் போர் மூளும் வரைச் சென்றது. சிறு சிறு விஷயங்களுக்கே அவர்கள் பல வருடங்கள் போரில் ஈடுபடும் அவர்கள் இந்த விஷயத்திலும் போர் ஒரு முடிவை ஏற்படுத்தும் என நினைத்தார்கள். எனினும் தீர ஆலோசனை செய்து, மறுநாள் அதிகாலையில் கஃபாவின் பனு ஷைபா வாசலின் வழியாக யார் முதன் முதலில் வருகிறார்களோ, அவர் சொல்லும் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என அவர்கள் முடிவு செய்தார்கள்.

மறுநாள் காலையில், அததலைவர்கள், பனு ஷைபா வாசலின் வழியாக முதன் முதலில் யார் வருகிறார்கள் என ஆவலுடன் காத்திருந்தார்கள். அப்போதுதான் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் முதல் நபராக அதன் வழியாக நுழைகிறார்கள். அவர்கள் வருவதைக் கண்ணுற்ற அனைவரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். அல் அமீன், அஸ் ஸாதிக் (நம்பிக்கைக்குரிவர் - உண்மையாளர்) என்ற பட்டப் பெயரில் மக்களால் அறியப்பட்டவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ ஆவார்கள்.

இவ்வாறு தங்களை அழைத்த அந்த மக்கள்தாம் பிற்காலத்தில் பொய்யர் எனக் கூறி தங்களின் தூதுத்துவத்தை நிராகரித்தபோது, தாங்கள் பல வருடங்கள் அவர்களுடன்தான் இருந்ததாகக் கூறுமாறு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உரைக்கிறான்.

அத்தியாயம் யூனுஸ் 16

فَقَدْ لَبِثْتُ فِيكُمْ عُمُرًا مِّن قَبْلِهِ ۚ أَفَلَا تَعْقِلُونَ ﴿١٦﴾

நிச்சயமாக நான் இதற்கு முன்னர் உங்களிடையே நீண்ட காலம் வசித்திருக்கிறேன் - இதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டாமா?" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

இவ்வாறு நபித்துவத்திற்கு முன்னால் நாற்பது வருடங்கள் அவர்களுடன் வாழ்ந்து வந்த ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ, அல் அமீன், அஸ் ஸாதிக் (நம்பிக்கைக்குரிவர் - உண்மையாளர்) என்ற பட்டப் பெயரில் மக்களால் அறியப்பட்டவர்கள், உலக விஷயங்களுக்கே உண்மையாளராக இருந்த அவர்கள், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விஷயத்தில் எவ்வாறு பொய் சொல்வார்கள் என்பதை உணராதவர்களாகத் தான் மக்கத்துக் காஃபிர்கள் இருந்தார்கள்.

எனவே அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை மக்கத்துக் காஃபிர்கள் பொய்யர் என்று மறுக்கவில்லை. அவருக்குக் கிடைத்த நபித்துவம் குறித்து பொறாமைப் பட்டார்கள். இஸ்லாத்தின் எதிரியும், எனவே அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களால் இந்த உம்மத்தின் ஃபிர்அவுன் என்று வர்ணிக்கப்பட்ட அபுஜஹ்லிடம் எனவே அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை குறித்து அவர்கள் பொய்யரா என்று கேட்கும்போது, தாமும் குறைஷி தான், அவர்களும் குறைஷிதான் என்று நங்கள் ஒரே நிலையில் சிறப்பு கொண்டிருந்தபோது, அவர்கள் தங்களை நபி என்று கூறியதால் அவர்களின் சிறப்பு தம்மை விட உயர்ந்து விட்டதே என்ற பொறாமையில்தான் தாம் அவர்களை எதிர்ப்பதாகக் கூறினார்.

எனவே ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை கண்ட அந்தத் தலைவர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். தங்களின் நம்பிக்கைக்கு உரியவர் வந்து விட்டார் என மகிழ்வு கொண்டு அவர்களிடம் தங்களின் பிரச்சினையைக் கூறினார்கள். அதற்கு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒரு அழகான தீர்வைக் கொடுத்தார்கள். அதன்படி அந்த ஹஜ்ருல் அஸ்வத் கருங்கல் ஒரு போர்வையின் மீது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் வைத்தார்கள். பின்னர் தலைவர்கள் அனைவரையும் ஆளுக்கு ஒரு மூலையைப் பிடித்துத் தூக்குமாறு வேண்டினார்கள். பின்னர் அக்கல்லை அவர்கள் உரிய இடத்தில் வைத்துப் பதித்தார்கள். இவ்வாறு எல்லோருக்கும் அதனை பதிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்து குறித்து திருப்தி கொண்டனர். இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒரு பெரிய போரைத் தவிர்த்து விட்டார்கள்.

நபித்துவத்திற்கு முன்பும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ இணை வைக்காதவராக, பாவங்கள் செய்யாதவராக வாழ்ந்து வந்தார்கள். சிலைகளை வணங்கியதில்லை. அவற்றிக்காக எதனையும் பலியிடவில்லை. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நபித்துவத்தை அவர்களுக்கு அளிப்பதற்கான ஏற்பாடுகளை அப்போதே அவர்களுக்கு செய்துவிட்டான். அவர்களின் வளர்ப்பு மகன் என்று முன்பு அறியப்பட்ட ஜைத் இப்னு ஹாரிதாஹ் رَضِي الله عَنْهُ கூறுவதாவது, தாம் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் கஃபா வலம் வந்தபோது, அங்கிருந்த சிலைகளைத் தொட முயன்றபோது, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தம் கைகளைத் தட்டிவிட்டு தடுத்து விட்டார்கள். இரண்டாம் முறை வலம் வரும்போதும், அச்சிலைகளைத் தொடுவது சரியா, தவறா என்பதை உறுதி படுத்த மீண்டும் அதனைத் தொட முனைந்தார்.

மறுபடியும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தம் கைகளைத் தட்டிவிட்டு தடுத்து விட்டார்கள். இவ்வாறுதான் அவர்கள் முன்பே நேர்வழியில் இருந்தார்கள்.

அதுபோல ஒருமுறை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இசை நிகழ்ச்சி ஒன்றைக் கண்டார்கள். தாங்களும் அதில் பங்கு கொள்ளலாம் என நினைத்து அவர்கள் செய்ய முயன்றபோது, அவர்களுக்கு தூக்கம் மேலிட்டு தூங்கி விட்டார்கள். விழித்தபோது இசை நிகழ்வு செய்த கூட்டத்தினர் சென்று விட்டார்கள்.

கஃபாவின் கட்டட வேலைகளில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களும் பங்கு கொண்டார்கள். அவர்களுடன் சிறிய தந்தை அப்பாஸ் அவர்களும் பங்கு கொண்டார்கள். கற்களைத் தூக்கும்போது காயம் ஏதும் கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தில் தங்களின் கீழாடையக் கொண்டு அவற்றைத் தூக்கி வைக்குமாறு அப்பாஸ் அறிவுரை கூற, தங்களின் கீழாடயைக் களைந்ததும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மயக்கமுற்றார்கள். பின்னர் அதனை உடுத்தி விட்டதும்தான் அவர்கள் மயக்கம் தெளிந்தார்கள். அந்த நாளுக்குப் பிறகு அவர்கள் தங்கள் கீழாடயைக் களைந்ததில்லை. அந்த காலத்தில், மக்கள் கஃபாவை பாவம் செய்த துணிமணிகளுடன் வலம் வரக்கூடாது என்ற எண்ணத்தில் நிர்வாணமாக வலம் வருவார்கள். அதனைத்தான் அபு பக்ரு அவர்கள் ஹஜ் கடமையானபோது மக்கா செல்லும்போது, இனி முஷ்ரிக்கள் கஃபாவை வலம் வரக்கூடாது என்றும், நிர்வாணமாகவும் வலம் வரக்கூடாது எனவும் பிரகணப்படுத்துமாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இவ்வாறு அவர்கள் எந்த தவறும் செய்வதிலிருந்து ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى காப்பாற்றினான். அவர்களுக்கு நாற்பது வயது நெருங்கும்போது, தனிமையை பெரிதும் விரும்பினார்கள். மக்காவுக்கு வெளியில் மலையில் இருந்த ஹீரா குகைக்கு தேவையான சத்து மாவு மற்றும் தண்ணீர் எடுத்துக் கொண்டு தனிமை நாடி சென்றுவிடுவார்கள். அவை காலியாகும் வரை அங்கேயே இருப்பார்கள். தனிமையில் நாம் எதற்க்காகப் படைக்கப் பட்டோம், படைத்த இறைவனை எவ்வாறு வணங்க வேண்டும், மக்கள் அறியாமல் சிலைகளை வணங்கி கொண்டிருக்கிறார்களே, எப்படி நேர்வழி பெறுவது என்பன போன்று சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

அத்தியாயம் அல் லுஹா 7

وَوَجَدَكَ ضَالًّا فَهَدَىٰ ﴿٧﴾

இன்னும், உம்மை வழியற்றவராகக் கண்டு அவன், (உம்மை) நேர்வழியில் செலுத்தினான்.

இவ்வாறு அவர்கள் நேர்வழி குறித்து சிந்தனை செய்தபோது, அவர்களின் நாற்பதாவது வயதில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இறைச் செய்தியை (வஹி) அனுப்பி அவர்களை இறைத்தூதராக ஆக்கினான். அதுவரை முஹம்மது இப்னு அப்துல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஆக இருந்த அவர்கள் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஆக ஆனார்கள். நபித்துவம் வழங்கப்படுவதற்கு முந்தைய வாழ்கையில் இவ்வாறு ஒரு சில நிகழ்வுகள்தான் பதியப்பட்டுள்ளன. அதற்குப்பிறகான வாழ்க்கை நிகழ்வுகள் பற்றி இன் ஷா அல்லாஹ் தொடருவோம்.

Seerah 8 - The first revelation

ஸீராஹ் வகுப்பு 8 - முதல் வஹீ

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ நாற்பது வயது நெருங்கும்போது, தனிமையை பெரிதும் விரும்பினார்கள். மக்காவுக்கு வெளியில் மலையில் இருந்த ஹீரா குகைக்கு தேவையான சத்து மாவு மற்றும் தண்ணீர் எடுத்துக் கொண்டு தனிமை நாடி சென்றுவிடுவார்கள். அவர்கள் நபியாக தேர்ந்தெடுக்கப் போவது குறித்து அடையளங்கள் முன்பே தெரிய ஆரம்பித்தன. அவர்கள் தெருவில் நடந்து செல்லும்போது ஒரு கல் அவர்களுக்குச் ஸலாம் சொல்லும். அவர்களின் நாற்பது வயதுக்குப் பிறகு, சுமார் ஆறு மாதங்கள் அவர்கள் இரவில் காணும் கனவுகள், மறுநாள் காலையில் அவர்கள் கண்டவாறே நடைபெறும். அவ்வாறு நடைபெற இருக்கும் உண்மையான கனவுகளைக் கண்டார்கள். இருபத்து மூன்று வருடங்கள் அவர்கள் வஹியினைப் பெற்றார்கள். உண்மையான கனவுகளை ஆறு மாதங்கள் கண்டார்கள். வஹி நாற்பத்து ஆறு, ஆறு மாதங்கள் வந்தன. இதனை இந்த ஹதீது குறிக்கிறது.

புஹாரி 6987
அபு ஹுரைராஹ் அறிவிப்பதாவது
عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " رُؤْيَا الْمُؤْمِنِ جُزْءٌ مِنْ سِتَّةٍ وَأَرْبَعِينَ جُزْءًا مِنَ النُّبُوَّةِ ".

விசுவாசியின் நல்ல கனவு தூதுத்துவத்தின் நாற்பத்தாறில் ஒரு பங்காகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ரமழான் மாதத்தில் ஹிரா குகையில் தனிமையில் இருந்தபோது, ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَم அவர்கள் முதல் வஹியை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்குக் கொண்டு வந்தார்கள். முதன் முதலில் அவர்கள் தங்களின் உண்மையான தோற்றத்தில் வந்ததால், தனிமையில் இருந்த ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ பயந்து விட்டார்கள். என்னும் வந்த ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَم ஓதுமாறு கூறினார்கள். தங்களுக்கு ஓதத் தெரியாது என்று ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ பதிலளித்தார்கள். அக்காலத்தில் படிக்கத் தெரிந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் திணறும் வகையில் ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَم அவர்கள் கட்டிப்பிடித்து ஓதுமாறு கூறினார்கள். தங்களுக்கு ஓதத் தெரியாது என்று மீண்டும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ பதிலளித்தார்கள். மறுபடியும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் திணறும் வகையில் ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَم அவர்கள் கட்டிப்பிடித்து மூன்றாவது முறையாக இவ்வாறு ஓதுமாறு கூறினார்கள்.

அத்தியாயம் அல் அலக் 1-5

بِسْمِ اللَّـهِ الرَّحْمَـٰنِ الرَّحِيمِ
اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ ﴿٣﴾الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾عَلَّمَ الْإِنسَانَ مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. "அலக்" என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.

இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ முதல் இறைச் செய்தி (வஹி) அருளப்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவ்வாறு அகில உலக மக்களுக்கு ஒட்டுமொத்தமாக நபியாக நியமிக்கப் பட்டார்கள். மற்ற நபிமார்கள் குறிப்பிட்ட சமுதாயம் அல்லது குறிப்பிட்ட

பகுதிக்குத்தான் நபியாக நியமிக்கப் பட்டார்கள். ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்குப் பிறகு சுமார் ஐநூறு வருடங்கள் இறைச் செய்தி ஏதும் இறக்கப்படவில்லை. அதன் பிறகு இறக்கப்பட்ட முதல் செய்தி ஓத வேண்டும் என்பதுதான். கல்விக்குத் தேவையான ஓதுதல் மற்றும் எழுதுதல் ஆகியன இந்தச் செய்தியில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. கல்வி அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்கும் ஒரு வழியாகும். கல்வி அறிவில்லாமல்தான் அக்கால மக்கள் கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்ற பல தீய செயல்களில் ஈடுபட்டார்கள். எனவே இப்பாவங்களைப் பற்றி முதலில் குறிப்பிடாமல் கல்வியை முன் நிறுத்தி இவ்வசனங்கள் இறக்கப்பட்டன. கல்வியைக் கொண்டே அவர்களிடம் புரட்சியையும், மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கு இதில் வெளிப்படுகிறது. கல்விக்கான முக்கியத்துவம் இதில் மிளிர்கிறது.

இந்த இறைச் செய்தியின் மூலம் சாதரணமான ஒரு மனிதராக இருந்த ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இறைத்தூதராகப் பரிணமித்தார்கள். வசனங்களை திருப்பிச் சொன்ன ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள், மிகப்பயந்தவாறு தங்களின் வீட்டை நோக்கி ஓடோடி வருகிறார்கள். தங்களின் மனைவி அன்னை கதீஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களைக் கண்டதும், 'என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!" என்று கூறினார்கள். அவர்களைப் போர்த்தியவாறு, என்ன நடந்து என வினவ அவர்கள் பயத்துடன் தங்களை யாரும் கொலை செய்து விடுவார்களோ என அஞ்சுவதாகக் கூறினார்கள். அவர்களைத் தைரியப்படுத்தி ஆறுதல் அடையும் விதமாக அன்னை கதீஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் கூறியவை மிகவும் கவனிக்கத் தக்கவையாகும். அவர்கள் கூறினார்கள்,

"அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது ஆணையாக! அவ்வாறல்ல! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவாக்க மாட்டான். நீங்கள் உறவுகளைப் பேணுகிறீர்கள். மற்றவர்களின் சுமைகளைத் தாங்குகிறீர்கள். விருந்தாளிகளை உபசரிக்கிறீர்கள். தேவை உடையவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். சத்தியத்தில் இருக்கிறீர்கள்." இந்த ஆறுதலில் எல்லோருக்கும் மிகப்பெரிய படிப்பினை உள்ளது. குறிப்பாக மனைவிமார்களுக்கும் இதில் படிப்பினை உள்ளது. ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் அளிக்கும் மனநிலையில் நாம் செயல்பட வேண்டும்.

இதனுடன் இந்த நிகழ்வையும் நாம் நினைவு கூறலாம். இறை அழைப்புப் பணியில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஆரம்ப காலத்தில் இருந்த நேரத்தில், புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் சொல்லொணாத் துயரங்களை அடைந்தார்கள். அப்போது அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அவர்கள் தாங்கள் சுதந்திரமாக வணக்க வழிபாடுகளை செய்ய விரும்பி மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்து பயணம் மேற்கொண்டார்கள். போகும் வழியில் இப்னுத் துஹன்னாஹ் என்ற காஃபிர் அவர்கள் எங்கு பயணம் புறப்பட்டு விட்டார் என வினவினார். தாங்கள் இறைவனை நிம்மதியாக வழிபட மக்காவில் முடியவில்லை என்பதால் அதனை விட்டு ஹிஜ்ரத் செய்ய நாடியுள்ளேன். அதற்கு அவர் கூறினார், அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அவர்களே! உங்களைப் போன்ற மனிதர்கள் மக்காவை விட்டு வெளியேறக் கூடாது. மக்கத்து மக்களும் உங்களைப் போன்றவர்களை வெளியேற்றக் கூடாது. ஏனெனில் நீங்கள் உறவுகளைப் பேணுகிறீர்கள். விருந்தாளிகளை உபசரிக்கிறீர்கள். மற்றவர்களின் சுமைகளைத் தாங்குகிறீர்கள். . இயலாதவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். சத்தியத்தில் இருக்கிறீர்கள்." அன்னை கதீஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் எவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் நற்பண்புகளைப் பட்டியலிட்டார்களோ அவ்வாறே அவரும் கூறினார். அன்னை கதீஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் நாவில் வந்த சொற்களை வரவழைத்த அதே இறைவன்தான் அவருடைய நாவிலிருந்தும் அதே சொற்களை வரவழைத்தான். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் எல்லா நற்பண்புகளும் இவ்வாறு அபு பக்ரு அவர்களுக்கும் இருந்த. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை விட இரு வயது சிறுவரான அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ, நபித்துவத்துக்கு முன்பும், அதற்குப் பின்னரும் அவர்களின் மிக நெருங்கியத் தோழராக இருந்தார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் கண்காணித்து வந்த அவரது பெரிய தந்தை அபூதாலிபின் மரண தருவாயில், அப்போதாவது இஸ்லாத்தை ஏற்குமாறு வேண்டினார்கள். தாங்கள் அல்லாஹ் விடம் உங்களுக்காக பரிந்துரை செய்ய முயற்சி செய்வதாகக் கூறினார்கள். எனினும் அருகில் இருந்த அபுலஹப், அபு ஜஹில் போன்றவர்கள் பழைய மார்கத்தை மரணத்துக்குப் பயந்து விட்டு விட வேண்டாம் எனக் கூற, தான் தம்முடைய பழைய மார்கத்திலேயே இருப்பதாகக் கூறி மரணமடைந்தார். சிறந்த நட்பினால் அபு பக்ரு رَضِي الله عَنْهُ சிறந்து விளங்கினார். ஆனால் கூட நட்புக்கு அபுலஹப், அபு ஜஹில் போன்றவர்கள் எடுத்துக்காட்டு.

பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைத் தங்களின் சிறிய தந்தையின் மகனான வரகாஹ் இப்னு நவ்ஃபல் என்பவரிடம் அன்னை கதீஜா رَضِيِ الله عَنْهَا அழைத்துச் சென்றார்கள். அவர் வயதில் மூத்தவர் மற்றும் பழைய வேதங்களை அறிந்த அறிஞர் ஆவார். நடந்த விவரத்தை கேட்டறிந்த வரகாஹ் இப்னு நவ்ஃபல் ஆச்சரியத்துடன் கூறினார், "எல்லா நபிமார்களுக்கும் இறைச் செய்தியைக் கொண்டு வந்த ஜிப்ரயீல் عَلَيْه السَّلاَم அவர்கள்தாம் உங்களிடத்திலும் வந்துள்ளார்கள். வாக்களிக்கப்பட்ட நபியாக நீங்கள் ஆகிவிடுவீர்கள். நீங்கள் இறைச் செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்போது, அவர்கள் உங்களை வெளியேற்றிவிடுவார்கள்." ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஆச்சரியத்துடன் கேட்டார்கள், "இந்த மக்களா என்னை வெளியேற்றுவார்கள்?" அதற்கு அவர், "ஆம்! மற்ற தூதர்களை அம்மக்கள் வெளியேற்றிய விதமாக, உங்களையும் வெளியேற்றுவார்கள். நான் அப்போது இருந்தால் உங்களுக்காக போராடுவேன்." எனினும் அவர் அதற்கு முன்பாக மரணமடைந்து விட்டார். ஈஸா عَلَيْه السَّلاَم அவர்களின் உண்மை மார்கத்தில் அவர் இருந்ததால் சுவனம் பெறுவார்.

முதல் வஹிக்கும் அடுத்த வஹி வந்ததற்கும் உள்ள இடைவெளி ஃபத்ரதுல் வஹி என்று அழைக்கப்படும். இது நாற்பது நாட்கள், ஒரு வருடம் அல்லது மூன்று வருடம் என கருத்து வேறுபாடு உள்ளது. அந்த இடைவெளி அவர்களுக்கு பயத்தை நீக்கி இறைச் செய்தியை எதிபார்க்கும் ஆர்வத்தைக் கொடுத்தது. மறுபடியும் ஜிப்ரயீல் عَلَيْه السَّلاَم வானம் மற்றும் நிரப்பிய பிரமாண்டமான உருவத்தில் 600 இறக்கைகளுடன் வந்தார்கள். முதல் முறையில் பார்த்த அவர்கள்தாம் என அறிந்து கொண்டார்கள். அப்போதுதான் அத்தியாயம் முஸ்ஸம்மில் மற்றும் முத்தத்திர் ஆகிய இறக்கப்பட்டன.

Seerah 9 - The early calling mission (dawa) of the Prophet (PBUH)

ஸீராஹ் வகுப்பு 9 - நபியவர்களின் ஆரம்ப கால அழைப்பு பணி

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இரண்டாவதாக இறக்கப்பட்ட வஹியில் அத்தியாயம் முஸ்ஸம்மில் மற்றும் முத்தத்திர் ஆகிய அத்தியாயங்கள் இறக்கப்பட்டன. முத்தத்திர் வசனங்கள் இறக்கப்பட்ட போதுதான் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனது நபியாக பிரகடனப் படுத்துகிறான். நபித்துவப் பொறுப்பை அளிக்கிறான்.

அத்தியாயம் முத்தத்திர்

يَا أَيُّهَا الْمُدَّثِّرُ ﴿١﴾قُمْ فَأَنذِرْ ﴿٢﴾

(போர்வை) போர்க்கிக் கொண்டு இருப்பவரே! நீர் எழுந்து (மக்களுக்கு அச்சமூட்டி) எச்சரிக்கை செய்வீராக.

அவர்கள் முந்தைய வஹிக்குப் பிறகு ‘என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!” என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதை நினைவு கூறும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களை எழுந்து மக்களுக்கு எச்சரிக்கை செய்யுமாறு அறிவுறுத்துகிறான். ‘எழுந்து’ என்ற சொல் அவர்களின் அழைப்பு பணியில் அவர்கள் முழு மூச்சுடன் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. நபித்துவம் கிடைத்த பிறகு அவர்களின் முயற்சி, உழைப்பு, மக்கள் நேர்வழி பெறவேண்டும் என்ற அவர்களின் ஆவல் எல்லாம் அவர்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டதைக் காட்டுகிறது.

அத்தியாயம் கஹ்ஃப்

فَلَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ عَلَىٰ آثَارِهِمْ إِن لَّمْ يُؤْمِنُوا بِهَٰذَا الْحَدِيثِ أَسَفًا ﴿٦﴾

(நபியே!) இந்த (வேத) அறிவிப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அவர்களுக்காக வியாகூலப்பட்டு, நீர் உம்மையே அழித்துக் கொள்வீர்கள் போலும்!

என்ற இந்த வசனம் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மக்கள் நேர்வழி பெறவில்லை என்பதைக் குறித்து எந்த அளவிற்கு கவலைப்பட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. அவ்வாறு கவலை கொண்டு தங்களை வருத்திக் கொள்ள வேண்டாம் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறான்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அல்லும் பகலும் இதற்காகப் பாடுபட்டார்கள். குறிப்பாக ஹஜ்ஜுடைய காலம் வந்துவிட்டால் பல இடங்களிலிருந்து மக்காவை நோக்கி மக்கள் வருவார்கள். அப்போது அவர்கள் இரவு பகல் பார்க்காமல் அழைப்புப் பணிகளை மேற்கொள்ளுவார்கள். இறுதிவரை தங்களின் பொறுப்பை நிறைவேற்றிச் சென்றுள்ளார்கள். தொழுகையைக் குறித்தும், தங்களின் மண்ணறை வணக்கஸ்தலமாக மாறிவிடக்கூடாது எனவும் எச்சரித்துள்ளார்கள்.

அத்தியாயம் முஸ்ஸம்மில் 1-3

يَا أَيُّهَا الْمُزَّمِّلُ ﴿١﴾قُمِ اللَّيْلَ إِلَّا قَلِيلًا ﴿٢﴾نِّصْفَهُ أَوِ انقُصْ مِنْهُ قَلِيلًا ﴿٣﴾

போர்வை போர்க்கிக் கொண்டிருப்பவரே! இரவில் - சிறிது நேரம் தவிர்த்து (தொழுகைக்காக எழுந்து) நிற்பீராக; அதில் பாதி (நேரம்) அல்லது அதில் சிறிது குறைத்துக் கொள்வீராக!

இவ்வாறு நபித்துவத்தின் பத்தாவது ஆண்டில் மிஃராஜுக்குப் பிறகுதான் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தொழுகையைக் கடமையாக்கினான். ஆனால் இந்த தஹஜ்ஜுத் தொழுமாறு நபித்துவத்தின்

ஆரம்பித்திலேயே ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கட்டளை இட்டுள்ளான்.

அத்தியாயம் அல் இஸ்ரா 79

وَمِنَ اللَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَّكَ

இன்னும் இரவில் (ஒரு சிறு) பகுதியில் உமக்கு உபரியான தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழுது வருவீராக;

இந்த வசனத்தின்படி தஹஜ்ஜுத் தொழுகை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்குக் கடமையான ஒன்று என அறிஞர்கள் கூறுவார்கள். தஹஜ்ஜுத் தொழுமாறு நபித்துவத்தின் ஆரம்பித்திலேயே சொல்லப்பட்டது அதன் சிறப்பைக் குறிக்கும். நமது காரியங்களை இலகுவாக்கும்.

அத்தியாயம் முஸ்ஸம்மில் 5-8

إِنَّا سَنُلْقِي عَلَيْكَ قَوْلًا ثَقِيلًا ﴿٥﴾إِنَّ نَاشِئَةَ اللَّيْلِ هِيَ أَشَدُّ وَطْئًا وَأَقْوَمُ قِيلًا ﴿٦﴾إِنَّ لَكَ فِي النَّهَارِ سَبْحًا طَوِيلًا ﴿٧﴾وَاذْكُرِ اسْمَ رَبِّكَ وَتَبَتَّلْ إِلَيْهِ تَبْتِيلًا ﴿٨﴾

நிச்சயமாக, நாம் விரைவில் கனமான உறுதியான - ஒரு வாக்கை உம்மீது இறக்கி வைப்போம். நிச்சயமாக, இரவில் எழுந்திருந்து வணங்குவது (அகத்தையும் புறத்தையும்) ஒருங்கிணைக்க வல்லது. மேலும் வாக்கையும் செவ்வைப்படுத்த வல்லது. நிச்சயமாகப் பகலில் உமக்கு நெடிய (கடினமான) வேலைகள் இருக்கின்றன எனினும் (இரவிலும், பகலிலும்) உம்முடைய இறைவனின் பெயரை தியானிப்பீராக! இன்னும் அவனளவிலேயே முற்றிலும் திரும்பியவராக இருப்பீராக.

இந்த வசனத்தின்படி தஹஜ்ஜுத் தொழுகை நமது காரியங்களை ஒருங்கிணைக்க வல்லது என அறியலாம். இன்றும் அழைப்பு பணியைச் செய்பவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையின் சிறப்பை அறிய முடியும்.

وَرَتِّلِ الْقُرْآنَ تَرْتِيلًا ﴿٤﴾

மேலும் குர்ஆனைத் தெளிவாகவும், நிறுத்தி, நிறுத்தியும் ஓதுவீராக.

அடுத்த விஷயமாக திருக்குர்ஆனைத் திருத்தமாக ஓதுமாறு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அறிவுறுத்துகிறான். நம் காரியங்கள் சிறப்பாக வேண்டுமென்றால் திருக்குர்ஆனுடன் அதிக தொடர்பில் இருக்கவேண்டும்.

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ

உம்முடைய இறைவனின் பெயரை தியானிப்பீராக!

அடுத்ததாக அதிகமாக திக்று செய்வது. இறைவனை அதிகமாக நாம் நினைவு கூறவேண்டும். எனவே இந்த மூன்றும் தங்கள் பணி சிறக்க கடைபிடிக்க வேண்டும் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அறிவுறுத்துகிறான். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தங்களின் கால்கள் வீங்கும் அளவிற்கு நின்று தஹஜ்ஜுத் தொழுவார்கள். அது குறித்து அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا கேட்க, தங்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى க்கு நன்றியுள்ள அடியானாக இருக்கக்கூடாதா என வினவினார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ நீண்ட நேரம் நின்று தஹஜ்ஜுத் தொழுவார்கள். ஹுதைஃபா இப்னு யமான் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது, "ஒரு முறை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருந்தார்கள். நான் அவர்களைப் பின்தொடர்ந்து தொழுதேன். அவர்கள் அத்தியாயம் பகராவை ஓதினார்கள். அதன் 100 வசனங்கள் ஓதியது அவர்கள்

ருக்வுக்கு செல்வார்கள் என நினைத்தேன். ஆனால் அவர்கள் தொடர்ந்து ஓதினார்கள். அத்தியாயம் பகரா முடிந்ததும் ருக்வுக்கு போவார்கள் என நினைத்தேன். ஆனால் அவர்கள் அத்தியாயம் அந்நிஸாவை ஓதினார்கள். அதனை முடித்ததும் ருக்வுக்கு போவார்கள் என நினைத்தேன். . ஆனால் அவர்கள் பின்னர் அத்தியாயம் ஆல இம்ரானை ஓதினார்கள். அதனையும் ஓதி முடித்த பிறகுதான் ருக்வுக்கு சென்றார்கள். இவை அனைத்து ஐந்து ஜுஸ்வுக்கும் அதிகமானதாகும். ஒரு ரகஅத்தில் திருக்குர்ஆனில் ஆறில் ஒரு பகுதி அளவாகும். அது போல அவர்கள் ருக்விலும், ஸஜ்தாவிலும் நீண்ட நேரம் இருப்பார்கள். இரண்டு ரகஅத் தொழுகையில் இரவின் பெரும்பகுதி முடிந்துவிடும். அது போல அவர்கள் குர்ஆன் ஓதுவது மற்றும் திக்ரு செய்வது என அதிக நேரத்தை அதில் செலவளிப்பார்கள். எந்நேரமும் அவர்கள் திக்று செய்வார்கள் என அலி رَضِي الله عَنْهُ கூறியுள்ளார்கள்.

சில மாதங்களாக வஹி வரவில்லை. பின்னர் ஜிப்ரயீல் عَلَيْه السَّلاَم தினம் வஹி கொண்டு வந்தார்கள். இடையில் மூன்று நான்கு நாட்கள் வஹி வரவில்லை. ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் வஹியை எதிர்ப்பார்த்து அடிக்கடி வானை நோக்குவார்கள். அந்த சமயத்தில் சில காஃபிர்கள் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை அவர்களின் இறைவன் கைவிட்டு விட்டான் எனக் கூறினார்கள்.. அதற்குப் பதிலளிக்கும் விதமாகவும், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாகவும் இந்த அத்தியாயத்தை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அருளினான்.

அத்தியாயம் லுஹா:

وَالضُّحَىٰ ﴿١﴾ وَاللَّيْلِ إِذَا سَجَىٰ ﴿٢﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلَىٰ ﴿٣﴾ وَلَلْآخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْأُولَىٰ ﴿٤﴾ وَلَسَوْفَ
يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضَىٰ ﴿٥﴾ أَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَآوَىٰ ﴿٦﴾ وَوَجَدَكَ ضَالًّا فَهَدَىٰ ﴿٧﴾ وَوَجَدَكَ عَائِلًا
فَأَغْنَىٰ ﴿٨﴾ فَأَمَّا الْيَتِيمَ فَلَا تَقْهَرْ ﴿٩﴾ وَأَمَّا السَّائِلَ فَلَا تَنْهَرْ ﴿١٠﴾ وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿١١﴾

முற்பகல் மீது சத்தியமாக- ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக- உம்முடைய இறைவன் உம்மைக் கை விடவுமில்லை; அவன் (உம்மை) வெறுக்கவுமில்லை. மேலும் பிந்தியது (மறுமை) முந்தியதை (இம்மையை) விட உமக்கு மேலானதாகும். இன்னும், உம்முடைய இறைவன் வெகு சீக்கிரம் உமக்கு (உயர் பதவிகளைக்) கொடுப்பான்; அப்பொழுது நீர் திருப்தியடைவீர். (நபியே!) அவன் உம்மை அநாதையாகக் கண்டு, அப்பால் (உமக்குப்) புகலிடமளிக்கவில்லையா? இன்னும், உம்மை வழியற்றவராகக் கண்டு அவன், (உம்மை) நேர்வழியில் செலுத்தினான். மேலும், அவன் உம்மைத் தேவையுடையவராகக்கண்டு, (உம்மைச் செல்வத்தால்) தேவையில்லாதவராக்கினான். எனவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர். யாசிப்போரை விரட்டாதீர். மேலும், உம்முடைய இறைவனின் அருட்கொடையைப் பற்றி (பிறருக்கு) அறிவித்துக் கொண்டிருப்பீராக.

அத்தியாயம் முத்தத்திர் இறக்கியப் பிறகு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தங்களின் அழைப்புப் பணியத் தொடங்கினார்கள். ஆரம்பத்திலேயே அவர்கள் வெளிப்படியாக தங்களை நபியாகக் காட்டிகொள்ளாமல் மறைமுகமாகவே தங்களின் பணியை (தா’வா ஸிர்ரியாஹ்) ஆரம்பித்தார்கள். முதலில் தங்களின் நெருகிய உறவினர்கள் மற்றும் தோழர்களிடம் இறைச்செய்தி பற்றிக் கூறினார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் அல்லது குறைந்தபட்சம் எதிர்க்காமல் இருப்பர்கள் என்ற எண்ணத்தில் அவ்வாறு ஆரம்பித்தார்கள். முதல் முதலாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் அவர்களின் மனைவி அன்னை கதீஜா رَضِيِ الله عَنْهَا ஆவார்கள். அவர்களின் பெண்மக்களும் இஸ்லாத்தில் இணைந்தார்கள். (ஆண்மக்கள் இளவயதிலேயே மரணமடைந்து விட்டார்கள்). இஸ்லாத்தில் இணைந்த முதல் அடிமை அவர்கள் வளர்ப்பு மகன் என்று எண்ணப்பட்ட ஜைத் இப்னு ஹாரிதாஹ் رَضِي الله عَنْهُ ஆவார்கள். இளைஞர்களில் முதலில் இணைத்தவர்கள் அலி رَضِي الله عَنْهُ ஆவார்கள். பெரியவர்களில் முதலில் இணைத்தவர்கள் அபு பக்ரு رَضِي الله عَنْهُ ஆவார்கள். அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களும் அழைப்பு

பணியைச் செய்தார்கள். அவர்களின் மூலமாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள், அப்துர் ரஹ்மான் இப்னு அவஃப் رَضِي الله عَنْهُ, உதுமான் இப்னு அஃப்ஃபான் رَضِي الله عَنْهُ , ஜுபைர் இப்னு அவ்வாம் رَضِي الله عَنْهُ, தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் رَضِي الله عَنْهُ ஆகியோர். இவர்கள் அனைவரும் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி கூறப்பட்ட பதின்மரில் அடங்குவார்கள். மேலும் பலரும் அபு பக்ரு رَضِي الله عَنْهُ மூலமாக இஸ்லாத்தில் இணைந்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்லாத்தில் இணைந்த பல அடிமைகளை விலைக்கு வாங்கி விடுதலையும் செய்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் பலவழிகளில் அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் உற்ற தோழராக விளங்கி இருக்கிறார்கள். அதனைக் குறித்துதான், தங்களுக்கு உதவிய அனைவருக்கும் தங்கள் பதில் உபகாரம் செய்து விட்டார்கள் எனவும் அனால் அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களுக்குத் தவிர என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். ஆரம்பத்தில் இஸ்லாத்தைத் தழுவிய அனைவரும் அர்க்கம் இப்னு அபி அர்க்கம் அவர்களின் வீட்டில் (தருள் அர்க்கம்) ஒன்று கூடுவார்கள். சில அறிந்கர்களின் கருத்துப்படி ஆரம்பத்தில் அன்னை கதீஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் வீட்டில்தான் ஓன்று கூடி அழைப்புப்பணி செய்வார்கள். பின்னர் அர்க்கம் வீட்டில் இஸ்லாத்தைப் போதித்தார்கள்.மக்களுக்கு ஏகத்துவத்தை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ போதித்தார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான் ஒரே இறைவன். அவனையே வணங்க வேண்டும். அவனுக்கே பிராணிகளைப் பலியிட வேண்டும் என்ற ஏகத்துவத்தைப் போதித்தார்கள். மறுமை வாழ்க்கை, இறைத்தூதர்களின் மீது விசுவாசம் போன்றவற்றைக் கூறினார்கள். நற்குணங்களைப் பட்டியலிட்டார்கள். மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, உறவுகளைத் துண்டிக்காமல் பேணுவது, பெண் குழந்தைகளை கொலை செய்யாமல் பாதுகாப்பது போன்ற நற்பழக்கங்களைப் போதித்தார்கள். வணக்கங்களில் இரவுத்தொழுகையை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தொழுது வந்தார்கள். அத்துடன் முஸ்லிம்கள் காலை மற்றும் மாலை ஆகிய இரண்டு வேளைகளில் தொழுது வந்தார்கள். பத்து வருடங்களுக்குப் பிறகுதான் ஐவேளை தொழுகை கடமை ஆக்கப்பட்டது.

இந்த மறைமுக அழைப்புப்பணி சுமார் மூன்று வருடங்கள் இருந்தன. இதனை குறைஷிக் காஃபிர்கள் உணர்ந்தாலும், வரகாஹ் இப்னு நவ்ஃபல், ஹுஸ் இப்னு ஸாயிதா போன்ற சிலர் ஓரிறைக் கொள்கையுடன், சிலை வணக்கத்தை விட்டது போல இவர்களும் தங்கள் இச்சையின்படி இவ்வாறு செய்கிறார்கள் என நினைத்துக் கொண்டார்கள். புதிய மார்க்கம் கொண்டு வந்ததாகவோ அல்லது தங்களை ஒரு நபி என்று ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ சொல்வதாக நினைக்கவில்லை. எனினும் மூன்று வருடங்களுக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ வெளிப்படையாக அழைப்புப்பணி செய்ய ஆரம்பித்தபோதுதான் அவர்கள் இஸ்லாத்தை எதிர்க்க ஆரம்பித்தார்கள்.

Seerah 10 - The beginning of the public call and the first emigration to Habasa

ஸீராஹ் வகுப்பு 10 - பகிரங்க அழைப்பு பணியின் ஆரம்பம் மற்றும் ஹபஸாவை நோக்கி முதல் ஹிஜ்ரத் பயணம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ஆரம்பத்தில் மறைமுகமாகவே அழைப்புப் பணியை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ மேற்கொண்டார்கள் என நாம் கூறினோம். அந்த நேரத்தில் இஸ்லாத்தில் இணைந்தவர்களில் ஸஅத் இப்னு அபி வக்காஸ் رَضِي الله عَنْهُ, அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ, அமர் இப்னு அபதாஹ் رَضِي الله عَنْهُ, அம்மார் இப்னு யாஸிர் رَضِي الله عَنْهُ போன்றோர் முக்கியமானவர்கள் ஆவார்கள். இந்த காலகட்டத்தில் ஜின்களும் இஸ்லாத்தில் இணைத்தனர். "முந்திய நபிமார்கள் தங்கள் சமுதாயத்திற்கு மட்டும்தான் நபியாக வந்தார்கள். அனால் நான் அகிலம் அனைத்துக்கும் நபியாக அனுப்பப்பட்டேன்." என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். அவர்கள் மனிதர்களுக்கும் மட்டுமல்லாமல், ஜின்களுக்கும் நபியாக அனுப்பப்பட்டார்கள். இது குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى குறிப்பிடுகிறான்:

அத்தியாயம் ஜின்: 1,2

قُلْ أُوحِيَ إِلَيَّ أَنَّهُ اسْتَمَعَ نَفَرٌ مِّنَ الْجِنِّ فَقَالُوا إِنَّا سَمِعْنَا قُرْآنًا عَجَبًا ﴿١﴾ يَهْدِي إِلَى الرُّشْدِ فَآمَنَّا بِهِ ۖ وَلَن نُّشْرِكَ بِرَبِّنَا أَحَدًا ﴿٢﴾

நிச்சயமாக, ஜின்களில் சில (திருக் குர்ஆனை) செவிமடுத்து(த் தம் இனத்தாரிடம் கூறினர்:) "நிச்சயமாக நாங்கள், மிகவும் ஆச்சரியமான ஒரு குர்ஆனை கேட்டோம்" என்று கூறினர், என எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டதென்று (நபியே!) நீர் கூறுவீராக. "அது நேர்மையின் பால் வழிகாட்டுகிறது; ஆகவே அதைக் கொண்டு நாங்கள் ஈமான் கொண்டோம்; அன்றியும் எங்கள் இறைவனுக்கு ஒருவனையும் நாங்கள் இணையாக்கமாட்டோம்" (என்று அந்த ஜின் கூறலாயிற்று).

சுமார் ஒன்பது ஜின்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுப் பின்னர் தங்கள் சமுதாயத்தினரிடம் சென்று இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறின. இவ்வாறு மூன்று வருடங்கள் மறைமுகமாக அழைப்புப் பணியை மேற்கொண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு இவ்வசனங்கள் இறக்கப்பட்டன.

அத்தியாயம் அஷ் ஷுஅறா 214

وَأَنذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ ﴿٢١٤﴾

இன்னும், உம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!

அத்தியாயம் அல் ஹிஜ்ர் 94

فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ

உமக்குக் கட்டளையிடப் பட்டிருப்பதை வெளிப்படையாக அவர்களுக்கு அறிவிப்பீராக

இவ்வாறு அவர்கள் தங்களின் பணியை வெளிப்படையாக செய்யுமாறு அல்லாஹ் கட்டளை இட்டதும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஸஃபா மலையின் மீது ஏறியவாறு

தங்களின் அழைப்புப் பணியை ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் மக்காவாசிகளின் வழக்கம் இவ்வாறுதான் இருந்தது. ஸஃபா மலையை முக்கியமான அறிவிப்புகளுக்குப் பயன்படுத்துவார்கள். அவ்வாறு அறிவிப்பதால் அச்செய்தி மக்காவையும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களையும் அடைந்து விடும். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் குறைஷிக் குலப் பெயர்களைக் குறிப்பிட்டும், மக்களின் பெயர்களைக் குறிப்பிட்டும் அவர்களை அழைத்தார்கள்.

மக்கள் ஸஃபா மலையின் அருகில் ஒன்று திரண்ட பிறகு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ வினவினார்கள், “மக்களே! இதோ இந்த ஸஃபா மலைக்குப் பின்னால் ஒரு படை உங்களைத் தாக்கப் போகிறது என்று நான் சொன்னால், நீங்கள் அதனை நம்புவீர்களா?” கூடியிருந்த மக்கள் எல்லோரும், “ஆம்! ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே, நாங்கள் நிச்சயமாக நம்புவோம். உங்களை நாங்கள் உண்மையை உரைப்பவர்களாகத்தான் கண்டிருக்கிறோம்.” என்று ஒருமித்தக் குரலில் கூறினார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள் “ஆனால் இப்போது அதனைவிடப் பயங்கரமான ஒரு செய்தி குறித்து எச்சரிக்கை செய்கிறேன். அல்லாஹ்வை மட்டுமே வணங்கி அவனுக்கு இணை வைக்காமல் என்னை அவனது தூதராக ஏற்றுக் கொண்டு, சிலை வணக்கத்தை விடவில்லை என்றால் கடுமையான வேதனைக் குறித்து எச்சரிக்கை செய்கிறேன்.” அப்போது அங்கிருந்த அபு லஹப் அவர்கள் நாசமாகட்டும் என்று கத்தினார். இந்த அற்பமான விஷயத்திற்காகவா அழைத்தீர்கள் என கூறி, அந்த இறைச் செய்தியை ஒரு அற்பமான விஷயமாக மாற்ற முயன்றார். மக்கள் சிந்திக்விடக் கூடாது என்ற எண்ணத்தில் அவ்வாறு அவர் சூழ்நிலையை திசை திருப்ப முயன்றார். மூஸா அவர்களின் காலத்திலும் ஃபிர்அவுனும் இவ்வாறுதான் திசை திருப்ப முயன்றான். இன்றும் அசத்தியத்தில் உள்ளவர்கள் தங்களின் ஊடகங்களைப் பயன்படுத்தி அற்பமான விஷயங்களை கூறி இவ்வாறு திசை திருப்புவார்கள்.

அபு லஹபின் மனைவும் அவர்குக்கு உடந்தையாக இருந்தார். ஒரு ஸஹாபி கூறுவார், “ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இறை அழைப்புப்பணியை செய்யும் இடமெல்லாம் இந்த அபு லஹப் பின்சென்று இதோ இவரை நம்பாதீர்கள் என்று கூறுவார்”.
ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் குறித்து அபு லஹப் சாபமிட்டதற்கு அல்லாஹ் இவ்வாறு பதில் அளித்தான்.

அத்தியாயம் லஹப்:

تَبَّتْ يَدَا أَبِي لَهَبٍ وَتَبَّ ﴿١﴾ مَا أَغْنَىٰ عَنْهُ مَالُهُ وَمَا كَسَبَ ﴿٢﴾ سَيَصْلَىٰ نَارًا ذَاتَ لَهَبٍ ﴿٣﴾ وَامْرَأَتُهُ حَمَّالَةَ الْحَطَبِ ﴿٤﴾ فِي جِيدِهَا حَبْلٌ مِّن مَّسَدٍ ﴿٥﴾

அபூலஹபின் இரண்டு கைகளும் நாசமடைக; அவனும் நாசமாகட்டும். அவனுடைய பொருளும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயன்படவில்லை. விரைவில் அவன் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் புகுவான். விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியோ, அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங் கயிறுதான் (அதனால் அவளும் அழிவாள்).

அழைப்புப்பணியை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தொடர, குறைஷியர்கள் அவர்களையும் இஸ்லாத்தை ஏற்ற ஸஹாபாக்களையும் துன்புறுத்த ஆரம்பித்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தொழுகையில் ஸஜ்தா செய்யும்போது அவர்களின் முதுகில் ஒட்டகக் குடலை அபுலஹப் வைத்து விடுவான். அவர்கள் ஸஜ்தாவிலிருந்து எழுந்திருக்க மிகவும் சிரமப்படுவார்கள். அலி رَضِي الله عَنْهُ போன்றோர் உதவியுடன் அவர்கள் எழுந்து செல்வார்கள்.அவர்கள் செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து, “இதோ சூனியக்காரர்! இதோ

பொய்யர்! இதோ பைத்தியக்காரர்!" என அவர்களைச் சுற்றிக்காட்டி ஏளனம் செய்வார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்காக, மக்களை நல்வழியின்பால் அழைப்பதற்காக இவற்றை அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள். இதைவிட அதிகமான துன்பங்கள் தொடர்ந்தன.

பிலால் رَضِيَ الله عَنْهُ அவர்களின் சம்பவம் மிகவும் கொடிய ஒன்றாகும். அவர்களை சுட்டெரிக்கும் வெயில் நேரத்தில் பாலைவன மண்ணில் கிடத்தி, அவரை எழுந்திருக்க முடியாமல் செய்வதற்கு அவரின் மீது பெரிய பாறாங்கல்லை வைத்து விடுவார்கள். ஆனால் அவர்களோ அந்த கொடும் வேதனையைப் பொருட்படுத்தாமல் தங்களின் விசுவாசத்தைப் பறைசாற்றும் விதமாக, "அஹத்! அஹத்! (ஒருவனே! ஒருவனே!) - அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஒருவனே இறைவன் என்ற பொருளில் - கூறிக்கொண்டு இருப்பார்கள். அதுபோல் அம்மார் இப்னு யாஸிர் رَضِيَ الله عَنْهُ மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அனைவரையும் துன்புறுத்தி இறுதியில் அனைவரையும் ஷஹீதாக்கினார்கள். முதன்முதலாக ஷஹீதாக்கப்பட்ட பெண்மணி சுமையாஹ் رَضِيَ الله عَنْهاَ ஆவார்கள். அபு ஜஹில் அவற்றை முன்னின்று நடத்தினான். உத்மான் رَضِيَ الله عَنْهُ அவர்களை அவர்களின் சொந்த உறவினரே அவர்களை ஒரு பாயில் சுற்றி வைத்து விட்டுத் தீயை மூட்டிவிட்டார். புகை மூட்டத்தில் மூச்சுத் திணறும் வேளையில் இஸ்லாத்தை விட்டுவிடுமாறு நிர்பந்தம் செய்வார். ஆனால் ஸஹாபாக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருப்பர்கள். ஹப்பாப் இப்னு அர்த் رَضِيَ الله عَنْهُ யின் மீது நெருப்பை போட்டதால் முதுகு வெந்து போயிற்று. காஃபிர்கள் சில முஸ்லிம்களைப் பாதியாக வெட்டி சஹீதாக்கி உள்ளார்கள். எனினும் அவர்கள் சத்தியத்தில் நிலைத்து இருந்தார்கள். இத்தைகைய தற்காலிக வேதனையை சகித்துக்கொண்டால், அதற்குக் கூலியாக நிரந்த சுவனம் நமக்கு ஏற்பாடாக உள்ளது.

நாள் செல்லச் செல்ல, காஃபிர்களின் வேதனை அதிகரிக்கவே, தங்கள் தோழர்களை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஹபஷா (அபீஸீனியா) நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி அளித்தார்கள். இது இஸ்லாத்தின் முதல் ஹிஜ்ரத் ஆகும். இவ்வாறு தங்கள் முழுமையாகவும், சுதந்திரமாகவும் வழிபட முடியாத மக்காவை விட்டு தங்கள் விருப்பப்படி வடிபட உகந்த நாட்டிற்கு குடிபெயர்ந்தது ஹிஜ்ரத் ஆகும். ஹபஷா நாட்டு அரசர் நீதவானாக இருந்தார். அங்கு யாரையும் துன்புறுத்த முடியாது. அந்நாட்டிற்கு இரண்டு கட்டமாக ஸஹாபாக்கள் ஹிஜ்றது செய்தார்கள். அவர்களில் அன்னை உம்மு ஹபீபா رَضِيَ الله عَنْهاَ , ஜாஃபர் இப்னு அபு தாலிப் رَضِيَ الله عَنْهُ ஆகியோர் அடங்குவர். அங்கு அரசனைச் சந்தித்த வேளையில் இஸ்லாம் குறித்து கூறினார்கள். கிருத்துவ அரசனாகிய அஸ்ஹமா, (நஜ்ஜாஸி) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறார். அவருடன் பலர் இஸ்லாத்தை என்றார்கள். குறைஷியர்கள் முச்லிம்களுக்கு எதிராக அரசரிடம் முறையிட்ட போதும், அவர் முஸ்லிம்களுக்கு மிகுந்த பாதுகாப்பை அளித்தார். அவர் இறந்தபோது அவரின் கா'யிப் ஜனாஸா தொழுகையை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ நடத்தினார்கள்.

Seerah 11 - The actions of the unbelievers against the calling work of the Prophet

ஸீராஹ் வகுப்பு 11 - நபியவர்களின் அழைப்பு பணிக்கு எதிராக காஃபிர்களின் செயல்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

தங்களின் பணியை வெளிப்படையாக செய்யுமாறு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கட்டளை இட்டதும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ உடனே தங்களின் பணியை மேற்கொண்டார்கள். அப்போது இஸ்லாத்தை ஏற்றவர்களுள் ஒருவர் அபூதர் கிஃப்ஃபாரி رَضِي الله عَنْهُ ஆவார்கள். வெளியூர்வாசியான அவர் மக்காவுக்கு வந்து தாம் வந்த நோக்கத்தை தெரிவிக்காமலேயே அலி رَضِي الله عَنْهُ அவர்களின் வீட்டில் தங்கினார். மூன்று நாட்களுக்குப்பின்பின்னர் அவர்களின் குணநலன்களை அறிந்த பிறகு தாம் தங்களைக் குறித்து தாங்கள் ஒரு நபி எனக் கூறிகொள்ளும் முஹம்மது صَلَّي الله عَلَيْه وَسلَّمَ அவர்களைக் காண வந்ததாகக் கூறினார். அவர்கள் உண்மைத் தூதர்கள்தான் என்று கூறியவாறு அவரை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் அலி رَضِي الله عَنْهُ அழைத்துச் சென்றார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْه وَسلَّمَ அவர்களைச் சந்தித்த அபூதர் கிஃப்ஃபாரி رَضِي الله عَنْهُ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர்களுக்கு 'அஸ்ஸலாம் அழைக்கும்' என முகமன் கூறி, இவ்வாறு முதன்முதலாக ஸலாத்தினை அறிமுகப்படுத்தியவர் அபூதர் கிஃப்ஃபாரி رَضِي الله عَنْهُ ஆவார். இஸ்லாத்தை ஏற்றவுடன், அவர் நேராகக் கஃபா நோக்கிச் சென்று தாம் இஸ்லாத்தை ஏற்றுவிட்டதாக பகிரங்கமான மூன்று தடவைகள் கூறினார். அதைக் கேட்ட மக்கத்துக் காஃபிர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கினார்கள்.

அக்காலத்தில் இஸ்லாத்தை ஏற்ற மற்றொருவர் உத்மான் இப்னு மப்ஊன் رَضِي الله عَنْهُ என்பவர் ஆவார். ஹிஜ்ரத்திற்குப் பிறகு மதினாவில் இவர் ஷஹீதானார். லம்மாத் رَضِي الله عَنْهُ என்ற ஸஹாபி வெளியூரிலிருந்து மக்கா வந்திருந்தார். அவரிடம் மக்கத்துக் காஃபிர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் குறித்து தவறாக கூறினார்கள். தம் ஊரில் நோயுக்கு மந்திரிக்கும் தொழிலைப் பார்க்கும் அவர் அது குறித்து பயப்படாமல் அவர்களை நேரில் சந்தித்து மக்கத்துக் காஃபிர்கள் அவர்களைப்பற்றி சொன்னதை அவர்களிடம் கூறினார். அனால் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை இவ்வாறு புகழ்ந்தார்கள்.

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُوْرِ أَنْفُسِنَا وَمِنْ
سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْهُ فَلاَ هَادِيَ لَهُ.
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ
وَرَسُوْلُهُ.

அப்போது அவர் கூறினார், "நானும் குறிகாரர்கள, சூனியக்காரர்களைக் கண்டிருக்கிறேன். இவ்வாறு சிறந்த சொற்களை நான் கேட்டதில்லை. எனவே நீங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்ல." இவ்வாறு கூறி இஸ்லாத்தில் இணைந்து கொண்ட அவர் தமது கூட்டத்தினரையும் இஸ்லாத்தில் இணைய வைத்தார்.

தாங்கள் குறைஷி குலத்தைச் சார்ந்தவர்கள் எனவும் சிறந்த அரபி மொழியைப் பேசக்கூடியவர்கள் எனவும் தங்களைப்பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறுவார்கள். அவர்களின் சொற்கள் இலகுவாகப் புரியும், இனிமையாகவும் இருக்கும்.

இஸ்லாத்தை ஏற்ற மற்றொருவர் துஃபைல் இப்னு அமர் அத் தவ்ஸி رَضِي الله عَنْهُ ஆவார். இவர் மிகப்பெரிய பெரிய கவிஞர். இஸ்லாத்தில் இணைந்த அவர் தம் மக்களையும் இஸ்லாத்தின்பால் அழைத்தார். பலமுறை அழைத்தும் அவர்கள் வர மறுக்கவே, அவர்களைச் சபித்துவிடுமாறு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் கூறினார். மாறாக அவர்களுக்கு நேரவழி கொடுக்குமாறு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ வேண்டினார்கள். பின்னர் பலர் இஸ்லாத்தில் இணைந்தார்கள். அவர்களில் ஒருவர்தாம் அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ ஆவார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் மதினாவில் தங்கி பல ஹதீதுகளை அறிவிக்கும் பாக்கியம் பெற்றார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடைய துஆவின் பலன் இது.

மக்கத்துக் காஃபிர்களின் பலமான எதிர்ப்பின் காரணமாக இஸ்லாத்தை எதிர்த்த சிலர் அதனை வெளிக்காட்டாமல் இருந்தார்கள். அவ்வாறு மறைமுகமாக இருந்தவர்களில் அலி رَضِي الله عَنْهُ அவர்களின் நெருங்கிய நண்பர் மிக்தாத் رَضِي الله عَنْهُ தும் ஒருவர். அபூதாலிபின் ஆதரவினால் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களையும், தங்களின் கொத்திரத்தினரின் பலத்தால் அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களையும் மக்கத்துக் காஃபிர்கள் அதிகமாகத் துன்புறுத்தவில்லை. பலவீனமான முஸ்லிம்கள், பின்புலம் இல்லாதவர்கள் அதிகம் இன்னலுக்கு ஆளானார்கள். மக்கத்துக் காஃபிர்கள் இவ்வாறு எதிர்த்ததன் காரணம், தாங்கள் வணங்கும் சிலைகலை மறுப்பதோடு, அதன் காரணமாக கஃபாவைத் தேடிவரும் யாத்திரிகர்கள் எண்ணிக்கை குறைந்து பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ அஞ்சியதும் காரணமாகும். சிரியா ஏமன் போன்ற பல ஊர்களிளிலிருந்து மக்கள் வருவது குறைந்து விடுமோ என அஞ்சினார்கள். மேலும் தங்களின் தலைமைத்துவமும் பாதித்து விடும் என்றும் அவர்கள் அஞ்சினார்கள்.

அபு லஹப், அவரது மனைவி ஆகியோரும் அவர்களுக்கு இன்னல் செய்தனர். அவரது மனைவி உம்மு ஜமிலா ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களை இகழ்ந்து கவி பாடுவார். புகழுக்கு உரியவர் (முஹம்மத்) எனப் பெயர் கொண்ட அவர்களை இகழுக்கு உரியவர் என்று பொருள்படும்படி முஸம்மம் என மாற்றிப் பாடுவார். அவர்களை மறுக்கிறோம், அவர்களின் மார்க்கத்தை வெறுக்கிறோம், அவர்களின் கட்டளைகளை கேட்கமாட்டோம் எனக் கவி புனைவார். அதைக் கேட்டு ஸஹாபாக்கள் வருத்தப்பட்ட போது, அவர் முஸம்மம் என்ற ஒருவரைப் பற்றி பாடுகிறார், ஆனால் நானோ முஹம்மத், எனவே கவலைப்பட வேண்டாம் என ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் நேர்மறை எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தி பொறுமையுடன் அதனை கை கொள்வார்கள். அபு ஜஹில் தூண்டுதலினால் உக்பா இப்னு அபு முயீத் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஸஜ்தா செய்யும்போது ஒட்டகக் குடலை அவர்களின் மீது போடுவான். அப்போது மக்கத்துக் காஃபிர்கள் சிரிப்பார்கள். இவர்களில் அபு ஜஹில், உத்பா, உமை இப்னு கலப் போன்றவர்கள் அடங்குவர். சத்தியத்தை மறுத்ததாக இவர்களை ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் சபித்தார்கள். அப்படி சிரித்தவர்கள் அனைவரும் பத்ருப் போரில் கொல்லப்பட்டதாக இப்னு மஸ்வூத் கூறியுள்ளார்கள்.

இன்னல்கள் அதிகமானபோது, ஏகத்துவத்தை ஏற்க மறுத்தபோது ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள், “இறைவா! யூஸுஃப் عَلَيْهُ السَّلاَم அவர்கள் காலத்திய பஞ்சத்தைப் போல இந்த மக்கத்துக் காஃபிர்கள் மீதும் ஏற்படுத்துவாயாக.” அதன் பிறகு அவர்களின் மீது கடும் பஞ்சம் ஏற்பட்டது. வசதியாக வாழ்ந்து வந்த அவர்கள் இறந்துபோன விலங்குகளை அறுத்து சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அப்போது அபு ஸுஃப்யான் ஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் வந்து கூறினார், “முஹம்மது صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே! நீங்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்க்குக் கட்டுப்படச் சொல்கிறீர்கள். உறவினர்களை ஆதரிக்கச் சொல்கிறீர்கள். ஆனால் உங்களுடைய சமூகத்தினர்கள் எல்லாம்

வேதனைகளில் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்காக வேண்டுங்கள்." ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் துஆ செய்ய பஞ்சம் நீங்கியது. எனினும் அக்காஃபிர்கள் தாங்கள் விசுவாசம் கொள்வோம் என்று கூறிய வாக்கை மீறினர். மறுபடியும் அவர்களை மறுத்தார்கள்.
ஒருமுறை, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கஃபாவில் சப்தமாகக் குர்ஆன் ஓதித் தொழுதார்கள். அப்போது மக்கத்துக் காஃபிர்கள் அவர்களையும், அல்லாஹ்வையும், ஜிப்ரயீல் அவர்களையும் திட்டினார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் சப்தமிட்டு ஓதாமல் மெதுவாக ஓதுமாறு வசனத்தை இறக்கினான்.

ஒரு முறை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைத் தொழ விடாமல் தடுக்க நெருங்கியபோது, பயத்துடன் அலறி அடித்துப் பின் வாங்கினான். மக்கள் ஆச்சரியத்துடன் வினவியபோது, அவர்களுக்கும் தனக்கும் இடையில் ஒரு பெரிய நெருப்புக் குண்டத்தைக் கண்டதால் நெருங்க முடியவில்லை என்றான். இதனைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்,

அத்தியாயம் அலக் 9, 10

أَرَأَيْتَ الَّذِي يَنْهَىٰ ﴿٩﴾ عَبْدًا إِذَا صَلَّىٰ ﴿١٠﴾

தடை செய்கிறானே (அவனை) நீர் பார்த்தீரா? ஓர் அடியாரை - அவர் தொழும்போது,

இவ்வாறு தொடர்ந்து அக்காஃபிர்கள் பலவாறு இன்னல் செய்து கொண்டிருந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தடவை தொழுது கொண்டிருந்தபோது, உக்பா இப்னு அபு முயீத் அவர்களின் கழுத்தில் இருத்த துண்டைக் கொண்டு அவர்களின் கழுத்தை இறுக்க, அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ ஓடி வந்து தடுத்தார்கள். தங்களுடைய இரட்சகன் அல்லாஹ் என்று கூறியதற்காகவா இவ்வாறு அவர்களைக் கொல்ல முயல்கிறீர்கள் என அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வும் இதனைக் குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் கொன்று விடவேண்டும் என்று காஃபிர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கெட்ட ஃபாத்திமா رَضِيَ الله عَنْهَا அவர்கள் அதனை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் வந்து கூறினார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் உடனே புறப்பட்டு கஃபாவை நோக்கிப் புறப்பட்டு சென்று தொழுதார்கள். சிறிது மண்ணை அங்கிருந்தவர்களின் மீது வீச, அங்குள்ளவர்களின் கண்களுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தொழுதது தெரியாமல் போயிற்று. இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் புறப்படும் முன் அங்கு போய் தொழுததையும் யாரும் காண முடியவில்லை.

அக்காஃபிர்களின் இன்னலுக்கு பலவீனமான முஸ்லிம்கள், பின்புலம் இல்லாதவர்கள் அதிகம் ஆளானார்கள். அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அவர்கள் அவ்வாறு பலவீனமான முஸ்லிம்கள், அடிமைகளை ஆதரவு தரும் நோக்கில் தங்களின் செல்வத்தைக் கொண்டு விடுவிப்பார்கள். அவர்களின் தந்தை அபு குஹாபா பலமானவர்களை விடுதலை செய்தால் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என ஆலோசனை கூறினார்கள். ஆனால் அவர்களோ அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் திருப்பொருத்தத்தை வேண்டிதான் தாங்கள் அவ்வாறு செய்ததாகக் கூறினார்கள்.
அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இதனைக் குறிப்பிடுகிறான்,

அத்தியாயம் அல் லைல் 5-7

فَأَمَّا مَنْ أَعْطَىٰ وَاتَّقَىٰ ﴿٥﴾ وَصَدَّقَ بِالْحُسْنَىٰ ﴿٦﴾ فَسَنُيَسِّرُهُ لِلْيُسْرَىٰ ﴿٧﴾

எனவே எவர் (தானதருமம்) கொடுத்து, (தன் இறைவனிடம்) பயபக்தியுடன் நடந்து, நல்லவற்றை (அவை நல்லவையென்று) உண்மையாக்குகின்றாரோ, அவருக்கு நாம் (சுவர்க்கத்தின் வழியை) இலேசாக்குவோம்.

ஒரு பக்கம் இன்னல் செய்த காஃபிர்கள், மறு பக்கம் அழைப்புப் பணியை ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் விட்டுவிட்டால், அவர்கள் கேட்டதை எல்லாம் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறினார்கள். அவர்கள் உண்மையில் ஒரு இறைத்தூதர் என்றால் ஏதேனும் ஒரு அடையாளம், அற்புதத்தைக் காட்டுமாறு கேட்டார்கள். ஸஃபா மலையைத் தங்கமாக மாற்றுங்கள் எனக் கேட்டார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அப்போது ஜிப்ரீல் عَلَيْهُ السَّلَام அவர்களை அனுப்பினான். தங்களுக்கு ஸஃபா மலையைத் தங்கமாக ஆக்க வேண்டுமா அல்லது இவர்கள் இஸ்லாத்தை ஏற்றால் பாவ மன்னிப்பும், அருளும் வேண்டுமா என்றார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் பின்னால் உள்ளதை விரும்பினார்கள். அல்லாஹ் ஸாலிஹ் அவர்களின் மக்களுக்கு அனுப்பிய ஒட்டகம் போன்று முந்தைய சமுதாயத்தினரும் கேட்டதை குறிப்பிட்டு, அவ்வாறு அற்புதத்தைக் காட்டினாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனக் கூறுகிறான். எனினும் சந்திரனை இரண்டாகப் பிளந்து அவர்களிடம் அற்புதம் செய்து காட்டினார்கள். இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ தாங்கள் அந்த இரண்டு பிளவுகளுக்கு இடையில் ஹீரா மலையைப் பார்த்ததாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு இன்னல் கொடுத்து, ஆசை வார்த்தைக் கூறி, அற்புதம் செய்யச் சொல்லி பலவிதமாக காஃபிர்கள் முயன்றார்கள். குர்ஆன் அல்லாஹ் இறக்கியது அல்ல எனவும், மாறாக அவர்கள் யூத, கிருத்துவர்களிடம் படித்தவை என்றும் கூறிப் பார்த்தார்கள். ஆனால் குர்ஆனிலேயே யூத, கிருத்துவர்களைப் பற்றி குறை கூறப்பட்டுள்ளது. படிப்பறிவு இல்லாத ஒருவரிடமிருந்து இந்த அற்புத குர்ஆன் வந்தது இது மனிதரின் சொல் அல்ல என்பதை நிரூபிக்கிறது. மேலும் இது மனிதரின் சொல் என்றால் இதைப் போன்று பத்து அத்தியாயம் அல்லது ஒரே ஒரு அத்தியாமாவது கொண்டு வருமாறு காஃபிர்களுக்கு சவால் விடப்பட்டது. அதிலும் அவர்கள் வீழ்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் முயன்ற அனைத்தும் தோல்வியில்தான் முடிந்தது.

Seerah 12 - Acceptance of Islam by Omar (RA) and the social boycott of Muslims by Unbelievers

ஸீராஹ் வகுப்பு 12 - உமர் ரலி அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் காஃபிர்கள் முஸ்லிம்களை சமூக புறக்கணிப்பு செய்தல்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் சிறிய தந்தை ஹம்ஸா رَضِي الله عَنْهُ அவர்கள் மிகவும் தைரியமானவர்கள். மக்களுக்கு அவர்கள் மீது அச்சம் கலந்த மரியாதை உண்டு. அவர்கள் இஸ்லாத்தில் இணைந்த சம்பவம் குறித்து கூறப்பட்ட அனைத்தும் ஆதாரப்பூர்வமானது அல்ல. இக்காலக் கட்டத்தில்தான் அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள். ஹபஷாவில் ஹிஜ்ரத் செய்த காலத்தில்தான் அத்தியாயம் நஜ்ம் இறக்கப்பட்டது. அந்த அத்தியாயத்தை மக்களுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஓதிக் காட்டினார்கள். மக்களின் ஸஹாபாக்கள் மற்றும் காஃபிர்களும் அடங்குவார்கள். அந்த அத்தியாயத்தின் கடையில் வரும் ஸஜ்தா வசனத்தை ஓதியதும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஸஜ்தா செய்தார்கள். அவர்களைத் தொடர்ந்து ஸஹாபாக்களும் ஸஜ்தா செய்தார்கள். மக்கத்துக் காஃபிர்களும் தங்களை அறியாமலேயே ஸஜ்தா செய்தார்கள். இச்செய்தி ஹபஷாவில் ஹிஜ்ரத் செய்திருந்தவர்களுக்கு, மக்கத்துக் காஃபிர்களும் இஸ்லாத்தில் இணைந்து விட்டார்கள் என தவறாக சென்றடைந்தது. மக்கா அமைதியாக ஆகிவிட்டது என அவர்கள் நினைத்து விட்டார்கள். எனவே சிலர் திருப்பவும் மக்காவுக்கு திரும்ப வந்தார்கள். அனால் தாங்கள் நினைத்தவாறு நிலைமை இல்லை என உணர்ந்து சிலர் மறுபடியும் ஹபஷா சென்று விட்டார்கள். அவர்கள் பின்னர் மதினாவில்தான் இணைந்தார்கள்.

உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் இஸ்லாத்தில் இணைந்ததும் அப்போது நடந்தது. அவர்கள் தங்களின் சகோதரி வீட்டில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பதும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும்போது அதனால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பதும் ஆதாரப்பூர்வமற்ற செய்திகளாகும். நடந்திருக்கலாம், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அறிந்தவன். எனினும் அவர்கள் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்கு மிகவும் எதிரியாக நடந்தார்கள். முஸ்லிம்களைத் துன்புறுத்தியுள்ளார்கள். எனினும் அவர்கள் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் செய்த மக்களைக் கண்டு, அவர்கள் அவ்வாறு போகும் காரணத்தை ஒரு பெண்மணியிடம் விசாரித்தார்கள். தாங்கள் துயரம் தாங்காமல் தான் செல்வதாகக் கூறியபோது, அது குறித்து வருத்தம் கொண்ட உமர் رَضِي الله عَنْهُ அவர்கள், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களுடன் இருப்பான் என்ற ஆறுதல் மொழி கூறி அனுப்பினார்கள். அந்த அளவுக்கு இரக்கமும் கொண்டவர்கள். அதனைக்கண்ட ஒருவர் அப்பெண்மணியிடம் உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் இஸ்லாத்தில் இணைந்து விடுவாரா என வினவ, தாம் அப்படித்தான் நினைப்பதாகக் கூறினார். அனால் உமர் رَضِي الله عَنْهُ அவர்களின் இஸ்லாத்திற்கு எதிரான நிலைபாட்டை அறிந்த அந்த நபர், உமர் رَضِي الله عَنْهُ அவர்களின் கழுதை இஸ்லாத்திற்கு வரும்வரை அவர்கள் வர மாட்டார்கள் எனக் கூறினார். அந்த அளவிற்கு அவர்கள் குறித்து நிராசையாக இருந்தார்கள். ஆனால் அவர்களின் ஹிதாயத்திர்காக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ துஆ செய்தார்கள். அபு ஜஹல் அல்லது உமர் رَضِي الله عَنْهُ அவர்களில் அவன் விரும்புபவரை இஸ்லாத்தில் இணைத்து, இஸ்லாத்திற்கு வலு சேர்க்குமாறு துஆ செய்தார்கள்.அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அந்த துஆவை ஏற்றுக் கொண்டான். உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் மற்றும் அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்கள் ஆகியோருக்குப் பிறகு சிறந்தவர்களாகக் கூறப்பட்டவர்கள்தாம் உமர் رَضِي الله عَنْهُ

அவர்கள். அவர்கள் இஸ்லாத்தில் இணையும் முன்பு முஸ்லிம்கள் வெளிப்படையாக கஃபா அருகில் நின்று தொழ முடியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு முஸ்லிம்கள் தைரியம் கொண்டார்கள். உமர் رَضِيَ الله عَنْهُ அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகுதான் தங்கள் கண்ணியம் பெற்றதாக இப்னு மஸ்வூது رَضِيَ الله عَنْهُ கூறியுள்ளார்கள். தாங்கள் முஸ்லிம் என்பதை சொல்லத் தைரியம் பெற்றார்கள். மக்காவில் ஜமீல் என்ற ஒருவர் இருந்தார். அவரிடம் எதனையும் கூறினால், மக்காவில் உள்ள அனைவருக்கும் தெரியும் அளவிற்கு செய்து விடுவார். அந்த நபரிடம் போய் தாங்கள் இஸ்லாத்தில் இணைந்து விட்டதாக உமர் அவர்கள் கூறினார்கள். அவர் கஃபா அருகில் சென்று மக்களிடம் உமர் رَضِيَ الله عَنْهُ அவர்கள் வழி கெட்டுப் போய்விட்டார் என்று கூவினார். மறுத்த உமர் رَضِيَ الله عَنْهُ அவர்கள், தாங்கள் வழி கெட்டுப் போய் விடவில்லை எனவும், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மார்கத்தை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார்கள். பிறகு உமர் رَضِيَ الله عَنْهُ அவர்களை அடித்துக் கொல்ல அங்குள்ளவர் முயன்றனர். அப்போது அடைக்கலம் கொடுத்தார் ஹதிப் பின் பாக்கித் ஆவார்.

சில காலம் சென்ற பிறகு முஸ்லிம்கள் மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப் பட்டார்கள். அபு தாலிப் இருந்ததனால் மக்கத்து காஃபிகள் சிறிது தயங்கி இருந்த மக்கத்து காஃபிகள், உமர் رَضِيَ الله عَنْهُ அவரிகளின் மாற்றத்திற்குப் பிறகு, கடும் கோபம் கொண்டனர். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைக் கொன்று விட வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் கோத்திரத்தினரான பனு ஹாஷிம், பனு அப்துல் முத்தலிப் ஆகியோருக்குத் தெரியவே, அதனைத் தடுக்கும் நோக்கில் குடுப்பதில் உள்ள அனைவரும் அபு தாலிப் பள்ளத்தாக்கில் சில காலம் தங்கி இருக்கலாம் என முடிவு செய்து அனைவரும் அங்கு சென்றனர்.

இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் தனித்து சென்ற அவர்களைக் குறித்து கோபம் கொண்ட மக்கத்து காஃபிகள், அந்தக் குடும்பத்தினருடன் யாரும் தொடர்பு வைக்காமல் புறக்கணிக்க வேண்டும் என முடிவு செய்தனர். அவர்களுடன் எந்த வித கொடுக்கல் வாங்கலும் வைத்துக் கொள்ளக் கூடாது என ஒரு ஒப்பந்தம் எழுதி கஃபாவில் மாட்டி வைத்து விட்டார்கள். இவ்வாறு அவர்கள் சுமார் மூன்று வருடங்கள் மற்ற மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். இவ்வாறு இஸ்லாத்தின் காரணமாக அவர்கள் பலவிதமான துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். சமூகப் புறக்கணிப்பின் காரணமாக அவர்கள் உணவு குறைபாடு ஏற்பட்டு பஞ்சத்தில் அவதிப்பட்டார்கள். நபித்துவம் கிடைத்த ஏழாம் ஆண்டிலிருந்து பத்தாம் ஆண்டு வரை இந்தப் புறக்கணிப்பு நிகழ்ந்தது. எனினும் முத்யும் இப்னு அலி என்ற நபர் (இஸ்லாத்தை ஏற்காத நிலையிலும்) அவர்களுக்கு சிற்சில உதவிகளை இடையிடையில் செய்து வந்தார். அவர் சிலரை தம் வீட்டில் அழைத்து, ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் குடும்பத்தினரை இவ்வாறு துன்புறுத்துவது சரியில்லை என்ற நோக்கில் விவாதம் செய்தார். மனிதாபிமான நிலைக்கு மாறான இந்த ஒப்பந்தத்தை முறிக்கக் கூடிய வழியினைக் குறித்து விவாதித்தார்கள். மறு நாள் அவர்களில் ஐவர் கஃபா சென்றனர். தங்களுக்குள் செய்த முடிவின்படி, இந்த ஒப்பந்தம் தவறான, மனிதாபிமானம் இல்லாத ஒன்று எனவும், மக்களைப் பட்டினி போடுவது சரியல்ல எனவும் முத்யும் இப்னு அலி கூற, சிறிது தள்ளி நின்ற ஒருவர் ஆம், அவர் கூறுவது சரிதான் என்றும், மேலும் சிறிது தள்ளி நின்ற மற்றும் ஒருவர் ஆம், அவர் கூறுவது சரிதான் என்றும் கூற, இவ்வாறு அந்த ஐவர் கூறியது மக்களில் பலர் கூறியது போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது. மற்றவர்களும் இது சரிதான் என்ற நிலைக்கு வர, அவர்கள் அந்த ஒப்பந்தத்தைக் கிழித்து எறிகிறார்கள். ஆனால் ஏற்கனவே அதில் எழுதப்பட்டவைகளில் அல்லாஹ்வின் பெயரைத்தவிர அனைத்தையும் கரையான் அரித்திருந்தது என்ற அறிவிப்பும் உள்ளது. அபு தாலிப் பள்ளத்தாக்கில் இருந்த நிலையில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அவ்வாறு ஒப்பானது அரித்திருப்பதை அங்குள்ள

மக்களுக்கு அறிவித்தார்கள். குடும்பத்தில் இருந்து அதுவரை இஸ்லாத்தை ஏற்காதவர்களின் மனதில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் இந்தக் கூற்று நம்பிக்கையை ஏற்படுத்தியது.

பின்னர் அனைவரும் மக்காவுக்குத் திரும்பினார்கள். எனினும் அந்த பத்தாவது ஆண்டில் மற்றும் ஒரு சோதனை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்குக் காத்திருந்தது. அந்த ஆண்டை துக்க ஆண்டு என்று சொல்லும் அளவிற்கான சோதனை அது. அதனை அடுத்த பாடத்தில் காண்போம்.

Seerah 13 - Ta'if incident and Miraj journey

ஸீராஹ் வகுப்பு 13 - தாயிஃப் சம்பவம் மற்றும் மிஃராஜ் பயணம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

நபித்துவம் கிடைத்த பத்தாவது ஆண்டில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு நடைபெற்ற மற்றும் ஒரு சோதனை அவர்களைக் கண்காணித்து வந்த அவர்களின் சிறிய தந்தை அபு தாலிபின் மரணம். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மிக உறுதுணையாக இருந்த அவர்கள், இஸ்லாத்தி ஏற்கவில்லை. அது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. அவரின் மரண படுக்கையில், அவரை இஸ்லாத்தை ஏற்குமாறும், தாங்கள் அவர்களுக்குப் பொறுப்பு ஏற்கவிருப்பதாகவும் கூறினார்கள். எனினும் சுற்றி இருந்த குறைஷிக் காஃபிர்கள், மரணத்திற்குப் பயந்து தம் மூதாதையரின் மார்கத்தை விட்டு விலகி விடாதீர்கள் என எச்சரித்தார்கள். அபு தாலிபும் தம்மைக் குறித்து மரணத்திற்கு பிறகுள்ள நிலைமையை நினைத்தால் என்னவோ, தாம் பழைய மார்கத்திலேயே மரணிப்பதாகக் கூறி இறந்து விட்டார். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு பலவழிகளில் உதவிய அவருக்கு நேர்வழியை அல்லாஹ் நாட வில்லை.

அத்தியாயம் அல் கஸஸ் 56

إِنَّكَ لَا تَهْدِي مَنْ أَحْبَبْتَ وَلَـٰكِنَّ اللَّـهَ يَهْدِي مَن يَشَاءُ ۚ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِينَ ﴿٥٦﴾

(நபியே!) நீர் நேசிப்பவர்களை(யெல்லாம்) நிச்சயமாக நேர்வழியில் செலுத்திவிட உம்மால் முடியாது; ஆனால், அல்லாஹ் தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான் - மேலும் நேர்வழி பெற்றவர்களை அவன் நன்கறிகிறான்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் விரும்பியும், அல்லாஹ் நாடவில்லை. ஆனால் அல்லாஹ் நமக்கு நாடியிருக்கிறான். உன்னத இந்த இஸ்லாம் நமக்கு கிடைத்துள்ளது. இதற்காக நாம் அவனிடம் நன்றியுடன் இருக்க வேண்டாமா? தாங்கள் அவருக்காகப் பாவ மன்னிப்பு கேட்டதாகவும் அல்லாஹ் அதற்குத் தடை விதித்து விட்டாதால் அதனை விட்டு விட்டதாகவும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்.

அத்தியாயம் அத் தவ்பா 113

مَا كَانَ لِلنَّبِيِّ وَالَّذِينَ آمَنُوا أَن يَسْتَغْفِرُوا لِلْمُشْرِكِينَ وَلَوْ كَانُوا أُولِي قُرْبَىٰ مِن بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمْ أَنَّهُمْ أَصْحَابُ الْجَحِيمِ ﴿١١٣﴾

முஷ்ரிக்குகள் (இணைவைப்பவர்கள்) தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாதிகள் என்று தெளிவாக்கப்பட்ட பின் அவர்களுக்காக மன்னிப்புக்கோருவது நபிக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும் தகுதியானதல்ல.

அபு தாலிபின் மரணம் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு மிகப் பெரிய இழப்பாக இருந்தது. அபு தாலிபுக்கு இருந்த மதிப்பின் காரணமாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு தீங்கு விளைக்க மக்கத்து காஃபிகள் தயக்கம் காட்டுவதுண்டு. அவரது மரணம் இதனை நீக்கி விட்டது.

அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அவர்களின் தந்தை அபு குஹாபா மதினாவில் இருக்கும்போது இஸ்லாத்தை ஏற்றார்கள். வயதான அவரை அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ சுமந்து கொண்டு

வந்தார்கள். அதனைக் கண்ணுற்ற காரணமாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ சொல்லியிருந்தால் தாங்களே வந்திருப்பேனே எனக் கூறினார்கள். தங்களின் தந்தை இஸ்லாத்தை ஏற்க வந்துள்ளார் அபு பக்ரு رَضِي الله عَنْهُ என கூறினார்கள். பின்னர் அபு பக்ரு رَضِي الله عَنْهُ அழுதார்கள். இது மகிழ்ச்சியான தருணம் என்பதால் அழுகைக்குக் காரணம் யாது ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ என வினவ, தாங்கள் இப்போது இஸ்லாத்தை ஏற்றது குறித்து இப்போது மகிழ் அடைவதைப் போல, அபு தாலிபும் இஸ்லாத்தை ஏற்றிருந்தால் தாங்களும் மகிழ்வடைந்து இருப்பீர்கள் என்று அபு பக்ரு رَضِي الله عَنْهُ கூறினார்கள்.

அபு தாலிபின் மரணம் நிகழ்ந்த சில நாட்கள் கழித்து ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மற்றுமொரு இழப்பை அடைந்தார்கள். அவர்களுக்கு உறுதுணையாக அபு தாலிப் இருந்தது போல, தங்களுடன் இணைந்து எல்லா சுக, துக்கங்களையும் பகிர்ந்து கொண்ட மனைவி அன்னை கதீஜா رَضِي الله عَنْهاَ அவர்களும் அந்த ஆண்டுதான் மரணமடைந்தார்கள். அதனால் தான் அந்த ஆண்டு துக்க ஆண்டு என அறியப்பட்டது. மஷூராவுக்குப் பிறகு விதவையான அன்னை ஸவ்தா رَضِي الله عَنْهاَ அவர்களை மணம் புரிந்தார்கள். அதன்பிறகு நடந்த ஒரு சம்பவம் தாயிஃப் நிகழ்வு ஆகும்.

அபு தாலிபின் மரணத்திற்குப் பிறகு தங்களின் அழைப்புப் பணிக்கு பலமான துணை எதிர்ப்பார்த்து தாயிஃப் நகர் செல்ல விழைந்தார்கள். அங்கு மூன்று அரசர்கள் இருந்தார்கள். அவர்களும் ஆதஇரவு தங்களுக்கும் கிடைத்தால் பலமாக இருக்கும் என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம். அதன் மூலம் அழைப்புப் பணிக்கு உதவி கிடைக்கும் என நினைத்தார்கள். அவர்கள் தாயிஃப் செல்லும்போது ஐம்பது வயது இருக்கும். மலைக்கு மேலே இருக்கும் அவ்வூருக்குத்தான் அவர்கள் அந்த வயதில் பயணித்தார்கள். அவர்களுடன் ஜைத் இப்னு ஹாரிதாவும் رَحْمَةُ الله عَلَيْهِ சென்றார்கள்.

சுமார் பத்து நாட்கள் அங்கு தங்கி இருந்தார்கள். எனினும் அவர்கள் இஸ்லாத்தில் இணையவில்லை. அது மட்டும் அல்லாமல், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைத் துன்புறுத்தவும் செய்தார்கள். அவர்கள் மீது கற்கள் எரியச் சொன்னார்கள். அவர்களுடன் சென்ற ஜைத் இப்னு ஹாரிதா رَحْمَةُ الله عَلَيْهِ வும் அதற்கு ஆளானார்கள். இருவரும் உடல் முழுவதும் இரத்தக் காயங்கள் பெற்றார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் காலணி இரத்தம் மிகுதியால் காலணியையும் கழற்ற முடியவில்லை. இருவரும் அவ்விடத்தை விட்டு தப்பித்து அவர்கள் வெளியேறினார்கள். மயக்கமுற்ற . ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கர்னுத் தஆரிப் என்ற இடத்தில் மயக்கம் தெளிவு பெற்றார்கள். அப்போது அவர்கள் கண்ணைத் திறந்து பார்க்க வானில் ஜிப்ரயில் عَلَيْهُ السَّلاَم அவர்களைக் கண்டார்கள். அவர்கள் கூறினார்கள், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மலைக்குக்கான வானவர்களை அனுப்பியுள்ளான். தாங்கள் அனுமதி அளித்தால், இந்த தாயிஃப் நகரை இரண்டு மலைகளுக்கு இடையில் ஒன்று சேர்த்து ஊரையே நாசமாக்கி விடுவார்கள்.” ஆனால் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கூறினார்கள், “இவர்கள் இல்லை என்றாலும், இவர்களின் சந்ததியர்கள் இஸ்லாத்தை, ஏகத்துவத்தை ஏற்கலாம். எனவே விட்டுவிடுங்கள்.” பிற்காலத்தில் அவர்கள் இஸ்லாத்தை தழுவினார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தங்களுக்காக யாரையும் கோபப்பட்டதில்லை. தங்களுக்காக யாரையும் மன்னித்ததில்லை. அனைத்தும் அல்லாஹ்வுக்கே செய்தார்கள். பூரணத்துவ ஈமானின் வெளிப்பாடு இது. உஹதுப் போரில் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கொண்ட ஒரு துன்பத்தைக் குறித்து அன்னை ஆயிஷா رَضِي الله عَنْهاَ அவர்கள் வினவும்போது, தாங்கள் தாயிஃப் நகரில் அடைந்த துன்பம் அதைவிடப் பெரிது என்றார்கள்.

இவ்வாறு பல துன்பங்களைக் கண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களின் மனோவலிமையை அதிகப்படுத்தவும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களை தன்னைக் காண அழைத்தான். அந்தப் பயணம்தான் இஸ்ரா மற்றும் மிஃராஜ் ஆகும். மக்காவிலிருந்து மஸ்ஜித் அக்ஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டது இஸ்ரா ஆகும். அங்கிருந்து வானவெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டது மிஃராஜ் ஆகும். அது குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான்,

அத்தியாயம் அல் இஸ்ரா 1

سُبْحَانَ الَّذِي أَسْرَىٰ بِعَبْدِهِ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ إِلَى الْمَسْجِدِ الْأَقْصَى الَّذِي بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا ۚ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ ﴿١﴾

(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து (கஃபத்துல்லாஹ்விலிருந்து தொலைவிலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான்; (மஸ்ஜிதுல் அக்ஸாவின்) சுற்றெல்லைகளை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம்; நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காக (அவ்வாறு அழைத்துச் சென்றோம்); நிச்சயமாக அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும்; பார்ப்போனாகவும் இருக்கின்றான்.

நபித்துவம் கிடைத்த பத்தாவது ஆண்டில்தான் இந்த நிகழ்வும் நடந்தது. கருத்து வேறுபாடு இருந்தாலும் இது சிறந்த கருத்தாகும். மாதம் மற்றும் தேதி குறித்து சரியான கருத்து இல்லை. எனவே இது குறித்து ஒரு இரவைக் குறிப்பிட்டு, அதில் விஷேச வாழிபாடுகள் செய்வது சரியானதாக இருக்காது. முன்னர் அவர்கள் காலத்திலும் இவ்வாறு ஒரு இரவு கொண்டாடப்படவில்லை. பித்அத் ஆகும். இந்த நிகழ்வுக்கு முன்பாக அன்னை ஆயிஷா அவர்களை رَضِي الله عَنْها ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மண முடித்தார்கள்.
ஓரிரவில், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தங்கள் வீட்டில் இருக்கும்போது ஜிப்ரயில் عَلَيْهُ السَّلَامَ அவர்களும், மற்றொரு வானவரும் வந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு இரண்டாவது முறையாக, அவர்களின் இதயத்தை வெளியில் எடுத்து ஜம்ஜம் நீரில் கழுவிப், ஹிக்மத் எனும் ஞானத்தாலும், ஈமான் எனும் இறை நம்பிக்கையாலும் நிரப்பி வைத்தார்கள். பின்னர் அவர்கள் புறாக் என்னும் வாகனத்தில் அங்கிருந்து மஸ்ஜித் அக்ஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். புறாக் என்பத்து குதிரையைவிடச் சிறியது. கோவேறுக் கழுதையை விடப் பெரியது. அதற்கு இறக்கைகள் இருந்தன.

மஸ்ஜித் அக்ஸாவில் ஆதம் عَلَيْهُ السَّلَامَ முதல் ஈஸா عَلَيْهُ السَّلَامَ வரை உள்ள அனைத்து நபிமார்களுக்கும் இமாமாக நின்று இரண்டு ரகஅத்துகள் தொழவைத்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கான அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அளித்த கண்ணியம் இது. பின்னர் அவர்களின் மிஃராஜ் பயணம் அங்கிருந்து ஆரம்பித்தது. ஒவ்வொரு வானமாக அவர்கள் ஏறிச் செல்ல, ஒவ்வொரு வானத்திலும் அவர்கள் வானவர்களால் வரவேற்கப்படுகிறார்கள். போகும் வழியில் ஆதம் عَلَيْهُ السَّلَامَ , யூஸுஃப் عَلَيْهُ السَّلَامَ இத்ரீஸ் عَلَيْهُ السَّلَامَ ஈஸா عَلَيْهُ السَّلَامَ யஹ்யா عَلَيْهُ السَّلَامَ ஹாரூன் عَلَيْهُ السَّلَامَ மூஸா عَلَيْهُ السَّلَامَ ஆகியோரைச் சந்தித்தார்கள். இறுதியில் ஏழாம் வானத்தில் பைத்துல் மஃமூர் பள்ளிவாசலில் ஹளிறு عَلَيْهُ السَّلَامَ அவர்களுடன் ஒட்டி இருந்தவாறு இப்ராஹீம் عَلَيْهُ السَّلَامَ அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களளிடம் அவர்களின் தந்தை என இப்ராஹீம் عَلَيْهُ السَّلَامَ எனக் கூறினார்கள். பைத்துல் மஃமூர் எழாவது வானில் கஃபாவுக்கு நேராக மேலே உள்ளது. அதில் ஒரு தடவைக்கு 70000 வானவர்கள் தொழுகை நடத்துவார்கள். ஒரு தடவை வந்தவர்கள் மறுதடவை வரமாட்டார்கள். பின்னர் ஜிப்ரயில் عَلَيْهُ السَّلَامَ அவர்களுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ ஸித்ரதுல் (இலந்தை)

முன்தஹா என்னும் இடத்தை அடைந்தார்கள். அதுவரைதான் தங்களுக்கு அனுமதி உண்டு என்பதால், இன்னும் மேலே அவர்கள் மட்டும் செல்ல வேண்டும் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் ஜிப்ரயில் عَلَيْهُ السَّلاَم கூறினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தனியாகச் சென்று அல்லாஹ்வை நேராகச் சந்தித்துப் பேசினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அளித்த கண்ணியம். வேறு யாருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்களுக்கும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் இடையில் ஒளிவான திரை இருந்தது. மறுமை நாளில் நாம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைப் பார்க்கலாம். அந்த பாக்கியம் நம் அனைவருக்கும் கிடைக்க அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அருள் புரிவானாக. அவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை அப்போது பார்த்தார்களா என அபுதார் கேட்டபோது, தங்களுக்கும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் இடையில் ஒளிவான திரை இருந்தது எனக் கூறினார்கள். அந்த சந்திப்பில் தான் முதலில் ஐம்பது வேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. பின்னர் அது ஐந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டு இறுதியில் ஐந்து வேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. ஐவேளைத் தொழுகைக்கு ஐம்பது வேளை நன்மை கிடைக்கும். அந்த பயணத்தில் பல விஷங்கள் காத்தப்பட்டன. சுவன மற்றும் நரக நிலைகள் காட்டப்பட்டன. ஹவுல் தடாகம் காட்டப்பட்டது.

இந்தப் பயணம் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியபோது பல முஸ்லிம்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். காஃபிர்கள் இதனை மறுத்தார்கள். பலவீன முஸ்லிம்களில் சிலர் முர்த்தத் ஆகி (இஸ்லாத்தை விட்டு வெளியேறி)விட்டார்கள்.

Seerah 14 - First and Second Aqaba Treaty

ஸீராஹ் வகுப்பு 14 - முதல் மற்றும் இரண்டாம் அகபா ஒப்பந்தம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ மிஃராஜ் பயணத்தைப் பற்றி மக்களிடம் சொன்னபோது, காஃபிர்கள் அதனைக் குறித்து பல கேள்விகள் கேட்டார்கள். மஸ்ஜித் அக்ஸா பற்றி, ஜெருசலேம் பற்றி எனக் கேள்விகளை அடுக்கினார்கள். அதற்கு ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் பதில் அளிக்க முடியாத நிலை குறித்துக் கவலைப் பட்டதாகக் கூறினார்கள். பின்னர் அல்லாஹ் மஸ்ஜித் அக்ஸாவைத் தங்களுக்குக் காட்ட, அக் காஃபிர்கள் மஸ்ஜித் அக்ஸாவைக் குறித்துக் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்தார்கள். அவர்களின் சரியான பதில் கண்டு காஃபிர்கள் ஆச்சரியம் அடைந்தனர். முன்பு அவர்கள் அங்கு சென்றதில்லை என்பதை அறிந்த அவர்கள் அறிந்திருந்தனர். எனினும் அவர்கள் திருப்தி அடையவில்லை. ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ மிஃராஜ் பயணத்தைப் பற்றி அவர்கள் அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களிடம் கூறி அது எப்படி சாத்தியப்படும் என வினவினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் அவ்வாறு கூறியிருந்தால் அது கட்டாயமாக உண்மையாகத்தான் இருக்கும். எள்ளளவும் சந்தேகம் இல்லை என்ற பதிலை அபு பக்ரு رَضِي الله عَنْهُ கூறினார்கள். இவ்வாறு அந்த நிகழ்வைக் கூறியவுடன் அது உண்மைதான் என்று உறுதிபடுத்திய அவர்கள் அதன் காரணமாக ஸித்தீக் (உண்மைப்படுத்தியவர்) என்ற பட்டப்பெயர் கொண்டார்கள். இதுபோல குர்ஆனிலும், ஆதாரப்பூர்வமான ஹதீதுகளில் வந்த செய்தி நமது அறிவுக்கு சரியாகத் தெரியவில்லை என்று நினைக்காமல் உடனேயே நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பாடத்தை இது உணர்த்துகிறது. இவ்வாறு இந்த மிஃராஜ் பயணம் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்குக் கண்ணியம், மனவலிமை ஆகியவற்றைக் கொடுத்ததோடு, மக்களுக்கு ஈமான் குறித்த சோதனையாகவும் அமைந்தது. இந்த மிஃராஜ் பயணம் நேரடியான ஒன்றாகும். கனவில் வந்தது அல்ல. அவர்கள் தங்கள் உடலுடன் சென்றார்கள். ஆன்மா மட்டும் சென்றது என்று கூறுவது தவறான ஒன்றாகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தங்களின் அழைப்புப் பணியை மீண்டும் மிக உத்வேகத்தில் செய்தார்கள். தனிப்பட்ட மனிதர்களைச் சந்தித்து இஸ்லாம் பற்றி எடுத்துரைத்தார்கள். குறிப்பாக ஹஜ்ஜுடைய காலங்களின் தங்கள் பணியை அதிக வேகத்துடன் செய்வார்கள். பல ஊர்களிலிருந்து மக்கள் ஹஜ்ஜில் கூடுவார்கள். மக்காவில் மூன்று கடைவீதிகள் பிரபலமானது. அங்கு சென்று அவர்கள் மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பார்கள். எனினும் அபுலஹப் அவரிகளைப் பின்தொடர்ந்து, அவர்கள் சந்தித்த மக்களிடம் அவர்கள் குறித்துத் தவறாகக் கூறி ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைப் பின்பற்றக் கூடாது என்பார். அபுலஹபின் இந்த செயலிலும் நமக்குப் படிப்பினை உள்ளது. அசத்தியதிற்காக அவர் இந்த அளவு பாடுபடும்போது, நாம் சத்தியத்திற்காக எந்த அவவு முயற்சி செய்ய வேண்டும் என்பதைக் அறிந்து கொள்ள உதவுகிறது. பிறருக்கு இம்மார்க்கம் குறித்து எடுத்து சொல்வது நம் கடமை.

அந்த காலகட்டத்தில்தான் ஹஜ்ஜுடைய நாளில் ஒரு முக்கியமான நிகழ்வு, இஸ்லாத்தின் திருப்பு முனையாக நடந்தது. அதுதான் அகபாவின் முதலாவது ஒப்பந்தமாகும். நபித்துவம் கிடைத்த பதினோராம் ஆண்டில் ஹஜ்ஜின் காலத்தில் மதீனாவைச் சேர்ந்த அவுஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த ஐந்து மற்றும் இரண்டு, மொத்தம் எழு ஆண்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களும் மூலம் இஸ்லாத்தை அறிந்த அந்த நபர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். மதீனாவைச் சுற்றி பல யூதர்களின்

கோத்திரத்தினர் இருந்தனர். அவர்களுடன்தான் அவுஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்து வசித்து வந்தனர். அந்த யூதர்களின் மூலமாக சுவனம் நரகம் பற்றியும் அறிந்து வைத்திருந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் இஸ்லாம் பற்றி கூறியதும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள இது இலகுவாக்கியது. மற்றொரு காரணம், அவர்களுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படும். அப்போது யூதர்கள் தங்களுக்கு இடையில் ஒரு இறுதித் தூதர் வர இருப்பதாகவும், அவர்கள் வந்தால், அவர்களின் தலைமையில் தங்களுக்குத்தான் வெற்றிகள் கிடைக்கும் என்று கூறுவார்கள். இதனை அடிக்கடி கேட்ட அவுஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்திரத்தினர், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தங்களை இறுதி தூதர் எனக் கூறியதை எந்த தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொண்டனர். மதினாவிலிருந்து வந்த அந்த எழுவரும் இரவில் தனியாக ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் பைஅத் (உடன்படிக்கை) செய்தார்கள்.

புஹாரி 3892

أَنَّ عُبَادَةَ بْنَ الصَّامِتِ ـ مِنَ الَّذِينَ شَهِدُوا بَدْرًا مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم ـ وَمِنْ أَصْحَابِهِ لَيْلَةَ الْعَقَبَةِ ـ أَخْبَرَهُ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ وَحَوْلَهُ عِصَابَةٌ مِنْ أَصْحَابِهِ " تَعَالَوْا بَايِعُونِي عَلَى أَنْ لاَ تُشْرِكُوا بِاللَّهِ شَيْئًا، وَلاَ تَسْرِقُوا، وَلاَ تَزْنُوا، وَلاَ تَقْتُلُوا أَوْلاَدَكُمْ، وَلاَ تَأْتُونَ بِبُهْتَانٍ تَفْتَرُونَهُ بَيْنَ أَيْدِيكُمْ وَأَرْجُلِكُمْ، وَلاَ تَعْصُونِي فِي مَعْرُوفٍ، فَمَنْ وَفَى مِنْكُمْ فَأَجْرُهُ عَلَى اللَّهِ، وَمَنْ أَصَابَ مِنْ ذَلِكَ شَيْئًا فَعُوقِبَ بِهِ فِي الدُّنْيَا فَهْوَ لَهُ كَفَّارَةٌ، وَمَنْ أَصَابَ مِنْ ذَلِكَ شَيْئًا فَسَتَرَهُ اللَّهُ فَأَمْرُهُ إِلَى اللَّهِ، إِنْ شَاءَ عَاقَبَهُ، وَإِنْ شَاءَ عَفَا عَنْهُ ". قَالَ فَبَايَعْتُهُ عَلَى ذَلِكَ.

இறைத்தூதர் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் பத்ருப் போரில் பங்கெடுத்தவரும், இரவில் நடந்த 'அகபா' உடன் பாட்டில் பங்கெடுத்த நபித் தோழர்களில் ஒருவருமான உபாதா இப்னு ஸாமித் رَضِي الله عَنْهُ கூறினார்.

(அகபா இரவில்) தம்மைச் சுற்றிலும் தம் தோழர்களின் ஒரு குழுவினர் அமர்ந்திருக்க, இறைத்தூதர் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் 'வாருங்கள்; நீங்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு எதையும் இணைவைக்க மாட்டீர்கள் என்றும், விபசாரம் புரிய மாட்டீர்கள் என்றும், உங்கள் குழந்தைகளைக் கொல்லமாட்டீர்கள் என்றும், உங்கள் தரப்பிலிருந்து நீங்களே இட்டுக்கட்டும் அவதூறு எதனையும் புனைந்து கொண்டு வரமாட்டீர்கள் என்றும், எனக்கு நல்ல விஷயங்களில் மாறு செய்ய மாட்டீர்கள் என்றும் என்னிடம் உறுதிமொழி கொடுங்கள். உங்களில் (இந்த உறுதிமொழியை) நிறைவேற்றுகிறவருக்குரிய நற்பலனைத் தருவது அல்லாஹ்வின் பொறுப்பாகும். இவற்றில் (மேற் சொன்ன குற்றங்களில்) எதையேனும் ஒருவர் செய்து, அதற்காக அவர் இந்த உலகத்திலேயே (இஸ்லாமியச் சட்டப்படி) தண்டிக்கப்பட்டால், அதுவே அவருக்குப் பரிகாரமாகி விடும். இவற்றில் எதையேனும் ஒருவர் செய்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவரின் குற்றத்தை (உலக வாழ்வில்) மறைத்துவிட்டால் (அவரின் மறுமை நிலை குறித்த) அவரின் விவகாரம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடம் உண்டு. (மறுமையில்) அவன் நாடினால் அவரைத் தண்டிப்பான்; அவன் நாடினால் அவரை மன்னிப்பான்; என்று கூறினார்கள் நாங்கள் நபி صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் அவற்றுக்காக உறுதிமொழி கொடுத்தோம்.

பின்னர் அவர்கள் தாங்கள் மதீனாவுக்குச் சென்று இஸ்லாத்தைப் பற்றி மக்களுக்குச் சொல்வோம். அடுத்த வருடம், அல்லது அதற்கு அடுத்த வருடம் மீண்டும் மக்கா வந்து மறுபடியும் அவர்களை வந்து சந்திப்பதாகக் கூறி சென்றார்கள். அவர்களுடன் முஸ்அப் இப்னு

உமைர் رَضِى الله عَنْهُ அவர்களை இஸ்லாம் பற்றி போதனை செய்வதற்காக ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அனுப்பினார்கள். முஸ்அப் இப்னு உமைர் رَضِى الله عَنْهُ மிகச் செல்வந்தரின் மகனாவார். மக்காவிலேயே மிகவும் உயர்தரமான ஆடையையும், உயர்தரமான நறுமணத்தைப் பூசுபவர். தெருவில் அவர் நடந்து செல்கிறார் என்பதை அந்த நறுமணத்தைக் கொண்டே மக்கள் அறிந்து கொள்வார்கள். அவர் இஸ்லாத்திற்காக அனைத்தையும் துறந்து மதீனாவுக்கு அவர்களுடன் சென்றார். இஸ்லாத்தின் முதல் அழைப்பாளராகச் சென்றார். அங்கு ஸஅத் இப்னு சுறாரா என்பவரின் வீட்டில் தங்கி அழைப்புப்பணியை மேற்கொண்டார். தங்களின் முயற்சியால் பலர் இஸ்லாத்தில் இணைந்தனர். அதில் அங்குள்ள தலைவர்களான ஸஅத் இப்னு முஆத் رَضِى الله عَنْهُ , ஹுசைத் இப்னு ஹுதைர் رَضِى الله عَنْهُ போன்றோர் அடங்குவார்கள். அதன் பொருட்டு அவர்களைச் சேர்ந்த மக்களும் அதி சீக்கிரத்தில் இஸ்லாத்தில் இணைந்தனர். இவ்வாறு சில நாட்களின் மதினாவில் ஒரு இஸ்லாமிய சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டது. நபித்துவத்திற்கு பின்னர் பதினோராம் ஆண்டில் மதீனாவுக்குச் சென்ற முஸ்அப் இப்னு உமைர் رَضِي الله عَنْهُ , பதின்மூன்றாம் ஆண்டு மீண்டும் மக்காவுக்கு சென்று ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் மதினாவில் இஸ்லாமிய வளர்ச்சி குறித்து விளக்கினார்கள். பின்னர் அதனைத் தொடர்ந்த வருடத்தின் ஹஜ் காலத்தில் மதீனாவிலிருந்து இஸ்லாத்தை ஏற்ற எழுபத்து மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் ஹஜ் செய்வதற்கும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைச் சந்திப்பதற்கும் மக்கா வந்தார்கள். அவர்களில் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் رَضِي الله عَنْهُ , ஸஅத் இப்னு மாலிக் رَضِي الله عَنْهُ ஆகியோரும் இருந்தார்கள். அப்போதும் அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைச் சந்தித்து பைஅத் (உடன்படிக்கை) செய்தார்கள். இது இரண்டாவது அகபா உடன்படிக்கை ஆகும். தாங்கள் மதினா வந்தால் பொறுப்பு ஏற்க வேண்டும் என்ற உறுதிமொழியையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

மதினாவில் இஸ்லாமிய சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டதால், மக்காவிலிருந்து முஸ்லிம்கள் சிறிது சிறிதாக மதினா நோக்கி ஹிஜ்ரத் செய்ய ஆரம்பித்தார்கள். இதுதான் இஸ்லாத்தின் இரண்டாவது ஹிஜ்ரத் ஆகும்.

ஸீராஹ் வகுப்பு 15 - ஹிஜ்ரத்திற்கான ஏற்பாடுகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

மதினாவில் அழைப்புப் பணிக்காக முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللهُ عَنْهُயுடன் அப்துல்லாஹ் இப்னு உம்மு மக்தூன் رَضِيَ اللهُ عَنْهُயும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅனுப்பி இருந்தார்கள். அவர்களின் சிறந்த பணியின் காரணமாக, பலர் இஸ்லாத்தில் இணைந்து ஒரு இஸ்லாமிய சமுதாயம் ஏற்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களின் அனுமதியுடன் முஸ்லிம்கள் சிறிது சிறிதாக மதினா நோக்கி ஹிஜ்ரத் செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்படி ஹிஜ்ரத் செய்தது சுலபமான காரியம் அல்ல. தங்களின் சொந்த ஊரை விட்டுவிட்டு, உறவினர்களை, வியாபாரத்தை, சொத்தை என அனைத்தையும் விட்டுவிட்டு அவர்கள் ஹிஜ்ரத் செய்தார்கள். எனவே ஹிஜ்ரத் என்பது பல தியாகங்களை உள்ளடக்கியது ஆகும். மகத்தான ஒரு காரியம் என்பதால் அதற்கான கூலியும் மகத்தானதாகும். ஹிஜ்ரத்திற்கு முன்பான அனைத்துப் பாவங்களையும் இது அழித்துவிடும். ஹஜ்ஜுக்கும் இதே நன்மை உண்டு. இஸ்லாத்திர்காகவே இவர்கள் அந்த தியாகத்தைச் செய்தார்கள்.

ஹிஜ்ரத் செய்தவர்களில் அபு சலமாஹ் رَضِيَ اللهُ عَنْهُ, பிலால் رَضِيَ اللهُ عَنْهُ, ஸஅத் இப்னு அபி வக்காஸ் رَضِيَ اللهُ عَنْهُ, அம்மார் இப்னு யாஸிர் رَضِيَ اللهُ عَنْهُ, சுஹைப் அர் ரூமி رَضِيَ اللهُ عَنْهُ, உமர் கத்தாப் رَضِيَ اللهُ عَنْهُஆகியோர் இதில் அடங்கும். பின்னர் ஒவ்வொருவராக மதீனாவுக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். அனால் மக்கத்துக் காஃபிகள் அவர்களை அந்த அளவுக்கும் சுலபமாக ஹிஜ்ரத் செய்ய அனுமதிக்கவில்லை. சிலரைத் தடுத்தார்கள். சிலரைப் போக வேண்டாம் என வற்புறுத்தினார்கள். நாம் முன்பு உம்மு சலமாஹ் அவர்களின் ஹிஜ்ரத் முயற்ச்சியை கூறியுள்ளோம். ரூமிலிருந்து மக்காவில் வசித்து வந்த சுஹைப் அர் ரூமி رَضِيَ اللهُ عَنْهُ, தமக்குத் தேவையான சிலப் பொருட்களை எடுத்துச் செல்ல விளைந்தபோது, அதனையும் அபகரித்தனர். . ரூமிலிருந்து மக்கா வந்து சம்பாதித்த பணம் என்று கூறி கைப்பற்றி விட்டார்கள். இவ்வாறுதான் ஹிஜ்ரத் கடினமாக இருந்தது.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் அனுமதி இல்லாமல் தாங்கள் நபியாக வந்த ஊரைவிட்டுச் செல்ல முடியாது. அதனால்தான் அவர்கள் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்தவர்களுடன் அவர்கள் செல்லவில்லை. எனினும் அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் ஊர் குறித்து கனவில் காண்கிறார்கள். தாங்கள் மக்காவை விட்டு பேரிச்ச மரங்கள் இருக்கும் ஊருக்கு ஹிஜ்ரத் செய்வதாகக் கனவு கண்டபோது, அது யமாமா அல்லது ஹிஜ்ர் என நினைத்ததாக அவர்கள் கூறினார்கள். அனால் பிற்காலத்தில்தான் அது மதினா என உணர்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் ஹிஜ்ரத்திற்கு எதிர்பார்த்த நிலையில், இஸ்லாத்தை ஒடுக்கும் கடைசி முயற்சியாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களைக் கொல்ல வேண்டும் என மக்கத்துக் காஃபிகள் முடிவு செய்கிறார்கள். முன்னர் அபு தாலிப் இருந்ததால் அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை.

எனவே தாருன் நத்வா என்ற ஆலோசனை கூடத்தில் அந்த மக்கத்துக் காஃபிகள் ஒன்று கூடி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களைக் கொல்ல வேண்டும் என முடிவு செய்கிறார்கள். அதே நேரத்தில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவும் யத்ரிப் நகருக்கு (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்யுமாறு அனுமதி அளித்தான். கடுமையான வெயில் நேரத்தில் மதிய உணவை உண்ட பிறகு கைலுளா என்ற சிறு தூக்கம் கொள்வதை மக்கத்து மக்கள் வழக்கமாக ஆக்கிக் கொள்வார்கள். அவ்வாறு மக்கள் உறங்கும் அந்த நேரத்தில் அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் வீட்டிற்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் சென்றார்கள். அதனைக் கண்ட அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ, தங்கள் தாய் தந்தையர்கள் அவர்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும்

என்று கூறியவர்களாக, அந்த நேரத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வீடி தேடி வந்தது முக்கியமான காரணத்திற்காகத்தான் என அறிந்து கொண்டார்கள். தாங்கள் தனியாப் பேச வேண்டும் என அவர்கள் கூற, அபு பக்ரு தங்களுடன் தங்களின் மகளார்தான் உள்ளார்கள் என்றார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஹிஜ்ரத்திற்கு அனுமதி அளித்த விஷயத்தை அவர்கள் கூற, அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ மகிழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் தாய் தந்தையர்கள் அவர்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும் என்று கூறிய அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ தாங்களும் அவர்களுடன் தோழராக ஹிஜ்ரத் செய்வது குறித்து மகிழ்ந்தவாறு தயாராக இரண்டு ஒட்டங்கங்கள் வைத்துள்ளதாகக் கூறினார்கள். அதில் ஒரு ஒட்டகம் தங்களுக்கு என அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ கூற அதற்கான தொகையை அவர்கள் அளிப்பதாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். ஹிஜ்ரத் புறப்பட வேண்டிய நேரத்தைக் கூறிவிட்டு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சென்று விட்டார்கள்.

அன்றைய இரவில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் கொல்ல மக்கத்துக் காஃபிகள் முடிவு செய்தனர். மக்கத்துக் காஃபிகளின் மீது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மண்ணைத் தூவியதால், அவர்கள் ஹிஜ்ராத்துக்காக வீட்டை விட்டு வெளியேறியதை மக்கத்துக் காஃபிகள் பார்க்க முடியவில்லை எனப் பரவலாக கூறப்படும் செய்தி ஆதாரப்பூர்வமானதாக இல்லை என்றாலும் அது நடந்திருக்கலாம். ஆதாரப்பூர்வமான செய்திகளில் ஒன்று, அன்றைய இரவில் தங்களின் ஆடைகளை அணிந்து கொண்டு, தங்களின் படுக்கையில் படுத்துக் கொள்ளுமாறு அலி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களிடம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். தாங்கள் மைமூன் என்ற கிணற்றின் அருகில் காத்துக் கொண்டிருக்கப் போவதாகவும், அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களை அங்கு வந்து தங்களைச் சந்திக்கச் சொல்லுமாறும் அலி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களிடம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். பின்னர் அவர்கள் வீட்டை விட்டு அங்கு புறப்பட்டுச் சென்றாகள். அவர்கள் சென்றதை யாரும் பார்கவில்லை. அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களும் அவ்வாறே அங்கு செல்கிறார்கள். இங்கு அலி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் தைரியம் நமக்கு ஒரு படிப்பினை. அவர்கள் எந்த தாக்கும் இல்லாமல் படுத்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட தியாகங்கள் தாம் அவர்கள் சிறந்த ஸஹாபாக்களாக அறியப்பட்டார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களும் ஹிஜ்ரத்தை ஆரம்பித்து முதலில் தவ்ர் குகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். தங்கள் ஒட்டகங்களை அப்துல்லாஹ் இப்னு உரைக்கித் என்ற நம்பகமான ஒரு மனிதரிடம் கொடுத்துவிட்டு தங்களிடம் மூன்று நாட்களுக்குப் பிறகு வருமாறு கூறினார்கள். அந்த மனிதர் ஒரு வழிகாட்டி ஆவார். அக்காலத்தில் பயணம் மேற்கொள்பவர்கள், பாதை தெரிந்தவர்களை வழிகாட்டியாக வைத்துக் கொள்வார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் தேடி வந்த மக்கத்துக் காஃபிகள், அவர்களின் படுக்கையில் அலி رَحْمَةُ اللهِ عَلَيْهِ இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் தப்பித்து விட்டார்கள் என உணர்ந்ததும், அவர்களைக் கொண்டு வருபவர்களுக்கு நூறு ஒட்டகங்கள் பரிசு அளிக்கப்படும் எனப் பிரகடனப் படுத்தினார்கள். அப்துல்லாஹ் இப்னு உரைக்கித் என்ற இந்தக் காஃ பிர் அந்த பரிசுக்கு ஆசைப்படவில்லை என்பதிலிருந்து அவர் எப்படி நம்பகமானவர் என அறியலாம்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் தேடியவர்கள் அவர்கள் தங்கியிருந்த தவ்ர் குகை அருகில் வந்து விட்டார்கள். அவர்கள் சிறிது குனிந்து பார்த்தாலே அவர்களைக் கண்டு விடலாம். அது குறித்து அபு பக்ரு رَحْمَةُ اللهِ عَلَيْهِ கவலைப்படவே, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள்.

(அத்தியாயம் அத் தவ்பா 40)

ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُولُ لِصَاحِبِهِ لَا تَحْزَنْ إِنَّ اللَّـهَ مَعَنَا ۖ

குகையில் இருவரில் ஒருவராக இருந்த போது, (நம் தூதர்) தம் தோழரிடம், “ கவலைப்படாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்” என்று கூறினார்.

மூஸா عَلَيْهُ السَّلَامَஅவர்களும் தாங்களும், இஸ்ராயீல் சமூகத்தினரும் ஃபிர்அவுனை கண்டபோது தங்களுடன் தங்கள் இரட்சகன் இருந்க்கிறான் என்றார்கள். இவ்வாறுதான் நபிமார்கள் ஈமான் முழுமையாக இருக்கும். பின்னர் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். வழக்கமாக மக்கள் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுக்காமல், வேறு பாதையில் பயணித்தார்கள்.

Seerah 16 - Hijrah and the joy of the people of Madinah

ஸீராஹ் வகுப்பு 16 - ஹிஜ்ரத் பயணம் மற்றும் மதீனாவாசிகளின் மகிழ்ச்சி

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

பயணத்தை ஆரம்பித்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மக்காவை நோக்கியவர்களாகக் கூறினார்கள், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது ஆணையாக, இந்த பூமியில் எனக்கு உவப்பான இடம் நீதான். என்னை இந்த மக்கள் வெளியேற்றாவிட்டால், நான் உன்னை விட்டு வெளியேறி இருக்க மாட்டேன்.” மக்காவை பிரிவதில் அவர்களுக்கு இருந்த வருத்தம் இந்த சொற்களில் நாம் காணலாம். இஸ்லாத்திற்காக இந்த தியாகத்தைச் செய்தவர்களாக தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். சற்று நேரத்தில் சுராகா இப்னு மாலிக் என்பவர் அவர்களைப் பின்தொடர்ந்து வருவதைக் கண்டார்கள். அவர்களைப் பிடித்துக் கொடுத்து நூறு ஒட்டகங்களைப் பரிசாகப் பெற வேண்டும் என்ற ஆசையில் அவர் தொடர்ந்து வந்தார். அவரின் என்னத்தைக் அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், அல்லாஹ் விடம் துஆ கேட்க, சுராகா வந்த குதிரையின் கால்கள் மணலில் பதிந்து, அவர் தூக்கி எறியப்பட்டார். பின்னர் அவர் எழுந்து மடிபடியும் பின்தொடர்ந்தார். மறுபடியும் அவ்வாறு நடந்தது. இவ்வாறு மூன்று முறைகள் நடக்கவே, அவர் தம்மைக் காப்பாற்றுமாறும், மன்னிக்குமாறும் வேண்டினார். தாம் யாரிடமும் அவர்களளின் பயணத்தைப் பற்றிக் கூற மாட்டேன் என்று உறுதிமொழி கொடுக்க, குதிரையில் கால்கள் விடப்பட்டன. சுராகா மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றார். அதற்குப் பின்னர்தான் இந்த சம்பவத்தைக் கூறினார்.

பயணத்தைத் தொடர்ந்த அவர்களுக்குப் பசி ஏற்பட்டது. வழியில் ஒரு வீட்டில் உம்மு மஃபத் என்ற வயதான பெண்மணியைக் கண்டார்கள். அவரது கணவர் அபு மஃபத் வெளியில் சென்றிருந்தார். தங்களுக்குப் பசியாற ஏதும் இருந்தால் தருமாறு அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் தம்மிடம் தற்போது ஒன்றும் இல்லை என்றார். அவரது வீட்டில் பால் வற்றிய வயதான ஆடு ஒன்று இருந்தது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அந்த ஆட்டின் பக்கம் சென்று, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர் கூறி பால் கறந்தார்கள். பால் நிறைய வந்தது. தாங்களும், அபு பக்ரு رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்களும் அருந்திவிட்டுச் சென்றார்கள். மறுபடியும் பால் கறந்து அந்தப் பெண்மணியிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். திரும்ப வந்த அபு மஃபத், அங்கு வேறு நபர்கள் வந்த அடையாளம் கண்டு அவர்களைப் பற்றி தம் மனைவியிடம் வினவினார். தங்களை நபி என்று கூறும் ஒருவர் வந்தததாகவும், அவர்களைக் குறித்து அடையாளங்களைக் கூறினார்.

அது குறித்து ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த ‘அர் ரஹீக்குல் மக்தூம்’ என்ற நூலில் இவ்வாறு குறிபிடப்பட்டுள்ளது.

வீடு திரும்பிய தனது கணவர் விசாரித்த போது நபியவர்களைப் பற்றி உம்மு மஅபத் விவரித்தது யாதெனில்:

பிரகாசமான முகம் உடையவர் அழகிய குணம் பெற்றவர் வயிறோ தலையோ பெருத்தவர் அல்லர் தலை சிறுத்தவரும் அல்லர் கவர்ச்சிமிக்கவர் பேரழகு உடையவர் கருத்த புருவம் கொண்டவர் நீண்ட இமைமுடி பெற்றவர் கம்பீரக் குரல் வளம் கொண்டவர் உயர்ந்த கழுத்துள்ளவர் கருவிழி கொண்டவர் மை தீட்டியது போன்ற கண்ணுள்ளவர் வில் புருவம் கொண்டவர் கூட்டுப் புருவம் கொண்டவர் கருண்ட தலைமுடி கொண்டவர் அவரது அமைதி கம்பீரத்தைத் தரும் ஒளி இலங்கும் பேச்சுடையவர் தூரமாகப் பார்த்தால் அழகும் வனப்பும் பெற்றவராய்த் திகழ்வார் அருகில் சென்றால் பழக இனிமையானவர் நற்பண்பாளர் நாவலர் தெளிந்த நடையுடைய பேச்சாளர் நீளமாகவோ சுருக்கமாகவோ இல்லாமல் நடுத்தரமான சொல்லாற்றல் பெற்றவர் அவருடைய மொழிதல் மணிமாலை உதிர்வது போல் இருக்கும் நடுத்தர உயரமுடையவர் பார்வைக்கு நெட்டையாகவோ குட்டையாகவோ இருக்க மாட்டார் இரண்டு கிளைகளுக்கு இடையிலுள்ள ஒரு கிளையைப் போன்றவர் மூவர் குழுவில் பளிச்செனத் தெபவர் சிறந்த கண்ணியம் வாய்ந்தவர் நண்பர்கள் புடை சூழ இருப்பவர் அவர் உரைத்தால் யாவரும் செவிமடுக்கின்றனர் அவர் ஆணையிட்டால் நிறைவேற்ற விரைகின்றனர் பணிவிடைக்குரியவர் மக்கள் கூட்டம் பெற்றவர் கடுகடுப்பானவருமல்லர் பிறரைக் குறைவாக மதிப்பவரும் அல்லர். (ஜாதுல் மஆது)

அப்போது அபு மஃபத், “இந்த மனிதர் குறைஷிகள் தேடுபவர்தாம். நான் இவர்களுடன் தோழமை கொள்ள வேண்டும் என நினைத்திருந்தேன். வாய்ப்புக் கிடைத்தால் அவ்வாறு செய்வேன்” என்றார்.

பயணத்தின் இடையில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைப் பற்றி யாரும் விசாரித்தால், அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள், தங்களைப் பற்றி கூறிவிட்டு, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்களுக்கு வழி காட்டுபவர்கள் என்று சொல்லிவிடுவார்கள். ஆம் தங்களுக்கு நேர்வழி காட்டக்கூடியவர்கள் என்ற எண்ணத்தில் கூறுவார்கள். கேட்டவர்கள் அவர்களைப் பாதையைக் காட்டுபவர்கள் என நினைத்துக் கொள்வார்கள். போகும் வழியில் அவர்கள் பாதுகாக்கும் நோக்கில், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ அவர்களை சுற்றிக்கொண்டே வருவார்கள்.

அவர்கள் இறுதியில் குபா என்ற இடத்தில் சிறிது நாட்கள் தங்கி இருந்தார்கள். மதீனாவுக்கு அருகில் இருந்த அவ்வூரிலும் இஸ்லாத்தை ஏற்றவர்கள் இருந்தார்கள். அங்கு முதலில் தொழுவதற்காக ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அங்கு அவர்கள் வந்துவிட்டார்கள் என்ற செய்தி மதினத்து மக்களுக்கு எட்டியது. அவர்கள் வெகு விரைவில் மதினா வந்துவிடுவார்கள் என்ற எதிர்ப்பார்ப்பில் மக்கள் அவர்களை வரவேற்க, ஊரின் எல்லையில் கூடுவார்கள். வெயில் அதிகரிக்கும் வரையில் அங்கு நின்றுவிட்டுச் செல்வார்கள். இவ்வாறு சில நாட்கள் சென்றன. அன்றும் மக்கள் கூடியிருந்து வெயில் அதிகரித்ததும் ஏமாற்றம் அடைந்தவர்களாக திரும்பிச் செல்லும் நிலையில், தூரத்தில் பயணிகள் வருவதைக் கண்ணுற்ற ஒரு யூதர், அவர்கள் எதிர்ப்பார்த்து காத்திருந்த அந்தத் தூதராக இருக்கக் கூடும் என நினைத்து அதனை மக்களுக்கு அறிவித்தார்.

மிக்க மகிழ்ச்சியுடன் மக்கள் திரண்டு வந்து ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வருகைக்கு வரவேற்பு அளித்தனர். அக்கூட்டத்தினர் சுமார் ஐநூறு நபர்கள் இருக்கக்கூடும். அவர்களை குதுகலமாக வரவேற்று அழைத்துச் சென்றார்கள். குழந்தைகளும் அவர்களின் வருகையைக் கொண்டாடினர். மதீனாவாசிகள் இந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருந்ததைப்போல தாம் பார்த்ததில்லை என பராஹ் இப்னு ஆஸிஃப் கூறியுள்ளார்.

“மதினா வாசலிலிருந்து ஒரு பிறை தோன்றியது, அது நம் மீது உதித்தது, இந்த அழைப்பாளர் அழைத்த இந்த மார்க்கத்தின் காரணமாக நாம் அல்லாஹ் வுக்கு நன்றி சொல்வோம்” என்ற பொருளில் (தலவுல் பத்ரு..) கவிதை பாடியதாக ஒரு செய்தியும் உள்ளது.

இந்தக் காட்சி, மிகவும் சந்தோஷ நிலை, மக்காவுக்கு மாற்றமான நிலை மனம் பூரிக்க அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கே எல்லா நன்றியும் உரித்தாக்கியது. மதீனாவுக்கு வந்ததும்,

முதல் வேலையாக, ஹிஜ்ரத் செய்து வந்த மக்காவாசிகளுக்கும், மதினாவாசிகளான ஒவுஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்தினருக்கும் இடையில் சகோதரத்துவப் பிணைப்பை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஏற்படுத்தினார்கள். மக்காவிலிருந்து வந்தவர்கள் தங்கள் அனைத்து உடமைகளையும் விட்டுவிட்டு அகதிகளாக அங்கு வந்து சேர்ந்திருந்தார்கள். இந்நிலையில்தான் அவர்கள் இரு பிரிவினர்களுக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்தினார்கள். ஒவ்வொருவரையும் மற்றொருவருக்கு சகோதரராக இணைத்து அவர்களுக்குக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொடுத்தார்கள். உதாரணமாக ஸல்மான் ஃபார்ஸி سُبْحَانَهُ وَتَعَالَى (முஹாஜிர்) அவர்களுக்கு அபு தர்தா سُبْحَانَهُ وَتَعَالَى (மதீனாவாசி) அவர்கள் சகோதரராக ஆக்கப்பட்டார்.

இவ்வாறு ஆக்கப்பட்டவர்களுக்கு, வீட்டில் இடம் கொடுத்து, உணவு கொடுத்து, தங்களின் சொத்தில் ஒரு பங்கையும் கொடுத்தார்கள். சிலர் தங்களின் மனைவியர்களில் ஒருவரை மண விடுதலை கொடுத்து, தம் சகோதரருக்கு மணம் முடிக்க வேண்டினார்கள். இந்த தியாகங்களினால் மக்காவாசிகள் அன்ஸாரிகள் (உதவி செய்பவர்கள்) என அழைக்கப் பட்டார்கள்.

இப்போது மதீனாவாசிகள் ஒவ்வொருவரும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களுடன்தான் இருக்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள். அவர்கள் தங்களின் ஒட்டகத்தை விட்டு விட்டு, அது எங்கு நிற்கிறதோ அங்கு தங்கப் போவதாகக் கூறினார்கள். அந்த ஒட்டகம் அபு அய்யூப் அன்ஸாரி سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களின் வீட்டு முன்னால் நின்றது. அவரது வீடு இரண்டு மாடிகளைக் கொண்டது. விருந்தினர்களைக் காண கீழ்த்தளம் வசதியாக இருக்கும் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் கீழ்த்தளத்தில் தங்கும்படி வேண்டினார்கள். அவர் தம் மனைவியுடன் மேல்த்தளத்தில் தங்கினார். எனினும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கிழே தாம் மேலே தங்குவது மரியாதைக் குறைவு ஏற்படுமோ என அஞ்சி தாம் கீழே இருப்பதாகக் கூற, தங்களுக்கு கீழ்த்தளம் விருந்தினர்களைக் காண கீழ்த்தளம் வசதியாக இருக்கும் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அவரது வீட்டில் சுமார் ஆறு மாதங்கள் தங்கி இருந்தார்கள்.

பின்னர் மதினாவில் ஒரு பள்ளிவாசல் (மஸ்ஜித் நபவி) கட்ட ஒரு இடத்தை வாங்கினார்கள். இரண்டு அனாதைகளுக்குச் சொந்தமான அந்த இடத்தை தானமாகக் கொடுக்க நினைத்தாலும், அதற்குரிய பணத்தைக் கொடுத்து அது வாங்கப்பட்டது. அந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. அன்ஸாரிகள், மற்றும் முஹாஜிர்களுடன் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் சேர்ந்து கட்டுமானப் பணியில் ஈடுபட்டார்கள். “யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நிச்சயமாக மறுமை நன்மையைத் தவிர வேறு நன்மை ஏதும் இல்லை. அன்ஸாரிகள், மற்றும் முஹாஜிர்களுக்கு நீ உதவி செய்வாயாக!” என்று துஆ கேட்டவர்களாக அவர்கள் அப்பணியில் ஈடுபட்டார்கள். பேரிச்ச மரத்தை கொண்டு தூண்கள் நட்டப்பட்டன. அதன் ஓலைகளைக் கொண்டு கூரை வேயப்பட்டது. சுமார் நான்கு வருடங்களுக்குப் பிறகு சுட்ட கற்களைக் கொண்டு மீண்டும் பள்ளிவாசல் கட்டப்பட்டது. இவ்வாறு முழுமையாக ஒரு இஸ்லாமிய சமுதாயம் அங்கு உருவாக்கப்பட்டது.

Seerah 17 - Early events in the life of Madina

ஸீராஹ் வகுப்பு 17 - மதீனா வாழ்க்கையின் ஆரம்ப கால நிகழ்வுகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ஹிஜ்ரத் செய்து வந்த மக்காவாசிகளுக்கும், மதினாவாசிகளான ஔவ்ஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்தினருக்கும் இடையில் சகோதரத்துவப் பிணைப்பை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஏற்படுத்தினார்கள். இதனை நாம் முன்பே குறிப்பிட்டிருந்தோம். அத்துடன் தங்கள் சொத்தில் ஒரு பகுதியை அன்ஸாரிகள் அவர்களுக்குக் கொடுப்பதும் கடமையாக்கப் பட்டிருந்தது. பின்னர் முஹாஜிர்கள் சிறிது வசதி பெற்ற பிறகு, சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்ற சட்டம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வினால் நீக்கப்பட்டது. இந்த பிணைப்பு மக்கா வெற்றி கொள்ளும் வரை இருந்தது. அதற்குப் பிறகு ஹிஜ்ரத்திற்கான தேவை இல்லாமல் ஆனது.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களுக்கு அவருடன் பிணைப்பு ஏற்படுத்தப்பட்ட சகோதரர் தங்களின் சொத்தில் பங்கு கொடுக்கத் தயாராக இருந்தபோது, தங்களுக்கு அது தேவை இல்லை எனவும் கடைத்தெருவுக்கு வழி காட்டினால் போதும் என்று கூறிவிட்டார்கள். அவர்கள் வியாபாரத்தை ஆரம்பித்து செல்வந்தராக ஆகிவிட்டார்கள்.

அன்ஸாரிகள் உதவி செய்யும் பண்பைக் கண்டு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தாங்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் எனவும், அவர்கள் தங்களைச் சார்ந்தவர்கள் எனவும் கூறினார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் இவர்களை அன்ஸாரிகள் என அழைத்தான். அவர்களை விரும்புவது ஈமானுக்கான அடையாளம் எனவும், அவர்களை வெறுப்பது முனாஃபிக்கான அடையாளம் எனவும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இந்த சகோதரத்துவப் பிணைப்பு நமக்கு ஒரு படிப்பினையாகும். முஃமின்கள் அனைவரும் ஓருடல் போன்றவர்கள். கண்ணில் வலி வந்தால் உடல் முழுவதும் வலி ஏற்படும். அது போன்றுதான் முஃமின்கள் ஆவார்கள். ஒரு முஸ்லிமோடு மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருந்தால் அவரின் அமல்கள் ஏற்கப்படாது என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். ஒருவருக்கு ஒருவர் அன்பளிப்பை வழங்கிக் கொள்ளவும் எனவும், ஸலாத்தினைப் பரப்புங்கள் எனவும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

தங்களின் உறவு, சொத்துகள் அனைத்தையும் விட்டுவிட்டு வந்த மக்காவாசிகளுக்கு மன நலப்பாதிப்பு இருந்த அதே நேரத்தில், புதிய ஊரின் சூழ்நிலையும், பருவமும் பலருக்கு ஒத்துப் போகவில்லை. அதன் காரணமாக பலர் நோய்வாய்ப்பட்டார்கள். அவர்களில் அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ, பிலால் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோரும் அடங்குவர். மக்காவில் தாங்கள் நன்றாக இருந்த நிலை குறித்து கவி பாடினார்கள். அவற்றைக் கேட்ட ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், மதினாவையும், மக்காவை நேசித்தது போல, அல்லது அதனைவிட அதிகமாக நேசிக்கும் பாக்கியத்தை அளிக்குமாறும், மதீனாவை தங்களுக்கு உகந்த இடமாக ஆக்குமாறும், மதினாவில் உள்ளவற்றில் பரக்கத்து செய்யுமாறும், அணைத்து நோயையும் நீக்குமாறும் துஆ செய்தார்கள். பின்னர் வழக்கமான நிலைக்கு மதினா திரும்பியது.

முஹாஜிர்களில் சிலர் மதினாவாசிகளுக்கு தொந்தரவு கொடுக்க விரும்பாது, மதினா பள்ளிவாசலின் திண்ணையிலேயே தங்க விரும்பினர். இவர்கள் திண்ணைத் தோழர்கள் (அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா)என அழைக்கப்பட்டனர். அவர்களில் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் رَضِيَ اللهُ عَنْهُ, பிலால் رَضِيَ اللهُ عَنْهُ, ஹப்பாப் இப்னு அர்ப் رَضِيَ اللهُ عَنْهُ, அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ, அபூதர் கிஃபாரி رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் அடங்குவர். வசதி படைத்த சில அன்ஸாரிகளும் இதில் சேர்ந்து கொண்டனர். அங்கு அதிக நேரத்தை மார்க்கம் பயிலவும், வணக்க வழிபாட்டில் செலவழிக்கவும் அவ்வாறு வந்தார்கள். அவர்களில் கஃப் இப்னு மாலிக்

رَضِيِ اللهُ عَنْهُ, அபு சயீத் அல் குத்ரி رَضِيِ اللهُ عَنْهُ, குதைஃப இப்னு ஜமான் رَضِيِ اللهُ عَنْهُ போன்றோர் ஆவார்கள். இவ்வாறு 60-70 திண்ணைத் தோழர்கள் இருந்தார்கள்.

மக்காவிலிருந்து வந்தவர்கள் வணிகர்களாக இருந்தார்கள். ஆனால் மதினாவாசிகளோ விவசாயம் செய்பவர்களாக் இருந்தார்கள். திராட்சை மற்றும் பேரிச்சை தோட்டங்களைக் கொண்டிருந்தவர்கள். இவ்வாறு வேறு தொழில் செய்வதற்கு ஆரம்பத்தில் சிரமப்பட்டார்கள்.

மதீனாவைச் சுற்றி யூதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் மூன்று கிளையினர் பிரபலமானவர்கள். பனு நளிர், பனு குளைய்பா மற்றும் பனு தைனுகா ஆகியன அவை. அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலையில், அவர்களுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சில ஒப்பந்தங்கள் செய்தார்கள். எனினும் அவர்கள் பல முறை அவற்றை மீறினார்கள். அதேபோல் முனாஃபிக்களின் பிரச்சனையும் இருந்தது. அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு சலூல் என்பவரை மதினாவில் இருந்த ஒவுஸ் மற்றும் கஜ்ரஜ் கோத்தினர்கள் தங்களின் தலைவராக ஏற்றுக் கொள்ளத் திட்டமிட்ட சமையத்தில்தான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பற்றி அறிந்து அவர்களை மதீனாவுக்கு அழைப்பு விடுத்தனர். தாம் தலைவராக வரவேண்டிய நிலையில் இவ்வாறு மாற்றம் ஏற்பாட்டதால் அவர் முஸ்லிம்களின் மீது கோபம் கொண்டார். எனினும் முஸ்லிம்களை எதிர்க்க வழியில்லை என்று அறிந்த அவர், தம் மக்களுடன் இஸ்லாத்தில் மனமில்லாமல் இணைந்தனர். அவர்களுடனே இருந்து அவர்களை கருவறுக்க அவர்கள் நினைத்தனர். உள்ளொன்றும், புறம் ஒன்றுமாக அவர்கள் முனாஃபிக்தனத்தை அவர்கள் கொண்டார்கள். இவ்வாறு அவர்களுக்கு பலப் பிரச்சனைகள் ஏற்பட்டாலும், இறுதியில் வெற்றியைக் கொடுத்தான்.

Seerah 18 - Battle of Badr

ஸீராஹ் வகுப்பு 18 - பத்ரு போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இஸ்லாமிய சமுதாயம் மதினாவில் உருவாக்கப்பட்டாலும், அங்குள்ள யூதர்கள், முனாஃபிக்கள் ஆகியோரிடமிருந்து சவால்கள் வந்தன. அதேபோல், மக்கத்து காஃபிர்களும் தங்கள் பங்கிற்கு பகைமையை விட்டுவிட வில்லை. இவற்றின் வெளிபாடுதான் இஸ்லாத்தின் முதல் போரான பத்ருப் போர் நிகழ்ந்தது. போர் இரு வகைப்படும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கலந்து கொண்ட போருக்கு கஸ்வாஹ் போர் என்பார்கள். ஸரிய்யாஹ் போர் என்பது அவர்கள் ஸஹாபாக்களை அனுப்பி வைத்த போராகும். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமழான் மாதம் 17 ஆம் நாள் பத்ருப் போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் 313 அல்லது 315 நபர்கள் இருந்தார்கள். அவற்றில் சுமார் 240 நபர்கள் அன்ஸாரிகள் ஆவார்கள். அவர்களிடம் இரண்டு குதிரைகளும் மற்றும் 70 ஒட்டகங்களும் தான் இருந்தன.

அபு ஸுஃபியான் தலைமையில் ஒரு வியாபாரக் கூட்டம் சிரியா சென்று அங்கு ஈட்டிய வருமானத்தைக் கொண்டு மக்காவை நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருக்கும் செய்தி அவர்களுக்கு தெரிய வந்தது. முஸ்லிம்களின் சொத்துக்களை அபகரித்து, முஸ்லிம்கள் என்றா காரணத்திற்க்காக அவர்கள் தங்கள் சொத்திக்களை அனைத்தையும் விட்டுவிட்டு ஹிஜ்ரத் செய்யக் காரணமாக இருந்த அந்தக் காஃபிர்களிடமிருந்து தாங்கள் இழந்த சொத்துக்குப் பதிலாக அவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஸஹாபாக்களுடன் முடிவு செய்தார்கள். அவர்கள் வணிகக் கூட்டத்தை தொடர்ந்து வருகிறாகள் என அறிந்த அபு ஸுஃபியான், மக்காவுக்கு செய்தி அனுப்பி தங்களுக்குப் பாதுகாப்பாக ஒரு படையை உடனே தயார் செய்து அனுப்புமாறு வேண்டினார். அதே நேரத்தில், தப்பித்துச் செல்வதற்காக, வழக்கமான பயண வழியில் செல்லாமால் வேறு வழியாகச் சென்று தப்பித்து விடுகிறார். மக்காவில் இருந்த அபு ஜஹில், மற்ற காஃபிர்களுடன் சேர்ந்து ஒரு பெரிய படையைத் திரட்டினார். அதில் ஆயிரம் நபர்கள், இருநூறு குதிரைகள், மற்றும் பல ஒட்டகங்கள் ஆகியன இருந்தன.

அவர்கள் மதீனாவை நெருங்கிச் செல்ல, அதே நேரத்தில் தாங்கள் தப்பித்து வந்த விட்டதால் அவர்கள் திரும்பி வந்துவிடலாம் என்று அபு ஸுஃபியான் அவர்களுக்குக் செய்தி அனுப்பினார். ஆனால் போற்படையினர் இடையில் திரும்பவா வேண்டாமா என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. குறைந்த அளவே உள்ள முஸ்லிம் படையினரைத் தோற்கடித்து, வெற்றிக் களிப்பில் இரண்டு நாட்கள் அங்கேயே தங்கி கொண்டாடலாம் என சிலர் கூறினார்கள். சிலரோ சந்தை தேவையில்லை எனவும், வணிகக் கூட்டத்தினர் பாதுகாப்பாக திரும்பிவிட்டனர் என்பதால் தங்களும் திரும்பிச் செல்லலாம் எனக் கூறினார்கள். இறுதியில் போர் புரியும் நோக்கில் பத்ரு மைதானத்தை நோக்கி முன்னேறினார்கள்.

இந்த செய்தி அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், தங்களின் தோழர்களுடன் ஆலோசனை செய்தார்கள். அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ, உமர் رَضِيَ اللهُ عَنْهُ மற்றும் மிக்தாத் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் போர் புரியலாம் என்றார்கள். அன்ஸாரிகளும் அவ்வாறே கூற போர் புரியும் முடிவை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ எடுத்தார்கள். அவர்களும் பத்ரு மைதானத்தை நோக்கிச் சென்றார்கள். அன்றைய இரவை அங்கு கழிக்கலாம் என்று முடிவு செய்த நேரத்தில் ஹுபாப் இப்னு முன்திர் رَضِيَ اللهُ عَنْهُ ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து, அந்த எண்ணம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் முடிவின் காரணத்தினாலா, அல்லது அவர்களின் சுய முடிவா எனக் கேட்டார். தங்களின் சுய முடிவுதான் என அவர்கள் கூற, அப்படி என்றால் அவர்கள் அனைவரும் கிணறுகள் தங்களின் பின்னால் இருக்குமாறு உள்ள ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்று ஆலோசனை கூறினார். அதற்காக அவர் கூறிய காரணங்கள்

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு சரி எனத் தோன்றவே இடத்தை அவ்வாறு மாற்றிக் கொண்டார்கள். இந்த இடத்தில் இவர், இவர் கொள்ளப்படுவார் என சில இடங்களைக் காட்டி பெயரைக் கூறி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அவ்வாறே அந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். அன்று இரவு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களுக்கு நிம்மதியான தூக்கத்தைக் கொடுத்தான். அருள் மழையும் பொழிந்தது.

அத்தியாயம் அல் அன்ஃபால் 11

إِذْ يُغَشِّيكُمُ النُّعَاسَ أَمَنَةً مِّنْهُ وَيُنَزِّلُ عَلَيْكُم مِّنَ السَّمَاءِ مَاءً لِّيُطَهِّرَكُم بِهِ وَيُذْهِبَ عَنكُمْ رِجْزَ الشَّيْطَانِ وَلِيَرْبِطَ عَلَىٰ قُلُوبِكُمْ وَيُثَبِّتَ بِهِ الْأَقْدَامَ ﴿١١﴾

(நினைவு கூறுங்கள்:) நீங்கள் அமைதியடைவதற்காக அவன் சிறியதொரு நித்திரை உங்களை பொதிந்து கொள்ளுமாறு செய்தான்; இன்னும் உங்களை அதன் மூலம் தூய்மைப்படுத்துவதற்காகவும், ஷைத்தானின் தீய எண்ணங்களை உங்களைவிட்டு நீக்குவதற்காகவும், உங்கள் இருதயங்களைப் பலப்படுத்தி, உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும், அவன் உங்கள் மீது வானிலிருந்து மழை பொழியச் செய்தான்.

அன்று இரவு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தனிமையில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடம் அழுது அழுது துஆக் கேட்டார்கள். தங்கள் போர்வை கீழே விழுவது தெரியாத அளவுக்கு அவர்கள் அழுது துஆக் கேட்டார்கள் என அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ கூறியுள்ளார்கள். "யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! இந்த சிறிய கூட்டம் கொல்லப்பட்டால், பின்னர் உனது பெயரைக் கூற யாரும் இருக்க மாட்டார்கள்" என கேட்டார்கள். அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஆயிரம் வானவர் கொண்டு உதவி செய்தான்.

அத்தியாயம் அல் அன்ஃபால் 9,10

إِذْ تَسْتَغِيثُونَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ أَنِّي مُمِدُّكُم بِأَلْفٍ مِّنَ الْمَلَائِكَةِ مُرْدِفِينَ ﴿٩﴾ وَمَا جَعَلَهُ اللَّـهُ إِلَّا بُشْرَىٰ وَلِتَطْمَئِنَّ بِهِ قُلُوبُكُمْ ۚ وَمَا النَّصْرُ إِلَّا مِنْ عِندِ اللَّـهِ ۚ إِنَّ اللَّـهَ عَزِيزٌ حَكِيمٌ ﴿١٠﴾

(நினைவு கூறுங்கள்:) உங்களை இரட்சிக்குமாறு உங்கள் இறைவனின் உதவியை நாடியபோது: "(அணி அணியாக உங்களைப்) பின்பற்றி வரக்கூடிய ஓராயிரம் மலக்குகளைக் கொண்டு நிச்சயமாக உங்களுக்கு உதவி புரிவேன்" என்று இறைவன் உங்களுக்கு பதிலளித்தான். உங்கள் இருதயங்கள் திருப்தியடைவதற்காகவும், ஒரு நன்மாராயமாகவும் (இந்த வெற்றியை) அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஆக்கினான்; அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடமிருந்தே தவிர உதவி இல்லை; நிச்சயமாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

போர் ஆரம்பிக்கும் முன்பாக, வீரர்களுக்கு இடையில் நேரடி மோதல் முதலில் நடைபெறும். அதற்காக காஃபிர்களிலிருந்து உத்பா, அவரது மகன் வலீத், அவரது சகோதரர் ஷைபா ஆகியோர் முன் வந்தனர். பதிலுக்கு மூன்று அன்ஸாரிகளை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அனுப்பினார்கள். அனால் தங்களுக்கு எதிராக தங்களின் உறவினர்கள் மக்காவாசிகளை அனுப்பும்படி கூவினார்கள். எனவே அலி رَضِيَ اللهُ عَنْهُ ஹம்ஸா رَضِيَ اللهُ عَنْهُ மற்றும் உபைதா பின் ஹாரித் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் முன் வந்தார்கள். சண்டை ஆரம்பம் ஆனது. அலி رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் உத்பாவைக் கொன்றார்கள். ஹம்ஸா رَضِيَ اللهُ عَنْهُ ஷைபாவைக் கொன்றார்கள். உபைதா பின் ஹாரித் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களுக்கும் வலீதுக்கும் இடையில் கடுமையான சண்டை நிகழ்ந்தது. அலி رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் ஹம்ஸா رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் உதவிக்கு வர அவரும் கொல்லப்பட்டார். உபைதா பின் ஹாரித் رَضِيَ اللهُ عَنْهُ ஷஹீதானார்.

பின்னர் படைகளுக்கு இடையில் கடும் போர் நிகழ்ந்தது. ஸஹாபாக்கள் மனதில் தங்களின் எண்ணிக்கை அளவு குறித்து பயம் இருந்தது. அனால் அல்லாஹ் அவர்களுக்கு ஆயிரம் வானவர்களை அனுப்பி உதவி செய்தான். அல்லாஹ் பின்னர் மேலும் பல வானவர்களைக் கொண்டு உதவி செய்தான். இறுதியில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். காஃபிர்களின் பல பெரிய தலைவர்கள் அபு ஜஹில், உமை இப்னு கலப் ஆகியோர் கொல்லப்பட்டனர். அவர்கள் பாழுங்கிணற்றில் போடப்பட்டனர். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எங்களுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றி விட்டான், உங்கள் பொய்த்தெய்வங்கள் எங்கே?” அப்போது உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் யாரிடம் பேசுகிறார்கள் என வினவினார்கள். “இந்த நேரத்தில் உங்களை விட அதிகமாக கேட்கிறார்கள்” என காஃபிர்கள் குறித்து கூறினார்கள். போரில் எழுபது காஃபிர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஏராளமான போர்ப் பொருட்கள் (கனிமத்துப் பொருள்கள்) கிடைத்தன. முந்தைய நபிமார்களுக்கு அவற்றைப் பயன்படுத்தத் தடை இருந்தது. நம் சமுதாயத்திற்கு அவை ஹலாலாக ஆக்கப்பட்டது. முஸ்லிம்களில் பதினான்கு நபர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். அவர்கள் பத்ரு களத்திலேயே அடக்கப்பட்டார்கள். பத்ருப் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்களுக்கு அல்லாஹ் கண்ணியம் அளித்தான். அவர்களை மன்னித்து சுவனம் கொண்டு நற்செய்தி கூறினான். அவர்கள் என்ன பாவம் செய்தாலும் மன்னிப்பேன் எனக் கூறிவிட்டான்.

போர்க் கைதிகள் குறித்து ஸஹாபாக்களுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஆலோசனை செய்தார்கள். ஒருவர் அனைவரையும் எரித்து விட வேண்டும் எனக் கூறினார். இஸ்லாத்தை அழிக்க வேண்டும் என வந்தவர்கள் கொள்ளப்பட வேண்டும் என உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் கூறினார்கள். அந்தந்த உறவினர்களே கொல்ல வேண்டும் எனவும் கூறினார்கள். அதன் மூலம் இரத்த பந்தத்தை விட இஸ்லாம் பெரிது என்பதை உலகுக்கு தெரிவிக்கலாம். எனினும் அவர்களை ஒரு குறிப்பிட்ட பிணைத் தொகை பெற்றுக் கொண்டு விடுவிக்கலாம் என அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ கூறினார்கள். அவர்களின் கருத்து சரியாகப்பட ஒவ்வொருவரையும் 3000 திர்ஹங்கள் கொடுத்து உறவினர்கள் விடுவித்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. அனால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதற்கு மறுப்பு தெரிவித்தான்.

அத்தியாயம் அல் அன்ஃபால் 67

مَا كَانَ لِنَبِيٍّ أَن يَكُونَ لَهُ أَسْرَىٰ حَتَّىٰ يُثْخِنَ فِي الْأَرْضِ ۚ تُرِيدُونَ عَرَضَ الدُّنْيَا وَاللَّـهُ يُرِيدُ الْآخِرَةَ ۗ وَاللَّـهُ عَزِيزٌ حَكِيمٌ ﴿٦٧﴾

(விஷமங்கள் அடங்க) பூமியில் இரத்தத்தை ஓட்டாத வரையில் (விரோதிகளை உயிருடன்) சிறைபிடிப்பது எந்த நபிக்கும் தகுதியில்லை; நீங்கள் இவ்வுலகத்தின் (நிலையில்லா) பொருள்களை விரும்புகிறீர்கள். அல்லாஹ்வோ மறுமையில் (உங்கள் நலத்தை) நாடுகிறான். அல்லாஹ் (ஆற்றலில்) மிகைத்தோனும், ஞானமுடையோனாகவும் இருக்கின்றான்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கண்டனத்தை வருத்ததுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். எனினும் அந்த முடிவை மாற்ற வேண்டும் எனக் கட்டளை இடவில்லை. எனவே முன்னர் முடிவு செய்தபடி போர்க் கைதிகள் பிணைத் தொகைகளைப் பெற்றுக் கொண்டு விடுவிக்கப்பட்டார்கள். அப்பாஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் அந்த கைதிகளில் இருந்தார்கள். வற்புறுத்தலின் பேரிலேயே அவர்கள் போரில் கலந்து கொண்டவர்கள். அதில் அவர்களும் இருந்தார்கள். பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைந்தவர்களும் இருந்தார்கள். முத்இம் இப்னு அதிய் என்பவர் இந்த அனைவரையும் விடுதலை செய்து விடுங்கள் என்று கூறியிருந்தாலே தாங்கள் அனைவரையும் விட்டிருப்பேன் என்று ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இந்த முத்இம் இப்னு அதிய் யார்?

Seerah 19 - Some incidents between the Battle of Badr and the Battle of Uhud

ஸீராஹ் வகுப்பு 19 - பத்ரு போர் மற்றும் உஹது போருக்கு இடையில் நிகழ்ந்த சில சம்பவங்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

முத்இம் இப்னு அதிய் ஆகிய இவர்தான் மக்காவில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கிளையினரை மூன்று வருடங்கள் சமுதாயப் புறக்கணிப்பு செய்த நேரத்தில், சிலரை அழைத்துக் கொண்டு கஃபா சென்று அந்த உடன்படிக்கையை நீக்கச் செய்தவர் ஆவார். இவர் மற்றுமொரு நேரத்திலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு உதவி செய்துள்ளார்கள். தாயிப் நகரத்திலிருந்து, மிகவும் துன்பப்பட்டு மக்கா திரும்பும்போது, காஃபிர்கள் அவர்களை உள்ளே நுழையக்கூடாது என்று தடுத்தபோது, தாம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதாக முத்இம் இப்னு அதிய் கூறினார். அவர் மிகவும் சக்தி பெற்றவராக இருந்ததால் காஃபிர்களால் அதனை தடுக்க முடியவில்லை. இவ்வாறு இரண்டு முக்கியமான நேரங்களில் அவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு உதவி செய்துள்ளார். இவற்றை நினைவு கூர்ந்துதான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

முத்இம் இப்னு அதிய் மற்றும் அபு தாலிப் ஆகியோருக்குக் கிடைக்காத பாக்கியம், இஸ்லாம், நமக்குக் கிடைத்துள்ளது. ஹிதாயத்தைக் கொடுத்த அல்லாஹ்வுக்கு நாம் நன்றி உடையவர்களாக நாம் இருக்க வேண்டாமா?

பிணைத் தொகைகளை சிலரின் வசதிக்குத் தகுந்தவாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மாற்றிக் கொண்டார்கள். கைதிகளின் ஒருவர் அபுல் ஆஸ், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மகளார் ஜைனப் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் கணவர் ஆவார். அவரை விடுவிக்க தங்களின் தங்கக் கழுத்தணியை ஒருவரிடம் கொடுத்து ஜைனப் رَضِيَ اللهُ عَنْهَا அனுப்பினார்கள். அந்த ஆபரணத்தைக் கண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கண் கலங்கினார்கள். அந்த ஆபரணம் அன்னை கதிஜா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் ஆபரணமாகும். திருமணத்தின்போது ஜைனப் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தது. பிறகு ஸஹாபாக்களிடம் இந்த ஆபரணத்தைத் திருப்பிக் கொடுக்க அனுமதி கேட்டார்கள். அபுல் ஆஸ்சை விடுதலை செய்து விட்டு, அதற்குப் பதிலாக அவர்களை மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் வைத்தார்கள். ஸஹாபாக்கள் உடனே சரியெனக் கூறினார்கள்.

மற்றுமொரு மாற்றம், கைதிகளில் சிலர் மிகவும் ஏழ்மையானவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு அந்தப் பிணைத் தொகையை அவர்களால் கொடுக்க முடியாத நிலை. அவர்கள் அதற்குப் பதிலாக, அன்ஸாரிகளில் பத்து நபர்களுக்கு, அரபி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை வைக்கப்பட்டது. கல்விக்கு மார்க்கம் தந்த முக்கியத்துவம் இது. மேலும் இரண்டு கைதிகளைக் கொன்றுவிட வேண்டும் என ஆணையிடப்பட்டது. ஒருவர் நப இப்னு ஹாரித். மக்காவில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை அதிகம் துன்புறுத்தியவர். மற்றொருவர் உக்பா இப்னு அபு முயீத். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொழும்போது பல தடவை துன்புறுத்தியவர். ஒட்டகத்தின் குடலைப் போட்டவர். அவர்களை துண்டினால் கழுத்தை நெரிக்க முயன்றார்.

கைதிகளை துன்புறுத்தவோ அல்லது பட்டினி போடவோ கூடாது என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இஸ்லாம் கற்றுக் கொடுத்த பாடம் இது. போரில் கூட பெண்களையும் குழந்தைகளையும் துன்புறுத்தக் கூடாது எனவும், இறந்த உடலை சின்னாபின்னமாக ஆக்கக்கூடாது எனவும் போதித்த மார்க்கம் இது. தங்களின் சிறிய தந்தை

அப்பாஸ் رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்களை பிணைத்தொகை ஏதும் இல்லாமல் விட்டுவிடுங்கள் என ஸஹாபாக்கள் கூறிய போதும், தாங்கள் அவ்வாறு விட அனுமதிக்காமல் முழுத் தொகையையும் கொடுக்க வேண்டும் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அபுல் யஸர் رَضِيَ اللّٰهُ عَنْهُ என்ற அன்ஸாரி தோழரிடம் அபுல் அசீஸ் என்ற கைதியை ஓடி விடாமல் இருப்பதற்காக நன்றாகக் கட்டி வைக்கும்படி முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللّٰهُ عَنْهُ கூறினார். அவருடைய தாய் மிகச் செல்வந்தர் என்பதால் பிணைத்தொகை வாங்காமல் விடக்கூடாது என்றும் கூறினார். அந்தக் கைதி, இஸ்லாத்திற்காக முதன்முதலில் மார்க்கம் போதிக்க வந்த அந்த முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்களின் தம்பிதான். தம் தம்பியைக் குறித்தும் இந்த நிலைலையே அவ்வாறு எடுத்தக் கொண்டார்கள். தம்மைக் குறித்து இவ்வாறு கூறிய முஸ்அப் இப்னு உமைரி رَضِيَ اللّٰهُ عَنْهُ டம் அவரது சகோதரர், தான் அவரது சகோதரர் அல்லவா என்று கேட்க, அவ்வாறல்ல, அபுல் யஸர் رَضِيَ اللّٰهُ عَنْهُ என்ற அன்ஸாரிதான் தம் சகோதரர் என்றார்.

அப்துல்லாஹ் இப்னு உபை முனாஃபிக் தலைவன் ஆவான். அன்னை ஆயிஷா அவர்களின் மீது அவதூறு ஏற்படக் காரணமானவர் இவர் தான்.அவரது மகன் அப்துல்லாஹ்வோ சிறந்த ஸஹாபி ஆவார். தம் தந்தையின் மீது கோபம் கொண்ட அவர் அனுமதி அளித்தால் அவரது தலையை வெட்டிக் கொண்டுவரத் தயார் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கூறினார். இவ்வாறு அவர்கள் தங்கள் உறவை விட இஸ்லாத்தையே பெரிதாக எடுத்துக் கொண்டனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத மகனை வெள்ளத்திலிருந்து காப்பாற்றுமாறு நூஹ் عَلَيْهُ السَّلَامَ கேட்கும்போது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மறுத்தான்.

அத்தியாயம் ஹூத் 46, 47

وَنَادَىٰ نُوحٌ رَّبَّهُ فَقَالَ رَبِّ إِنَّ ابْنِي مِنْ أَهْلِي وَإِنَّ وَعْدَكَ الْحَقُّ وَأَنتَ أَحْكَمُ الْحَاكِمِينَ ﴿٤٥﴾

قَالَ يَا نُوحُ إِنَّهُ لَيْسَ مِنْ أَهْلِكَ ۖ إِنَّهُ عَمَلٌ غَيْرُ صَالِحٍ ۖ فَلَا تَسْأَلْنِ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ ۖ إِنِّي أَعِظُكَ أَن تَكُونَ مِنَ الْجَاهِلِينَ ﴿٤٦﴾

நூஹ் தன் இறைவனிடம் "என் இறைவனே! நிச்சயமாக என் மகன் என் குடும்பத்தைச் சேர்ந்தவனே; உன் வாக்குறுதி நிச்சயமாக உண்மையானது; நீதி வழங்குவோர்களிலெல்லாம் மேலான நீதிபதியாய் நீ இருக்கிறாய்" எனக் கூறினார். அ(தற்கு இறை)வன் கூறினான்: " நூஹே! உண்மையாகவே அவன் உம் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன்; நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லாச் செயல்களையே செய்து கொண்டிருந்தான்; ஆகவே நீர் அறியாத விஷயத்தைப் பற்றி என்னிடம் கேட்க வேண்டாம்; நீர் அறியாதவர்களில் ஒருவராகி விடவேண்டாம் என்று திடமாக நான் உமக்கு உபதேசம் செய்கிறேன்."

இவ்வாறு ஸஹாபாக்கள் தங்கள் உறவை விட இஸ்லாத்தையே பெரிதாக எடுத்துக் கொண்டனர். பத்ருப் போருக்குப் பிறகு பல சிறிய போர்கள் நடத்துள்ளன. அனால் அதற்குப் பிறகு நடந்த பெரியப் போர் உஹதுப் போர் ஆகும். பத்ருப் போரில் சிறிய அளவு கொண்ட முஸ்லிம் படை காஃபிர்களின் பெரிய படையை வென்றது. அந்த நாளை பிரித்து அறிவிக்கும் னால் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான். சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்து அறிவித்த நாள் அது. ஒரு சிறிய கூட்டம் தோற்கடித்தது, தங்களின் பெய்ய தலைவர்கள் கொல்லப்பட்டது, மற்ற மக்களிடம் தங்களை குறித்த தாழ்வு எண்ணம் ஆகிய காரணமாக மக்கத்து காஃபிர்கள் அந்த இழப்புகளுக்குப் பழிவாங்க மற்றொரு போருக்குத் தயார் செய்தனர். அந்த ஏற்பாட்டில் முழு மூச்சாக இறங்கினார்கள். இந்த செய்தி ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குக் கிடைத்தது. தங்களுக்குள் ஆலோசனை செய்து அதற்கான ஏற்பாட்டினை அவர்களும் தயாராக ஆயத்தம் செய்தனர். அப்போர் ஒரு வருடம் மற்றும் ஒரு மாதம் கழித்து ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில் நிகழ்ந்தது.

Seerah 20 - Battle of Uhud

ஸீராஹ் வகுப்பு 20 - உஹது போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

பத்ருப் போரில் தோல்வி அடைந்த மக்கத்து காஃபிர்கள் அதற்குப் பழி தீர்க்கும் எண்ணத்தின் வெளிபாடுதான் உஹதுப் போராகும். இது ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடைபெற்றது. மக்காவிலிருந்து 5000 காஃபிர்கள் படையெடுத்து மதினாவிற்கு மூன்று மைல் தொலைவில் உள்ள உஹது மலை அருகில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்து முகாமிட்ட செய்தியை அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஸஹாபாக்களிடம் ஆலோசனை செய்தார்கள். இளைஞர்கள் பலர் தாங்கள் போருக்குத் தயார் எனவும் உஹதுக்குப் புறப்பட்டுச் செல்லலாம் என்றார்கள். அதனைக் கேட்டு அவர்களும் வீட்டிற்குச் சென்று போர் கவசங்களை அணிந்து தயாராகப் புறப்பட்டு வந்தனர். அதற்கிடையில் வயதான ஸஹாபாக்கள் இளைஞர்களிடம் போருக்கான முடிவை ஏன் அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் விடாமல் தாங்களாகவே முடிவு செய்தார்கள் என வினவினார்கள். தயாராக வந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் அந்த இளைஞர்கள், அவர்களே போர் குறித்து முடிவு எடுக்குமாறு கூறினார்கள். எனினும் போர் கவசம் அணிந்த பிறகு போருக்கு செல்லாமல் இருப்பது அழகல்ல என்றார்கள். எனவே சுமார் ஆயிரம் வீரர்கள் தாயாரான நிலையில் போருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். எனினும் இடையில் முனாஃபிக் அப்துல்லாஹ் இப்னு உபை இளைஞர்களிடம் பேச்சைக் கேட்டு தவறாக போருக்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ புறப்பட்டு விட்டார்கள் என நொண்டிச் சாக்குக் கூறி தம்முடன் முன்னூறு நபர்களைத் திருப்பி அழைத்துச் சென்று விட்டார். எனவே 5000 காஃபிர்கள் படையை எதிர்த்து எழுநூறு முஸ்லிம் வீரர்கள் புறப்பட்டார்கள். ராபியா இப்னு கதீஜ் போன்ற சில சிறுவர்களும் ஆர்வமுடன் போரில் பங்கு கொள்ள விரும்பினார்கள். எனினும் அவரை அனுமதிக்க முதலில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மறுத்தார்கள். ஆனால் தாம் பெரியவர் எனக் கூறி ஒருவாறு அனுமதி பெற்று விட்டார். அவரை விட சிறியவரான சபுராஹ் இப்னு ஜுன்துப் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து தாம் ராபியாவை குத்துச் சண்டையில் வீழ்த்தி விடுவேன் எனக் கூறி, எனவே தம்மையும் அணியில் சேர்க்க வேண்டும் என்றார். அந்த இடத்திலேயே இருவருக்கும் போட்டி வைத்ததில் சபுராஹ் வெற்றி பெற்றார். எனவே அவருக்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

போருக்கு முன்னால் உஹது மலைக்குப் பின்னால் இருந்த ஒரு மலையான ஜபலுர் ருமாத் மலையின் மீது சுமார் 40-50 வீரர்களைப் பாதுகாப்பிற்காக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நிற்க வைத்தார்கள். மேலிலிருந்து அனைவரையும் கண்காணிக்கும் பொறுப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. போரின் நிலை எவ்வாறாக இருந்தாலும் தங்கள் அனுமதி இல்லாமல் அந்த இடத்தை விட்டு அவர்கள் நீங்ககூடாது என அவர்களின் ஆணையிட்டுக் கூறியிருந்தார்கள்.

போர் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. காஃபிர்கள் படை புறமுதுகிட்டு ஓட ஆரம்பித்தது. அந்த ஓட்டத்தைப் பார்த்ததும், அதனைக் கண்ட மலை மீது இருந்த வீரர்கள், கனிமத்துப் பொருட்களை எடுக்கும் எண்ணத்தில் அந்த இடத்தை விட்டுக் கீழே இறங்க ஆரம்பித்தனர். எனினும் அந்தக் குழுவின் தலைவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் அவர்களின் கட்டளையாகிய, போரின் நிலை எவ்வாறாக இருந்தாலும் தங்கள் அனுமதி இல்லாமல் அந்த இடத்தை விட்டு அவர்கள் நீங்ககூடாது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தி அவர்கள் செல்லாமல் தடுத்தார். எனினும் அவர்கள் கேட்காமல் அந்த இடத்தை விட்டுக்க் கீழே இறங்கினார்கள்.

அந்த மலை பாதுகாப்பு அற்று இருந்ததை தூரத்தில் இருந்து கவனித்த (அது வரை இஸ்லாத்தை ஏற்காத) காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ , ஒரு சிறு படையுடன் அந்த

இடத்திற்கு முன்னேறினார். இவர் சிறந்த வீரர். போர் தந்திரம் தெரிந்தவர். இஸ்லாத்திற்கு வந்த பிறகு பல போர்களில் கலந்து வெற்றி கொண்டவர். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் போர்வாள் என்ற பட்டப் பெயரைக் கொண்டவர். அவர் தலைமை ஏற்றால் வெற்றி உறுதி என்ற அளவுக்குப் பெயர் பெற்றவர். அதன் காரணமாகவே, மக்கள் நம்பிக்கையை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பக்கம் வைக்கவேண்டும் என்பதற்காக அவரைத் தலைமைப் பொறுப்பிலிருந்து உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் நீக்கிய வரலாறும் உண்டு.

காலித் இப்னு வலீத் யின் படை பின்புறமாக வந்து முஸ்லிம்களைத் தாக்கினார்கள். அந்தக் கண்ட புறமுதுகிட்டு ஓடியவர்களும் திருப்பி வந்து முஸ்லிம்களைத் தாக்கினர். இவ்வாறு முஸ்லிம்கள் இருபக்கமும் தாக்கப்பட்டார்கள். வெற்றி முனைப்பில் இருந்த அவர்கள் தோல்வியின் பக்கம் சென்று விட்டார்கள். முஸ்லிம்களில் எழுபது வீரர்கள் ஷஹீதானார்கள். தாங்கள் பத்ரில் இழந்த எழுபது நபர்களுக்குப் பழி வாங்கிவிட்டதாகக் கூறியா அபு ஸுஃப்யான் தங்களுக்கு லாத் மற்றும் உஸ்ஸா இருப்பதாகக் கூறினார். பதிலுக்கு அல்லாஹ் தங்களுடன் இருப்பதாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். ஷஹீதானவர்களில் ஹம்ஸா رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள், முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோரும் ஒருவர். அவர்கள் அணிந்த ஆடையைக் கொண்டே கபனிடப்பட்டனர். முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் ஆடையைக் கொண்டு அவர்களை முழுவதும் மறைக்க முடியவில்லை. காலை மறைத்தால் முகம் மறைக்க முடியாத நிலை. மிகப் பெரிய செல்வந்தரின் நிலை இது. வேறுவழி இல்லாமல் முகத்தை மறைத்து விட்டு காலை இத்கில் என்ற புல்லை வைத்து மறைத்தார்கள்.

காஃபிர்கள் தோண்டிமறைத்து வைத்திருந்த ஒரு பள்ளத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ விழுந்துவிட்டார்கள். அதனால் அவர்களின் முகக் கவசம் எலும்பைத் தாக்கி இரத்தம் சிந்த ஆராம்பித்தது. பாயை எரித்து அந்தத் தூளை வைத்து இரத்தம் நிற்கப் பாத்திமா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் உதவி செய்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இரண்டு பற்களும் ஸஹீதாகி விட்டன.

காலித் இப்னு வலீத் யின் தாக்குதலிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அபு தல்ஹா, இப்னு நளர் رَضِيَ اللهُ عَنْهُ, ஜியாத் முஸ்தக்رَضِيَ اللهُ عَنْهُ , ஜுபைர் இப்னு அவ்வாம் رَضِيَ اللهُ عَنْهُ போன்றவர்கள் தங்கள் உயரைத் துச்சமெனக் கருதி அவர்களைச் சுற்றி நின்றார்கள். இப்னு நளர் رَضِيَ اللهُ عَنْهُ ஸஹீதாக்கப்பட்டார். ஒருவர் தம் உடம்பில் எண்பதுக்கு மேற்பட்டக் காயங்களைப் பெற்றுக் கொண்டார். தங்களின் மீது அம்புக் காயங்களைப் பெற்றுக் கொண்டார்.

இந்தப் போரில் மிகப்பெரிய படிப்பினை இருக்கிறது. பத்ருப் போரில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் உதவியை மட்டும் நம்பி, அவனது உதவி பெற்று மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் உஹதுப் போரில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மற்றும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இருந்தவரை அவர்கள் வெற்றி முகம் கண்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கட்டளைக்கு மாறு செய்தபோது, அவர்கள் தோல்வியைக் கண்டார்கள். ஹுனைன் போரிலும் அவர்கள் எண்ணிக்கைக் குறித்து பெருமிதம் கொண்டு வெற்றி நிச்சயம் என்று நினைத்தபோது, பின்வாங்கிச் சென்றார்கள். பின்னர் நிலைமையை உணர்ந்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நம்பினார்கள். அதன் பிறகு வென்றி கொண்டார்கள்.

உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவைகளும் கூறுவார்கள், "நாங்கள் இழிவானவர்களாக இருந்தோம். அனால் இஸ்லாத்தைக் கொண்டு நமக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கண்ணியம் அளித்தான். இஸ்லாத்தை விட்டு வேறு எதிலும் கண்ணியத்தை தேடினால் இழிவுதான் கிடைக்கும்."

ஸலாவுத்தீன் அய்யூபி رَحْمَهُ اللهُ عَلَيْهِ அவர்கள் பைத்துல் முகத்திஸ் பள்ளியைக் கிருத்துவர்களிடமிருந்து கைப்பற்றியவர் ஆவார். அவர் தம் படையில் இருந்த

முஜாஹிதீன்களை இரவு நேரத்தில் கண்காணித்த வேலையில், சிலர் தொழுது கொண்டிருந்தார்கள். சிலர் கதை பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் கூறினார், “போரில் நமக்கு வெற்றி கிடைத்தால், இதோ இங்கு தொழுது கொண்டிருப்பவர்களின் துஆவினால் தான். தோல்வி ஏற்பட்டால் உங்களின் செயல்களினால்தான்.”

நற்செயல்களின் அடிப்படையில்தான் அல்லாஹ் வெற்றியை அளிக்கிறான். நாம் உறுதியாக இருந்தால், எதிரிகளின் மனதில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பயத்தைப் போட்டு விடுவான். அதுவே வெற்றியின் முதல் அறிகுறிதான். காலித் இப்னு வலீத் போருக்குப் புறப்படும் போதெல்லாம், ஒரு கடித்ததை எதிரிகளுக்கும் அனுப்புவார். அவர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறும், இல்லை என்றால் தாம் ஒரு படையுடன் வருவதாகவும் கூறியிருப்பார். தம்முடன் வருபவர்கள், இஸ்லாத்திற்காக உயிர்துறக்க மிகவும் விருப்பப் படுவார்கள் என்றும் கூறியிருப்பார். அந்த ஒன்றே எதிரிகளின் மனத்தில் ஒரு பயத்தை ஏற்படுத்தி விடும்.

அது போல இஸ்லாமிய ஆட்சியாளர் ஸுலைமான் அல் கானூன் இருந்தார். அப்போது பிரான்சு நாட்டில் ஒரு இடத்தில் ஆண்களும், பெண்களும் ஒன்றாகக் கூடி இசைக்கு ஆட்டம் போட்டுக் கொண்டிருந்ததைக் கேள்விப்பட்டார். இந்த புதிய நிகழ்வை உடனே நிறுத்தாவிட்டால், தம் ஒரு படையைத் திரட்டி அங்கு வருவேன் என செய்து அனுப்பினார். அந்த கடிதம் போன ஆண்டிலிருந்து சுமார் நூறு ஆண்டுகள் அவ்விதமான கேளிக்கை நிகழ்ச்சி அங்கு நடைபெறவில்லை என வரலாற்று ஆரிசியர்கள் பதிந்துள்ளார்கள்.

இன்றுள்ள நிலைமையைப் பார்த்தால், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான் நமக்கு சரியான வழியைக் காட்ட வேண்டும். அந்த ஹிதாயத்தை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு தந்து அருள்வானாக! உஹதுப் போரில் எழுபது ஸஹாபாக்கள்

Seerah 21 - Banu Mustaliq War

ஸீராஹ் வகுப்பு 21 - பனூ முஸ்தலிக் போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

உஹதுப் போரில் எழுபது ஸஹாபாக்கள் ஷஹீதானார்கள். அது முஸ்லிம்களுக்கு பெரிய மன உளைச்சலைக் கொடுத்தது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்கள். தாங்களும் ஷஹீதாகி இருக்கலாம் இன்று நினைக்கும் அளவிற்கு அவர்களின் துன்பம் மிகுந்திருந்தது. ஸஹாபாக்கள் ஷஹீதான நிகழ்வின் காரணமாக பலர் தங்களின் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள். பலர் பொறுமை காத்தார்கள். ஹன்னாஹ் பின்த் ஜஹஷ் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் சகோதரர் அப்துல்லாஹ் இப்னு ஜஹஷ் رَضِيَ اللهُ عَنْهُ அப்போரில் ஷஹீதாகி இருந்தார்கள். அச்செய்தி கேட்டு அவர் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறினார். பின்னர் அவரது மானமார் ஹம்ஸா رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் அப்போரில் ஷஹீதான செய்தி கேட்டு அவர் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறினார். பின்னர் அவரது கணவர் முஸ்அப் இப்னு உமைர் رَضِيَ اللهُ عَنْهُ ஷஹீதான செய்தியைக் கேட்ட பிறகு, பொறுத்துக் கொள்ளாமல் கத்தி அழுதார்கள். அதனைக் கண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு பெண்ணிடத்தில் கணவரின் அந்தஸ்து வேறுதான் என்று கூறினார்கள். அதைப் போல பனூ தீனார் என்ற கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி குறித்து பிரபலமான செய்தி. தம் கணவர் இறந்து விட்டார் என்ற செய்தி கேட்டும், அவர் பொறுமையுடன் போர்களத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ எவ்வாறு இருக்கிறார்கள் என்று வினவினார். தம் சகோதரர் இறந்து விட்டார் என்ற செய்தி கேட்டும், அவர் பொறுமையுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ எவ்வாறு இருக்கிறார்கள் என்று வினவினார். தமது தந்தை இறந்து விட்டார் என்ற செய்தி கேட்டும், அவர் பொறுமையுடன் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ எவ்வாறு இருக்கிறார்கள் என்று தான் வினவினார். அவர்கள் நன்றாக இருக்கிறார்கள் என்ற ஸஹாபாக்கள் சொன்ன போதும், அவர் திருப்தி அடையாதவராக, தாமே நேரில் சென்று பார்க்க வேண்டும் என போர்களத்திற்குச் சென்றார்கள். அவர்களைப் பார்த்த பின்னர், “ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! தங்களைப் பார்த்த பின்புதான் எல்லா பிரச்சனைகளும் எனக்கு சிறியதாகத் தோன்றுகிறது.” என்று கூறினார்கள். இவ்வாறு தங்கள் உறவினர்கள் அனைவரையும் விட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களையே மக்கள் மிகவும் நேசித்தார்கள். ஷஹீதானவர்களின் நிலையைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களன் சகோதரி அழுது கொண்டிருந்தார். தங்கள் சகோதரரும், தம் தந்தை அப்துல்லாஹ்வையும் உஹதுப் போரில் இழந்த துக்கம். அவர் எதற்காக அழவேண்டும் என்று கேட்ட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், இறந்த அவர்களைச் சுற்றி வானவர்கள் இருந்தார்கள் எனவும், அவர்களின் ஆன்மா வானத்தின் பக்கம் உயர்த்தும் வரை அவ்வாறு சூழ்ந்து கொண்டார்கள் எனக் கூறினார்கள்.

அத்தியாயம் ஆல இம்ரான் 169, 170

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللَّـهِ أَمْوَاتًا ۚ بَلْ أَحْيَاءٌ عِندَ رَبِّهِمْ يُرْزَقُونَ ﴿١٦٩﴾ فَرِحِينَ بِمَا آتَاهُمُ اللَّـهُ مِن فَضْلِهِ وَيَسْتَبْشِرُونَ بِالَّذِينَ لَمْ يَلْحَقُوا بِهِم مِّنْ خَلْفِهِمْ أَلَّا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿١٧٠﴾

அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள் - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள். தன் அருள் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்; மேலும் (போரில் ஈடுபட்டிருந்த தன் முஃமினான சகோதரர்களில் மரணத்தில்) தம்முடன் சேராமல்

(இவ்வுலகில் உயிருடன்) இருப்போரைப் பற்றி “அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்” என்று கூறி மகிழ்வடைகிறார்கள்.

உயிரிழப்புகாக சில பெண்கள் சப்தமாக, ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்தார்கள். இவ்வாறு ஒப்பாரி வைப்பது அறியாமைக் காலத்துப் பழக்கம் என இதனை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கண்டித்துத் தடுத்தார்கள்.

உஹதுப் போருக்குப் பின்னர் முக்கியமான ஒரு மார்க்கச் சட்டமாக நான்காம் ஆண்டு ஆரம்பத்தில், மது அருந்துவது தடை செய்யப்பட்டது. இரண்டாம் ஆண்டு ஜகாத்தும், நோன்பும் கடமையாக்கப்பட்டன. அன்னை ஜைனப் பிந்த் ஜஹஷ் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் திருமணத்திற்குப் பிறகு ஹிஜாப் அணிவதும் கடமை ஆக்கப்பட்டது. மது அருந்துவது அரபு மக்களுக்கு வழக்கமான ஒன்றாக இருந்தாலும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கட்டளை வந்ததும் அதனை விட்டுவிடத் தயாராகி விட்டார்கள்.

உம்மு சுலைம் என்பவர் அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் தாயார் ஆவார். தம் கணவர் இறந்த பிறகு அவர் அபு தல்ஹா رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை மணம் முடித்தார்கள். அதற்காக வீட்டில் விருந்து வைத்தார்கள். விருந்தாளிகளுக்கு மது பானத்தை அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ பரிமாறிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சப்தம் வந்தது. அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ வெளியில் வந்து பார்த்தபோது அங்கு மது ஹராம் ஆக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது. உடனே உள்ளே வந்து அந்தச் செய்தியை அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ கூற, பரிமாறப்பட்ட மது கீழே கொட்டப்பட்டது. மதுக் கலயங்கள் உடைத்து, மது கீழே ஊற்றப்பட்டது. அன்று மதினா வீதிகளில் மது ஆறாக ஓடியது என்று சொல்லப்பட்டது. அருந்தியவர்கள் அதனை வாந்தி எடுத்தார்கள்.

உஹதுப் போரில் ஏற்பட்ட சிறு தோல்வியால், மதீனாவைச் சுற்றி இருந்த இஸ்லாத்தை ஏற்காத கோத்திரத்தினைச் சேர்ந்த சிலருக்கு முஸ்லிம்களை எதிர்க்கும் தைரியம் வந்தது. முஸ்லிம்கள் தோல்வியிலிருந்து மீள்வதற்குள், தாங்கள் அவர்கள் மீது வெற்றி கொள்ளலாம் என்ற ஆசையில் பலர் போரைத் திணித்தனர். இவ்வாறு ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டில் பல சிறிய போர்கள் நிகழ்ந்தன. அதில் ஒரு முக்கியமான போர் பனூ முஸ்தலிக் போராகும். இது ஒரு கோத்திரத்தின் பெயராகும். அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் தொடுக்க ஆயத்தம் ஆகிறார்கள் என்ற செய்தியை அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், புரைதா رَضِيَ اللهُ عَنْهُ என்ற ஸஹாபியை அது குறித்த செய்தியை உறுதிபடுத்த அனுப்பினார்கள். அவர் அக்கோத்திரத்தினருக்கு தாய் வழி உறவினர் ஆவார். உறவினரைச் சந்திப்பது போல செய்திகளைக் கொண்டுவரலாம் என்ற நோக்கில் அனுப்பப்பட்டார். திரும்பி வந்த புரைதா رَضِيَ اللهُ عَنْهُ விவரங்களைக் கொண்டு வந்தார். அதனைக் கொண்டு சில முடிவுகளை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ எடுத்தார்கள். முஸ்லிம்கள் சுமார் எழுநூறு நபர்கள் இருந்தார்கள்.

இந்தப் போரில்தான் அன்னை அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللهُ عَنْهَا போர்க் கைதியாக வந்தார்கள். பனி முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த தலைவர் ஹாரிஸ் என்பவரின் மகள்தான் அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللهُ عَنْهَا ஆவார்கள். இந்த கோத்திரத்திற்கு எதிராக நடந்த போரில் வெற்றி கண்டதால், . அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ اللهُ عَنْهَا கைப்பற்றப்பட்டு அடிமையாக சிறைபிடிக்கப் படுகிறார்கள். பின்னர் கைதிகளைப் பிரித்து பங்கிடப்பட்டபோது, அவர்கள் ஒரு ஸஹாபிவின் பங்காகச் செல்கிறார். ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த தலைவரின் மகள் அடிமையாக சென்றது வேதனையாக இருந்தது. எனவே உரிய இழப்பீடு (முகாஸஃபா) தருவதாகக கூறி அந்த ஸஹாபயிடமிருந்து விடுதலை வேண்டினார்கள். பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيَ رَضِيَ اللهُ عَنْهَا கூறினார்கள், “நான் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த தலைவரின் மகள். இப்படி அடிமையாக இருப்பது எனக்கு வருத்தம் அளிக்கிறது. உரிய இழப்பீடு விடுதலை ஆக விரும்புகிறேன்.” ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறினார்கள், “நீங்கள் விரும்பினால் நான் அதற்கான தொகையை தருகிறேன். நீங்கள் விடுதலை ஆகலாம். மாறாக

நீங்கள் விரும்பினால் என்னை மணம் முடித்துக் கொள்ளலாம்.” இஸ்லாத்தின் சுவையை அப்போது அறிந்திருந்த அன்னை ஜுவைரிய்யாஹ் ◌ َ رَضِيِ الله عَنْهَا அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் திருமணம் செய்ய உடனே இசைந்தார்கள். இதைக்கேள்வியுற்ற ஸஹாபாக்கள் அனைவரும் தங்கள் பங்கிற்கு வந்த அத்தனை பேர்களையும் விடுதலை செய்து விட்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மனைவியாகிவிட்ட அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيِ الله عَنْهَا அவர்களின் உறவினர்கள் தங்களின் அடிமையாக இருக்க யாரும் விரும்பாததுதான் அதற்குக் காரணம். இந்த நிகழ்வின் காரணமாக அக்கோத்திரத்தின் அனைத்து மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஒரு பெண்ணால் மிகப்பெரிய நன்மை கிடைத்து என்றால் அவர்கள் அன்னை ஜுவைரிய்யாஹ் رَضِيِ الله عَنْهَا அவர்களாகத் தான் இருக்க முடியும் என அன்னை ஆயிஷா رَضِيِ الله عَنْهَا கூறினார்கள்.

இப்போரில் நடந்த மற்றுமொரு முக்கியமான நிகழ்வு, முனாஃபிக் அப்துல்லாஹ் இப்னு உபையும் தம் தோழர்களுடன் போரில் கலந்து கொண்டார். போர் அவ்வளவு கடுமையாக இருக்காது என்ற எண்ணத்தில் அவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். போரிலிருந்து திரும்பும்போது முனாஃபிக் அப்துல்லாஹ் இப்னு உபை இவ்வாறு கூறியதாக, ஜைத் இப்னு அர்கம் رَضِيِ الله عَنْهُ அதனை உமர் رَضِيِ الله عَنْهُ அவர்களிடம் கூறினார்.

அத்தியாயம் அல் முனாஃபிகூன் 8

يَقُولُونَ لَئِن رَّجَعْنَا إِلَى الْمَدِينَةِ لَيُخْرِجَنَّ الْأَعَزُّ مِنْهَا الْأَذَلَّ ۚ وَلِلَّـهِ الْعِزَّةُ وَلِرَسُولِهِ وَلِلْمُؤْمِنِينَ وَلَـٰكِنَّ الْمُنَافِقِينَ لَا يَعْلَمُونَ ﴿٨﴾

“நாங்கள் அல்மதீனாவுக்குத் திரும்புவோமானால், கண்ணியமானவர்கள் தாழ்ந்தவர்களை அதிலிருந்து நிச்சயமாக வெளியேற்றிவிடுவார்கள்” என்று அவர்கள் கூறுகின்றனர்; ஆனால் கண்ணியம் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், முஃமின்களுக்குமே உரியது; எனினும், இந்நயவஞ்சகர்கள் (அதை) அறிந்து கொள்ளமாட்டார்கள்.

உமர் رَضِيِ الله عَنْهُ அவர்கள் அதனை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கூறினார்கள். அதனைக் குறித்து அப்துல்லாஹ் இப்னு உபையிடம் கேட்க, அவர் மறுத்து பொய்ச் சத்தியம் செய்தான். ஜைத் இப்னு அர்கம் رَضِيِ الله عَنْهُ தவறாக உணர்ந்திருப்பார் என அவர்கள் நினைத்தார்கள். அதனால் ஜைத் இப்னு அர்கம் வருந்திய رَضِيِ الله عَنْهُ அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இந்த வசனங்களை இறக்கினான்,

அத்தியாயம் அல் முனாஃபிகூன் 8

إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ قَالُوا نَشْهَدُ إِنَّكَ لَرَسُولُ اللَّـهِ ۗ وَاللَّـهُ يَعْلَمُ إِنَّكَ لَرَسُولُهُ وَاللَّـهُ يَشْهَدُ إِنَّ الْمُنَافِقِينَ لَكَاذِبُونَ ﴿١﴾

“(நபியே!) முனாஃபிக்குகள் (நயவஞ்சகர்கள்) உம்மிடம் வந்து, “நிச்சயமாக, நீர் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றீர்” என்று நாங்கள் சாட்சி சொல்கிறோம்” என்று கூறுகின்றனர். மேலும், அல்லாஹ், “நிச்சயமாக நீர் அவனுடைய தூதராக இருக்கின்றீர்” என்பதை நன்கு அறிவான். ஆனால், அல்லாஹ், நிச்சயமாக முனாஃபிக்குகள் (வஞ்சகமாகப்) பொய்யுரைப்பவர்கள்” என்பதாகச் சாட்சி சொல்கிறான்.

வருத்தத்துடன் ஜைத் இப்னு அர்கம் رَضِيِ الله عَنْهُ வீட்டிலேயே அடைந்து கிடந்த ஜைத் இப்னு அர்கம் அவர்களை இந்த வசனம் இறக்கப்பட்டதும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அழைத்து வந்து அவரை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உண்மைப்படுத்திவிட்டான் என்றார்கள்.

மற்றுமொரு முக்கியமான நிகழ்வு அன்னை ஆயிஷா رَضِيِ الله عَنْهَا அவர்களின் மீது அவதூறு கூறப்பட்டதாகும். போரை முடித்து திரும்பும் வழியில் ஓரிடத்தில் அனைவரும் தங்கினார்கள். தங்களின் இயற்கைத் தேவை காரணமாக வெளியில் சென்ற அன்னை ஆயிஷா رَضِيِ الله عَنْهَا

அவர்கள் திரும்பி வந்தபோது, தங்களின் கழுத்தணி காணாமல் போனதை உணர்ந்தார்கள். அதனைத் திரும்ப எடுத்து வரச் சென்ற அவர்கள், திரும்பி வரும் போது கூட்டத்தினர் அனைவரும் சென்று விட்டார்கள். அவர்களின் எடை மிகவும் குறைவாக இருந்ததால், அவர்கள் உள்ளே இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டு அனைவரும் புறப்பட்டு விட்டனர். வேறு வழியில்லாமல் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அங்கேயே அமர்ந்து விட்டார்கள். அக்கால வழக்கப்படி, படை ஓரிடத்தை விட்டு புறப்பட்டு செல்லும்போது, ஒரு நபர் நியமிக்கப்படுவார். அவர் கூட்டத்தினர் எதனையும் விட்டு விட்டார்களா என தேடிவிட்டுப் பின்னர் படையுடன் இணைந்து கொள்வார். ஸஃவான் இப்னு முஅத்தல் رَضِيَ اللهُ عَنْهُ என்பவர் அதற்குப் பொறுப்பாக அன்று நியமிக்கப் பட்டிருந்தார். அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களை அங்கே கண்ட அந்த ஸஹாபி அதிர்ச்சி அடைந்தவராக 'இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்' என்றார். அவரின் சப்தத்தைக் கேட்டதும் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا தங்கள் முகத்தை மறைத்து கொண்டார்கள். பிறகு அவர் கீழே இறங்கி, அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களை ஒட்டகத்தில் என்றி அதனை நடத்திச் சென்றார்.

இந்த நிகழ்வை ஒரு வாய்ப்பாக அப்துல்லாஹ் இப்னு உபை அவதூறு பரப்ப ஆரம்பித்தரர். மற்ற முனாஃபிக்களும் அந்த இருவர் குறித்து அவதூறு பேச, அவர்களின் எண்ணத்தை அறியாத ஹன்னாஹ் பின்த் ஜஹஷ் رَضِيَ اللهُ عَنْهَا, ஹஸ்ஸான் இப்னு தாபித் رَضِيَ اللهُ عَنْهُ, மிப்தாஹ் இப்னு அஸாஸா رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் அவர்களின் வலையில் வீழ்ந்தார்கள். முனாஃபிக்களின் அந்த செய்தியை நம்பி விட்டார்கள். எனினும் அதனைக் கேட்ட அபு ஐயூப் அல் அன்ஸாரி رَضِيَ اللهُ عَنْهُ அதனை மிகப்பெரிய அவதூறு எனக் கூறிவிட்டார்கள். மதினா முழுவதும் இந்த அவதூறு வேகமாகப் பரவியது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மிகவும் வேதனை அடைந்தார்கள். ஸஹாபாக்களிடம் அவர்கள் ஆலோசனை செய்த போது, அது வாய்ப்பில்லை என்றார்கள். அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் பணிப்பெண்ணிடமும் அவர்கள் விசாரித்தார்கள். அவரும் அதனை மறுத்தார்கள். அவர்கள் சிறுமியாகத்தான் இருக்கிறார்கள். வீட்டிலும் ரொட்டிக்காக மாவு பிசைந்து கொண்டிருக்கும்போதே தூங்கி விடுவார். வெளியிலிருந்து ஆடு அந்த மாவைத் தின்று விடும். அந்த அளவிக்குத்தான் அவர்கள் இருந்தார்கள் எனவும் அப்பணிப்பெண் கூறினார். உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் அதனை மறுத்தார்கள். மிகவும் கவலையில் ஆனார்கள். இதற்கிடையில் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا காய்ச்சலினால் நோய்வாய்ப் பட்டார்கள். தாங்கள் தந்தை வீட்டிற்குச் செல்ல அனுமதி கேட்டார்கள். அவர்களும் அனுமதி அளித்தார்கள். அங்கு சென்ற சில நாட்கள் கழித்து தங்களைக் குறித்து மதினாவில் அவதூறு பரவியுள்ள செய்தியை அவர்கள் அறிந்தார்கள்.

Seerah 22 - Verses about Aayisha (RA) and Handak War

ஸீராஹ் வகுப்பு 22 - ஆயிஷா (ரலி) அவர்களை பற்றிய வசனங்கள் மற்றும் ஹந்தக் போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا காய்ச்சலினால் நோய்வாய்ப் பட்டார்கள். தாங்கள் தந்தை வீட்டிற்குச் செல்ல அனுமதி கேட்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் அனுமதி அளித்தார்கள். அங்கு சென்ற சில நாட்கள் கழித்து தங்களைக் குறித்து மதினாவில் அவதூறு பரவியுள்ள செய்தியை அவர்கள் அறிந்தார்கள். அப்போது அவர்கள் பட்ட துன்பம் சொற்களால் கூற முடியாது. அழுது அழுது கண்களில் நீர் வற்றிவிட்டது. ஏற்கனவே காய்ச்சலால் அவதிப்பட்ட அவர்கள் இந்த செய்தியைக் கேட்டபிறகு மிகவும் மோசமாக ஆகிவிட்டது. சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு அல்லாஹ் அவர்களுக்கு வஹி அனுப்பினான். அவதூறு பற்றியும், அதற்கான தண்டனை மற்றும் அவர்களும் தூய்மை பற்றியும், விசுவாசிகள் அந்த அவதூறு குறித்து ஏன் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை எனவும் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

அத்தியாயம் நூர்: 4,5,11,12,15,16,17

وَالَّذِينَ يَرْمُونَ الْمُحْصَنَاتِ ثُمَّ لَمْ يَأْتُوا بِأَرْبَعَةِ شُهَدَاءَ فَاجْلِدُوهُمْ ثَمَانِينَ جَلْدَةً وَلَا تَقْبَلُوا لَهُمْ شَهَادَةً أَبَدًا ۚ وَأُولَـٰئِكَ هُمُ الْفَاسِقُونَ ﴿٤﴾إِلَّا الَّذِينَ تَابُوا مِن بَعْدِ ذَٰلِكَ وَأَصْلَحُوا فَإِنَّ اللَّـهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿٥﴾

எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள்; பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அவர்கள்தான் தீயவர்கள். எனினும் (இவர்களில்) எவர் இதற்குப் பின்னர் தவ்பா செய்து கொண்டு (தங்களைத்) திருத்திக் கொள்கிறார்களோ - நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், கிருபை செய்பவனாகவும் இருக்கின்றான்.

إِنَّ الَّذِينَ جَاءُوا بِالْإِفْكِ عُصْبَةٌ مِّنكُمْ ۚ لَا تَحْسَبُوهُ شَرًّا لَّكُم ۖ بَلْ هُوَ خَيْرٌ لَّكُمْ ۚ لِكُلِّ امْرِئٍ مِّنْهُم مَّا اكْتَسَبَ مِنَ الْإِثْمِ ۚ وَالَّذِي تَوَلَّىٰ كِبْرَهُ مِنْهُمْ لَهُ عَذَابٌ عَظِيمٌ ﴿١١﴾لَّوْلَا إِذْ سَمِعْتُمُوهُ ظَنَّ الْمُؤْمِنُونَ وَالْمُؤْمِنَاتُ بِأَنفُسِهِمْ خَيْرًا وَقَالُوا هَـٰذَا إِفْكٌ مُّبِينٌ ﴿١٢﴾

எவர்கள் பழி சுமத்தினார்களோ, நிச்சயமாக அவர்களும் உங்களில் ஒரு கூட்டத்தினரே! ஆனால் அது உங்களுக்குத் தீங்கு என்று நீங்கள் எண்ண வேண்டாம். அது உங்களுக்கு நன்மையாகும். (பழி சுமத்தியவர்கள்) ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் சம்பாதித்த பாவம் (அதற்கொப்ப தண்டனை) இருக்கிறது; மேலும், அ(ப்பழி சுமத்திய)வர்களில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவனுக்குக் கடினமான வேதனையுண்டு. முஃமினான ஆண்களும், முஃமினான பெண்களுமாகிய நீங்கள் - இதனைக் கேள்வியுற்றபோது, தங்களைப் (போன்ற முஃமினானவர்களைப்) பற்றி நல்லெண்ணங் கொண்டு, “இது பகிரங்கமான வீண் பழியேயாகும்” என்று கூறியிருக்க வேண்டாமா?

إِذْ تَلَقَّوْنَهُ بِأَلْسِنَتِكُمْ وَتَقُولُونَ بِأَفْوَاهِكُم مَّا لَيْسَ لَكُم بِهِ عِلْمٌ وَتَحْسَبُونَهُ هَيِّنًا وَهُوَ عِندَ اللَّـهِ عَظِيمٌ ﴿١٥﴾ وَلَوْلَا إِذْ سَمِعْتُمُوهُ قُلْتُم مَّا يَكُونُ لَنَا أَن نَّتَكَلَّمَ بِهَـٰذَا سُبْحَانَكَ هَـٰذَا بُهْتَانٌ عَظِيمٌ ﴿١٦﴾ يَعِظُكُمُ اللَّـهُ أَن تَعُودُوا لِمِثْلِهِ أَبَدًا إِن كُنتُم مُّؤْمِنِينَ ﴿١٧﴾

இப்பழியை (ஒருவரிடமிருந்து ஒருவராக) உங்கள் நாவுகளால் எடுத்து(ச் சொல்லி)க் கொண்டு, உங்களுக்குத் (திட்டமாக) அறிவில்லாத ஒன்றைப் பற்றி உங்கள் வாய்களால் கூறித் திரிகின்றீர்கள்; இன்னும் இதை நீங்கள் இலேசானதாகவும் எண்ணி விட்டீர்கள். ஆனால் அது

அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிய (பாவமான)தாக இருக்கும். இன்னும் இதை நீங்கள் செவியேற்ற போது, “இதைப் பற்றி நாம் பேசுவது நமக்கு(த் தகுதி) இல்லை; (நாயனே!) நீயே தூயவன்; இது பெரும் பழியாகும்” என்று நீங்கள் கூறியிருக்கலாகாதா? நீங்கள் (திடமாக) முஃமின்களாகயிருப்பின் நீங்கள் இது போன்ற (பழி சுமத்துவ)தின் பால் மீளலாகாது என்று அல்லாஹ் உங்களுக்கு போதிக்கிறான்.

தங்களைக் குறித்து மதினாவில் இவ்வாறு அவதூறு பரவிய நிலையில், உண்மையானவற்றி தங்கள் கனவில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் காண மாட்டார்களா என அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَاஅவர்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வரும் கனவும் ஒரு இறைச் செய்திதான். ஆனால் என்னைக் குறித்து நேரடியாகக் குர்ஆனில் வந்தது குறித்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கொடுத்த கண்ணியம் அது. இந்த காலத்திலும் ஷிஆக்கள் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் குறித்து அவதூறு கூறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களின் பரிசுத்தம் பற்றி கியாம நாள்வரை அழியாமல் குர்ஆனின் வசனங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இதற்குப் பிறகும் அவதூறு கூறுவது குர்ஆனை மறுப்பதற்கு ஒப்பாகும் என்பதால் அவர்கள் காஃபிர்கள் தாம்.

இந்த குழப்பத்தில் மூன்று ஸஹாபாக்கள் சூழ்ச்சியில் வீழ்ந்தார்கள். ஹன்னாஹ் பின்த் ஜஹஷ் رَضِيَ اللهُ عَنْهَا, ஹஸ்ஸான் இப்னு தாபித் رَضِيَ اللهُ عَنْهُ, மிப்தாஹ் இப்னு அஸாஸா رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் அவர்களின் வலையில் வீழ்ந்தார்கள். இந்த மூன்று பேர்களுக்கும் கசையடி கொடுக்கப்பட்டது. இந்த தண்டனை அவர்களுக்குப் பரிகாரமாக ஆகிவிட்டது. மறுமையில் அவர்கள் இதற்காக மீண்டும் தண்டிக்கப்பட மாட்டர்கள். அதனால்தான் அவதூறு பரப்பிய முனாஃபிக்களுக்கு இங்கு தண்டனை அளிக்கப்படவில்லை. அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُவின் சகோதரியின் மகனான மிப்தாஹ் இப்னு அஸாஸா رَضِيَ اللهُ عَنْهُக்கு ஏழை என்பதால் ஒவ்வொரு மாதமும் அவருக்கு உதவித்தொகை கொடுத்து வந்தார்கள். இந்த அவதூறு காரணமாக அவருக்கு தாங்கள் இனி உதவித்தொகை வழங்கப் போவதில்லை என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது சத்தியம் இட்டுக் கூறிவிட்டார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இதனைக் குறித்தும் ஒரு வசனத்தை இறக்கினான்.

அத்தியாயம் நூர் 22

وَلَا يَأْتَلِ أُولُو الْفَضْلِ مِنكُمْ وَالسَّعَةِ أَن يُؤْتُوا أُولِي الْقُرْبَىٰ وَالْمَسَاكِينَ وَالْمُهَاجِرِينَ فِي سَبِيلِ اللَّـهِ ۖ وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا ۗ أَلَا تُحِبُّونَ أَن يَغْفِرَ اللَّـهُ لَكُمْ ۗ وَاللَّـهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٢٢﴾

இன்னும், உங்களில் (இறைவனின்) கொடை அருளப் பெற்றவர்களும், தக்க வசதி உடையவர்களும், உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும், (தம்மிடங்களை விட்டு) அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எதுவும்) கொடுக்க முடியாது என்று சத்தியம் செய்ய வேண்டாம்; (அவர்கள் தவறு செய்திருப்பின்) அதை மன்னித்து (அதைப்) பொருட்படுத்தாமல் இருக்கவும்; அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் (பிழை பொறுப்பவன்) மிக மன்னிப்பவன்; அன்பு மிக்கவன்.

இந்த வசனத்தைக் கேட்டதும், சத்தியத்தை முறிப்பதற்கான பரிகாரத்தை அவர்கள் செய்து விட்டு, மிப்தாஹ் இப்னு அஸாஸா رَضِيَ اللهُ عَنْهُக்கு உதவித்தொகையை மீண்டும் கொடுத்து வந்தார்கள். அல்லாஹ் வின் மன்னிப்பு தங்களுக்கு வேண்டும் என்ற நிய்யத்தில் அவர்கள் அவரின் பிழையைப் பொறுத்து விட்டு அவாறு செய்தார்கள்.

அடுத்து நடந்த ஒரு போரானது ஹன்தக் போர் ஆகும். இது ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஷாவ்வால் மாதம் நடைபெற்றது. ஹன்தக் என்றல் பெரிய அகழ் (பள்ளம்) ஆகும். மதீனாவைச் சுற்றி யூதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் மூன்று கிளையினர் பிரபலமானவர்கள். பனு நளிர், பனு குளைய்பா மற்றும் பனு தைனுகா ஆகியன அவை. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் பனு தைனுகா கூட்டத்தினருடன் ஒப்பத்தம் செய்துள்ளார்கள். அன்ஸாரி பெண்

ஒருவர் பால் விற்பதற்காக அந்த பகுதிக்குச் சென்றார். அந்தப் பெண்ணிடம் கேலியாக தம் முகத்தைக் காட்டுபடி கூறினார்கள். அந்த பெண்மணி அவ்வாறு செய்யாமல் இருக்க, யூதர் ஒருவர் அவரின் துணியை இழுத்து நிர்வாணமாக ஆக்கிவிட்டார். அனைவரும் அதனைப் பார்த்து சிரித்தார்கள். அதனைக் கண்ட ஒரு ஸஹாபி, அந்த யூதனைக் கொண்டற்று விட்டார். அங்கிருந்த மற்ற யூதர்கள் அந்த முஸ்லிமைக் கொன்று விட்டார்கள்.

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட . ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அந்த யூதர்களை ஒரு படையுடன் சென்று முற்றுக்கை இட்டார்கள். பல நாட்கள் முற்றுக்கை நீடித்தது. வேறு வழியில்லாமல் அவர்கள் சரணடைய, அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டார்கள்.

அது போல பனு நளிர் கோத்திரத்தினரும் உஹதுப் போருக்குப் பின்னர் நாடு கடத்தப்பட்டார்கள். காரணம், அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து, கொல்ல முயன்றார்கள். அவர்களை கீழே உட்கார வைத்து, மேலிருந்து ஒரு அம்மிக் கல்லைப் போட்டு கொள்ள நினைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு அது குறித்து வஹி வரவே, அவர்கள் அந்த இடத்தை விட்டு உடனே புறப்பட்டு விட்டாரகள். அவர்களையும் முற்றுக்கை இடப்பட்ட போது, பல நாட்களுக்குப் பிறகு அவர்களும் சரணடைய, அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டார்கள். போவதற்கு முன் அவர்கள் தங்கள் வீடுகளின் வாசல் மற்றும் சன்னல் கதவுகளை முஸ்லிம்கள் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக உடைத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் மதீனாவை விட்டு வெளியேறி கைபர் என்னும் இடத்தில் தங்கினார்கள்.

ஹிஜ்ரி ஐந்தாம் வருடம் முஸ்லிம்களின் ஆட்சி காரணமாக தாங்கள் சிரியா நாட்டிற்கு எவ்வித பயம் இல்லாமால் செல்ல முடியாது என்று நினைத்த குறைஷிகள், அதற்காக ஏதேனும் செய்து முஸ்லிம்களை இல்லாமல் ஆக்க வேண்டும் என நினைத்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட கைபரில் குடியேறிய யூதர்கள், தங்களும் அவர்களுக்கு உதவுவதாகக் கூறினார்கள். அத்துடன் ரத்ஃபான், பனூ அஸத் போன்று பல கூட்டத்தினர் தாங்களும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு எதிரான போரில் உதவுவதாகக் கூறினார்கள்.

இவ்வாறு பலர் ஓன்று சேர்ந்து மதீனாவை நோக்கி படை எடுத்து வந்தார்கள். இவ்வாறு பழக கூட்டங்கள் வந்தததால் இந்தப் போருக்கு அஹ்ஸாப் (கூட்டங்கள்) போர் என்ற பெயரும் உண்டு. சில அறிஞர்களின் கருத்துப்படி 10000 பேர்கள் வந்தார்கள். மற்றும் சிலரின் கருத்துப்படி 25000 நபர்கள் ஆவார்கள். பானு நளிரைச் சேர்ந்த ஸுஅய்ப் இப்னு அஹ்தப் என்ற யூதர் மதினாவில் இருந்த ஒரே யூத கோத்திரமான பனு குளைய்பாவினரிடம் வந்து தாங்கள் அனைத்து யூதர்களும் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிய வந்து கொண்டிருக்கிறோம் எனவும், அவர்களும் மதீனாவுக்குள் இருந்து கொண்டே முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். பழைய யூதக் கோத்திரத்தார் வெளியேற்றப் பட்டதை கண்கூடாக பார்த்த அவர்கள் அதற்குத் தயங்கினார்கள். அனால் அவர் வெற்றி தங்களுக்குத்தான் என சொல்லச் சொல்ல அவர்களும் உடன்பட்டார்கள்.

எதிரிகளின் பெரிய படையை எதிர்கொள்ள ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மற்ற தோழர்களுடன் ஆலோசலை செய்தார்கள். மதினா மூன்று பக்கங்களிலும் கோட்டைகள் சூழ, ஒரு பக்கம் மட்டும் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் இருப்பதால், அங்கு ஒரு பெரிய அகழியைத் தோண்டலாம் என ஸல்மான் ஃபார்ஸி رَضِيَ اللهُ عَنْهُ என்ற தோழர் கூறினார். அந்தக் கூட்டத்தினர் அதனைத் தாண்டி வரமுடியாமல் செய்ய வேண்டும்.ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு இந்த யோசனை சரியாகப் படவே, சுமார் பத்து முழம் ஆழமும், ஒன்பது முழம் அகலமும், பதினைந்தாயிரம் முழம் நீளத்திற்கு ஒரு பள்ளம் தோண்டப்பட்டது. அந்நேரம் ஒரு கடுமையான பஞ்சமும், குளிரும் இருந்த நேரமாகும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் முஹாஜிர்களும், அன்ஸாரிகளும் சேர்ந்து சுமார் இருபது நாட்களில் பள்ளம் தோண்டி முடித்தார்கள். இடையில் மூன்று நாட்கள் உணவு ஏதும் இல்லாமல் பணி செய்தார்கள். பசியின் கொடுமையால் அவர்கள் தங்களின் வயிற்றில் கல்லை கட்டிக்

கொண்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் தங்கள் வயிற்றில் இரு கற்களைக் கட்டியிருந்தார்கள். இந்தப் போரில் நடத்த அதிசியங்கள் குறித்து இன் ஷா அல்லாஹ் தொடர்ந்து காணலாம்.

Seerah 23 - The Battle of Handak and the End of the Banu Quraidha

ஸீராஹ் வகுப்பு 23 - ஹந்தக் போர் மற்றும் பனூ குரைதாவினரின் முடிவு

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

பசியின் கொடுமையால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் துன்பப்பட்டதை அறிந்த ஜாபிர் رَضِيَ اللهُ عَنْهُ, அவர்களுக்கு ஒரு விருந்து வைக்கலாம் என்ற முடிவில், தங்களின் ஆடு ஒன்றை அறுத்து உணவு சமைக்குமாறு தம் மனைவியை வேண்டினார். பின்னர் அவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை மெதுவாக அழைத்து விருந்து உண்ண வருமாறு வேண்டினார். தங்களுடன் ஒரு பத்து நபர்கள் வந்தால் நல்லது என்றும் கூறினார். ஆனால் அங்கு அகழி தோண்டுவதற்குக் கூடியிருந்த சுமார் ஆயிரம் நபர்களையும் ஜாபிர் رَضِيَ اللهُ عَنْهُ விருந்து அளிக்கப் போகிறார் என அவர்களை அழைத்தார்கள். ஜாபிர் நிலைமை குறித்து திகைத்தார். எனினும் உணவினைப் பரிமாரறுமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூற வந்திருந்த தோழர்கள் அனைவரும் வயிறார சாபிட்டனர். ஜாபிர் رَضِيَ اللهُ عَنْهُ யின் உறவினர்களும் சாப்பிட்டனர். வீட்டில் உள்ளவர்களும் சாப்பிட்டனர். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு அவர்கள் தங்களின் வாழ்நாளில் சுமார் மூவாயிரம் அத்தாட்சிகளைக் காட்டியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள்.

அகழ் தோண்டும்போது இடையிடையே பெரிய பாறாங்கற்கள் வரும். அவற்றில் ஒன்றை உடைக்க முடியவில்லை. ஸஹாபாக்கள் அதனை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் முறையிடவே, அவர்கள் அதனை ஆயுதத்தால் ஓங்கி அடித்தார்கள். ஒரு வெளிச்சத்துடன் அது உடைந்தது. சிரியாவின் சாவி தமக்குக் கொடுக்கப்பட்டதாக அவர்கள் கூறினார்கள். அதாவது சிரியா முஸ்லிம்களின் வசமாகும் என்று பொருளாகும். மறுபடியும் அந்த பாறாங்கல்லை அவர்கள் ஓங்கி அடித்தார்கள். பாரசீகத்தின் சாவி தமக்குக் கொடுக்கப்படும் என்று அவர்கள் கூறினார்கள். அன்றைய பேரரசுகளில் ஓன்று பாரசீகம் (ஈரான்) ஆகும். அதனையும் நாம் கைப்பற்றுவோம் என்ற முன்னறிவிப்பு அது ஆகும். மூன்றாவதாக அடித்தபோது யமன் நாட்டு சாவியும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இவ்வாறு முன்னறிவிப்புகள் செய்ததும் அவர்களின் அற்புதங்களின் உள்ளவையாகும். அவர்களின் தூதுத்துவத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகள் அவை.

மதீனாவை நெருங்கிய காஃபிர்கள் அங்கு தாங்கள் பார்த்திராத ஒன்றைக் கண்டு ஆச்சரியம் கலந்த பயத்தைக் கொண்டார்கள். அகழ் என்பது அரபுலகுக்குப் புதிதான ஒன்று. படையினர் இருவரும் அந்த அகழின் காரணமாக நேரடியாகப் போர் புரிய இயலாது. எனவே ஒரே ஒரு வழி அம்பெய்தி தாக்குவதுதான். இதில் மூன்று எதிரிகள் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களில் ஏழெட்டு நபர்கள் ஷஹீதானார்கள். அதில் ஒருவரான ஸஅத் இப்னு முஆத் رَضِيَ اللهُ عَنْهُ கடுமையான காயங்கள் பெற்று அதன் காரணமாக இறுதியில் இறந்தார்கள். பெரிய போராக இருந்தாலும் குறைந்த அளவு இழப்பு தான் ஏற்பட்டது. எதிரிகள். சுமார் இருபது நாட்கள் தங்கி இருந்தார்கள். மதினாவில் இருந்த ஒரே யூத கோத்திரமான பனு குரைதாவினர் தாங்களும் குறைஷிகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று முன்பு வாக்களித்திருந்தார்கள். அவர்களினாலும், குறைஷிகளினாலும் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் இருந்த முஸ்லிம்கள், பெண்கள், குழந்தைகளையும் மற்றும் முதியோர்களையும் ஒரு கோட்டையில் தங்க வைத்தார்கள். மேலும் பனு குரைதாவினர் என்ன திட்டத்தில் இருக்கிறார்கள் என்பதை உளவு பார்த்து அறிய யார் முன்வருவார்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என வினவினார்கள். அப்போது ஜுபைர் இப்னு அவ்வாம் رَضِيَ اللهُ عَنْهُ முன்வந்தார்கள். அவரது ஐந்து வயது மகன் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் رَضِيَ اللهُ عَنْهُ தாம் தமது தந்தை பல தடவைகள் பனு

குரைதாவினரிடமும், அவர்களிடமும் வந்து சென்றதைப் பார்த்திருக்கிறேன் என்று கூறியுள்ளார். தம் உயிரைப் பணையம் வைத்து அவர் உளவு பார்த்தார். ஒவ்வொரு நபிக்கும் உதவி செய்பவர் உள்ளது போல எனக்கு அவர் என அவர் குறித்து ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். அவருக்கு ஹவாரிய்யு என்றப் பட்டம் கொடுத்து கண்ணியப்படுத்தப்பட்டார். நுஐப் இப்னு மஸ்வூது என்பவர் பனு குரைதாவைச் சேர்ந்தவர். எனினும் இஸ்லாத்தில் இணைந்து விட்டார். ஆனால் இஸ்லாத்தைத் தழுவியது அவர்களுக்குத் தெரியாது. எனவே அவர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் தாம் இஸ்லாத்தை ஏற்றது அவர்களுக்குத் தெரியாது. எனவே தாம் அங்கு போய் ஏதேனும் பொய் செல்லி சரி படுத்த விரும்புவதாகவும், பொய் சொல்வது அனுமதிக்கப் பட்டதா என வினவினார். அதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் போர் என்றாலே தந்திரம் தான் என்று கூறினார்கள். அந்த சூழ்நிலையில் தந்திரமாக சூழ்ச்சி செய்வது அனுமதித்த ஒன்றுதான்.

அங்கு சென்று முஸ்லிம்கள் பலசாலிகள் எனவும் எதிரிப்படைகள் பலமிழந்து உள்ளன என்பன போன்றவற்றைக் கூறி பனு குரைதாவினறை முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதைத் தவிர்த்து விட்டார். அங்கேயே முகாமிட்டிருந்த காஃபிர்களிடமும் சென்று வர ஹுதைபா இப்னு யமான் தயாரானார். அவர் அங்கு சென்று உளவு பார்த்து வந்தார். காஃபிர்கள் அங்கு கடுங்குளிரைத் தாங்க முடியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாக செய்தி கொண்டுவந்தார். அபு ஸுஃபியானும் தம் படை வீரர்களிடம் தாங்கள் அதிக நாட்கள் தாக்குப் பிடிக்க முடியாது எனவும் எனவே மக்கா நோக்கித் திரும்பிவிடலாம் என அறிவிப்பு செய்திருந்தார். சுமார் இருபது நாட்களில் அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்க்ள. தாங்கள் நினைத்தவாறு அவர்கள் முஸ்லிம்களை வெற்றி கொள்ள முடியவில்லை.

போர் முடிந்ததும், பனு குரைதாவினரை என்ன செய்ய வேண்டும் என தங்களின் தோழர்களிடம் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஆலோசனை செய்து அவர்களை முற்றுகையிட்டார்கள். அவர்கள் தங்களின் மாடங்களில் தங்கினார்கள். பல நாட்கள் முற்றுகை தொடர்ந்தது. இறுதியில் பனு குரைதாவினரைச் சேர்ந்த சிலர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைச் சந்திக்க வந்தனர். தங்களுக்கு இடையில் ஸஅத் இப்னு முஆத் தீர்ப்பு வழங்கட்டும் என கூறினார்கள். தங்களுக்கும் அவருக்கும் இடையில் தொடர்பு இருப்பதால் தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு சொல்வார் என்ற எண்ணத்தில் அவ்வாறு கூறினார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் சம்மத்திதார்கள். ஸஅத் رَضِيَ اللهُ عَنْهُ பல காயத்துடன் இருந்ததால் அவர்களின் வீறு தூரமாக இருந்ததால், பள்ளிவாசல் அருகில் ஒரு கூடாரத்தில் இருந்து வந்தார்கள். அங்கிருந்து அவரை நபித் தோழர்கள் கூட்டி வந்தார்கள். தங்கள் தலைவருக்கு எழுந்து நின்று கண்ணியப் படுத்துங்கள் என அவர்களிடம் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். நாம் அவ்வாறு கண்ணியப்படுத்த எழுந்திருக்கலாம். ஆனால் நமக்கு கண்ணியம் மற்றவர்கள் கொடுக்க எழுந்திருக்க வேண்டும் என நாம் நினைக்கக் கூடாது.

பனு குரைதாவினர்களுக்கான தீர்ப்பு பற்றி ஸஅத் رَضِيَ اللهُ عَنْهُ திடம் கேட்கப்பட்டது. யாரெல்லாம் போர் புரியும் வயதில் இருக்கிறார்களோ அவர்கள் கொள்ளப்பட வேண்டும் எனவும், அவ்வாறில்லாத மற்றவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் அடிமைகளாக ஆக்கப்பட வேண்டும் என அவர் தீர்ப்பளித்தார். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் தீர்ப்பும் இவ்வாறுதான் இருந்தது என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அந்தத் தீர்ப்பின்படி செயலாக்கப்பட்டது.

இவ்வாறு மூன்று யூதக் கூட்டத்தினரும் மதீனாவை விட்டு வெளியேற்றப்பட்டனர். காயங்கள் காரணமாக ஷஹீதான ஸஅத் இப்னு முஆத் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் ஜனாஸாவிற்கு எழுபதினாயிரம் வானவர்கள் பங்கு கொண்டார்கள். அவ்வாறு அவர் கண்ணியப் படுத்தப்பட்டார்.

பின்னர் சுவனம் குறித்து நற்செய்தி கூறப்பட்ட பத்து நபர்களில் ஒருவரான அபு உபைதா رَضِيَ اللهُ عَنْهُ தலைமையில் முன்னூறு தோழர்கள் கொண்ட படையை அனுப்பி வைத்தார்கள். குறைஷியர்களின் வியாபாரக் கூட்டம் குறித்து செய்தி கேட்டு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அந்தக் கூட்டத்தின் வருகைக்காக கடற்கரை அருகில் பலநாட்கள் காத்திருந்ததால் அவர்களிடம் இருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்துவிட்டன. ஒட்டகங்களை அறுத்துச் சாபிட்டார்கள். பின்பு கடலிலிருந்து திமிங்கலம் போன்ற ஒரு பெரிய மீன் கிடைத்தது. அதைக் கொண்டு சுமார் பதினைந்து நாட்கள் சாப்பிட்டிருப்பார்கள். மீதியைக் கொண்டு வந்து ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கும் கொடுத்ததாகவும் செய்தி உள்ளது.

அதன்பிறகு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கும் குறைஷியகளுக்குக் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதற்குப் பிறகு குறைஷியகளுக்கு எதிராக எந்த போரும் நடத்தப்படவில்லை.

ஸீராஹ் வகுப்பு 24 - ஹுதைபிய்யா உடன்படிக்கை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஹிஜ்ரி ஆறாம் வருடம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் உம்ரா செய்வதாகக் கனவு கண்டார்கள். அவர்களின் கனவு வஹி என்பதால் உம்ரா செய்யும் நோக்கத்தை ஸஹாபாக்களிடம் கூறினார்கள். மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்து மதினா சென்ற ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஐந்து வருடம் முடிந்த பிறகு திரும்பவும் மக்காவுக்கு செல்ல நாடினார்கள். இந்த பயணத்தில் சுமார் 1400-1500 ஸஹாபாக்கள் உடன் வந்தார்கள். மக்கத்துக் காஃபிர்கள் என்ன செய்வார்கள் என்று அறியாததனால் தங்களுடன் ஒரு சில ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு சென்றார்கள். முஸ்லிம்கள் இவ்வாறு மக்கா நோக்கி வருகிறார்கள் என்று அறிந்த குறைஷிகள் காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ தலைமையில் எதிர்த்து போரிட வந்தார்கள். எனினும், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், அவர்களின் ஸஹாபாக்களும் காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُயிடம் சிக்காமல் மக்கா அருகில் வந்துவிட்டார்கள். அதனை அறிந்த காலித் இப்னு வலீதும் மக்காவுக்குத் திரும்பிவிட்டார். எனினும் முஸ்லிம்கள் மக்காவுக்குள் நுழைய விடாமல் தடுக்கும் ஏற்பாடுகளைக் குறைஷியர்கள் செய்தார்கள். அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்தில் அங்குள்ள கிணறுகளையும் கைப்பற்றிவிட்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், அவர்களின் ஸஹாபாக்களும் ஹுதைப்பியா என்னும் கிணற்றின் அருகில் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு வந்ததும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கஸ்வா ஒட்டகமானது தானாகவே அங்கு படுத்துவிட்டது. கஸ்வா அடம் பிடிக்கிறது என ஸஹாபாக்கள் சொல்ல, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அதனை மறுத்து, யானைப் படையை எந்த இறைவன் தடுத்தானோ, அந்த இறைவன்தான் இதனையும் தடுத்து விட்டது என்று கூறினார்கள். இவ்வாறு ஒட்டகம் குறித்து அவர்கள் தவறாகக் குறிப்பதை அவர்கள் மறுத்தது போல, இஸ்லாத்தைக் குறித்தோ, குர்ஆனைக் குறித்தோ அல்லது ஸஹாபாக்கள் குறித்தோ யாரும் தவறாகக் கூறினால், அதற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்பது நமக்கு ஒரு படிப்பினையாகும்.

அங்குள்ள கிணறுகளை குறைஷியர்கள் கைப்பற்றி வைத்ததன் காரணமாக, அவர்களுக்குக் குடிக்கவும் தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த நேரத்தில் தங்கள் தோல் துருத்திகளில் இருந்த தண்ணீர் மட்டுமே அவர்களிடம் இருந்தது. அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் துஆ கேட்க, அவர்களின் விரல்களிலிருந்து தண்ணீர் வெளிவந்தது. அதனைக் கொண்டு பத்திரங்களை நிரப்புமாறும், உளூ செய்து கொள்ளுமாறும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள்.

முஸ்லிம்களை மக்காவுக்குள் நுழைய விடாமல் அவர்கள் தடுத்த காரணம், பத்ருப் போரிலும், ஹன்தக் போரிலும் தோற்ற பிறகு, உஹதுப் போரிலும் வென்றுவிட்டோம் என்று சொல்லமுடியாத நிலையில், முஸ்லிம்களை உம்ரா செய்வதற்கு அனுமதி அளித்தால், தங்களைப் பற்றி அரவுலகம் கோழைகள் என்று சொல்லிவிடுவார்களே என்ற பயம்தான். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் போரிட்டு உள்ளே செல்ல விரும்பவில்லை. குறைஷியர் குலமும், அரபு மொழியும் தளைத்தோங்கி இருக்க வேண்டும் எனவும், போரினால் அதற்குத் தீங்கு வரக்கூடாது எனவே அவர்கள் விரும்பினார்கள். அவர்களும் இஸ்லாத்தில் இணைய வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாகவும் இருந்தது.

மேலும் முஸ்லிம்களை இவ்வாறு தடுத்தால், உம்ரா செய்ய வந்தவர்களைத் தடுத்தது போல ஆகிவிடுமே என்றும், முஸ்லிம்கள் கஃபாவை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை என்று தாங்கள் கூறிய வாதமும் எடுபடாது என நினைத்த அவர்கள், இவ்வாறு தடுப்பது முஸ்லிம்களுக்கு சாதகமாக அமைந்து விடுமோ என்றும் அஞ்சினார்கள்.

இதற்கிடையில் கிராஷ் இப்னு உமையாஹ் رَضِيَ اللهُ عَنْهُ என்பவரை குறைஷிகளிடம் பேச்சு வார்த்தைக்கு அனுப்பினார்கள். தாங்கள் உம்ரா செய்யவே வந்துள்ளதாககவும், அதன்பிறகு தாங்கள் உடனேயே திரும்பிச் சென்று விடுவோம் என்றும் கூறுமாறு தங்களின் தூதராக அவரை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அனுப்பினார்கள்.

இரண்டாவதாக உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை அனுப்பலாம் என நாடினார்கள். எனினும் உமர் அவர்களை குறைஷிகள் அதிகம் வெறுத்தார்கள் என்பதால் ஏதேனும் பிரச்சனை ஏற்படலாம் என நினைத்து உத்மான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்று குறைஷியர்களிடம் பேசினார்கள். அவர்களோ முஸ்லிம்கள் இந்த வருடம் உம்ரா செய்யக் கூடாது என மறுத்தார்கள். வேண்டுமென்றால் உத்மான் மட்டும் செய்து கொள்ளலாம் என அனுமதி அளித்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கும், மற்ற முஸ்லிம்களுக்கும் அனுமதி இல்லாமல் தாங்கள் மட்டும் உம்ரா செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை.

உதுமான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் வரத் தாமதமானதன், அவர்கள் குறைஷிகளால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி முஸ்லிம்களிடம் வந்தது. என்ன நடந்தது என்று உறுதியாகத் தெரியாமல், அங்கிருந்த ஒரு மரத்தின் அடியில் நின்று எல்லோரும் தாங்கள் உயிர் பிரியும்வரை இந்த அநியாயத்திற்கு எதிராகப் போர் புரிவது என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கரம் பிடித்து உறுதிமொழி (பைஅத்) எடுத்துக் கொண்டார்கள். உதுமான் رَضِيَ اللهُ عَنْهُ அங்கு இல்லாததால், அவர்களுக்குப் பதிலாக தங்களின் ஒரு கரத்தை மற்றொரு கரத்தின் மீது வைத்து அது உதுமான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் கரம் என்று சொல்லி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இதற்கு பைஅத்துல் ரிழ்வான் என்று கூறப்படும்.

ஜாபிர் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது

عَنْ جَابِرٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لاَ يَدْخُلُ النَّارَ أَحَدٌ مِمَّنْ بَايَعَ تَحْتَ الشَّجَرَةِ "

என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறியதாவது, "இந்த மரத்தின் கீழ் பைஅத் செய்தவர்கள் யாரும் நரகில் நுழைய மாட்டார்கள்."

அந்த மரத்தை மக்கள் பார்க்க பிற்காலத்தில் கூட்டம் கூடியது. அதனைக் கேள்விப்பட்ட உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் அதனை வெட்டி விட்டார்கள். தவறான சிந்தனையும், ஷிர்க்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்தார்கள். எனவே ஷிர்க் விஷயத்தில் நாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நம்மைப் பாதுகாக்க வேண்டும். ஹலால் ஹாரம் விஷயத்தில் நாம் எச்சரிக்கை இருப்பதைப் போல் இதிலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்படாமல் உத்மான் அவர்கள் திரும்பி வந்த போதுதான் அவர்கள் கொல்லப்படவில்லை என எல்லோரும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அவருடம் வந்த குறைஷியர்கள் வந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களுடன் பலவாறு பேசி இறுதியில் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என முடிவுக்கு வந்தார்கள். அதன்படி, இந்த வருடம் உமரா செய்யாமல் முஸ்லிம்கள் திரும்பிவிட வேண்டும். அடுத்த வருடம் அவர்கள் உம்ரா செய்ய வரலாம். எனினும் வரும்போது பயணத்திற்காகப் பயன்படுத்தும் வாளைத் தவிர வேறு எந்த ஆயுதத்தையும் கொண்டு வரக் கூடாது. மூன்று நாட்கள்தான் அங்கு தங்கி உம்ரா செய்ய வேண்டும். அந்த நாட்களில் குறைஷீயர்கள் தங்கள் இல்லங்களில் இருந்து கொள்வார்கள். முஸ்லிம்கள் யாருடனும் சுயமாக எந்த ஒப்பந்ததையும் செய்து கொள்ளலாம். குறைஷியர்கள் அதனை எதிர்க்க மாட்டார்கள். மக்காவிலிருந்து யாரேனும் இஸ்லாத்தை ஏற்று மதீனாவுக்கு

வந்தால், அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும். எனினும் மதீனாவிலிருந்து யாரும் மக்கா வந்தால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். பத்து வருடங்கள் தங்களுக்கு இடையில் எந்த ஒரு போரும் வேண்டாம். இவைதான் குறைஷியர்கள் சொன்ன ஒப்பந்தத்தின் வாக்கியங்களாகும். அதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சம்மதம் தெரிவித்தார்கள். எனினும் இந்த உடன்படிக்கையில் முஸ்லிம்களுக்குப் பாதகமான விஷயங்கள் இருப்பதால் ஸஹாபாக்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். அதனை ஏற்க அவர்களுக்கு மனமில்லை. எனினும் அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ அவர்களோ உறுதியான ஈமானுடன், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் செய்தால் சரியாகத்தான் இருக்கும் எனக் கூறினார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் உம்ரா செய்வதாகக் கனவு கண்டார்களே, ஏன் திரும்பிச் செல்ல வேண்டும் என்று ஸஹாபாக்கள் கேட்க, அது அடுத்த வருடமாகவும் இருக்கலாம் என அவர்கள் கூறினார்கள். இவ்வாறு அவர்கள் ஸஹாபாக்களை சமாதானப்படுத்தினார்கள்.

ஆனால் பின்னர்தான் தெரிந்தது, அதில் பல நன்மைகள் கிடைத்தன. பத்து வருடம் போரே வேண்டாம் என்ற நிபந்தனை அவர்களுக்கு பல நல்ல விளைவுகளைக் கொடுத்தது. அல்லாஹ் வும் இதனை மகத்தான வெற்றி என்று கூறினான்.

அத்தியாயம் அல் ஃபத்ஹ் 1-3

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا ﴿١﴾لِّيَغْفِرَ لَكَ اللَّـهُ مَا تَقَدَّمَ مِن ذَنبِكَ وَمَا تَأَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهُ عَلَيْكَ وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيمًا ﴿٢﴾وَيَنصُرَكَ اللَّـهُ نَصْرًا عَزِيزًا ﴿٣﴾

(நபியே!) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக உமக்கு வெற்றி அளித்துள்ளோம் உமக்காக உம்முடைய முந்திய தவறுகளையும், பிந்தியவற்றையும் அல்லாஹ் மன்னித்து, உமக்காக தனது அருட்கொடையையும் பூர்த்தி செய்து உம்மை நேரான வழியில் நடத்துவதற்காகவும். மேலும், அல்லாஹ் ஒரு வலிமை மிக்க உதவியாக உமக்கு உதவி செய்வதற்காகவும் (தெளிவான இவ்வெற்றியை அவன் அளித்தான்).

பலியிடக் கொண்டுவந்த பிராணிகளை அறுக்குமாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஸஹாபாக்களிடம் கூற, அவர்கள் வருத்தமுடன் ஏதும் செய்யாமல் இருந்தார்கள். நிலைமையை அறிந்து கொண்ட அன்னை உம்மு ஸலமா رَضِيَ اللهُ عَنْهَا ஒரு யோசனை கூறினார்கள். தாங்கள் ஸஹாபாக்களிம் செயல் குறித்து வருத்தம் அடைய வேண்டாம் எனவும், தாங்களே முதலில் பலியிட ஆரம்பிக்குமாறும் சொன்னார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் அவ்வாறு செய்யவே, அதனைக் கண்ட ஸஹாபாக்களும் தங்கள் பிராணிகளை அறுத்து இஹ்ராமிலிருந்து விடுபட்டார்கள்.

ஒரு முஸ்லிம் மதீனாவுக்கு வந்தால் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும், மதினாவிலிருந்து மக்கா வந்தவரைத் திருப்பி அனுப்பவேண்டியதில்லை என்ற நிபந்தனையும் அவர்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது. அதனால் ஏற்பட்ட நன்மைகள் பின்னர் நடந்த நிகழ்வுகள் உறுதிபடுத்தின. அது எந்த அளவுக்கு வெற்றி கிடைத்தது என்பதையும், அதனை தொடர்ந்த மக்கா வெற்றி பற்றியும் இன் ஷா அல்லாஹ் காணலாம்.

Seerah 25 - The Khyber War

ஸீராஹ் வகுப்பு 25 - கைபர் யுத்தம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு நடந்த கைபர் போரைப்பற்றி இங்கு காணலாம். அந்த உடன்படிக்கையின்படி அந்த வருடம் தங்கள் உம்ரா செய்யக் கூடாது, மதீனாவிலிருந்து மக்கா வருபவரைத் திருப்பி அனுப்ப மாட்டோம், மக்காவிலிருந்து மதீனாவுக்கு யாரும் முஸ்லிமாக மாறி வந்தால் அவர்களை ஏற்கக்கூடாது போன்ற இஸ்லாத்திற்கு எதிராகத் தோன்றிய அனைத்தையும் தாங்கள் ஏற்று விட்டோமே என உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் கடுமையாக வருத்தப்பட்டார்கள். தாங்கள் ஏன் அப்படிக் கட்டுப்பட வேண்டும் என ஆத்திரமாகக் கூறினார்கள். இவ்வாறு தாங்கள் கடுமையாக நடந்தது குறித்தும், கோபமாக பேசியது குறித்தும் வருந்திய உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள், அதற்குப் பகரமாக தங்களின் வாழ்நாட்களில் அதிகமதிகமாக தொழுகைகளையும், நோன்புகளையும் நோற்றார்கள்.

எனவே கடைசி வரை அவர்கள் இது குறித்து வருத்தப்பட்டார்கள். நாம் முன்பு கூறியது போல அந்த உடன்படிக்கையை மகத்தான, தெளிவான வெற்றி என்று அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வஹி அறிவித்தான்.

அத்தியாயம் அல் ஃபத்ஹ் 1

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا ﴿١﴾

(நபியே!) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக உமக்கு வெற்றி அளித்துள்ளோம்

ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகுதான் காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ இஸ்லாத்தை ஏற்றார். அவர் மூலமாக, அவர் தலைமையில் இராக், ஷாம் போன்ற நாடுகளில் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வெற்றியைக் கொடுத்தான். ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகுதான் அம்ரு இப்னு ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُ இஸ்லாத்தை ஏற்றார். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் உதவி கொண்டு அவர் மூலம் எகிப்து இஸ்லாம் வசமானது. இன்னும் பல நன்மைகள் வந்துள்ளன.

மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பனு நதீர் கோத்திரத்தினர் அருகில் உள்ள கைபர் என்ற ஊரில் தங்கிவிட்டார்கள். அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு எதிராக முஷ்ரிகீன்களுடன் சேர்ந்து படை எடுத்து வருவதாக ஒரு செய்தி வந்தது. ஹுதைபியாவிலிருந்து திரும்பிய ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் கைபரை நோக்கி சுமார் 1600 தோழர்களுடன் போர் புரியப் புறப்பட்டார்கள். போர் பல மாதம் நீடித்தது. யூதர்கள் கைபர் கோட்டைகளில் பதுங்கி விட்டார்கள். நபித் தோழர்களின் தலைமையில் சிறு சிறு படைகள் சென்று அவர்கள் முற்றுகையிடப் பட்டார்கள். அபு பக்ருرَضِيَ اللهُ عَنْهُ , உமர் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் தலைமையில் இவ்வாறு படைகள் அனுப்பப்பட்டனர். எனினும் வெற்றி கிடைக்கவில்லை. தாங்கள் நாளை ஒருவரிடம் இஸ்லாமியக் கொடியைக் கொடுக்கப் போவதாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அவர் தளபதியாக நியமிக்கப்படுவார். அவர் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வையும் நேசிப்பவர். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களையும் நேசிப்பவர் என்றார்கள். ஸஹாபாக்கள் அனைவரும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் யாரை நியமிப்பார்கள் என அன்றிரவு முழுவதும் யோசித்தார்கள்.

மறுநாள் அவர்கள் அலி رَضِيَ اللهُ عَنْهُ எங்கே என்று வினவினார்கள். அப்போது அவர்களுக்குக் கண்ணில் நோய் உள்ளதால் ஓய்வு எடுத்துள்ளார்கள் என்றனர். அவர்களை அழைத்து வருமாறு கூறி தங்களின் எச்சிலால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின்

கண்களைத் தடவ அது குணமாகிவிட்டது. அவர்களின் அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும். பிறகு இஸ்லாத்தின் கொடியை அவர்களின் கைகளில் கொடுத்து தளபதியாக ஆக்கினார்கள். தாங்கள் உடனே சென்று அவரிகளை ஒழித்து விடுகிறேன் என்று அவர்கள் கூற, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவ்வாறு அவசரப்பட வேண்டாம் எனவும், அவர்களை இஸ்லாத்தின்பால் அழைத்து அது குறித்து முதலில் பேச வேண்டும் என்றார்கள். இதுதான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் நிலைப்பாடு ஆகும். அந்த யூதர்கள் மதினாவில் இருந்தபோது முஸ்லிம்களுக்கு தொல்லை கொடுத்தார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களையே கொல்ல முயன்றார்கள். பிறகு ஹந்தக் போரில் குறைஷியருடன் சேர்ந்து முஸ்லிம்களை எதிர்த்தார்கள். எனினும் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் எனத்தான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் விரும்பினார்கள். ஒருவரால் இஸ்லாத்தை யாரும் ஏற்றால் அது அவருக்கு சிவப்பு ஒட்டகத்தை விடச் சிறந்தது. அதாவது இவ்வுலக நன்மையை விடச் சிறந்தது. போரில் மகத்தான வெற்றியைக் கொடுத்தான். ஏராளமான கனிமத் பொருட்கள் கிடைத்தன. அந்த நேரத்தில் தான் முத்தஆ என்ற திருமண முறை ஹராமாக்கப்பட்டது. போரின்போது தற்காலிகமாக ஒரு பெண்ணை ஒரு கால தவணையில் மணம் முடிப்பதற்கு முத்தஆ என்று பெயர். பின்னர் அது மணவிலக்ககிவிடும். மது அருந்துவது போன்ற பல தவறான வழிகள் இவ்வாறுதான் படிப்படியாக நிறுத்தப்பட்டது.

இக்காலத்தில் ஷிஆக்கள் இதனை ஒரு நல்ல காரியம் என்பது போல செய்கிறார்கள். பலர் தங்கள் பெண்மக்களை தலைவர்களிடம் இவ்வித திருமணத்திற்கு அனுப்புவார்கள்.

கோவேறுக் கழுதையின் மாமிசமும் அப்போதுதான் ஹராமாக்கப்பட்டது. சமையல் செய்து கொண்டிருந்த சில நபித்தோழர்கள் உடனே அந்த மாமிசத்தைக் கொட்டிவிட்டார்கள்.

போரில் தோற்ற யூதர்கள், தங்களை அங்கேயே இருக்க அனுமதிக்க வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக தங்கள் விளைச்சலில் பாதியைத் தருவதாகவும் கூறினார்கள். அதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சம்மதித்தார்கள்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வாழ்கையில் இதுதான் யூதர்கள் செய்த கடைசிப் போராகும். பின்னர் அரபுலகைச் சுற்றி இருந்த பல ஆட்சியாளர்களுக்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இஸ்லாத்தின்பால் அழைத்து கடிதம் அனுப்பினார்கள். குறைஷியர்களிடம் ஹுதைபியாவில் செய்த ஒப்பந்தப்படிபத்து வருடங்கள் எந்த போரும் இல்லாததனால், அழைப்புப் பணியில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கவனம் செலுத்தினார்கள். கடிதம் எழுதும்போது அதில் முத்திரை இருந்தால்தான் அரசர்கள் அதனை மதிப்பார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் ஒரு வெள்ளி மோதிரத்தில் முத்திரை செய்தார்கள். அதில் محمد رسول الله என்று எழுதப்பட்ட மோதிரத்தை பயன்படுத்தினார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர் மேலும் அவர்களின் பெயர் கீழும் இருக்கும் விதத்தில் அது இருந்தது. பல நாட்டு அரசர்களுக்கு தூதுவர்கள் அனுப்பப்பட்டார்கள். அப்படி அனுப்பப்பட்ட தூதர் ஹாரிஸ் இப்னு உமைரை رَضِيَ اللهُ عَنْهُ முஃதா என்ற ஊரில் கொன்றுவிட்டார். சர்வதேச நிலையில் ஒரு தூதுவரைக் கொள்வது ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயம் அல்ல. எனவே இச்செய்தி கிடைத்ததும், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு அதற்குப் பழிவாங்க முஃ தாவை நோக்கி ஒரு படையை அனுப்பினார்கள். அதுதான் முஃ தா யுத்தமாக்கும். அது பற்றி இன் ஷா அல்லாஹ் காணலாம்.

Seerah 26 - The Battle of Mu'tah

ஸீராஹ் வகுப்பு 26 - முஃதா (مُؤْتَة) யுத்தம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு மதினா திரும்பிய பின்னர் கைபரை நோக்கிய ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ யூதர்களுக்கு எதிராக போருக்குச் சென்றார்கள். அதில் அவர்களுக்கு மகத்தான வெற்றியைக் கொடுத்தான். அந்த நேரத்தில்தான் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்ற முஸ்லிம்களில் பலர் மதினாவுக்குச் சென்றார்கள். இதில் அலி رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் சகோதரர் ஜாஃபர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களும் ஒருவர். சுமார் பதினேழு வருடம் கழித்துத் தங்கள் சகோதரரைப் பார்த்தார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தாங்கள் கைபர் போரின் வெற்றி குறித்து சந்தோசப்படுவதா அல்லது ஜாஃபர் رَضِيَ اللهُ عَنْهُ வருகையைக் குறித்து சந்தோசப்படுவதா எனத் தெரியவில்லை என்றார்கள்.

பின்னர் அவர்கள் பல நாட்டு அரசர்களுக்கு இஸ்லாத்தில் பால் அழைக்கும் கடிதத்தை அனுப்பனானார்கள். எகிப்து நாட்டு அரசர் முகவ்த்திஸ் என்பவருக்கு ஹாதிப் இப்னு அபு பல்தவவ் رَضِيَ اللهُ عَنْهُ என்ற ஸஹாபியை அனுப்பி வைத்தார்கள். அது போல் ஈரான் நட்டு மன்னர் கிஸ்ராவுக்குவும், ரூம் நாட்டு கிரகல் திஹ்யத்து கல்பி رَضِيَ اللهُ عَنْهُ என்ற ஸஹாபியையும் அனுப்பி வைத்தார்கள். (ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்கள் திஹ்யத்து கல்பி رَضِيَ اللهُ عَنْهُ தோற்றத்தில் அடிக்கடி வந்துள்ளார்கள்.) பஹ்ரைன் நாட்டு அரசர் முன்ஜின் என்பவருக்கு அப்துல்லாஹ் இப்னு ஹுதாஃபா رَضِيَ اللهُ عَنْهُ வை அனுப்பினாரகுள். ஷாம் நட்டு அரசர் புஷ்ராவிடம் ஹாரிஸ் இப்னு உமைரை رَضِيَ اللهُ عَنْهُ அனுப்பினார்கள். இவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் தூதர் ஹாரிஸ் இப்னு உமைரை رَضِيَ اللهُ عَنْهُ முஃதா என்ற ஊரில் கொன்றுவிட்டார். இச்செய்தி கிடைத்ததும், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மூவாயிரம் தோழர்களை போருக்கு அனுப்பினார்கள். அப்படைக்கு தங்களின் முன்னால் வளர்ப்பு மகன் ஸைத் இப்னு ஹாரிதா رَضِيَ اللهُ عَنْهُ வை தலைமைப் பொறுப்பில் நியமித்தார்கள். அவர்கள் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தைத் தழுவியவர். தாயிப்புக்கு செல்லும்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுடன் சென்று காயம் பெற்றவர். அவரைத் தளபதியாக நியமித்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ, போரில் அவருக்கு ஏதேனும் ஏற்பட்டால், ஜா ஃபர் இப்னு அபு தாலிப் رَضِيَ اللهُ عَنْهُ தளபதி பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறினார்கள். அவரும் போரில் இறந்துவிட்டால் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா رَضِيَ اللهُ عَنْهُ தளபதி பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களின் கூற்று ஸஹாபா பெருமக்களுக்கு ஒரு முன்னறிவிப்பாகத் தெரிந்தது. முஃதா ஊரை நோக்கி மூவாயிரம் படையினருடன் முஸ்லிம் சேனை புறப்பட்டுச் சென்றது. அவர்களை எதிர்ப்பதற்காக அந்த நாட்டு அரசர் ஒரு லட்சம் வீரார்களுடன் தயாராக இருந்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக ஹிரக்கள் அரசரும் மற்றுமொரு லட்சம் வீரார்களை அனுப்பினார். மொத்தம் இரண்டு லட்சம் எதிரிகளை முஸ்லிம்கள் சந்திக்க வேண்டியதிருந்தது.

எனவே முஸ்லிம் படையினர்கள் தங்களுக்கு இடையில் ஆலோசனை செய்தார்கள். தங்களை விட பன்மடங்கு எதிரிகளைச் சந்திக்க வேண்டிய நிலையில், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் போரிட அல்லது திருப்பி வருவது குறித்து ஆலோசணை கேட்கலாமா என நினைத்தனர். அது குறித்து மௌனமாக இருந்த அப்துல்லாஹ் இப்னு ரவாஹா رَضِيَ اللهُ عَنْهُ விடம், ஸைத் இப்னு ஹாரிதா رَضِيَ اللهُ عَنْهُ ஆலோசனை கேட்க, முஸ்லிம்கள் ஆயுதங்கள் அல்லது எண்ணிக்கை வைத்து போரிடவில்லை என்று கூறினார். மேலும் போரில் தாங்கள் வெற்றி பெறுவோம் அல்லது வெறி மரணம் பெற்று ஷாஹீதாகி விடுவோம் என்பதால் இரண்டுமே தங்களுக்கு வெற்றிதான் என்பதால் போர் புரியத் தயக்கம் வேண்டாம் என்றார். எனவே அனைவரும் போருக்குத் தயாரானார்கள்.

போர் மிகக் கடுமையாக நடந்தது. போரில் ஸைத் இப்னு ஹாரிதா رَضِيَ اللهُ عَنْهُ முதலில் ஷஹீதானார்கள். உடனே ஜா ஃபர் இப்னு அபு தாலிப் رَضِيَ اللهُ عَنْهُ முஸ்லிம் கொடியைப் பற்றிப் பிடித்து தலைமை ஏற்றார். அவரது வலது கரம் வெட்டப்பட்டது. தங்களின் இடது கரத்தால் கொடியைத் தாங்கியவராகப் போர் புரிந்தார். இடது கையும் வெட்டப்பட்டது. அவர் தம் இரு தோள்புஜத்தில் தாங்கிப் பிடித்தார்கள். இறுதில் ஷஹீதானார்கள். பின்னர் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா رَضِيَ اللهُ عَنْهُ கொடியைத் தாங்கினார். அவரும் ஷஹீதானார்கள். நடந்த இந்த சம்பவங்களை, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அங்கு ஸஹாபாக்களிடம் கூறிக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஏற்கனவே அறிவுறுத்தியதைப் போல, தங்களுக்குள் காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ யைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். நாம் முன்னர் சொன்னது போல அவர் மிகவும் போர் தந்திரம் அறிந்தவர். அவரது கூற்றுப்படி, வழக்கமாக போரில் பல்வேறு அணிகளாகப் பிரிந்து நின்று போரிடும் அவர்களை, இடையிடையில் தங்களுக்குள் அணி மாறிக் கொண்டே நிற்கச் சொன்னார். வலப்பக்கம் நின்றவர்கள் இடப்பக்கம் எனவும், முன்னால் நின்றவர் பின்னால் எனவும் மாறி மாறி நிற்பதால், எதிரிகளுக்கு அவர்கள் எண்ணிக்கையை அதிகமாகக் காட்டிவிடும் என்ற போர்த் தந்திரத்தை கடைபிடிக்கச் சொன்னார். அதன் மூலம் எதிரிகளின் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்த விரும்பினார். வீரர்களும் அவ்வாறே செய்தார்கள். போரின் இடையில் அதிகமாக தூசியைப் பரப்பிவிடும்படியும் கூறினார். அதன் மூலமும் தாங்கள் அதிக நபர்கள் இருப்பது போலக் காட்டினார்கள்.

போர் மிகக் கடுமையாக நடந்ததது. அன்றைய நாளில் தங்களின் ஒன்பது வாட்கள் பழுதடைந்ததாக காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ கூறினார். இவ்வாறு போராடிய அவர்களுக்கு இறுதியில் மிகப்பெரிய வெற்றியை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கொடுத்தான். எண்ணிக்கை அடிப்படையில்லாமலோ அல்லது ஆயுதங்களின் அடிப்படையிலோ அல்லாமல் அவர்களின் ஈமானிய அடிப்படையில் வெற்றி அடைந்தார்கள். மூவாயிரம் நபர்கள் இரண்டு லட்சம் பேர்களை வென்ற மகிழ்ச்சியில் மதினா திரும்பினார்கள்.

இந்த வெற்றி மாற்றி சமுதாயத்தினர்களுக்கு முஸ்லிம்கள் பற்றி ஒரு அச்சத்தைக் கொடுத்தது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் வாள் என்ற பட்டப் பெயர் காலித் இப்னு வலீத் رَضِيَ اللهُ عَنْهُ க்குக் கிடைத்தது.

Seerah 27 - Preparations for the Conquest of Mecca

ஸீராஹ் வகுப்பு 27 - மக்கா வெற்றிக்கான ஏற்பாடுகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஹுதைபியா உடன்படிக்கையின்படி, அடுத்த வருடம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் 2000 ஸஹாபாகளுடன் மக்காவுக்குச் சென்று உம்ராவுவை நிறைவேற்றினார்கள். திரும்பிவந்த சமயத்தில் ஷாம் தேசத்திருந்த சில கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரார போர் தொடுக்க ஆயத்தம் செய்வதாகக் கேள்விப்பட்டார்கள். முஃதாவில் 200000 வீரர்களுடன் போரிட்டுத் தோல்வி அடைந்த அவர்கள் பழிவாங்க நினைத்தார்கள். அம்ரு இப்னு ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُ தலைமையில் படை புறப்பட்டது. அதில் அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ, உமர் رَضِيَ اللهُ عَنْهُ போன்ற மூத்த ஸஹாபாகளுடன் படை உருவானது. ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பின்னர்தான் அம்ரு இப்னு ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُ இஸ்லாத்தில் இணைந்தார். அறியாமைக் காலத்தில் யார் உயரிய நிலையில் இருந்தார்களோ, அவர்கள் இஸ்லாத்துக்கு வந்த பிறகு இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டால் அதே நிலை அவருக்குக் கொடுக்கப்படும் என்று ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறியபடி அம்ரு இப்னு ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُ தலைமைப் பொறுப்பு பெற்றுக் கொண்டார். அவருக்கு வெற்றியும் கிடைத்தது. அந்தப் போரில்தான் அவருக்குக் குளிப்பு கடமையானபோது, கடுமையான குளிரின் காரணமாக தயம்மம் செய்து தொழ வைத்தார்கள். அது பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவரிடம் கேட்க, அவர்கள் குர்ஆன் வசனத்தில் ‘அழிவின் பக்கம் தங்களை செலுத்த வேண்டாம்’ என்றுப்பதைக் கூறி, குளிரின் காரணமாகத் தாம் உடல் நிலை பாதிக்கக் கூடாது என்ற நிலையில் அவ்வாறு செய்ததாகக் கூறினார். அது கேட்டு சிரித்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வேறொன்றும் சொல்லவில்லை.

ஹுதைபியாவின் உடன்படிக்கையை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் முழுமையாகக் கடைபிடித்தார்கள். மக்காவிலிருந்து மதீனாவுக்கு அநேக முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து வந்தார்கள். எனினும் உடன்படிக்கையின்படி அவர்களை எல்லாம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ திருப்பி மக்காவுக்கே அனுப்பிவிட்டார்கள். உடன்படிக்கையின் போதே அபு ஜந்தல் என்பவர் தப்பி வந்து மதினா வர விரும்பினார். எனினும் அவர் அனுமதிக்கப்படவில்லை. அது போல் பலர் திருப்பி அனுப்பபட்டார்கள். ஆனால் மக்கத்துக் காஃபிர்கள் அதனை பல நேரத்தில் மீறினார்கள். உடன்படிக்கையின் ஒரு நிபந்தனை அவரவர்கள் தாங்கள் யாருடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதன் அடிப்படையில் இருவரும் அவரவர்கள் விருப்பபடி சிலருடன் தங்களுக்கிடையில் ஒத்துழைப்பு குறித்து உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுடன் உடன்படிக்கை செய்திருந்த கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரை ஹரமிலேயே கொன்றுவிட்டார்கள். இது உடன்படிக்கையை மீறிய செயலாகும். ஏனெனில் அவர்களுடனும் குறைஷியர்கள் பத்து வருடம் போர் செய்யக்கூடாது. அக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் குறித்து முறையிட, அதற்குப் பதிலடியாக சுமார் பத்தாயிரம் வீரர்களுடன் மக்காவை நோக்கி படை எடுக்க ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஆயத்தம் செய்தார்கள். இந்த நடவடிக்கை குறைஷியருக்குத் தெரியக்கூடாது என அவர்கள் தோழர்களிடம் கூறினார்கள். திடீரென்று தாக்க முடிவு செய்தார்கள்.

எனினும் நபிதோழர் ஹாதப் இப்னு அபு பல்தா رَضِيَ اللهُ عَنْهُ இந்த படை எடுப்பு குறித்து குறைஷியர்களுக்கு ஒரு கடிதம் எழுதி ஒரு பெண்ணிடம் கொடுத்து அனுப்பினார். (இவர் ஆட்சியாளர்களுக்கு இஸ்லாமிய அழைப்பு கடிதம் எடுத்துச் சென்ற தூதர்களுள் ஒருவர் ஆவார்.) இந்தச் செய்தியை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வஹி மூலமாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு அறிவிக்கிறான். உடனே அவர்கள் அலி رَضِيَ اللهُ عَنْهُ மற்றும் மற்றொரு

தோழரை அனுப்பி குறிப்பிட்ட இடத்தில் ஒரு பெண்மணியை கண்டு, அவர் தம் தலை முடியில் வைத்திருக்கும் கடிதத்தைக் கைப்பற்றி கொண்டுவருமாறு அனுப்பினார்கள். அவர்களும் அவ்வாறு சென்று அந்தப் பெண்மணியிடமிருந்து அக்கடிதத்தை மீட்டுக் கொண்டு வந்தார்கள். ஹாதப் இப்னு அபு பல்தா رَضِيَ اللهُ عَنْهُ அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். எனினும் அவர்கள், தாம் அவ்வாறு கடிதம் அனுப்பக் காரணம் யாது என ஹாதப் இப்னு அபு பல்தா விடம் கேட்க, தங்கள் உறவினர்கள் மக்காவில் இருப்பதால், இச்செய்தியை குறைஷியர்களுக்குத் தெரிவித்தால், அவர்கள் தம்முடைய உறவினர்களைப் பாதுகாப்பார்கள் என நினைத்ததாகக் கூறினார். போரில் முஸ்லிம்களுக்குக் கட்டாயம் வெற்றி கிடைக்கும் என்ற எண்ணத்துடன்தான் அவ்வாறு செய்த்ததாகவும் கூறினார். அங்கிருந்த உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் அந்த நயவஞ்சக செயலுக்கு அவரை கொல்ல அனுமதிக்குமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். அனால் அவர்ளைக் குறித்து முனாஃபிக் என்று கூற வேண்டாம் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள்.

புஹாரி 3983

அலி (ரழி)அறிவிப்பதாவது,

فَقَالَ " أَلَيْسَ مِنْ أَهْلِ بَدْرٍ ". فَقَالَ " لَعَلَّ اللَّهَ اطَّلَعَ إِلَى أَهْلِ بَدْرٍ فَقَالَ اعْمَلُوا مَا شِئْتُمْ فَقَدْ وَجَبَتْ لَكُمُ الْجَنَّةُ، أَوْ فَقَدْ غَفَرْتُ لَكُمْ "

ஹாதப் இப்னு அபு பல்தா رَضِيَ اللهُ عَنْهُ குறித்து ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, "இவர் பத்ருப் போரில் கலந்து கொண்டவர் அல்லவா! பத்ரில் கலந்து கொண்டவர்கள் பற்றி அல்லாஹ், 'நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். சுவனம் உங்களுக்கு உறுதியாயிற்று...அல்லது உங்கள் பாவத்தை மன்னித்துவிட்டேன் என்று கூறி விட்டிருக்கலாம் அல்லவா!"

எனவே அத்தகைய ஸஹாபி குறித்து இவ்வாறு சொல்ல வேண்டாம் என்று ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். சிலர் ஸஹாபாக்களைக் குறித்து குறை கூறி பேசுவது கண்டிக்கக் கூடியது என்பதனை இதன் மூலம் அறியலாம். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டுவிட்டான். அவர்களும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பொருந்திக் கொண்டார்கள். எனவே நமக்கு ஸஹாபாக்களைக் குறித்து விமரிசனம் செய்ய எந்தவித உரிமையும் இல்லை. அவர்களின் தியாகங்களுக்கு இணையாக நமது அனைத்து அமலும் ஈடாகாது.

இமாம் ஷவுக்கானி رَحْمَةُ اللهِ عَلَيْهِ தொகுத்த ஹதீது நூலான நைனுள் அவதாத் என்ற நூலில் அவர் எழுதிய கடிதம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 'காஃபிர்களே! ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மக்காவை நோக்கி படையெடுத்து வர இருக்கினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வந்தால் வெற்றி அவர்களுக்குத்தான்.'

ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ரமழான் பத்தில் சுமார் பத்தாயிரம் வீரர்களுடன் மக்காவை நோக்கி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்கள் பயணத்தை ஆரம்பித்தார்கள். அப்போது அவர்கள் யாரும் தங்களின் ஆயுதங்களைப் பயன்படுத்தாமலும், யாரையும் கொன்று விடாமலும், அமைதியுடனே மக்காவை வெற்றி கொள்ள வேண்டும் என தோழர்களுக்கு அறிவுறுத்தினார்கள். வேறு எந்தப் போரிலும், அவர்கள் அப்போரை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஆரம்பிக்கவில்லை. காஃபிகள்தாம் எல்லாப் போர்களையும் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தார்கள். முஸ்லிம்களால் தற்காப்புக்காகத்தான் அப்போர்கள் நடத்தப்பட்டன.

எனவே இந்தப் போரில் யாரும் தங்களின் ஆயுதங்களைப் பயன்படுத்தாமலும், யாரையும் கொன்று விடாமலும் இருக்க வேண்டும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என விரும்பினார்கள். மேலும் கஃபாவில் அடைக்கலம் புகுந்தவர்கள், தங்களின் வீடுகளிலேயே

இருப்பவர்கள், அபு ஸுஃபியான் வீட்டில் நுழைந்தவர்கள், ஹகீம் இப்னு ஹிஸாம் வீட்டில் தஞ்சம் புகுந்தவர்களையும் விட்டு விட வேண்டும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என்று கூறினார்கள். அது போல காயம் பட்டவர்கள், தப்பி ஓடுகிறவர்கள், கைதானவர்கள், கஃபாவின் துணியைப் பிடித்தவர்கள் ஆகியவர்களையும் ஒன்றும் செய்ய வேண்டாம் என்றார்கள்.

இவ்வாறு எந்த உயிர்ப்பலியும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ முழுக்கவனம் செலுத்தினார்கள். அகிலத்தின் அருட்கொடையான அவர்கள் போரை திணிக்கும் தீவிரவாதப் போக்கு கொண்டவர்களாக எப்படி இருக்க முடியும்? அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்தவர்கள் பொய்யான, விஷமத்தனமான கருத்துக்களை இஸ்லாத்தின் மீது கூறமுடியாது எனலாம்.

ஸீராஹ் வகுப்பு 28 - மக்கா வெற்றி

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

பத்தாயிரம் ஸஹாபாக்களுடன் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு இருபதாம் நாள் மக்காவுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வந்து சேர்ந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஒட்டகத்தின் மீது அமர்ந்து இருக்கிறார்கள். அவர்களுடன் முஃதா போரில் ஸஹீதான ஸைத் இப்னு ஹாரிதா رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் மகன் உஸாமா இப்னு ஸைத் رَضِيَ اللهُ عَنْهُ யும் இருந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இந்த வசனங்களை ஓதிக் கொண்டே மக்காவில் நுழைந்தார்கள்.

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا ﴿١﴾

(நபியே!) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக உமக்கு வெற்றி அளித்துள்ளோம்

இது ஒரு மகத்தான வெற்றியாகும். இதே நிலையில், இப்படிப்பட்ட வெற்றியை யாராவது பெற்றால், அவர்கள் தங்களை ஆணவம், பெருமை கொண்ட வீரராக பிரகடனப்படுத்தி விடுவார்கள். ஆனால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களோ இந்த வெற்றியை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கிருபையாகவும், கருணையாகவும் வெளிப்படுத்தினார்கள். நாமும் நமக்கு எந்த ஒரு நன்மையோ, நற்செய்தியோ அல்லது வெற்றியோ கிடைத்தால், அவை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் அருள் என அவனை புகழ்ந்து போற்ற வேண்டும். "யாருடைய அருளின் காரணமாக நல்ல காரியங்கள் நடைபெறுகிறதோ அந்த அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கே எல்லாப் புகழும்" என்று அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு ஒரு யூத சிறுவன் பணியாளனாக இருந்தான். அவன் நேயுற்றயுகிறான் என்று கேள்விப்பட்டபோது, அவனைக் காண அவர்கள் சென்றார்கள். அங்கு அவன் மரணத் தருவாயில் இருந்த நிலையைக் கண்டார்கள். அவனை பலமுறை இஸ்லாத்தின் பக்கம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அழைத்திருக்கிறார்கள். அப்போதும் அவ்வாறே அழைத்தார்கள். அப்போது அச்சிறுவன் தம் யூதத் தந்தையை நோக்கினான். அவரும் அபுல் காஸிமின் தந்தை (ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ) அவர்களைப் பின்பற்றுமாறு சம்மதம் தெரிவித்தார். அவனுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஸஹாதா கூறி இஸ்லாத்தில் இணைத்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வீட்டை விட்டு வெளிய சென்ற நிலையில் அவனது உயிர் பிரிந்தது.அப்போது "என்னைக் கொண்டு இந்த வாலிபனை நரக நெருப்பிலிருந்து பாதுகாத்த, அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும்" ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என கூறினார்கள். இவ்வாறு அவர்கள் எல்லா நல்வினைககளுக்கும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வையே காரணமாக ஆக்கினார்கள்.

மக்காவை வெற்றி கொண்டது அரபு நாட்டையே வெற்றி கொண்ட நிலையாகும். அந்த நிலையில் அவர்கள் அல்லாஹ் வைப் புகழ்ந்தவர்களாக, சிரம் தாழ்த்தியவர்களாகவே மக்காவிற்குள் நுழைந்தார்கள். அப்போது அபு ஸுஃயான் رَضِيَ اللهُ عَنْهُ கூறினார், "மக்காவாசிகளே! இப்போது முஹம்மது صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இதுவரை நீங்கள் பார்த்திராத ஒரு பெரிய படையுடன் இங்கு வந்துள்ளார்கள். யார் எனது வீட்டில் தஞ்சம் புகுவார்களோ அல்லது தங்களின் வீடுகளின் உள்ளேயே இருக்கிறார்களோ அவர்களை அவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள்."

மக்காவில் நுழைந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு எவ்வித எதிர்ப்பு இல்லை. ஒரு காலத்தில் அவர்கள் அனைவரும் விரட்டப்பட்டார்கள். ஆனால் இப்போதோ எவ்வித எதிர்ப்பும் இல்லாத மாபெரும் வெற்றியுடன் மக்காவில் நுழைந்தார்கள். அந்த

வெற்றியில் எந்த அளவுக்கு மகிழ்ச்சி அவர்கள் கொண்டிருப்பார்கள். பின்னர் அவர்கள் கஃபா சென்று அங்கிருந்த 360 சிலைகளையும்

وَقُلْ جَاءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۚ إِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوقًا ﴿٨١﴾

இன்னும், “சத்தியம் வந்தது; அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும்” என்று கூறுவீராக. (அத்தியாயம் பனி இஸ்ராயீல் 81)

என்று கூறியவாறு உடைத்துத் தள்ளினார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் வீட்டை ஏகத்துவ வீடாக மறுபடியும் ஆக்கினார்கள். இப்ராஹிம் عَلَيْهِ السَّلَامَ அவர்கள் கட்டிய ஏகத்துவப் பள்ளியை எந்தெந்த சிலைகள் மற்றும் படங்களை எல்லாம் வைத்து காஃபிர்கள் அசுத்தப்படுத்தினார்களோ, அவற்றை எல்லாம் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ உடைத்து எறிந்து சுத்தப்படுத்தினார்கள்.

அந்த மகிழ்ச்சியின் காரணமாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இரண்டு ரகஅத்துகள் தொழுகையை அதன் உள்ளே நிறைவேற்றினார்கள். எனவே இதனைக் கொண்டு நாம் மிகப்பெரிய படிப்பினையைப் பெற வேண்டும். அவர்கள் முதலில் மக்களின் மனங்களை வென்று ஏகத்துவத்தின்பால் சேர்த்தபிறகுதான் அவர்கள் சிலைகளை உடைத்தார்கள். எனவே மக்களின் உள்ளங்களிலிருந்த சிலைகளை - ஷிர்க்கை - முதலில் உடைத்து விட்டுப், பின்னர் நிஜ சிலைகளை உடைத்தார்கள்.

பின்னர் அவர்கள் திரும்பி வந்தபோது, அவர்களைச் சுற்றி அந்த குறைஷியர்களின் தலைவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை மக்காவில் இருந்த பதின்மூன்று வருடங்கள் சொல்லொணாத் துயரங்களைக் கொடுத்தவர்கள். அவர்கள் மக்காவை விட்டு வெளியேறிய பிறகும், பல போர்களைத் தொடுத்து துன்புறுத்தியவர்கள். சுமார் இருபத்தோரு வருடங்கள் அவ்வாறு தொல்லை கொடுத்தவர்கள் அவர்கள். இப்போது அவர்கள் அவர்களின் வருகைக்காக கஃபாவுக்கு வெளியில் அணி வகுத்துக் கொண்டு நின்றார்கள். குலப்பெருமை பேசிக்கொண்டிருந்த அவர்களின் நிலை இன்று நொறுக்கப்பட்டதாகக் கூறிய ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், எல்லோரும் ஆதம் عَلَيْهُ السَّلَامَ அவர்களின் பிள்ளைகள்தான் எனவும், ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர்கள், அவர்களுக்கிடையில் எந்த வித பேதமும், ஏற்றத்தாழ்வும் இல்லை என்றும் கூறினார்கள்.

தாங்கள் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என அவர்கள், மக்கத்துக் காஃபிர்களைக் கேட்க, அவர்கள் சங்கைமிக்க சகோதரர் எனவும், சங்கைமிக்க சகோதரரின் மகன் எனவும் கூறி, தங்களுக்கு நல்ல தீர்ப்பையே வழங்குவார்கள் என்றனர். உடனே ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், யூஸுஃப் عَلَيْهُ السَّلَامَ அவர்கள் தங்களைத் துன்புறுத்திய சகோதரர்களைக் குறித்து எவ்வாறு கூறினார்களோ, அவ்விதமாகவே தாங்களும் கூறுவதாகச் சொன்னார்கள்.

அத்தியாயம் யூஸுஃப் 92

لَا تَثْرِيبَ عَلَيْكُمُ الْيَوْمَ ۖ يَغْفِرُ اللَّهُ لَكُمْ ۖ وَهُوَ أَرْحَمُ الرَّاحِمِينَ ﴿٩٢﴾

“இன்று உங்கள் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் இல்லை; அல்லாஹ் உங்களை மன்னித்தருள்வானாக! அவனே கிருபையாளர்களிலெல்லாம் மிக்க கிருபையாளனாக இருக்கின்றான்” என்று கூறினார்.

அதுபோலவே நீங்கள் பழிவாங்கப்பட மாட்டீர்கள், நீங்கள் சென்றுவிடலாம் என ஒரே வார்த்தையில் அவர்கள் அனைவரையும் மன்னித்தார்கள். பல வருடங்கள் துன்புறுத்திய அவர்களை இவ்வாறு மன்னித்தது நமக்கு ஒரு முன்மாதிரியாகும். இதிலிருந்து நாம் படிப்பினை பெற்று நம் சகோதரர்களை,அவர்களின் தீமைகளைப் பொருட்படுத்தாமல் மன்னிக்க முன்வர

வேண்டும். அதே போல தங்களின் மற்ற உறவினர்கள், அண்டை வீட்டுக் காரர்களை மன்னிக்காமல் அவர்களுடன் தொடர்ந்து பகைமை பாராட்டக் கூடாது.

மறுநாள் அராம்பத்திலேயே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى படைத்த நாளிலுருந்து மக்காவைப் புனித பூமியாக ஆக்கியுள்ளான். எனவே அந்த பூமியில் கோழைகள் நடக்கக்கூடாது என்பதாலேயே அவர்கள் கொல்லப்படுவதை தடுத்தார்கள். ஓரிருவரை மற்றும் கொல்லுமாறு கூறினார்கள். அபு ஜஹிலின் மகன் இக்ரிமா رَضِيَ اللهُ عَنْهُ வை, அவர் கஃபா திரையைப் பிடித்து தொங்கினாலும் கொல்லாமல் விடக்கூடாது. எனினும் இஸ்லாத்தை ஏற்ற அவரது மனைவி ஹிந்த் வேண்டுகோளின்படி அவரை மன்னிக்க, பின்னர் அவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். உதுமான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் சகோதரரும் கொல்லப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. அவர்கள் தம் சகோதரருக்காக சிபாரிசு செய்ய, அவர்களையும் விட்டுவிடுமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இவ்வாறு நான்கு நபர்கள் கொல்லப்பட வேண்டும் என அறிவிப்பு செய்யப்பட்டாலும், அதில் இரண்டு நபர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இருவர் மட்டுமே கொல்லப்பட்டார்கள்.

அந்த சிறு நேரம் தவிர, இந்த புனிதபூனியில் இனி யாரையும் கொல்லக்கூடாது எனப் பிரகடனப் படுத்தினார்கள்.

இப்போது மக்கா வெற்றி கொள்ளப்பட்டு, எவ்வத அச்சுறுத்தலும் இல்லாத நிலையில் இனி விட்டுவிடுமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மக்காவில் தங்கிவிடுவார்களோ என்று அன்ஸாரித் தோழர்கள் கவலை அடைந்தார்கள். அது குறித்து அவர்கள் அவர்களை வினவ, அவர்களோ தாங்கள் உயிரோடு இருந்தாலும், மறைந்தாலும் அவர்களுடன்தான் இருக்கப்போவதாக உறுதி கூறினார்கள்.

பிறகு மக்காவாசிகள் கூட்டம் கூட்டமாக வந்து இஸ்லாத்தை ஏற்றார்கள். மக்கத்துக் காஃபிர்களுக்குப் பயந்து இஸ்லாத்தை ஏற்காமல் இருந்தவர்கள் இப்போது தைரியமாக இஸ்லாத்தை ஏற்றார்கள். ஆண்களும், பெண்களும் அவர்களிடம் பைஅத் செய்தார்கள். அவர்களில் அபு ஸுஃபியான் رَضِيَ اللهُ عَنْهُ, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ், முஆவியா رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோரும் அடங்குவார்கள். முஆவியா رَضِيَ اللهُ عَنْهُ முன்னரே இஸ்லாத்தில் இணைந்ததாகவும், தம் தந்தை அபு ஸுஃபியான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களுக்குப் பயந்து அதை மறைத்து வைத்ததாகவும் செய்தி உள்ளது. இவ்வாறு பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

Seerah 29 - Battle of Hunain

ஸீராஹ் வகுப்பு 29 - ஹுனைன் போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

மக்கா ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ரமழான் மாதத்தில் வெற்றி கொள்ளப்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஷவ்வால் மாதமும் அங்குதான் இருந்தார்கள். தாயிப் நகரைச் சேர்ந்த ஹவாபின் மற்றும் தகீப் என்ற கோத்திரத்தார் முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று திரண்டு சுமார் 20000 வீரர்கள் போர் தொடுக்க ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல் வந்தது. அவர்கள் அம்பு எய்வதில் சிறப்பு பெற்றவர்கள். அதனை அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களுடன் சேர்ந்து ஹுனைன் என்ற இடத்திற்குப் படை எடுத்துப் புறப்பட்டார்கள். அங்குதான் எதிரிகள் முகாமிட்டிருந்தனர். முஸ்லிம் படையில் சுமார் 12000 வீரர்கள் இருந்தார்கள். அதில் பழைய 10,000 முஸ்லிம் வீரர்களும் அடங்கும். போர் ஆரம்பித்தது. முஸ்லிம்கள் தங்களின் படை வீரர்களின் எண்ணிக்கையில் மயங்கி விட்டனர். 313, 700, 2,000, 3,000 என்ற முந்தைய எண்ணிக்கைகளை விட இப்போது அதிகம் இருந்தது அவர்களை மயக்கி விட்டது. தங்களுக்குத்தான் வெற்றி என அல்லாஹ் வின் தேவையை மறந்து விட்டார்கள். அவர்கள் தோல்வியுற்று விரண்டு ஓடினார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுடன் சுமார் 12 நபர்கள்தாம் இருந்தார்கள். அவர்களுள் அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ , உமர் رَضِيَ اللهُ عَنْهُ , அலி, அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது رَضِيَ اللهُ عَنْهُ , மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்ற அப்பாஸ் رَضِيَ اللهُ عَنْهُ , மற்றும் அவரது மகன் ஃபலல் رَضِيَ اللهُ عَنْهُ , அபு ஸுஃப்யான் رَضِيَ اللهُ عَنْهُ, (சிலர் அறியாமல் இவரைக் குறித்தும் இவரது மகன் முஆவியாவைக் குறித்தும் விமர்சிப்பார்கள்) உஸாமா இப்னு ஜைத் رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோர் அடங்கும். பலர் ஓடிய நிலையில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தைரியமாக முன் சென்று "நான் நபி தான், அதில் எந்த பொய்யும் இல்லை. நான் அப்துல் முத்தலிபின் மகன். இதோ நான்தான் நபி, நான்தான் முஹம்மது" என்று அறைகூவல் விடுத்தார்கள். பின்னர் உரத்த குரல் கொண்ட அப்பாஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை ஓடிச் செல்லும் ஸஹாபாக்களை அழைக்குமாறு கூறினார்கள். அவர்களும் அவ்வாறு அழைக்க, அவர்கள் மறுபடியும் திரும்ப வந்தார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் உதவி மீது நம்பிக்கை வைத்தவாறு, மீண்டும் போரிட்டார்கள். அவகளுக்கு மகத்தான வெற்றியை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அளித்தான். இந்த ஹுனைன் போரில் மகத்தான வெற்றியை அளித்தான்.

வெற்றிக்குப் பின் அனஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் தாயாரும், அபு தல்ஹா رَضِيَ اللهُ عَنْهُ வின் மனைவியும் ஆகிய உம்மு சுலைம் رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் கையில் ஒரு வாளை கையில் வைத்து நின்றதை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கண்டார்கள். அது குறித்து அவர்களைக் கேட்க, யார் தங்களை நெருங்கி வந்தாலும் அவர்களின் வயிற்றைக் கிழித்து விடுவேன் என்று கூறினார்கள். போர் முடிந்து முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது என அவரிடம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். இவ்வாறு பெண்களும் போருக்கு ஆயத்தமாகத்தான் இருந்தார்கள்.

எதிரிகள் பலப் பொருட்களை கனிமத்தாக விட்டுச் சென்றனர். சுமார் 6000 போர் கைதிகளும் சிறை பிடிக்கப்பட்டனர். புதிதாக இஸ்லாத்திற்கு வந்தவர்கள் மற்றும் முஹாஜிர்கள் அனைவருக்கும் பங்கு போட்டு கொடுக்கப்பட்டது. அன்ஸாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை எனப் பேச்சு பரவலாக இருந்து, இறுதியில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் சில அன்ஸாரிகள் அது குறித்துக் கேட்டனர். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அன்ஸாரிகளை மட்டும் அழைத்துப் பேசினார்கள்.

“அன்ஸாரி ஸஹாபாக்களே! நீங்கள் முன்னர் வழி தவறியவர்களாக இருந்தீர்கள். அல்லாஹ் என்னைக் கொண்டு உங்களுக்கு நேர்வழியைக் காட்டினான். நீங்கள் ஏழைகளாக இருந்தீர்கள். அல்லாஹ் என்னைக் கொண்டு உங்களை செல்வந்தர்களாக ஆக்கினான். நீங்கள் உங்களுக்கு இடையில் எதிரிகளாக இருந்தீர்கள். இஸ்லாத்தைக் கொண்டு உங்களுக்கிடையில் இரக்கம், பாசம் அளித்து உங்களை சகோதரர்களாக ஆக்கினான். நான் சொல்வது சரிதானே!” என்று அவர்கள் கூறினார்கள். அன்ஸாரி ஸஹாபாக்கள் அனைவரும் ஆம் என்றனர். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொடர்ந்து கூறினார்கள், “நீங்கள் என்னைக் குறித்து இவ்வாறு கேட்கலாம். நீங்கள் பொய்ப்பிக்கப் பட்டவர்களாக இருந்தீர்கள். மக்கள் உங்களை ஏற்க மறுத்தார்கள். ஆனால் நாங்கள் உங்களை உண்மைப்படுத்தினோம். உங்கள் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டோம். உங்களுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. அன்ஸாரிகளாகிய நாங்கள் உதவி செய்தோம். மக்காவாசிகள் உங்களைத் துரத்தினார்கள். நாங்கள் உங்களுக்கு அடைக்கலம் கொடுத்தோம். இவ்வாறெல்லாம் நீங்கள் கூறலாம்.” அவ்வாறு தாங்கள் சொல்ல தயாராக இல்லை என அன்ஸாரி ஸஹாபாக்கள் கூறினார்கள். . ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொடர்ந்து கூறினார்கள், “இந்த கனிமத்துப் பொருட்கள் இவ்வுலகின் அற்பமான ஒன்றாகும். இதனை புதிதாக இஸ்லாத்தில் இணைந்த மக்களுக்கு அவர்களின் ஈமான் உறுதிபடக் கொடுத்தேன். நீங்களோ இஸ்லாத்தில் உறுதியாக இருக்கிறீர்கள். யாருடைய கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! மற்ற ஸஹாபாக்கள் ஒரு பள்ளத்தாக்கு வழியாக செல்லும் நிலையில், நீங்கள் வேறு பாதையில் சென்றால், நீங்கள் செல்லும் வழியில்தான் நான் தொடர்ந்து வருவேன். மற்றவர்கள் எனக்கு மேலாடை என்றால், நீங்கள் எனக்கு உள்ளாடை போன்றவர்கள். அவர்களை விட நீங்கள்தாம் என்னை நெருங்கி இருக்கிறீர்கள். குறைஷியர்கள் தங்களுடன் இந்த அற்ப பொருட்களை எடுத்துச் செல்லும்போது, நீங்கள் உங்களுடன் என்னைக் கூட்டிச் செல்ல விருப்பம் கொள்ளவில்லையா?” அன்ஸாரி ஸஹாபாக்கள் கண்ணீர் விட்டனர். அவர்களே தங்களுக்குப் போதுமானது எனக் கூறினார்கள். மறுமை நாளில் ஹவ்ல் தடாகத்தில் தங்களை அனைவரும் சந்திப்பீர்கள் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வாக்களித்தார்கள்.

சுமார் 6000 போர் கைதிகளும் சிறை பிடிக்கப்பட்ட நிலையில், அக்கோத்திரத்தைச் சேர்ந்த தலைவர்கள், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை அணுகி அடிமைகளில் அநேகர் பெண்கள் மற்றும் குழந்தைகள் இருப்பதால், அனைவரையும் விடுவித்தால் நன்றாக இருக்கும் என்று வேண்டினார்கள். தங்களுக்கு உபகாரம் செய்யுமாறு கூறினார்கள். அதற்கு அவர்கள் தங்களைச் சேர்ந்த மற்றும் தங்களின் குடும்பத்தினரைச் சேர்ந்த அடிமைகளை விடுதலை செய்வது குறித்துத் தாங்கள் உறுதிமொழி தருவதாகக் கூறினார்கள். ஆனால் மற்றவர்களுக்குக் கொடுத்தது குறித்து நான் ஒன்றும் செய்ய முடியாது எனவும், சிபாரிசு செய்ய முடியும் என்றார்கள். பின்னர் அவர்கள் குரைஷியர்களை அழைத்து, தாங்கள் தங்கள் மற்றும் தங்களின் குடும்பத்தினர் அடிமைகளை விடுதலை செய்யப் போவதாகவும், அவ்வாறே அவர்களும் செய்யுமாறு வேண்டுவதாகவும் கூறினார்கள். அதனைக் கேட்ட குரைஷியர்கள், அவர்களின் விருப்பம்தான் தங்களின் விருப்பம் எனக் கூறி அனைவரையும் விடுவித்தனர். இவ்வாறு அவர்களின் ஒரே சொல்லில் அனைத்து கைதிகளும் விடுதலை ஆனார்கள். அக்கோத்திரத்தைச் சேர்ந்த பலர் இஸ்லாத்தைத் தழுவினர்.

தாயிப் நகரில் கல்லால் காயப்பட்டு துரத்தப்பட்ட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், அம்மக்களை அழிக்கத் தயார் என வானவர்கள் மூலமாகச் செய்தி பெற்றும், அவர்கள் இல்லை என்றாலும் பின் வரும் சமூகம் இஸ்லாத்தை ஏற்கும் என அவர்கள் கூறியது இப்போது நிறைவேறியது.

அந்த அடிமைகளில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பால்குடி சகோதரி அளிமாவின் சைமாவும் ஒருவர். தாம் அவர்களின் சகோதரி எனக் கூற, அதனை அறிந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டு, அவரைக் கண்ணியப்படுத்தி பல பரிசுப் பொருட்களுடன் அனுப்பினார்கள். இந்த நிகழ்வுகள் மக்கள்

நேர்வழி பெற வேண்டும் என்ற எண்ணம்தான் அவர்களிடம் இருந்தது எனவும், போர் செய்து உயிர்ப்பலி கொடுக்கும் எண்ணம் சிறிதும் இல்லை எனவும் அறியலாம்.

Seerah 30 - Battle of Tabuk

ஸீராஹ் வகுப்பு 30 - தபூக் போர்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஹுனைன் போருக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கைதிகளை நடத்திய விதம் பற்றி நாம் முன்பு அறிந்தோம். எனவே அவர்கள் மார்க்கத்திற்காக அன்றி உலக ஆதாயத்திற்காகப் போர் புரியவில்லை என்பதை நாம் அறியலாம். ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் முன்னர் நடந்த முஃதா போரில் தோல்வியடைந்த ரூம் நாட்டினர் பழி வாங்க படையைத் திரட்டி வருவதாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு செய்தி கிடைத்தது.

எனவே அவர்களை எதிர்த்துப் போரிட ஆயத்தம் செய்ய வேண்டியதிருந்தது. ரூம் நாடு அக்காலத்தில் மிகவும் பலம் வாய்ந்த நாடாகும். தபூக் என்ற இடத்தில் அவர்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை. அது சுமார் 3000 கி.மீ. தூரம் உள்ளது. எனவே அவர்களுக்கு இரண்டு சவால்கள் இருந்தன, பழம் வாய்ந்த நாடு மற்றும் வெகு தூரப் பயணம். மேலும் அது கடுமையான வெயில் காலம் அது. அப்போது பஞ்சமும் ஏற்பட்டிருந்தது. எனவே நயவஞ்சகர்கள் அதற்குத் தயாராக இல்லாமல், மற்றவர்களையும் அவ்வாறு இருக்க வேண்டும் என தூண்டினார்கள். அல்லாஹ் அவர்கள் குறித்து குர்ஆனில் எச்சரிக்கை செய்கிறான்.

அத்தியாயம் அத் தவ்பா 81

9:81 فَرِحَ الْمُخَلَّفُوْنَ بِمَقْعَدِهِمْ خِلٰفَ رَسُوْلِ اللّٰهِ وَكَرِهُوْۤا اَنْ يُّجَاهِدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ
وَقَالُوْا لَا تَنْفِرُوْا فِى الْحَـرِّ‌ ؕ قُلْ نَارُ جَهَنَّمَ اَشَدُّ حَرًّا‌ ؕ لَوْ كَانُوْا يَفْقَهُوْنَ

9:81. (தபூக் போரில் கலந்து கொள்ளாமல்) பின்தங்கிவிட்டவர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு விரோதமாக(த் தம் வீடுகளில்) இருந்து கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றனர்; அன்றியும் அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருட்களையும், உயிர்களையும் அர்ப்பணம் செய்து போர் புரிவதையும் வெறுத்து (மற்றவர்களை நோக்கி); “இந்த வெப்ப (கால)த்தில் நீங்கள் (போருக்குச்) செல்லாதீர்கள்” என்றும் அவர்கள் கூறுகின்றனர். அவர்களிடம் “நரக நெருப்பு இன்னும் கடுமையான வெப்பமுடையது” என்று (நபியே!) நீர் கூறுவீராக. (இதை) அவர்கள் விளங்கியிருந்தால் (பின் தங்கியிருக்க மாட்டார்கள்).

ஆனால் ஸஹாபாக்களோ உடனே புறப்பட தயாரானார்கள். வெகு தூர பயணம் அதிக பொருட்செலவு வரும் என்பதால் அல்லாஹ் வின் பாதையில் செலவு செய்யுமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை தூண்டினார்கள். அப்போது, அபு பக்ரு எப்போதும் நற்செயல்களிலும், தான தர்மங்களில் முதலில் இருப்பதால், தாங்கள் இப்போது அவர்களை முந்த வேண்டும் என்ற எண்ணத்தில், உமர் அவர்கள் தங்கள் செல்வத்தில் பாதியை போருக்காக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கொடுத்தார்கள். அனால் அபு பக்ரு அவர்களோ தங்களிடம் இருந்த அனைத்தையும் போருக்காகக் கொடுத்தார்கள். அப்போது அவர்களிடம் அபு பக்ரு தாங்கள் எதனை வீட்டில் விட்டு வந்தீர்கள் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கேட்க, அல்லாஹ் வையும், அவனது திருத்தூதர் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களையும் விட்டு வந்தேன் என்றார்கள். அதைகேட்டு வியந்த உமர் அவர்கள், அப்போதும் தங்களை அபு பக்ரு முந்தி விட்டார் என அறிந்தார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தபூக் போருக்கு ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ரஜப் மாதத்தில் புறப்பட்டார்கள். முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தவிர அனைவரும்

புறப்பட்டார்கள். சுமார் 30000 ஸஹாபாக்கள் தயாரானார்கள். அதில் மூன்று ஸஹாபாக்கள் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் நயவஞ்சகர்களும் இல்லை. அதே நேரத்தில் போருக்கு வரக்கூடாத முதியவர், நோயாளி போன்ற எந்த வித காரணத்தையும் கொண்டிருக்கவில்லை. உலக ஆசை சற்று மிகைத்து விட்டதோ? அவர்கள் முராராஹ் இப்னு ராபிய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهُ, கஃப் இப்னு மாலிக் رَضِيَ اللّٰهُ عَنْهُ, மற்றும் ஹிலால் இப்னு உமைய்யாஹ் رَضِيَ اللّٰهُ عَنْهُ ஆகியோர் ஆவார்கள்.

தபூக் அடைந்ததும்தான் ரூம் படை ஏதும் வரவில்லை எனத் தெரிந்தது. அவர்களுக்குக் கிடைத்தத் தகவல் தவறானதாக ஆகிவிட்டது. எனினும் சுற்றியுள்ள மக்களுக்கு இஸ்லாமிய அழைப்பு விடுத்தார்கள். சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். சிலர் இஸ்லாமிய ஆட்சிக்குக் கீழ் இருக்க சம்மதித்தார்கள். மதினா திரும்பி வந்ததும், பல நயவஞ்சகர்கள் தாங்கள் போரில் கலந்து கொள்ளாததற்கு பல பொய்க் காரணங்களை கூறிச் சென்றுவிட்டார்கள். ஆனால் அந்த மூன்று ஸஹாபாக்கள் தாங்கள் வராமல் இருந்ததற்குத் தகுந்த காரணம் எதும் இல்லை என்றார்கள். அந்த மூவர்களுடனும் யாரும் பேசக் கூடாது என ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَதடை விதித்து விட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு, அவர்களின் மனைவிமார்களையும் அவரவர் வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். இவ்வாறு சுமார் நாற்பது அல்லது ஐம்பது நாட்கள் சென்றன. கஃப் இப்னு மாலிக் رَضِيَ اللّٰهُ عَنْهُ கூறியதாவது, “நான் பள்ளிவாசலுக்குத் தொழ வருவேன். நான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களைப் பார்ப்பதைக் கண்டால் அவர்கள் தங்கள் பார்வையைத் தாழ்த்தி விடுவார்கள்.”

இறுதில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىஇந்த வசனத்தை இறக்கினான்.

அத்தியாயம் அத் தவ்பா 118

9:118 وَّعَلَى الثَّلٰثَةِ الَّذِيْنَ خُلِّفُوْا ؕ حَتّٰٓى اِذَا ضَاقَتْ عَلَيْهِمُ الْاَرْضُ بِمَا رَحُبَتْ وَضَاقَتْ عَلَيْهِمْ اَنْفُسُهُمْ وَظَنُّوْۤا اَنْ لَّا مَلْجَاَ مِنَ اللّٰهِ اِلَّاۤ اِلَيْهِ ؕ ثُمَّ تَابَ عَلَيْهِمْ لِيَتُوْبُوْا ؕ اِنَّ اللّٰهَ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

9:118. (அல்லாஹ்வின் உத்தரவை எதிர்பார்த்து) விட்டு வைக்கப்பட்டிருந்த மூவரையும், (அல்லாஹ் மன்னித்து விட்டான்;) பூமி இவ்வளவு விசாலமாக இருந்தும், அது அவர்களுக்கு நெருக்கமாகி அவர்கள் உயிர் வாழ்வதும் கஷ்டமாகி விட்டது - அல்லாஹ்(வின் புகழ்) அன்றி அவனைவிட்டுத் தப்புமிடம் வேறு அவர்களுக்கு இல்லையென்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் - ஆகவே, அவர்கள் பாவத்திலிருந்து அவர்கள் விலகிக் கொள்ளும் பொருட்டு, அவர்களை அல்லாஹ் மன்னித்தான்; நிச்சயமாக அல்லாஹ் (தவ்பாவை ஏற்று) மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்.

அந்த வசனம் இறங்கியதும் மிகவும் மகிழ்ச்சி அடைந்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ, அந்த மூவருக்கும் அவர்களின் பாவங்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىமன்னித்து விட்டான் என்ற அந்த செய்தியினைக் கூறுமாறு அறிவுறுத்தினார்கள். அதனை சொன்ன ஸஹாபாவுக்கு தம் விலையுயர்ந்த ஆடையை கஃப் இப்னு மாலிக் رَضِيَ اللّٰهُ عَنْهُபரிசாக அளித்து விட்டு ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களைக் காண ஓடோடி வந்தார்.

இவ்வாறு ஸஹாபாக்கள் சிறிது விலகிச் சென்றாலும், அவர்கள் தவ்பா செய்து மீண்டுள்ளார்கள். எனவே அவர்களைக் குறைகூறுபவர்கள் அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலர் அவர்களிக் குறைகூறுவதே தங்கள் வேலையாக எடுத்துக் கொள்கிறார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىஅவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவைப் பொருந்திக் கொண்டார்கள். குர்ஆன் இறங்கியதை நேரடியாகக் கண்டவர்கள், அவர்களின் பாடசாலையில் இஸ்லாத்தைக் கற்றவர்கள்,

இஸ்லாத்திற்காகப் பாடுபட்டவர்கள். அவர்களின் மீது நான் அன்பு கொள்ளும் பாக்கியத்தை அருள்வானாக! رَضِيَ الله عَنْهُ என அவர்கள் பெயர் வரும்போது நாம் கண்ணியப்படுத்த வேண்டும்.

Seerah 31 - The Hajj of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 31 - நபி (ஸல்) அவர்களின் ஹஜ்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

தபூக் போர் நடந்த அதே ஒன்பதாம் ஆண்டில் அபு பக்ரு அவர்களின் தலைமையில் சிலரை மக்காவுக்கு அனுப்பி ஹஜ் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல அனுப்பினார்கள். ஒன்பதாம் ஆண்டில் ஹஜ் கடமையாக்கப்பட்டது. முதல் ஹஜ் அறிவிக்கப்பட்டு ஹஜ் செய்து, அது குறித்த வழிமுறைகளை கற்பித்துக் கொடுக்குமாறு அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ அறிவுறுத்தப்பட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் அலி رَضِيَ اللهُ عَنْهُ அவர்களையும் அனுப்பி, அவர்கள் ஹஜ் செய்யுமாறும், மேலும் இரண்டு அறிவிப்புகளை மககளிடம் அறிவிக்குமாறு அபு பக்ரு رَضِيَ اللهُ عَنْهُ அவர்களிடம் கூறுமாறும் அறிவுறுத்தப்பட்டார்கள். அந்த வருடத்திற்குப் பிறகு இணைவைப்பாளர்கள் யாரும் ஹஜ்ஜுக்கு வரக்கூடாது எனவும், இனி யாரும் நிர்வாணமாக கஃபாவை வலம் வரக்கூடாது எனவும் அறிவிக்குமாறு கூறப்பட்டார்கள். அக்காலத்தில் பாவம் செய்த தங்கள் ஆடைகளுடன் வலம் வருவது கூடாது என அம்மக்கள் நிர்வாணமாக கஃபாவை வலம் வருவார்கள. அதைத்தான் தடை செய்ய வேண்டும் என கூறப்பட்டது.

அடுத்த ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு துல் கய்தா ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஹஜ் செய்ய முடிவு செய்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கொண்டு வந்த இந்த இஸ்லாம் அரபு மண் மூலம் பரவியது. தொழுகை, நோன்பு மற்றும் ஜகாத் போன்றவற்றைக் கடைபிடித்தார்கள். அதற்கான காரணம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஸஹாபாக்களைப் பல இடங்களுக்கு அனுப்பி இஸ்லாத்தை எடுத்துரைக்கும்படி கூறி, அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் சரி எனவும், இல்லை என்றால் அவர்கள் மீது போர் தொடுக்குமாறும் கூறினார்கள்.

முந்தைய ஒரு சம்பவம்: ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஒரு பயணத்தில் இருந்தார்கள். ஸஹாபாக்களிடம் அப்போது தண்ணீர் இல்லாமல் போயிற்று. அவ்வழியே வந்த ஒரு பெண்மணியிடம் இரண்டு குடம் தண்ணீர் இருந்தது. அதனைக் கண்ட அலி அவர்கள் அந்தத் தண்ணீர் எங்கிருந்து கிடைத்தது என அவரிடம் வினவ, அது இரண்டு நாள் பயண தூரத்தில் உள்ளது எனக் கூறினார். மக்கள் அந்தப் பெண்மணியை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் அழைத்து வந்தார்கள். அந்தத் தண்ணீர்க் குடம் கீழே வைக்கப்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்களின் இரு கரங்களையும் தண்ணீருள் வைத்து துஆ செய்தார்கள். பின்னர் ஸஹாபாக்களை அந்தக் குடங்களிளிருந்து தண்ணீரை எடுத்துத் தங்கள் பாத்திரங்களில் நிரப்பிக் கொள்ளுமாறும், தண்ணீர் அருந்திக் கொள்ளுமாறும், உளூ செய்துக் கொள்ளுமாறும் கூறினார்கள். குடத்தில் தண்ணீர் அப்படியே இருந்தது. ஸஹாபாக்ககளும் தங்கள் தேவைக்கு தண்ணீரை எடுத்துக் கொண்டார்கள். அந்தப் பெண்மணிக்கு ஏதேனும் அன்பளிப்பு கொடுக்குமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். அவருக்கு பேரித்தப்பழங்கள் மற்றும் துணிமணிகளைக் கொடுத்தார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இந்த அற்புதத்தை ஒரு சூனியம் என நினைத்து, அப்பெண்மணி தம் கூட்டத்தினரிடம் தாம் அரபு நாட்டின் மிகப்பெரிய சூநியக்காரரைக் கண்டதாகக் கூறினார்.

சில வருடங்களுக்குப் பிறகு அப்பெண்மணி இருந்த ஊரைச் சுற்றி நான் முன்னர் சொன்னபடி ஸஹாபாக்களைப் பல இடங்களுக்கு அனுப்பி இஸ்லாத்தை எடுத்துரைக்கும்படி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியிருந்தார்கள். ஆனால் அவர் இருந்த ஊரை மட்டும் தாக்குதல் செய்யாமல் விட்டுவிட்டார்கள். தாம் செய்த உதவிதான் அதற்குக் காரணம் என உணர்ந்த அப்பெண்மணி, அந்த சம்பவத்தைக் கூறி அவர்களின் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ

وَسَلَّمَ நன்றி உணர்வைப் போற்றினார். இப்படிப்பட்ட மாமனிதரின் மாக்கத்தைப் பின்பற்ற அவர் அழைத்தபோது, அவ்வூர் மக்கள் அதனை ஏற்று இஸ்லாத்தில் இணைந்தார்கள்.

அதுபோல முஆத் இப்னு ஜபல் அவர்களை யமன் நாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். வேதக்காரர்களை இஸ்லாத்தின்பால் அழைக்கச் சொன்னார்கள். இஸ்லாம் இவ்வாறு பரவி வந்த வேளையில், ஹஜ்ஜுக்காக மக்கா செல்ல ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஆயத்தம் ஆனார்கள். துல் காயிதா கடைசியில் அவர்கள் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டர்கள். அவர்களுடன் பலர் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார்கள். அவர்களை அதுவரை காணாத பலரும் அதில் அடங்குவார்கள். சுமார் 1,24,000 ஸஹாபாக்கள் ஒன்று கூடினார்கள்.

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அந்த ஹஜ் பற்றிய பல நிகழ்வுகளை அறிவித்துள்ளார்கள். எனவே ஹஜ் கடமைகள் பற்றிய ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அவர்களின் அறிவிப்புகள் மிகவும் அவசியமானதாகும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தவாஃப் செய்யும்போது, முதல் மூன்று சுற்றுகளில் வேகமாக நடந்து செய்தார்கள். மற்ற சுற்றுகளை சாதாரணமாக செய்தார்கள். வலது புஜத்தையும் வெளியில் தெரியுமாறு வைத்துக் கொண்டார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மதீனாவுக்கு வந்த பிறகு அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டது எனவும், அவர்களுக்கு பல நோய்கள் வந்தன எனவும், முஹாஜிர்கள் மிகவும் பலவீனமாக இருந்தார்கள் எனவும் மக்கத்து மக்கள் தவறான கருத்தைக் கொண்டிருந்தார்கள். அவை அனைத்தும் தவறானவை என்பதைக் காட்டுவதற்காகத்தான் இவ்வாறு அவர்கள் செய்தார்கள்.

பின்னர் மகாம் இப்ராஹீம் அருகின் வந்து இரண்டு ரகஅத்துகள் தொழுதார்கள். துல் ஹஜ் ஒன்பதாம் நாள், அரஃபா தினம் அன்று, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு இந்த வசனம் இறக்கப்பட்டது.

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا ۚ

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்;

மிகப்பெரிய மகிழ்ச்சியான இந்தச் செய்தியை அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அளித்தான். இதற்குப் பிறகு சட்டம் பற்றிய எந்த வசனமும் இறக்கப்படவில்லை. அன்று இஸ்லாமிய சட்டம் குறித்த மார்க்கம் முழுமை அடைந்தது. பின்னர் அவர்கள் அரஃபா மலையிலிருந்து ஹஜ் பேருரை ஆற்றினார்கள். இறுதிப் பேருரை என்று அது பெயர் பெற்றது. அது பற்றி பல அறிவிப்புகள் உள்ளன. அதன் சாரம்சத்தை நாம் காண்போம்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பெண்களைப் பற்றி முக்கியமாக சொன்னது, அவர்கள் விஷயத்தில் கவனமாக நடந்து கொள்ளுங்கள் என்பதாகும். அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும் அவர்கள் தாங்கள் ஒன்றை விட்டுச் செல்வதாகவும், அதை பற்றிப் பிடித்தால் வழி தவறிச் செல்ல மாட்டீர்கள் என்றார்கள். அது குர்ஆன் என்றார்கள். அவர்கள் சொன்ன மற்றொரு விஷயம், அரபிகளுக்கு அரபி அல்லாதவர்களை விட எந்த சிறப்பும் இல்லை. அரபி அல்லாதவற்குக்கும் அவ்வாறு எந்த ஒரு சிறப்பும் இல்லை. இறையச்சம்தான் சிறப்பைக் கொடுக்கும். பானு ஹாஷிமைச் சேர்ந்தவர் என்பதால் எந்த ஒரு சிறப்பும் இல்லை. நிறத்தாலும் எந்த சிறப்பும் இல்லை. இறையச்சம்தான் சிறப்பைக் கொடுக்கும். இவ்வாறாக, அவர்கள் அறியாமைக் கால ஏற்றத் தாழ்வு சிந்தனைகளை எல்லாம் நிராகரித்து விட்டார்கள். தீண்டாமை, ஏற்றத்தாழ்வு போன்ற தவறான கொள்கைகளை எல்லாம் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக நீக்கி எல்லாவற்றிலும் மாற்றத்தை கொண்டு வந்தார்கள்.

மற்றுமொரு முக்கியமான விஷயம், அவர்கள் மக்களிடம் தாங்கள் அவர்களுக்கு மார்க்கத்தை முழுமையாகக் கொண்டுவந்து சேர்த்து விட்டார்களா என வினவினார்கள். மக்கள் அனைவரும்

ஒரே குரலில் ஆம் எனக் கூறினார்கள். அப்போது அவர்கள் இறைவனை சாட்சியாகக் கூறினார்கள். பின்னர் யாரெல்லாம் அங்கு வந்தார்களோ அவர்கள் இதனை மற்றவர்களுக்குச் சொல்லுமாறு அறிவுறுத்தினார்கள். மேலும் அலைப்புபணியை அவர்களிடம் செய்யச் சொன்னார்கள். அல்லாஹ் அவர்களின் வாழ்க்கையிலிருந்து படிப்பினை பெறும் பாக்கியத்தை அளிப்பானாக.

Seerah 32 - The demise of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 32 - நபி (ஸல்) அவர்களின் மறைவு

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

Seerah 33 – After the demise of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 33 - நபி (ஸல்) அவர்களின் மறைவுக்கு பிறகு

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

Seerah 34 - Family life of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 34 - நபி (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வாழ்க்கை சரித்திரத்தை நாம் சுருக்கமாக அறிந்து கொண்டோம். அவர்களின் முன்மாதிரி வாழ்க்கையையும் நாம் அறிய வேண்டும். அவர்கள் தந்தையாக, கணவராக, சமுதாயத் தலைவராக போன்ற பல கோணங்களில் அவர்கள் நமக்கு முன்மாதிரியாக விளங்கியுள்ளார்கள். அவற்றை அறிய வேண்டும் என்ற அடிப்படையில், அவர்களின் குடும்ப வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பற்றி நாம் இப்போது அறிவோம்.

நம்முடைய குணநலன்களை செய்வ்வையாக வைப்பத்தற்கு என பலர் நூற்கள் எழுதியுள்ளார்கள். அனால் அதில் அவர்கள் தங்களின் சிந்தனை ஓட்டத்தைத்தான் அவற்றில் கோடிட்டுக் காட்டிருப்பார்கள். அதற்கான முன்மாதிரி என எதனையும் அல்லது யாரையும் அவர்கள் காட்ட முடியாது. அனால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களோ தங்களின் பன்முக நிலைகளையும் முன்மாதிரியாகவே வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

அவர்கள் எவ்வாறு ஒரு கணவராகப் பரிமளித்தது உள்ளார்கள் என்பதைக் காண்போம். ஒரு கணவருடைய மிகப் பெரிய பொறுப்பு, இவ்வுலக வாழ்கையில் ஒரு மனைவிக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைவிட, மறுமை வாழ்க்கைக்கு எவ்வாறு சிறந்து விளங்க வேண்டும் என்பது குறித்து கவலைப்பட வேண்டும். தன் மனைவியை நன்மையின் பக்கம் வழி நடத்தி, தீமையிலிருந்து விலகிவிடும் வழியைக் கற்பிப்பார். உலக விஷயத்தில் தவறு செய்தால் கோபப்படாமல், அதே நேரத்தில் மார்க்க விஷயத்தில் தவறு செய்தால் கோபம் கொள்வார். நம் நிலையோ அதற்கு மாறாக, உலக விஷயம் குறித்த தவறுக்குக் கோபம் கொள்வோம். மார்க்கத் தவறுகளைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. ஒரு பொருள் உடைந்தது என்பதால் கோபப்படுவதை விட, மார்க்க விஷயத்தில் தவறு செய்தால் கோபம் கொள்வதுதான் சரியான முறையாகும். அதற்கான முன்மாதிரி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் பெற வேண்டும்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் மனைவிமார்களை அவர்களின் அறைகளிலிருந்து தஹஜ்ஜத் தொழுகைக்காக எழுப்புவார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் தாங்கள் பஜ்ர் தொழ செல்லும்போது, அவர்களின் மனைவி அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் திக்று செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் தொழுது திரும்பி வரும்போதும், அவர்களை அதே நிலையில் கண்டார்கள். அதைக் கண்ட அவர்கள், அவர்களுக்கு சில சொற்களைக் கற்றுக் கொடுக்கப் போவதாகவும், அதனைக் கொண்டு திக்று செய்வதால், அவற்றை மூன்று முறை ஓதுவது, அவர்கள் அவ்வளவு நேரம் திக்று செய்வதை விடச் சிறந்த நன்மையைக் கொடுக்கும் என்றார்கள்.

முஸ்லிம் 2726 (5272)

عَنِ ابْنِ عَبَّاسٍ، عَنْ جُوَيْرِيَةَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم خَرَجَ مِنْ عِنْدِهَا بُكْرَةً حِينَ صَلَّى الصُّبْحَ وَهِيَ فِي مَسْجِدِهَا ثُمَّ رَجَعَ بَعْدَ أَنْ أَضْحَى وَهِيَ جَالِسَةٌ فَقَالَ " مَا زِلْتِ عَلَى الْحَالِ الَّتِي فَارَقْتُكِ عَلَيْهَا " . قَالَتْ نَعَمْ . قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " لَقَدْ قُلْتُ بَعْدَكِ أَرْبَعَ كَلِمَاتٍ ثَلاَثَ مَرَّاتٍ لَوْ وُزِنَتْ بِمَا قُلْتِ مُنْذُ الْيَوْمِ لَوَزَنَتْهُنَّ سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ " .

5272. ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் துணைவியார்) அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாவது: ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப்பின் அதிகாலையில் என்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது நான் எனது தொழுமிடத்தில் அமர்ந்திருந்தேன். பிறகு அவர்கள் முற்பகல் தொழுகை (ளுஹா) தொழுதுவிட்டு வந்தார்கள். அப்போதும் நான் (அதே இடத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது என்னிடம், "நான் உன்னிடமிருந்து சென்றது முதல் இதே நிலையில்தான் நீ இருந்துகொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், "நான் உன்னிடமிருந்து சென்றதற்குப் பிறகு நான்கு (துதிச்) சொற்களை மூன்று முறை சொன்னேன். அவற்றை இன்றைக்கெல்லாம் நீ சொன்னவற்றுடன் மதிப்பிட்டால், நீ சொன்னவற்றை அவை மிகைத்துவிடும். (அவை:) சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி அதத கல்கிஹி, வ ரிளா நஃப்சிஹி, வ ஸினத்த அர்ஷிஹி, வ மிதாத கலிமாத்திஹி (ஆகியவையாகும்)" என்றார்கள். (பொருள்: அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவன் உவக்கும் அளவுக்கும், அவனது அரியணையின் எடையளவுக்கும், அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்கும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனைத் தூயவன் எனத் துதிக்கிறேன்.)
இதை இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.
- அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடமிருந்து இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் மேற்கண்ட ஹதீஸ் மேலும் மூன்று அறிவிப்பாளர்தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது.
அவற்றில், " ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அதிகாலைத் தொழுகையைத் தொழச் சென்றபோது, அல்லது அதிகாலைத் தொழுகையைத் தொழுது முடித்தபின் என்னைக் கடந்து சென்றார்கள்" என்று ஹதீஸ் ஆரம்பமாகி மேற்கண்ட தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் (அந்த நான்கு சொற்களைச் சற்று வித்தியாசத்துடன்) "சுப்ஹானல்லாஹி அதத கல்கிஹி, சுப்ஹானல்லாஹி ரிளா நஃப்சிஹி, சுப்ஹானல்லாஹி ஸினத்த அர்ஷிஹி, சுப்ஹானல்லாஹி மிதாத கலிமாத் திஹி" என்று கூறியதாக இடம்பெற்றுள்ளது.
(பொருள்: அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலா வை அவனுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்குத் தூயவன் எனத் துதிக்கிறேன். அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாவை அவன் உவக்கும் அளவுக்குத் தூயவன் எனத் துதிக்கிறேன். அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாவை அவனது அரியணையின் எடையளவுக்குத் தூயவன் எனத் துதிக்கிறேன். அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாவை அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்குத் தூயவன் எனத் துதிக்கிறேன்.)

இவ்வாறு மறுமை நன்மைகளை அதிகரிக்கும் வழிகளை அவர்கள் தங்கள் மனைவியருக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அதேபோல் தவறு செய்தால் தடுப்பதும் அவர்களின் வழக்கமாக இருந்தது. ஒரு முறை அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், அன்னை ஸஃபிய்யாஹ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குறித்து அவர்கள் கட்டையானவர்கள் என (புறம்) பேசிவிட்டார்கள். அது குறித்து ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கோபப்பட்டு, அது புறம் பேசுவது என்றார்கள். மேலும் இந்த சொல்லைக் கடலில் போட்டால், அந்த நீர் முழுவதும் வீணாகிவிடும் என்று கூறி எச்சரித்தார்கள். இவ்வாறு மார்க்க விஷயத்தில் அவர்கள் கோபப்பட்டார்கள்.

இவ்வாறு மறுமை வாழ்க்கையை முன்னிறுத்தி அவர்களுடன் நடந்து கொண்டார்கள். மதினாவில் முஸ்லிம்களின் வாழ்க்கை ஆரம்பத்தில் எப்போதுமே போர் என்ற நிலையில்தான்

கடந்து சென்றது என்பதை நாம் அறிவோம். மக்காவில் ஒரு மாதிரியான துன்பங்கள். மதினாவில் வேறு மாதிரியான துன்பங்கள். இவ்வாறு இருந்த அவர்களின் வாழ்கையில், ஹுதைபியாஹ் ஒப்பந்தத்திற்குப் பிறகுதான் ஓரளவு நிம்மதி பிறந்தது. அப்போது ஸஹாபாக்கள் நிம்மதியான, செழிப்பான வாழ்க்கையைப் பெற்றார்கள். அந்த நிலையிலும் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வீட்டில் அதே வறுமைதான் இருந்தது. அது குறித்து ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தலைமையில் ஒன்று கூடிப் பேசி, ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் முறையிடத் தீர்மானித்தார்கள்.

பின்னர் அவர்கள் அனைவரும் தங்கள் வறுமை குறித்து ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். அது குறித்து ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் மிகவும் வருத்தம் அடைந்தார்கள். உலக வாழ்க்கைக்காகத் தங்களிடம் முறையிட்டது அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் மனைவிமார்களை விட்டுப் பள்ளிவாசலலேயே சுமார் ஒரு மாதம் தங்கி விட்டார்கள். அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலா வஹி அறிவித்தான்: எனவே அவர்கள்

அல் அஹ்ஸாப் 28,29

يَا أَيُّهَا النَّبِيُّ قُل لِّأَزْوَاجِكَ إِن كُنتُنَّ تُرِدْنَ الْحَيَاةَ الدُّنْيَا وَزِينَتَهَا فَتَعَالَيْنَ أُمَتِّعْكُنَّ وَأُسَرِّحْكُنَّ سَرَاحًا جَمِيلًا ﴿٢٨﴾وَإِن كُنتُنَّ تُرِدْنَ اللَّـهَ وَرَسُولَهُ وَالدَّارَ الْآخِرَةَ فَإِنَّ اللَّـهَ أَعَدَّ لِلْمُحْسِنَاتِ مِنكُنَّ أَجْرًا عَظِيمًا ﴿٢٩﴾

நபியே! உம்முடைய மனைவிகளிடம்: “நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும், இதன் அலங்காரத்தையும் நாடுவீர்களானால், வாருங்கள்! நான் உங்களுக்கு வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகிய முறையில் உங்களை விடுதலை செய்கிறேன். “ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும், மறுமையின் வீட்டையும் விரும்புவீர்களானால், அப்பொழுது உங்களில் நன்மையாளர்களுக்காக அல்லாஹ் மகத்தான நற்கூலி நிச்சயமாக சித்தம் செய்திருக்கிறான்” என்றும் கூறுவீராக!

எனவே ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் மனைவியர்களிடம் இறைவசனங்களைக் கூறி அவர்களின் கருத்துக்களைக் கேட்டார்கள். முதலில் அவர்கள் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் விசாரித்தார்கள். அவர்கள் தங்களுக்கு அல்லாஹ் வும், ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், மறுமை வாழ்க்கைதான் முக்கியம் எனக் கூறி விட்டார்கள். தங்கள் தாய் தந்தையினர்களிடம் ஆலோசனை செய்து கூறுமாறு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூற, அவர்களோ இதில் எந்த வித ஆலோசனையும் தேவையில்லை எனவும், தாங்கள் மறுமையையே விரும்புவதாகவும் கூறி விட்டார்கள்.

மற்ற மனைவிமார்களும் அதே பதிலைக் கூறினார்கள். இந்த நிலையைத்தான் அவர்களுக்கு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களின் எந்த ஒரு மனைவியையும் கை நீட்டி அடித்ததில்லை. மேலும் தங்களின் மனைவிமார்களுடன் பேசுவதற்கு என நேரத்தை ஒதுக்குவார்கள். நம்மிடம் இப்போதுள்ள முக்கிய பிரச்சனைகளில் இதுவும் ஒன்றாகும். கணவர் தம்மிடம் பேசுவதே இல்லை என்ற குறை அநேகர்கரின் விட்டில் உள்ள குறையாகும். அவர்கள் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுடன் இரவில் நடை பயிற்சி போவார்கள். இருவரும் பேசிக் கொண்டிருப்பார்கள். இப்னு அப்பாஸ் அவர்கள் தங்களின் மாமியார் மைமூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குறித்து கூறும்போது, ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அன்னை மைமூனா அவர்களுடன் இரவில் அதிக நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள் என்று கூறியுள்ளார்.

அதே போல், ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களின் மனைவிமார்களின் மடியில் படுக்கும் பழக்கத்தை உடையவர்களாக இருந்து உள்ளார்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மடியில் படுத்து குர்ஆனும் ஓதியிருக்கிறார்கள்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் தலையை அவர்கள் மனைவியர்கள் வாரி விடுவார்கள். அவர்கள் தங்கள் மனைவியரிடம் நடந்து கொண்ட விதம் பற்றி அநேக ஹதீதுகளை அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்துள்ளார்கள். தாங்கள் தண்ணீரை அருந்தி அந்தப் பாத்திரத்தை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கொடுத்தால், அவர்கள் தாங்கள் வாய் வைத்துக் குடித்த அதே இடத்தில் அவர்களும் வாய் வைத்துக் குடிப்பார்கள் என அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா என்று கூறியுள்ளார்கள்.

மேலும் வீட்டு வேளைகளில் மனைவிமார்களுக்கு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உதவி செய்வார்கள் என அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறியுள்ளார்கள். மேலும் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் மனைவிமார்களை பாராற்றும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். அன்னை கதீதா ரழியல்லாஹு அன்ஹா, ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, ஹஃப்ஸா ரழியல்லாஹு அன்ஹா போன்றவர்களைப் புகழ்ந்து பாராட்டிய செய்திகள் காணக் கிடைக்கின்றன. இது நாம் எடுத்துகொள்ள வேண்டிய மற்றுமொரு முன்மாதிரி ஆகும்.

தங்களுடம் ஆயிஷா அவர்கள் சமாதானமாக இருக்கிறார்களா அல்லது கோபமாக இருக்கிறார்களா என்பதை தாங்கள் அறிவார்கள் என்று ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். அது எப்படி சாத்தியமாகும் என அவர்கள் கேட்க, அதற்கு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், “தாங்கள் சமாதானமாக இருக்கும்போது, ‘முஹம்மது அவர்களின் இறைவன் மீது சத்தியமாக’ என்று கூறுவீர். ஆனால் பிணக்குடன் இருந்தால் ‘இப்ராஹீம் அவர்களின் இறைவன் மீது சத்தியமாக’ என்று கூறுவீர்.”

அதற்குப் பதில் கூறும் விதமாக தாங்கள் பெயரைத்தான் தவிர்ப்பேன் அன்றி வேறு ஏதும் இருக்காது என்று ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் தங்கள் மனைவியரின் மனநிலையைப் புரிந்து வைத்துள்ளார்கள்.

அவர்கள் தந்தை என்ற நிலையில் எவ்வாறு இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம், ஃபாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் நிகழ்வு எடுத்துக் காட்டு ஆகும். தங்களின் வீடு வேலையின் கடினம் குறித்து அவர்கள் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் முறையிட்டுத் தங்களுக்கு ஒரு வேலையாள் இருந்தால் நன்றாக இருக்கும் என அவர்கள் கூறினார்கள். ஆனால் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோ தாங்கள் அதைவிடச் சிறந்த ஒன்றைத் தருவதாகக் கூறி, ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் மற்றும் அல்லாஹு அக்பர் என திக்று செய்யுமாறு கூறினார்கள். இவ்வாறு அவர்கள் சரியான ஒரு வழியினை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

இவ்வாறு வழிநடத்தாமல், தாய் தந்தையர்கள் இருப்பார்களானால் அது அவர்களுக்குத் துன்பமாகத்தான் முடியும். கோபப்படக்கூடிய தேவை இருக்கும்போது கோபப்படலாம். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் ஒரு தடவை ஃபாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைக் குறித்து அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கடிந்ததுண்டு. ஃபாத்திமா அவர்களை வருத்தப் படுத்தினால், அது தங்களையே வருத்தப்படுத்துவது போல எனவும், அவர்கள் தங்களின் ஒரு துண்டு என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

ஒரு முறை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் மகளார் ஃபாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைக் காண வந்தார்கள். அப்போது அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டில் இல்லை. அது குறித்து அவர்கள் ஃபாத்திமா அவர்களை வினவ, தங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒரு பிணக்குக் காரணமாக கோபப்பட்டு வெளியில் சென்றுள்ளார்கள் எனக் கூறினார்கள். அவர்களைத் தேடிய ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், பள்ளிவாசலில் இருப்பதைக் கண்டார்கள். தரை மண் அவர்களின் மீது ஒட்டி இருந்ததைக் கண்ட ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 'அபு துராப்.. அபு துராப்..' (மண்ணின் தந்தை) என அன்போடு அழைத்தார்கள். அந்தப் பட்டப் பெயர்தாம் தங்களுக்கு மிகவும் பிடித்த பெயர் என அலி ரழியல்லாஹு அன்ஹு கூறுவார்கள். இவ்வாறு அவர்களுக்கு இடையில் இருந்த பிணக்கு பற்றி ஏதும் சுட்டிக்காட்டாமல் அவர்களுக்கு இடையில் சமாதானம் செய்தார்கள்.

இவ்வாறு அவர்களிடம் அநேக முன்மாதிரிகள் உள்ளன. நாமும் அந்த அழகிய முன்மாதிரியைக் கடை பிடிக்கும் பாக்கியத்தை அருள் புரிவானாக!

Seerah 35 - The social life of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 35 - நபி (ஸல்) அவர்களின் சமூக வாழ்க்கை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சமூகத்தில் வாழக்கூடிய பல்வேறு மக்களுடன் ஒருவராக அவர்கள் வாழ்ந்த விதம் பற்றி இங்கு அறிவோம். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒரு நபியாக, இறைத் தூதராக, ஆட்சியாளராக இருந்தாலும், தங்களைத் தனிமைப்படுத்திக் காட்ட எப்போதும் விரும்பியதில்லை. தாங்கள்தாம் சமுதாயத்தின் தலைவர் எனக் காட்டியதில்லை. மிகவும் பணிவாகவே நடந்து வந்தார்கள். பொதுப் பணிகளில் மற்றவர்களுடன் தங்களையும் இணைத்தே பணி செய்தார்கள். மஸ்ஜித் நபவி கட்டும்போதும், அகழ் தொண்டும்போதும் அவ்வாறே அவர்களும் சேர்ந்தே பணி செய்தார்கள். ஒரு தலைவர் இவ்வாறு செய்வதை இப்போது காணக் கிடைக்குமா?

ஏதேனும் புதிய நபர் ஒருவர் அவர்கள் இருக்கும் சபைக்கு வந்தால், அவர்களை யாரும் உடனே அடையாளம் காண முடியாத வகையில்தான் மற்றவர்களுடன் கலந்து இருப்பார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒரு ஆட்சியாளராக இருந்தாலும், தலைவராக இருந்தாலும், சாதாரண நபர் ஒருவர் அவர்களிடம் வந்து தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். யாரேனும் தம் தேவைக்கு அவர்களை அழைத்தால், அவர்கள் அவருடன் சென்று அவரின் தேவையை நிறைவேற்றுவார்கள். தங்களின் சகோதர முஸ்லிமின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தாங்கள் நடந்து செல்வது, மஸ்ஜித் நபவியில் இக்திகாஃப் இருப்பதைவிட தங்களுக்கு உவப்பானது என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறியுள்ளார்கள்.

பரீராஹ் ரழியல்லாஹு அன்ஹா என்ற ஸஹாபிப் பெண் அடிமையாக இருந்தார்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அவரைத் தங்களின் சொந்த பணத்தில் விடுதலை செய்தார்கள். அப்போதைய இஸ்லாமிய சட்டப்படி, ஒரு கணவரும், மனைவியும் அடிமையாக இருந்து அவர்களில் ஒருவர் விடுதலை பெற்றால், அவர்கள் விரும்பினால் தமது அடிமைப்பெண் அல்லது அடிமையிடமிருந்து விருப்பப்பட்டால் மண விடுதலை பெறலாம் அல்லது கணவன் மனைவியாக வாழலாம். பரீராஹ் ரழியல்லாஹு அன்ஹா விடுதலை ஆனதால், அவர் தம் கணவரிடமிருந்து மண விடுதலை பெற எண்ணினார். எனினும் அவரது கணவர் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்று தம் மனைவி தம்முடன் இருக்குமாறு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பரீராஹ் ரழியல்லாஹு அன்ஹாவை அழைத்து அவ்வாறு செய்ய்யமாறு வேண்டினார்கள். அனால் அது அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாவின் கட்டளையா அல்லது ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஆலோசனையா என பரீராஹ் ரழியல்லாஹு அன்ஹா கேட்டார். தங்களுடைய ஆலோசனைதான் என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள். இவ்வாறு அவர்கள் மற்றவர்களின் பிரச்சனைக்கு தாங்களே சென்று ஆலோசை கூறியிருக்கிறார்கள்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பணிவின் காரணமாகத்தான், யாரும் விருந்துக்கு அழைத்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு செல்வார்கள். அகழ் போரில் ஜாபிர் அவர்களின் அழைப்பை ஏற்று சென்றதை முன்பு கூறியிருக்கிறோம். அனஸ் அவர்கள வீட்டிருக்கும் சென்றிருக்கிறார்கள். யூதர்களின் அழைப்பையும் ஏற்றிருக்கிறார்கள்.

அவர்கள் யாரையும் வித்தியாசப் படுத்திப் பார்க்க மாட்டார்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் விட்டில் அவர்கள் இருந்தபோது ஒரு நபர் அவர்களைப்

பார்க்க வர இருந்தார்கள். அவரைக் குறித்து அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம், அவர் மிக மோசமான மனிதர் என்று கூறினார்கள். ஆனால் அந்த நபர் வந்தபோது அவரிடம் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிக இனிமையாகப் பேசியே அனுப்பினார்கள். அவர் மோசமானவர் என்று கூறி நன்றாக அனுப்பியது குறித்து அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வினவ, தாங்கள் எந்த ஒருவருடனும் எப்போதும் தவறான முறையில் போசுவது தங்கள் இயல்பு அல்ல என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

மக்கள் அப்பாவிகளைக் கண்டால் கேலி செய்வது வழக்கமாக நாம் காணலாம். ஆனால் அது சரியான வழிமுறை அல்ல. ஜாஹிர் ரழியல்லாஹு அன்ஹு என்ற ஒரு ஸஹாபி இருந்தார். அவர் அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட நபராக மக்களின் கேலிக்கு ஆளானவராகக் கருதப்பட்டார். அவர் மதினாவுக்கு வெளியில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். மதீனாவுக்கு வரும்போது ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அன்பளிப்புகளை அவர் கொண்டு வருவார். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் அவருக்கு பரிசினைக் கொடுப்பார்கள். ஒரு தடவை அவர் கடைத்தெருவில் சிலப் பொருட்களை விற்றுக்கொண்டிருந்தார். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவரின் பின்புறமாக அவருக்குத் தெரியாமல் வந்து அவரின் கண்களைத் தங்களின் கரத்தால் மூடினார்கள். மற்றவர்கள் அவரை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாத நிலையில் அவர்களோ அன்புடன் அவருடம் விளையாடினார்கள். தம்மை மூடியவர் யாராக இருக்கும் என ஆரம்பத்தில் எண்ணிய ஜாஹிர் ரழியல்லாஹு அன்ஹு, ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களாகத்தான் இருக்கும் என நினைத்தார். தம்மோடு அவ்வாறு இணக்கமாக இருப்பது அவர்கள்தாம் என்பதில் அவருக்கு சந்தேகம் வரவில்லை. எனினும் அவர்கள் தம்முடன் மிகவும் நெருக்கமாக இருப்பது கொண்டு மகிழ்ச்சி கொண்ட அவர், அது தொடர வேண்டும் என்ற விருப்பத்தில் தம் கண்ணை மூடியவர் யார் என்று கூறவில்லை. அதே நேரத்தில், ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் விளையாட்டாக, ‘இந்த அடிமையை விலை கொடுத்து வாங்குபவர் யாரேனும் உண்டா’ எனக் கூறினார்கள். அதற்கு ‘ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே! என்னை விலை கொடுத்து வாங்கும் அளவுக்கு எனக்கு மதிப்பில்லை’ என்றார்கள். ஆனால் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோ, ‘ஆனால் அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாவுடைய பார்வையில் நீர் மிக்க மதிப்புள்ளவர்’ எனக் கூறினார்கள். ஜாஹிர் ரழியல்லாஹு அன்ஹு எந்த அளவுக்கு மகிழ்வு அடைந்திருப்பார்!

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் எப்போதும் புன்னகையுடன் தான் ஒவ்வொருவரையும் சந்திப்பார்கள். ஜரீர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு கூறுவதாவது, “நான் இஸ்லாத்தைத் தழுவிய நாளிலிருந்து ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நான் கண்டபோதெல்லாம் புன்னகையுடன் அல்லாமல் கண்டதில்லை.”

மேலும் அவர்களிடம் யாரும் கை கொடுத்தால், கொடுத்தவர் எடுக்காமல் தாங்களாகவே கைகளை விடுவிக்க மாட்டார்கள். யாரிடமும் அவர்கள் பேசினால், அவரை நோக்கித்தான் பார்த்தவாறு பேசுவார்கள். தங்களின் முகத்தை வேறு பக்கம் திருப்ப மாட்டார்கள். சிறு பிள்ளைகள் முதல் வயதானவர்கள் அனைவரிடமும் அவ்வாறே நடந்து கொள்வார்கள். பத்து வயது சிறுவர் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பணி செய்ய அனுப்பபட்டார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் சொல்லிய வேலைகளில் ஏதாவது ஒன்றைத் தாம் செய்யவில்லை என்றால், அது குறித்து அவரைக் கேட்கமாட்டார்கள். அதனை ஏன் செய்யவில்லை என்றோ அல்லது ஏன் இவ்வாறு செய்தீர் என்றோ அவர்கள் கேட்டதில்லை.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் வீதியில் நடந்து செல்லும்போது, சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தால், அவர்களின் தலையை அன்புடன் கோதி விட்டுச் செல்வார்கள்.

பள்ளிவாசலில் எந்த ஸஹாபியையாவது தொடர்ந்து சில நாட்கள் காணவில்லை என்றால் அவரைக் குறித்து மற்றவர்களிடம் விசாரிப்பார்கள். அவ்வாறு ஒவ்வொருவரைக் குறித்தும் அக்கறைக் கொள்வார்கள்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் சிறந்த அண்டை வீட்டாராக இருந்துள்ளார்கள். தங்கள் வீட்டில் சமைக்கும் உணவில் அண்டை வீட்டாருக்கு அனுப்பச் சொல்வார்கள். குழம்பில் அதிகம் தண்ணீர் சேர்த்தாவது அவர்களுக்க்குக் கொடுக்கச் சொல்வார்கள். விருந்தாளிகளை உபசரித்து, அவர்கள் செல்லும்போது வாசல் வரைச் சென்று வழி அனுப்புவார்கள்.

யாருக்கும் வாக்களித்தால் அதனை ஒருபோதும் மீற மாட்டார்கள். இவ்வாறு வியாபாரம் செய்தால் சிறந்த வியாபாரியாக, அண்டை வீட்டாருக்கு சிறந்த அண்டை வீட்டாராக, பன்முக நிலையில் எல்லாவற்றிலும் சிறந்தவர்காலவே திகழ்ந்துள்ளார்கள். அவர்களை நாம் ஒரு முன்மாதிரியாகக் கொண்டு நம் வாழ்க்கையையும் சிறப்பிக்க அல்லாஹ் ஸுப்ஹானஹுத் வ தஆலாஅருள்புரிவானாக!

Seerah 36 - The worldless life of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 36 - நபி (ஸல்) அவர்களின் உலக பற்றற்ற வாழ்க்கை

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் உலக வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவத்தை கொடுத்து இருக்கிறார்கள் என்பது குறித்து இப்போது காணலாம். அவர்களுக்கு உலக வாழ்கையின் பார்வை எப்படி இருந்தது என அறிவோம். அவர்கள் குர்ஆன் மற்றும் ஹதீதின்படியே தங்கள் வாழ்கையை அமைத்திருந்தார்கள்.

இந்த உலக வாழ்க்கை அற்பமானதும், விளையாட்டும் தான். ஒரு பறவை தன அலகால் எந்த அளவு கடல் தண்ணீரை எந்த அளவுக்கு எடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத்தான் இவ்வுலக வாழ்க்கையாகும். கடல் நீர் மறுவுலக வாழ்க்கைக்கு ஒப்பானது. எனினும் மறுவுலக வாழ்க்கை முடிவற்றது. ஒரு சொட்டு தண்ணீரைப் போலத்தான் இந்த உலகம் அற்பமானதும், நிரந்தரமற்றதும் ஆகும்.

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: أَخَذَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم بِمَنْكِبِي، وَقَالَ: "كُنْ فِي الدُّنْيَا كَأَنَّك غَرِيبٌ أَوْ عَابِرُ سَبِيلٍ".

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், “இவ்வுலகில் ஒரு அந்நியரைப் போல அல்லது ஒரு வலிப்போகனைப் போல இருங்கள்.”

வழிப்போக்கரும், அந்நியரும் தங்கள் வேலையை முடித்துவிட்டு, தங்கள் சொந்த இருப்பிடத்தை நோக்கி திரும்புவதைப் போல நாமும் மறுமையை நோக்கியே நம் பயணத்தைத் திட்டமிட வேண்டும். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இதற்கான முன்மாதிரியாகத்தான் இவ்வுலகில் வாழ்ந்தார்கள்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தாங்கள் வலிப்போக்கரைப் போலத்தான் எனக் கூறியுள்ளார்கள். வழிப்போக்கர் ஒரு மரத்தின் அடியில் சில நேரம் உறங்குகிறார். பின்னர் எழுந்து தம் பயணத்தைத் தொடர்வார். அது போலத்தான் தங்களின் நிலையம் என அவர்கள் கூறியுள்ளார்கள். எந்த வழிப்போக்கரும் அந்த மரத்தின் அடியில் நிரந்தமாக இருப்போம் என்று நினைத்து அதற்கான ஏற்பாடுகளையாரும் செய்வார்களா?

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதாவது, “அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா எனக்காக மக்காவிலுள்ள சிறு கற்களை எல்லாம் தங்கமாக மாற்றித் தருவதாகக் கூறினான். ஆனால் நான் ஒரு நாள் வயிறாரச் சாப்பிடுவேன், ஒரு நாள் பட்டினி இருப்பேன். இவ்வாறு பட்டினியாக இருந்து உன்னிடம் துஆ கேட்பதையே விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டேன்.”

அவர்கள விரும்பினால் செல்வந்தராக வாழ்ந்திருக்கலாம். எனினும் அவர்கள் ஏழ்மையையே தேர்ந்தெடுத்தார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் காண வந்தபோது, அவர்கள் ஒரு பாயில் மேலாடை ஏதும் இல்லாமல் படுத்துக் கொண்டிருந்தாரகள். பாயின் அடையாளம் அவர்களின் முதுகில் பதிந்திருந்தது. அதனைக் கண்ணுற்ற உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்ணீர் விட்டார்கள். எதற்காக அவர்கள் கண்ணீர் வடித்தார்கள் என வினவப்பட்டபோது, கைஸர், ஈரான் நாட்டு மன்னர்கள் எல்லாம் சொகுசாக இருக்கும் நிலையில் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் இவ்வாறு ஏழ்மையில் காண்பது வருத்தமாக இருக்கிறது என்றார்கள். காஃபிர்களுக்கு எல்லாம் இவ்வுலக வாழ்கையில் சுகமும், தங்கள் அனைவருக்கும்

மறுவுலக வெற்றி கிடைப்பது குறித்து விருப்பம் இல்லையா என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வினவினார்கள்.

நிரந்தமில்லாத, அற்பமான உலகில் நாம் இலகுவாகக் கடந்துவிட்டு மறுவுலகை நாம் வெற்றி கொள்ள வேண்டும். நாம் ஹலாலான வழியில் பொருள் தேடி, செல்வந்தராக இவ்வுலகில் நாம் வாழத் தடையில்லை. அனால் வரம்பு மீறிச் செல்லக் கூடாது. இஸ்லாம் தடுத்தவற்றிலிருந்து விலகி இருக்கும்வரை எந்த தவறும் இல்லை.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வீடு எவ்வாறு இருந்தது? அவர்கள் மதினா வந்தபோது, அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா மற்றும் அன்னை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா ஆகியோரை மணம் முடித்து இருந்தார்கள். மஸ்ஜித் நபவி கட்டப்பட்டபோது, தங்களின் மனைவிமார்களுக்கு தனித்தனி அறைகள் தாம் கட்டிக் கொடுத்தார்கள்.

ஹஸன் பஸரி ரழியல்லாஹு அன்ஹு கூறியதாவது, "உதுமான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களின் அறைகளை நான் பார்க்க நேர்ந்தது. கையைத் தூக்கினால் கூரையைத் தொட்டு விடலாம்." அந்த அளவுக்குத்தான் உயரம் இருந்தது. மேலும் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் இரவுத் தொழுகை தொழும்போது, அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் படுத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஸஜ்தா செய்ய விரும்பும்போது, அன்னை அவர்களைத் தட்டிவிட, அவர்கள் ஒதுங்கி வழிவிடுவார்கள். அந்த அளவுக்குத்தான் வீட்டின் அகலம் இருந்தது.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உணவும் எளிமையாகத்தான் இருந்தது. அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா தாங்கள் மாதத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் சமைக்கும் நிலை கூட இல்லாமல் பல மாதங்களைத் தாங்கள் கண்டதாக அன்னை ஆயிஷா கூறியபோது, அந்த மூன்று நாட்கள் அவர்கள் என்ன சாப்பிட்டிருப்பார்கள் என அவர்களின் சகோதரி அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மகன் உர்வா ரழியல்லாஹு அன்ஹு வினவினார். தாங்கள் தண்ணீரும், பேரீத்தம்பழமும் கொண்டு அந்நாட்களைக் கழித்து விடுவோம் என அன்னை கூறினார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் ஃபஜ்ர் தொழுத பிறகு வீட்டிற்கு வந்த சாப்பிட ஏதேனும் உள்ளதா என்று கேட்பார்கள். ஏதும் இல்லை என்று கூறப்பட்டால், அன்று அவர்கள் நோன்பு இருந்து விடுவார்கள். அப்படிப் பட்ட வறுமையை நாம் சிறிதும் கண்டதில்லை.

இவ்வாறு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் உலக வாழ்கையில் பற்றற்று இருந்தார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மறைவின்போது, அவர்களின் போர்க் கவசம் ஒரு யூதரிடம் முப்பது ஸாஅ பார்லிக்குக் கடனாக அடகு வைக்கப்பிட்டிருந்தது. (அடகு வைப்பது அனுமதிக்கப்பட்டது. ஆனால் வட்டி வாங்குவதுதான் ஹராம் ஆகும்.)

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் வறுமை பற்றி முறையிட்ட வரலாற்றை நாம் முன்பு பார்த்திருக்கிறோம். இவ்வாறு அவர்கள் வேறு வழியில்லாமல் வறுமையாக இருக்கவில்லை. மாறாக அந்த வாழ்க்கையைத்தான் இவ்வுலகக்குத் தேர்ந்து எடுத்தார்கள். அதனால்தான் தங்களுக்கு வரும் எந்தப் பொருளையும் மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். வறுமைக்குப் பயப்படாமல் தானம் செல்வார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இந்த வாழ்கையில் முன்மாதிரியை எடுத்துக் கொண்டு, இந்த உலக வாழ்க்கைக்காக மார்கத்தை விட்டு விடாமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாழ்கையை நமக்கு அளித்து இரு உலகிலும் வெற்றியை அல்லாஹ் நமக்கு அளிப்பானாக!

ஸீராஹ் வகுப்பு 37 - நபி (ஸல்) அவர்களுக்கு பிடித்த செயல்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஒரு மனிதராக ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அவர்களுக்கு பிடித்த விஷயங்கள் ஆகியவற்றை இங்கு நாம் காண்போம்.

அவர்கள் மல்யுத்தம் (குத்துச் சண்டையை) விரும்பியிருக்கிறார்கள். மல்யுத்தமானது வீரர்களின் அடையாளமாகத் திகழ்கிறது. பள்ளிவாசலில் வைத்து பெருநாட்களில் மல்யுத்தப் போட்டிகள் நடத்தப்பட்டன. அதன் மூலம் சிறந்த போர்ப் பயிற்சியை அவர்கள் பெற்றுள்ளார்கள்.

இப்னு ருகானா ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி இஸ்லாத்தை ஏற்கும் முன்பாக ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் காண வந்தார். அவர் மல்யுத்தத்தில் சிறந்து விளங்கியவர் ஆவார். அவரை வீழ்த்துவது முடியாத ஒன்றாக இருந்தது. தாம் மல்யுத்தத்தில் வீழ்த்தப்பட்டால், இஸ்லாத்தை ஏற்பதாக அவர் கூறினார். போட்டி நடந்த்தது. ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவரை மூன்று முறை கீழே வீழ்த்திவிட்டார்கள். அவர் வாக்களித்ததைப் போல இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். தம்மை இவ்வாறு மூன்று முறை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் தம்மை வீழ்த்தியது ஆச்சரியத்தை அளிப்பதாகக் கூறினார். அதனை விட ஆச்சரியமான ஒரு விஷயத்தக் காட்ட வேண்டுமா எனக் கூறிய ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம், அருகிலுள்ள ஒரு செடியை வருமாறு அழைக்க அது அவர்களை நோக்கி வந்தது. இது ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அற்புதங்களில் ஒன்றாகும்.

அம்பு எறிதல், குதிரை சவாரி, ஓட்டப் பந்தையம் போன்றவற்றிலும் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் விருப்பம் கொண்டிருந்தார்கள். இவை அனைத்தும் உடலை சீராக வைத்திருக்கக் கூடியவையாகும்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிடித்தமான உணவு தேன் ஆகும். இனிப்பும் அவர்களுக்குப் பிடிக்கும் என அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

١٥٤ – (١٢) حدثنا أحمد بن إبراهيم الدورقي وسلمة بن شبيب
ومحمود بن غيلان قالوا: حدثنا أبو اسامة عن هشام بن عروة
عن أبيه عن عائشة قالت: كان النَّبى صلى الله عليه وسلم يحبُّ
الحلواء والعسل ،

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் இனிப்பையும், தேனையும் விரும்புவார்கள்.”

மேலும் அவர்களுக்குப் பிடித்த மற்றொன்று வினீகர் ஆகும்.

١٤٣ – (١) حدثنا محمد بن سهل بن عسكر وعبد الله بن عبد الرحمٰن قالا: حدثنا يحيى بن حسان ، حدثنا سليمان ابن بلال عن هشام ابن عروة عن أبيه عن عائشة رضى الله عنها: أنَّ رسول الله صلى الله عليه وسلم قال: نِعم الأدام الخَلُّ ، قال عبد الله بن عبد الرحمٰن فى حديثه نِعم الْأدْمُ أو الْأدَام الخَلُّ ،

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், “என்ன சுவையான காடிக் (வினீகர்) குழம்பு.”

காய்கறிகளில் சுரைக்காய் அவர்களுக்குப் பிடிக்கும்.

قال أنس فذهبت مع رسول الله صلى الله عليه وسلم إلى ذالك الطعام ، فقرَّب إلى رسول الله صلى الله عليه وسلم خبزا من شعير ومَرَقاً فيه دُبَّاءٌ وقديدٌ ، قال أنس: فرأيت النَّبى صلى الله عليه وسلم يتتبَّع الدباء حوالى القصعة ، فلم أزل احب الدباء من يومئذ ،

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு கூறுவதாவது,

“ஒரு தடவை தையல் காரர் ஒருவர் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை விருந்துக்கு அழைத்தார். நானும் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் அழைப்பில் கலந்து கொண்டேன். அப்போது ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு வாற்கோதுமையில் தயாரித்த ரொட்டியும், இறைச்சி மற்றும் சுரைக்காய் கொண்ட குழம்பினையும் பரிமாறினார். உணவுத் தட்டின் எல்லா பகுதிகளிலிருந்தும் சுரைக்காய் துண்டுகளை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தேடியதை நான் கண்ணுற்றேன். அந்த நேரத்திலிருந்து நானும் சிறைக்கை விரும்ப ஆரம்பித்தேன்.”

பேரித்தம் பழத்தைச் சாப்பிடும்போது தர்பூஸ் அல்லது வெள்ளரிக்காய் சாப்பிட வேண்டும் என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் வலியுறுத்தியுள்ளார்கள். இப்னு கைய்யும் எழுதிய நபி வழி மருத்துவம் எனும் நூலில் இவற்றைக் காணலாம்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு இறைச்சியும் பிடிக்கும்.

١٥٨ – (١٦) حدثنا واصل بن عبد الاعلى ، حدثنا محمد بن فضيل عن أبى حيان التيمى عن أبى زرعة عن أبى هريرة قال: أُتِي النَّبى صلى الله عليه وسلم بلحم فرُفع إليه الذِّراع ، وكانت تُعجِبُهُ ، فنَهَشَ منها ،

அபு ஹுரைராஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு இறைச்சி அனுப்பப்பட்டது. அதிலிருந்து முன்கால் பகுதி அவர்களுக்கு அளிக்க்கப்பட்டது. அவர்கள் அந்த பகுதியை விரும்பினார்கள். தங்களின் பற்களால் அதனைக் கடித்து உண்டார்கள்.”

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் ஃதரீத் என்ற உணவை விரும்பி உண்பார்கள்.

حدثنا شعبة عن عمرو بن مُرَّة عن مُرّة الهمدانى عن ابى موسى الأشعرى عن النّبى صلى الله عليه وسلم قال: فضلُ عائشة على النّساء كفضل الثَّريد على سائر الطعام ،

அபு மூஸா அஷ்'அரி ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

"ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், "அன்னை ஆயிஷா அவர்களுக்கு மற்ற பெண்களை விட உள்ள சிறப்பானது, ஃதரீத்துக்கு (الثَّريد) மற்ற உணவை விட உள்ள சிறப்பைப் போல ஆகும்."

இந்த உணவு இறைச்சிக் குழம்பில் ரொட்டி கலந்த உணவாகும். தென் தமிழ்நாட்டில் திக்கடி (தக்கடி) என்று கூறப்படும் உணவைப்போல அரபியர்களின் விருப்ப உணவு ஆகும்.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் தங்களுக்குப் பிடித்த உணவைச் சாப்பிடுவார்கள். விரும்பாத உணவை விட்டுவிடுவார்கள். அது பற்றி குறை ஏதும் சொல்ல மாட்டார்கள்.

ஒரு விருந்தில் அவர்களுக்கு உடும்புக் கறி பரிமாறப்பட்டது. அவர்கள் உடும்புக்கறியைத் தொடவில்லை. தங்கள் பகுதியில் இதனை உண்ண மாட்டார்கள் எனக் கூறிய அவர்கள், மற்றவர்கள் அருந்துவதை அவர்கள் தடுக்கவில்லை.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிடித்த ஆடையானது போர்வைப் போர்த்திக் கொள்வதாகும். கீழே போர்த்திக் கொள்ள ஒரு ஆடை என அவர்கள் இரண்டு துணிகளைப் பயன்படுத்த விரும்புவார்கள்.

மேலும் மேற்சட்டை (கமீஸை) அவர்கள் மிகவும் விரும்புவார்கள்.

٥٥ – (٣) حدثنا زياد بن أيوب البغدادى ، حدثنا أبو تميلة عن عبد المؤمن بن خالد عن عبد الله بن بريدة عن أمّه عن امّ سلمة قالت: كان أحبُ الثيـــاب إلى رسول الله صلى الله عليه وسلم يلبَسُهُ القميص ،

அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்,

"எல்லா ஆடைகளுக்குள்ளும், மேற்சட்டையை (القميص) அணிய ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் விரும்புவார்கள்."

அவர்கள் கருப்பு நிறத் தலைப்பாகையை அணிவார்கள்.

١٠٧ – (١) حدثنا محمد بن بشار ، حدثنا عبد الرحمن بن مهدى عن حمّاد بن سلمة ح وحدثنا محمود بن غيلان ، حدثنا وكيع عن حمّاد بن سلمة عن أبى الزبير عن جابر قال: دخل النّبى صلى الله عليه وسلم مكّة يوم الفتح وعليه عِمامة سوداءُ ،

ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

"(மக்கா) வெற்றியின் நாளிள் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கருப்பு நிறத் தலைப்பாகையை அணிந்தவாறு நுழைந்தார்கள்."

அவர்கள் வெள்ளை நிற ஆடையை விரும்புவார்கள். மற்ற நிறமும், சிவப்பு நிற ஆடையையும் அணிந்திருக்கிரார்கள்.

٦٥ – (١٣) حدثنا قتيبة بن سعيد ، حدثنا بشر بن المفضل عن
عبد الله بن عثمان ابن خثيم عن سعيد بن جبير عن ابن عباس رضى
الله عنهما قال: قال رسول الله صلى الله عليه وسلم عليكم بالبياض
من الثياب ليلبسها أحياؤكم وكفنوا فيها موتاكم ، فإنها من خيار ثيابكم

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், “வெள்ளை ஆடையைத் தேர்ந்தெடுங்கள். ஏனெனில் அதுதான் சிறந்த ஆடையாகும். வாழும்போது வெள்ளை ஆடையை அணிய வேண்டும். மரித்தவர்களை வெள்ளை உடையில் அடக்க வேண்டும்.”

மற்ற நிறமும், சிவப்பு நிற ஆடையையும் அதில் கருப்பு நிறக் கோடுகள் இருப்பதை அணிந்திருக்கிறார்கள்.

அவர்கள் சிறு விரலில் வெள்ளி மோதிரம் அணிந்திருக்கிறார்கள். வலது மற்றும் இடது கையில் அணிந்ததாக இரண்டு அறிவுப்புகள் உள்ளன.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் வழக்கமாகப் புன்னகை செய்வார்கள். அதிகமாக சப்தமிட்டு சிரிக்கமாட்டார்கள்.

٢١٨ – (٣) حدثنا أحمد بن خالد الخلال ، حدثنا يحيى بن إسحٰق
السيلحانى ، حدثنا ليث بن سعد عن يزيد بن أبى
حبيب عن عبد الله بن الحارث قال: ما كان ضَحِكُ
رسول الله صلى الله عليه وسلم إلّا تبسمًا ،
قال أبو عيسى: هذا حديث غريب من حديث ليث بن سعد ،

அப்துல்லாஹ் இப்னு ஹாரித் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் சிரிப்பானது புன்னகையைத் தவிர வேறில்லை.”

சில நேரங்களில் சப்தமிட்டு சிரித்துள்ளார்கள். மற்றவர்கள் சிரிக்கும் விதமாக நகைச்சுவையாக பேசுவார்கள். எனினும் சிரிக்க வைக்கும் நோக்கத்தில் பொய்க் கூற்றுகளைச் சொல்ல மாட்டார்கள். சிரிக்க வைப்பதற்காகப் பொய் சொல்பவர்களுக்குக் கேடுதான் என ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் மூன்று தடவைகள் கூறியுள்ளார்கள்.

ஒரு முறை ஒருவர் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சவாரிக்காக ஒரு ஒட்டகத்தைக் கேட்டார்கள். அதற்கு ஒரு ஒட்டகக் குட்டியைக் கொண்டு வருமாறு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூற, அத நபர் தாம் ஒரு குட்டியை வைத்து எப்படி சவாரி செய்வது என்று வினவினார்கள். எனினும் பெரிய ஒட்டகம்தான் கொண்டு வரப்பட்டது. ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நகைச்சுவையாக எந்த பெரிய ஒட்டகமானாலும், அது தாய் ஒட்டகத்தின் குட்டிதானே என்றார்கள்.

٢٢٥ – (١) حدثنا محمود بن غيلان ، حدثنا أبو اسامة عن
شريك عن عاصم الأحول عن أنس بن مالك قال: أنَّ
النَّبى صلى الله عليه وسلم قال له: يا ذا الأذنين ، قال محمود قال
أبو اسامة: يعنى يمازحه ،

அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாவது,

“ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் என்னிடம் (கேலியாக) கூறினார்கள், “யா தல் உத்னைனின்” (இரு காதுகள் உடையவரே)

ஒரு முறை ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. இருவரும் ஓட அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் முந்திக் கொண்டார்கள். சிறு வயதினராக இருந்ததால் அவ்வாறு வந்தார்கள். சில காலம் கழித்து மறுபடியும் ஒரு தடவை ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. அப்போது ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சற்று பருமனாக இருந்ததால் ஓட முடியவில்லை. ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் முந்திக் கொண்டார்கள். இது அதற்கு சரி என்று அவர்கள் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

இவ்வாறாக அவர்கள் ஒரு மனிதர் என்ற முறையிலும் நமக்கு எடுத்துக் காட்டாக விளங்கி உள்ளார்கள்.

Seerah 38 - The external appearance of Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 38 - நபி (ஸல்) அவர்களின் வெளித்தோற்றம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

இப்போது ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புறத்தோற்றம் எப்படி இருந்தது என்பது பற்றி நாம் இங்கு காணலாம். இது குறித்து ஷைக் ஸஃபியூர் ரஹ்மான் முபாரக்பூரி எழுதிய அர் ரஹீக்குல் மாஃதூம் என்ற நூலில் இருப்பதை நாம் காண்போம்.

அலி இப்னு அபீதாலிப் (ரழி) நபி (ஸல்) அவர்களை வருணித்துக் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) மிக நெட்டையோ மிகக் குட்டையோ இல்லை கூட்டத்தில் பார்ப்பதற்கு நடுத்தரமானவர் அடர்த்தியான சுருட்டை முடி உடையவருமல்லர் கோரைமுடி கொண்டவருமல்லர் சுருட்டை, கோரை இரண்டிற்கும் நடுத்தரமான முடி கொண்டவர் பெருத்த உடம்பில்லை முழுதும் வட்ட வடிவ முகமுமல்ல நேரான கத்தி (ஒடுக்கமான) முகமுமல்ல சிவந்த வெண்மை நிறமானவர் கருவிழி உடையவர் நீண்ட இமை முடி பெற்றவர் புஜமும் மூட்டு எலும்புகளும் தடிப்பானவர் நெஞ்சிலிருந்து தொப்புள் வரை கொடி போன்ற முடி உள்ளவர்கள் உடம்பில் முடி இருக்காது உள்ளங்காலும் கையும் தடித்தவர்கள் அவர்கள் நடந்தால் பள்ளத்தில் நடப்பது போன்று பிடிப்போடு நடப்பார்கள் திரும்பிப் பார்த்தால் முழுமையாகத் திரும்பிப் பார்ப்பார்கள் இரண்டு புஜங்களுக்கு இடையில் நபித்துவ முத்திரை இருக்கும் தூதர்களில் இறுதியானவர் மக்களில் மிக அதிகம் வழங்கும் கை உள்ளவர் துணிவுடைய உள்ளம் கொண்டவர் மக்களில் மிக அதிகம் உண்மை பேசுபவர் மக்களில் பொறுப்புகளை மிக அதிகம் நிறைவேற்றுபவர் மிக மிருதுவானவர் பழக மிகக் கண்ணியமிக்கவர் திடீரெனப் பார்த்தால் அச்சம் தரும் வடிவம் அறிமுகமானவர் அவரை விரும்புவர் அவர்களை யார் வருணித்தாலும் ‘அவர்களுக்கு முன்னும் அவர்களுக்கு பின்னும் அவர்களைப் போன்று யாரையும் பார்த்ததில்லை‘ என்றே கூறுவர். (இப்னு ஹிஷாம்)

அலி (ரழி) கூறுவதாக மற்றொரு அறிவிப்பில் வருகிறது: நபி (ஸல்) கனத்த தலையுள்ளவர் மொத்தமான மூட்டுகளைக் கொண்டவர் நெஞ்சிலிருந்து தொப்புள் வரை கோடு போன்ற முடிகளைக் கொண்டவர் நடந்தால் பள்ளத்தில் நடப்பது போல் நடப்பார். (ஜாமிவுத் திர்மிதி)

அனஸ் இப்னு மாலிக் (ரழி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அகலமான கரமுடையவர்கள் முற்றிலும் சிவந்த நிறம் கொண்டவர் அல்லர். அவர் உயிர் பிரியும் போது தாடியிலும் தலையிலும் சேர்த்து இருபது வெள்ளை முடிகள் கூட இல்லை. நரை இரு பொட்டுப் பகுதியில் (கிருதாப் பகுதியில்) மட்டும் இருந்தது. தலையிலும் மிகக் கொஞ்சமாக நரைமுடி இருந்தது. (ஸஹீஹு ல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

பராஃ (ரழி) கூறுகிறார்: நபி (ஸல்) நடுத்தர உயரமுள்ளவர்கள். அகன்ற புஜம் உடையவர்கள். அவர்களது தலைமுடி காது சோனை வரை இருக்கும். ஒரு நாள் நபி (ஸல்) அவர்களைச் சிவப்பு ஆடையில் பார்த்தேன். அவர்களை விட அழகான எதையும் பார்க்கவில்லை. வேதமுடையவர்களை ஒத்திருக்க வேண்டும் என்ற பிரியத்தில் நபி (ஸல்) தங்களது முடியை வகிடு எடுக்காமல் நேராக சீவிக் கொண்டிருந்தார்கள். பின்பு தங்களது தலைக்கு வகிடு எடுத்து சீவினார்கள். நபி (ஸல்) மக்களில் மிக அழகிய முகமும் குணமும் கொண்டவர்கள். அவர்களிடம் ‘‘நபியின் முகம் கத்தியைப் போன்று இருந்ததா?“ எனக் கேட்க ‘‘சந்திரனைப் போல், அதாவது சற்று வட்ட வடிவ முகம் உடையவர்களாக இருந்தார்கள்“ என்று பதிலளித்தார். (ஸஹீஹு ல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

அபூ ஹு ரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களை விட மிக அழகான எதையும் நான் பார்த்ததில்லை. அவர்களது வதனத்தில் சூரியன் இலங்கியது. அவர்களை விட வேகமாக நடப்பவர்களை நான் கண்டதில்லை. பூமி அவர்களுக்கு சுருட்டப்பட்டது போல் இருக்கும். நாங்கள் சிரமத்துடன் நடப்போம். நபி (ஸல்) அவர்களோ சிரமம் தெரியாமல் நடப்பார்கள். (ஜாமிவுத் திர்மிதி, மிஷ்காத்)

கஅப் இப்னு மாலிக் (ரழி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் சிரித்தால் அவர்களது முகம் மிக ஒளி பொருந்தியதாக, பார்ப்பவர்களுக்கு சந்திரனைப் போன்று இருக்கும். (ஸஹீஹு ல் புகாரி)

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டில் செருப்பு தைத்துக் கொண்டிருக்க, ஆயிஷா (ரழி) ஓர் ஆடையை நெய்து கொண்டிருந்தார்கள். அப்போது நபி (ஸல்) உடலில் இருந்து வியர்வை வந்தது. நபி (ஸல்) அவர்களின் முக ரேகைகள் ஒளியால் இலங்கிக் கொண்டிருந்தன. இதைக் கண்ட ஆயிஷா (ரழி) திடுக்கிட்டார்கள். ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூ கபீர் ஹுு தலி தங்களைப் பார்த்தால் தமது

''அவரது முக ரேகைகளை நீங்கள் பார்த்தால்

மின்னும் நட்சத்திரத்தைப் போன்று இலங்குவதைப் பார்க்கலாம்." (தஹ்தீப் தாரீக் திமஷ்க்)

என்ற கவிகளுக்கு பிறரை விட நீங்களே பொருத்தமானவர்" என்று கூறுவார்.

நபி (ஸல்) அவர்களைப் பார்த்தால் அபூபக்ர் (ரழி),

நம்பிக்கைக்குரியவர் தெரிவு செய்யப்பட்டவர்

நன்மைக்கு அழைப்பவர் இருள் நீங்கிய சந்திரனைப் போன்றவர். (குலாஸத்துஸ் ஸியர்)

என்ற கவிதையைக் கூறுவார்கள்.

வீடு திரும்பிய தனது கணவர் விசாரித்த போது நபியவர்களைப் பற்றி உம்மு மஅபத் விவரித்தது யாதெனில்:

பிரகாசமான முகம் உடையவர் அழகிய குணம் பெற்றவர் வயிறோ தலையோ பெருத்தவர் அல்லர் தலை சிறுத்தவரும் அல்லர் கவர்ச்சிமிக்கவர் பேரழகு உடையவர் கருத்த புருவம் கொண்டவர் நீண்ட இமைமுடி பெற்றவர் கம்பீரக் குரல் வளம் கொண்டவர் உயர்ந்த கழுத்துள்ளவர் கருவிழி கொண்டவர் மை தீட்டியது போன்ற கண்ணுள்ளவர் வில் புருவம் கொண்டவர் கூட்டுப் புருவம் கொண்டவர் கருண்ட தலைமுடி கொண்டவர் அவரது அமைதி கம்பீரத்தைத் தரும் ஒளி இலங்கும் பேச்சுடையவர் தூரமாகப் பார்த்தால் அழகும் வனப்பும் பெற்றவராய்த் திகழ்வார் அருகில் சென்றால் பழக இனிமையானவர் நற்பண்பாளர் நாவலர் தெளிந்த நடையுடைய பேச்சாளர் நீளமாகவோ சுருக்கமாகவோ இல்லாமல் நடுத்தரமான சொல்லாற்றல் பெற்றவர் அவருடைய மொழிதல் மணிமாலை உதிர்வது போல் இருக்கும் நடுத்தர உயரமுடையவர் பார்வைக்கு நெட்டையாகவோ குட்டையாகவோ இருக்க மாட்டார் இரண்டு கிளைகளுக்கு இடையிலுள்ள ஒரு கிளையைப் போன்றவர் மூவர் குழுவில் பளிச்செனத் தெபவர் சிறந்த கண்ணியம் வாய்ந்தவர் நண்பர்கள் புடை சூழ இருப்பவர் அவர் உரைத்தால் யாவரும் செவிமடுக்கின்றனர் அவர் ஆணையிட்டால் நிறைவேற்ற விரைகின்றனர் பணிவிடைக்குரியவர் மக்கள் கூட்டம் பெற்றவர் கடுகடுப்பானவருமல்லர் பிறரைக் குறைவாக மதிப்பவரும் அல்லர். (ஜாதுல் மஆது)

அபூ ஜு ஹைஃபா (ரழி) கூறுகிறார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் கரத்தை எடுத்து என் கன்னத்தில் வைத்தேன். அது பனிக் கட்டியை விட குளிர்ச்சியாக, கஸ்தூரியை விட மணமிக்கதாக இருந்தது. (ஸஹீஹு ல் புகாரி)

அனஸ் (ரழி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களின் வியர்வை, முத்துகள் போல் இருக்கும். (ஸஹீஹ் முஸ்லிம்)

அனஸ் (ரழி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களின் கையைவிட மென்மையான பட்டாடையை நான் தொட்டதில்லை. அவர்களிடமிருந்து வரும் நறுமணத்தைப் போன்று வேறு எந்த நறுமணத்தையும் நான் நுகர்ந்ததில்லை.

மற்றொரு அறிவிப்பில்: நபி (ஸல்) அவர்களிடமிருந்து வரக்கூடிய நறுமணத்தைவிட வேறு நறுமணத்தை அம்பலோ அல்லது கஸ்தூரியிலோ நான் நுகர்ந்ததில்லை. (ஸஹீஹு ல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

உமர் இப்னு கத்தாப் (ரழி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அழகிய பற்களைக் கொண்டவர்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

ஜாபிர் இப்னு சமுரா (ரழி) அறிவிக்கிறார்கள்: ஒரு நாள் சந்திர இரவில் நபி (ஸல்) அவர்களைப் பார்த்தேன். நபி (ஸல்) சிவப்பு ஆடை அணிந்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்களையும் சந்திரனையும் மாறி மாறிப் பார்த்தேன். நபி (ஸல்) அவர்களே எனக்கு மிக அழகாக தென்பட்டார்கள். (ஷமாயிலுத் திர்மிதி, மிஷ்காத்)

இவ்வாறு ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அழகிய தோற்றத்தையும், நறுமணத்தையும் பெற்றிருந்தார்கள். ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹுு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பற்றி ஸஹாபாக்கள் கூறியவற்றைப் பார்த்தால், அவர்களை எந்த அளவுக்கு ஸஹாபாக்கள் கூர்மையாகக் கண்டிருப்பார்கள் என்பதை நாம் அறியலாம். அவர்கள் கூறிய மார்க்கம் மற்றும் சட்ட திட்டங்களை மட்டும் அவர்கள்

அறிவிப்பதோடு நின்று விடவில்லை. மாறாக ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீதிருந்த அன்பின் காரணமாக அவர்களின் நடை உடை பாவனங்களையும் அறிவித்துள்ளார்கள். அவர்களின் மீதுள்ள அன்பின் வெளிப்பாடு இவை.

ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது நமக்கும் உண்மையான அன்பு இருந்தால், அவர்களின் ஸுன்னத்தான நடைமுறைகளை நாம் பின்பற்றுவதோடு, பிறருக்கும் அதனை எடுத்துக்கூறி அவர்களையும் அவ்வாறு நடக்கத் தூண்ட வேண்டும். ஹஜ்ஜதுல் விதாவில் ரஸூலுல்லாஹ் ஸல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நமக்கு அளித்த பொறுப்பு இது ஆகும்.

புஹாரி 3461

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " بَلِّغُوا عَنِّي وَلَوْ آيَةً، وَحَدِّثُوا عَنْ بَنِي إِسْرَائِيلَ وَلاَ حَرَجَ، وَمَنْ كَذَبَ عَلَىَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ ".

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: என்னிடமிருந்து ஒரேயொரு (சிறு) செய்தி கிடைத்தாலும் சரி, அதை(ப் பிறருக்கு) எடுத்துரையுங்கள். பனூ இஸ்ராயீல்களின் வாயிலாகக் கிடைத்த செய்திகளையும் அறிவியுங்கள். அதனால் குற்றமில்லை. எவன் என் மீது (நான் சொன்னதாக) வேண்டுமென்றே பொய்யுரைக்கிறானோ அவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும். என அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்.

எனவே நாமும் நமக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இது நமது கடமையாகும். ஸஹாபாக்கள் நடந்தது போல, மக்களும் தாங்கள் கற்றவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நம் அனைவருக்கும் அந்த பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அருள்வானாக!

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் தாயார் உம்மு சுலைம் ரழியல்லாஹு அன்ஹா, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது, அவர்களின் வியர்வையை ஒரு பாட்டலில் எடுத்து வைத்துக் கொண்டார்கள். வாசனை திரவத்தில் அதனைச் சேர்க்கும்போது, நறுமணம் அதிகமாக ஆகிவிடும் என அவர் கூறியுள்ளார்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உளூ செய்யும்போதும் அவர்களிலிருந்து வடியும் நீரைப் பிடிக்க ஸஹாபாக்கள் போட்டிப்போட்டுக் கொள்வார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எல்லாவற்றயும், அவர்களின் எச்சில், வியர்வை, அவர்கள் அருந்தி நீர் போன்ற எல்லாவற்றிலும் பரக்கத் வைத்துள்ளான்.

இது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மட்டும் பொருந்தும். அவர்களுக்குப் பிறகு வேறு யாருக்கும் அவ்வித பரக்கத் கொடுக்கப்படவில்லை. அபு பக்ரு, உமர் போன்றவர்களுக்கும் இவ்வித பரக்கத் கொடுக்கப்படவில்லை.

இக்காலத்தில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் முடி, நகம், பல் போன்றவை உள்ளன எனக் கூறி பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. எனினும் அதற்கான ஆதாரம் இல்லாத நிலையில், நாம் அதனைப் பொருட்படுத்தக்கூடாது.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது அன்பினைப் பெருக்கி, அவர்களின் ஸுன்னதான வழிமுறைகளைப் பின்பற்றி நடக்கும் பாக்கியத்தை அருள்வானாக!

Seerah 39 - Lessons we should learn from the life of the Prophet (peace and blessings of Allaah be upon him)

ஸீராஹ் வகுப்பு 39 - நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் இருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இப்போது நாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினை பற்றி சுருக்கமாகக் காண்போம். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் நபித்துவம் பெறுவதற்கு முன் நாற்பது வருடம் இவ்வுலகில் வாழ்ந்தார்கள். அந்த நாற்பது வருட வாழ்க்கை எந்த வித குறையும் சொல்ல முடியாமல் சுத்தமான வாழ்க்கையை மேற்கொண்டார்கள். தாங்கள் உண்மையான இறைத்தூதர்தாம் என்பதற்கு ஆதாரமாக தங்களின் அந்த முந்தைய வாழ்கையில் அவர்களுடன்தான் தாங்கள் இருந்ததாகக் கூறினார்கள். தாங்கள் அவர்களுடன்தான் வாழ்ந்திருக்கிறார்கள் எனவும், தாங்கள் இறைத்தூதர் என்று எவ்வாறு பொய் சொல்ல முடியும் என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள்.

எனவே யாரெல்லாம் நன்மையின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை மேற்கொள்கிறார்களோ, அவர்கள் அனைவரும் இவ்வாறு தூய்மையான வாழ்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது நமக்கு படிப்பினையாகும். நாம் ஏதேனும் தவறு செய்தால், அந்தத் தவறு நமது அழைப்புப் பணியில் இடையூறாக இருக்கும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அழைப்புப் பணியைத் தங்களின் மனைவி அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா, தங்களின் நெருங்கிய தோழர் அபு பக்ரு ரழியல்லாஹு அன்ஹு, தங்களுடைய அடிமையும், வளர்ப்பு மகனாக முதலில் கருதப்பட்டவருமான ஜைத் ரழியல்லாஹு அன்ஹு, தங்களுடைய சகோதரர் அலி ரழியல்லாஹு அன்ஹு ஆகியவர்களிடம் தான் முதலில் ஆரம்பித்தார்கள். அவர்கள் ஒருவராக ஆரம்பித்த அழைப்புப் பணியின் காரணமாக, கோடிக்கணக்கான மக்கள் இஸ்லாத்தில் இணைந்திருக்கிறார்கள். இவ்வாறு அல்லாஹ் வின் மீது நம்பிக்கை வைத்து உலகளாவிய இஸ்லாத்தை அவர்கள் நிறுவியது போல, நாமும் அழைப்பு பணியில் அல்லாஹ் வின் மீது நம்பிக்கை வைத்து பயணம் செய்ய வேண்டும். நம்மால் எப்படி முடியும் என நிராசை கொள்ளக் கூடாது. ஒரு விளக்கை ஏற்றினால், அதனைக் கொண்டு நாம் பல விளக்குகளை ஏற்றலாம். எனவே நாம் இந்த பணியை அல்லாஹ்வின் பொருட்டு ஆரம்பித்து வெல்ல முயல வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஆரம்பத்தில் தங்களின் அழைப்புப் பணியை பகிரங்கமாக ஆரம்பிக்கவில்லை. மறைமுகமாகத் தான் ஆரம்பித்தார்கள். இதன் மூலம் நாம் பெறும் படிப்பினை, அழைப்புக் பணியில் ஆவேசம் கூடாது என்பதுதான். மாறாக நிதானமாக, சூழ்நிலையைக் கவனித்து செய்ய வேண்டும். அவர்கள் மூன்று வருடங்களுக்குப் பிறகு பகிரங்கமாகச் செய்தார்கள். அப்போது அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மிகவும் இடையூறுகள் ஏற்பட்டன. எனினும் தங்கள் பணியையும், இஸ்லாத்தையும் அவர்கள் கைவிடவில்லை. நபித்தோழர்கள் இஸ்லாத்தில் உறுதியாக இருந்தார்கள். உயிர்த்தியாகம் செய்யத் தயாராக இருந்தனர். அது போல, இஸ்லாத்தைப் பின்பற்றுவதில், இஸ்லாத்தைப் போதிப்பதில் நமக்கும் பல இடையூறுகள் வரலாம். நாமும் அது குறித்து அஞ்சாமல் விசுவாசத்தில் உறுதியுடன் இருக்க வேண்டும்.

அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்:

அத்தியாயம் அன்கபூத் 2,3

أَحَسِبَ النَّاسُ أَن يُتْرَكُوا أَن يَقُولُوا آمَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ ﴿٢﴾وَلَقَدْ فَتَنَّا الَّذِينَ مِن قَبْلِهِمْ ۖ

"நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம்

எனவே நிச்சயமாக நாம் சோதிக்கப்படுவோம். அதனை எதிர்கொள்ள வேண்டும். ஸஹாபாக்கள் தங்களின் ஈமானுக்காக, தங்கள் சொந்த பந்தங்களையும், சொத்துக்களையும் விட்டுவிட்டு ஹிஜ்ரத் செய்தார்கள். எனவே நாமும் மறுமை வாழ்கைக்காக இம்மையைத் துறக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற படிப்பினையை நாம் பெற வேண்டும். நாம் பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

அத்தியாயம் ஆல இம்ரான் 102

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّـهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ﴿١٠٢﴾

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அழைப்புப் பணியை முடக்க காஃபிர்கள் பல வழியில் முயன்றனர். துன்புறுத்தல், ஆசை வார்த்தை கூறுதல், உயர் பதவி அளித்தால் என பலவகைகளில் முயன்றார்கள். அற்புதம் செய்யுங்கள், மலையைத் தங்கமாக மாற்றுங்கள் என அறைகூவல் விடுத்தனர். எனினும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அழைப்புப் பணியை விடவில்லை.

இதில் கிடைக்கக் கூடிய படிப்பினை, நமக்கும் அவ்வாறு எதிர்ப்புகள் வரும், என்றாலும் நமது பணியை விடக்கூடாது. கலீலுர் ரஹ்மான் என்ற எனது ஆசிரியர் கூறிய அறிவுரையாவது: அசத்தியத்தில் உள்ளவர்கள் எந்த அளவுக்கு சத்தியத்தை எதிர்ப்பார்களோ, அதே அளவுக்கு நாமும் எதிர்க்க வேண்டும். மிதி வண்டியின் வேகத்துக்குத் தக்கவாறே அதன் தடுப்புக் கருவியைப் (brake)பயன்படுத்த வேண்டும். அது போல தேவைக்குத் தகுந்தமாதிரி எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டும்.

மக்கத்து வாழ்க்கை, முஸ்லிம்களாகிய நமக்கு நல்ல படிப்பினை கொடுக்கிறது. அங்குள்ள முஸ்லிம்களைப் போலவே நாமும் சிறுபான்மையினராக இருக்கிறோம். முஸ்லிம்களுக்கு தொழுகை, நோன்பு முதலியன பின்னர் தான் கடமையாக்கப் பட்டது. முதலில் அவர்கள் ஏகத்துவக் கொள்கைக்காகத்தான் பாடுபட்டார்கள். நாமும் இஸ்லாமிய கொள்கையை நிலை நிறுத்தப் பாடுபட வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அழைப்பை ஏற்று பல ஸஹாபாக்கள் இணைந்தார்கள். என்னும் சிலர் கடுமையாக எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்தவர்கள் வயதில் மூத்தவர்களாக இருந்தார்கள். இணைந்தவர்களில் அதிகம் இளைஞர்களாக இருந்தார்கள். இவ்வாறு ஒரு சமூகத்தில் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்றால் இளைஞர்களிடம் கொண்டு வர வேண்டும்.

விவேகானந்தர் கூறியதாவது, "நீங்கள் இளைஞர்கலை என்னிடம் தாருங்கள், நான் சமூகத்தை மாற்றிக் காட்டுகிறேன்."

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஹிஜ்ரத் செய்யும்போது, சரியான திட்டமிடுதலுடன் மதினா சென்றார்கள். இதுவும் நமக்குப் படிப்பினை தரும். இப்போதைய நம் சமுதாயத்தினரிடம் திட்டமிடுதலில் மிகக் குறை உள்ளது. எதிரிகள் நம்மைச் சிதைக்க திட்டமிடுதலோடு வினை செய்கிறார்கள். பல வருடங்களாகத் திட்டமிட்டு, மக்களை மூளை

சலவை செய்து முஸ்லிம்களுக்கு எதிராக திசை திருப்பக் கூடிய எல்லா காரியத்தையும் செய்கிறார்கள்.எனவே திட்டமிடுதலில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மதினா வாழ்க்கையிலும் அநேக படிப்பினை உள்ளன. திரும்பத் திரும்ப அவர்கள் பல போர்களைச் சந்திக்க வேண்டியதிருந்தது. இவ்வாறு அவர்கள் எந்த நேரமும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டி இருந்தது. போரின் காரணமாக தனி மனிதக் குடும்ப இழப்புகளும், போது இழப்புகளும் ஏற்பட்டன. சிறு சிறு போர்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், சுமார் அறுபதுக்கும் அதிகமான போர்களை அவர்கள் சந்தித்தார்கள். அந்த இக்கட்டான காலங்களிலும், இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியினை அவர்கள் விடவில்லை. அரபுலகமும், அதைத் தாண்டியும் இஸ்லாம் வளர்ந்தது.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இச்சூழ்நிலைகளிலும், அவர்கள் பல்வேறு விஷயங்களிலும் வெற்றி பெற்றார்கள். இப்னு ஹஸம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுவதாவது, “ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் சந்திரனைப் பிளந்தது, தங்களின் துஆவினால் பஞ்சத்தைப் போக்கியது போன்ற எந்த அற்புதத்தையும் செய்யாமல், அவர்களின் வாழ்க்கையை மட்டும் நாம் எடுத்துக் கொண்டாலே, அவர்களின் முயற்சி மற்றும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா அவர்களுக்குக் கொடுத்த வெற்றி ஆகியன மட்டுமே நமக்கு அவர்களை பற்றிய புரிதலைக் கொடுத்து விடும்.”

நமக்கு இஸ்லாம் இலகுவாக வந்து சேரவில்லை. ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மற்றும் ஸஹாபாக்களின் தியாகத்தால் நாம் பெற்றிருக்கிறோம். எனவே நாமும் இஸ்லாத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

மேலும் இஸ்லாத்திற்கு எதிரான எல்லாப் போர்களிலும், முஸ்லிம்கள் எதிரிகளைவிட எண்ணிக்கையிலும், ஆயுதங்களிலும் குறைவாகவே இருந்தனர். இருந்தாலும் அவர்களின் இறை நம்பிக்கையின் காரணமாக அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா வெற்றி அளித்தான். அது போல முஸ்லிம் சமுதாயத்தின் வெற்றி ஈமான் மற்றும் நற்செயல்களைக் கொண்டே அமையும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மற்றும் ஸஹாபாக்கள் எந்த சத்தியத்தில் இருந்து, எந்த சத்தியத்தை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்களோ, அந்த சத்தியத்தில் இருந்து, சத்தியத்தை மற்றவர்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்தக் கடமை நம் மீது உள்ளது.

ஹிஜ்ரி ஐம்பதற்கும் ஸஹாபாக்கள் முயற்சியினால் இஸ்லாம் அரபுலகத்தைத் தாண்டி ஆப்ரிக்கா, ஐரோப்பா போன்ற பல கண்டங்களில் பரவியது. நம் நாட்டிற்கும் வந்து சேர்ந்தது. அதனை நாமும் முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும். நாமும் மற்றவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். ருஸ்தும் என்ற அரசர் இப்னு ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு என்ற நபித் தோழரிடம் எதற்காக வந்தீர்கள் எனக் கேட்டபோது, மக்களை மனிதர்களை வணங்கும் நிலையிலிருந்து இறைவனை வணங்க வேண்டிய நிலைக்கு எடுத்து செல்ல வந்துள்ளேன் என்றார். மக்களை இஸ்லாத்தின்பால் அழைத்துச் செல்லவே வந்தேன். நாமும் அவ்வாறு முயல வேண்டும்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் வாழ்க்கையை நாம் புரிந்து, அதன்படி நடந்து, படிப்பினைப் பெறும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நமக்கு அளிப்பானாக! நாம் படித்ததை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவர்களும், நாமும் பயன் அடையும் பாக்கியத்தை அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா நம் அனைவருக்கும் அளிப்பானாக!